# வைதிக தர்ம வர்த்தனீ

ஸ்ரீ துலா புராணம்.



ஆசிரியர் :
ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவ சர்மா.

மலர் 13
இதழ் 2

விகாரிஞூ
கார்த்திகைமீ

# ஸ்ரீ துலா புராண
# காவேரீ மஹிமை.

## அவதாரிகை.

கவேர ராஜனுக்கு மாயாதேவி பெண்ணாகத்தோன்றி நதியுமாகி ஸமுத்ரராஜனை மணப்பது இங்குள்ள சரிதம். துலா மாஸமெனும் ஐப்பசி மாதம் முழுவதும் காவேரியில் கங்கை முதலிய எண்ணிறந்தபுண்ணிய தீர்த்தங்கள் வந்து தங்கள் பாபத்தை அகற்றிக் கொள்கின்றன. ஆதலால் துலாபுராணம், அல்லது துலாகாவேரி மஹிமை எனக் கூறப்படுகிறது. இது குடகு மலையிலிருந்து மைசூர் திருச்சி ஈரோடு தஞ்சை ஆகிய ஜில்லாக்களில் பாய்ந்து காவிரிபூம்பட்டிணம் என்ற விடத்தில் ஸமுத்ர சங்கமமாகிறது.

பௌராணிக ரீதியில் ஸ்ரீரங்கம் மாயவரம் என்ற இடங்களில் துலாமாதத்தில் ஸ்நாநம் செய்வோர் முக்தி பெறுவர் எனக் கூறப்படுகிறது. தலைக்காவேரி முதல் கடைக்காவேரி வரை இரு புறங்களிலும் சிவ விஷ்ணு க்ஷேத்ரங்களும் அக்ரஹாரங்களும் நிறைந்திருக்கின்றன. பாசனத்திற்கும் பயன் பட்டு தனது வண்டலுடன் பயிர்களுக்குப் பாய்ந்து நெல் விளைவை விருத்தி செய்கிறது. இம்மை மறுமை இரண்டிற்கும் ஸாதநமான காவேரீ ஜீவராசிகளுக்கு ஜீவநாடி எனத்தகும்.

துலா மாஸத்தில் காவேரி ஸ்நாநம் செய்து காவேரிக்கரையில் துலா புராணம் கேட்பது மிக புண்யகரமானது. இதை நாடி காவேரி தீரத்தில் ஒவ்வொரு ஊரிலும் புராணம் கூறுபவருக்கு மான்யமாக பூமிதாநம் செய்யப்பட்டிருக்கிறது. அன்றியும் அந்த முப்பது நாட்களிலும் ஸ்நாநம் செய்வோர் அன்றன்றும் ஏதேனும் தாநம் செய்வர். தானங்களின் பெருமை இந்த புராணத்தில் மிக விரிவாக உள்ளது. ஆதலால் இதைக் கேட்பவர் சிறிதளவேனும் தாநம் செய்யாமல் போகமாட்டார்.

பச்சைக் கொடுத்தால் பாபம் தீருமென கறிகாய்களையும் அளிப்பர். ஆதலால் சில வம்பர் இதைப் புடலங்காய் புராணம் என்பர்.

காவேரியை வியாஜமாகக் கொண்டு ஸகல தர்மங்களையும் இதில் வர்ணிக்கிறார் புராண கர்த்தா. இந்த கதை ஆக்நேயபுராணத்திலும் பிரும்ம வைவர்த்த புராணத்திலுமுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆக்நேய புராணத்தைச் சார்ந்தது. க்ரந்தாக்ஷரத்திலும் மற்றது தெலுங்கு எழுத்திலும் அச்சிடப்பட்டுள்ளது. க்ரந்தாக்ஷரத்திலுள்ளது முப்பது அத்யாயம் உள்ளது. தென் தேசத்தில் இதே ப்ரஸித்தமானது. இன்றைக்கும் துலா மாஸத்தில் சில இடங்களில் முக்யமாக மாயவரம் அரச மரத்துறையில் இது நடக்கின்றது. நமது தர்மம் ப்ராசீனமான ஸ்திரீகளால் ரக்ஷிக்கப்பட்டது. இப்போதும் பெண்களே அதிகமாக துலா ஸ்நானம் செய்கின்றனர்.

காவேரி ஸ்நானப் பலனைக் கூற மிக ரஸமான பற்பல கதைகள் கூறப்பட்டிருக்கின்றன. அரிய பற்பல தர்மங்கள் இதில் இருக்கின்றன. ஆதலின் இதை ஒரு சுலோகம் கூட விடாமல் எழுதுகிறோம். சில இடங்களில் சொன்னதே திரும்பத் திரும்பக் கூறப்படும். அத்தகைய இடங்களில் அபூர்வமானதை மாத்ரம் கூறுகிறோம். சில ஆண்டுகளுக்கு முன் இது தமிழில் அச்சிடப்பட்டிருந்தது. தற்சமயம் அது விலைக்கு அகப்படுவதில்லை. துலா ஸ்நானம் செய்வோரும் மற்றோரும் இதைக் கட்டாயம் படித்து அறிந்து விதிப்படி ஸ்நானம் தானம் புராண ச்ரவணம் இவைகளை செய்யவேண்டுமென நமது அவா. ஆதலால் முழுமையும் எளிய நடையில் நல்ல பேப்பரில் ஸ்வல்ப விலைக்கு அச்சிட்டுத் தருகிறோம். ஏற்கனவே காவேரீ பூஜை என மிகச் சிறிய புத்தகம் வெளியிட்டோம். அதில் விரிவான சரிதமில்லை.

இதில் நித்ய-ஸ்நான ஸங்கல்பம், பூஜாவிதி, விசேஷ ஸங்கல்பம், விசேஷ பூஜை, காவேரி 108 அர்ச்சனை, அர்க்யதானம் முதலியவைகளைச் சேர்த்திருக்கிறோம். ஆஸ்திகர் இதையும் ஆதரிப்பார்களாக.

குருகுலம்,
W. மாம்பலம்.

ஸ்ரீவத்ஸ, வெ. ஸோமதேவ சர்மா,
18 புராண ப்ரசுரதார்.

## ஸ்ரீ காவேரீ நித்ய ஸ்நான பூஜை அர்க்யம்.

காலலம்பி ஆசமநம் செய்து முதலில் ஸ்நாந ஸங்கல்பம் செய்யவேண்டும். காவேரீ, கங்கை முதலிய புண்ய தீர்த்தக்கரையில் முதலில் நமஸ்காரம் செய்து அந்த தீர்த்தத்தில் காலை வைக்காமல் அந்த ஜலத்தைத் தலையில் ப்ரோக்ஷித்துக்கொண்டு பிறகு அதில் காலலம்பி ஆசமநம் செய்யவேண்டும். விழுப்புடன் ஸங்கல்பம் செய்யக் கூடாது. ஆதலால் விழுப்பு நீங்க ஒரு ஸ்நாநம் செய்து வஸ்த்ரத்தைப் பிழிந்து கட்டிக்கொண்டு நெற்றிக்கிட்டுக் கொண்டு ஸங்கல்பம் செய்யவேண்டும்.

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் ப்ரஸன்னவதநம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே. ஓம் பூ:-ரோம்-மமோ பாத்த ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா ஸ்ரீ பரமேச்வர ப்ரீத்யர்த்தம், சுபே சோபநே முகூர்த்தே ஆத்ய ப்ரம்மண: த்விதீயே பரார்த்தே ச்வேத வராஹ கல்பே, வைவஸ்வத மன்வந்தரே, கலியுகே ப்ரதமே பாதே ஜம்பூத்வீபே, பாரதவர்ஷே, பரதகண்டே, மேரோ: தக்ஷிணே பார்ச்வே, ஶகாப்தே, அஸ்மின் வர்த்தமானே வ்யாவஹாரிகே, ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணும் மத்யே (அந்தந்த வருஷம்)-நாமஸம்வத்ஸரே தக்ஷிணயநே சரத்ருதௌ துலாமாஸே-பக்ஷே-சுபதிதௌ-வாஸரயுக்தாயாம்-நக்ஷத்ரயுக்தாயாம், ஏவங்குண, விசேஷண விசிஷ்டாயாம் அஸ்யாம்-திதௌ ஜன்மாப்யாஸாத் ஜன்மப்ரப்ருதி ஏதத்க்ஷண பர்யந்தம் மத்யே ஸம்பாவிதாநாம் ஸர்வேஷாம் பாபாநாம் ஸத்ய: அபநோதனார்த்தம் (விதவையானல் ஞானவைராக்ய ஸித்யர்த்தம்) ஸகுடும்பஸ்யமம, க்ஷேமஸ்தைர்ய வீர்ய விஜய ஆயுராரோக்ய அபிவிருத்யர்த்தம் ஸர்வாபீஷ்ட ஸித்யர்த்தம், ஸமஸ்த ஹரிஹர தேவதா ஸன்னிதௌ, ப்ராம்மண ஸன்னிதௌ, (அந்தந்த தேவீ தேவர்கள் பெயரைச் சேர்த்துக் கொள்ளவும்.) (ரிஷப தீர்த்தே) காவேரீ ஸ்நாந மஹம் கரிஷ்யே. (ஸ்நாநம்)

கையை அலம்பி, அதிக்ரூர மஹாகாய கல்பாந்த தஹனோபம | பைரவாய நமஸ்துப்யம், அநுக்ஞாம் தாதுமர்ஹஸி || கங்கேச யமுனே சைவ கோதாவரி, ஸரஸ்வதி | நர்மதே ஸிந்து காவேரி, ஜலேஸ்மின் ஸன்னிதிம் குரு || த்ரி ராத்ரம் ஜான்னவீதோயே-பஞ்சராத்ரந்து யாமுனே | ஸத்ய: புநாதி காவேரீ பாபம் ஆமரணாந்திகம் ||

புருஷர்கள் வேதமறிந்து இருந்தால் இமம்மே கங்கே ஆபோவா, முதலிய மந்த்ரங்களைக்கூறி ஸ்நாநம் செய்ய லாம். புருஷர் ஸ்நாநாங்கமான தேவரிஷி பித்ரு தர்ப்ப ணம் செய்யவேண்டும்.

மடிவஸ்த்ர மணிந்து நெற்றிக்கணிந்து காவேரி பூஜை காவேரீ ஜலத்தில் செய்க. வீடானால் தீர்த்தப் பாத்ரத் தில் காவேரீம் த்யாயாமி, காவேரீம் ஆவாஹயாமி, காவேர்யை நம: ஆஸநம் ஸமர்ப்பயாமி காவேர்யை நம: பாத்யம் ஸமர்ப்பயாமி, காவேர்யை நம: அர்க் யம் ஸமர்ப்பயாமி, காவேர்யை நம: ஆசமநீயம் ஸமர்ப்பயாமி, காவேர்யை நம: ஸ்நாநம் ஸமர்ப்பயாமி, காவேர்யை நம: வஸ்த்ரம் ஸமர்ப்பயாமி, காவேர்யை நம: கந்தான்தாரயாமி, காவேர்யை நம: குங்குமம் ஸமர்ப்ப யாமி, காவேர்யை நம: மருத்வருதாயை நம; ஸஹ்யாசல ஸமுத்பூதாயை நம; கவேரதன்யாயை நம; அகஸ்த்ய ஆநீதாயை நம: ஆமலக தீர்த்த தாராயை நம; ஸமுத்ர காமின்யை நம: புஷ்பை: பூஜயாமி, காவேர்யை நம; தூபம் ஸமர்ப்பயாமி, காவேர்யை நம: தீபம் ஸமர்ப்ப யாமி, கவேர்யை நம: (கதளீபலம், திராக்ஷாபலம், நாரிகேளம் நிவேதயாமி. காவேர்யை நம: நைவேத் யா நந்தரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி. காவேர்யை நம; தாம்பூலம் ஸமர்ப்பயாமி, காவேர்யை நம; கர்பூர நீரா ஜனம் ஸமர்ப்பயாமி, காவேர்யை நம: மந்த்ர புஷ்பம் ஸுவர்ண புஷ்பம் ஸமர்ப்பயாமி, காவேர்யை நம: ப்ரத க்ஷிண நமஸ்காரான் ஸமர்ப்பயாமி.)

(அர்க்ய ப்ரதானம்)

1. மருத் வ்ருதே மஹா பாகே-ஸர்வலோகைக பாவநி, க்ருஹாணார்க்யம் மயாதத்தம் பாவநம் குருமாம் ஸதா ॥ (காவேர்யை நம; இதமர்க்யம் இதமர்க்யம் இதமர்க்யம் 3 அர்க்யம்.)

2. விஷ்ணுமாயே மஹாகாயே கவேரகுல ஸம்பவே ஸஹ்யாசல ஸமுத்பூதே க்ருஹாணார்க்யம் வரப்ர தே ॥ (காவேர்யை நம; இதமர்க்யம் 3 அர்க்யம்)

3. கும்பஸம்பவ கும்பாத், த்வம்-ஸஹ்யாமலக பூஜயா சங்கோதகேந ஸஞ்ஜாதா க்ருஹாணார்க்யம் ஸமுத் ரகே ॥ (காவேர்யை நம: இதமர்க்யம் 3 அர்க்யம்.)



## துலாஸ்நாந மந்த்ர அர்த்தம்.

[துலா மஹிமை ப்ரும்ம வைவர்த்த புராணத்திலும் ஆக்நேய புராணத்திலும் கூறப்பட்டிருக்கின்றன. எங்கே ஸ்நாநம் செய்தாலும், துலா புராணம் கேட்டாலும் ஸகல பாபங்களும் அகன்று ஸகல க்ஷேமமும் உண்டாகும். மருத்வ்ருதே முதல் சதுராநந கன்யகாவரை காவேரியின் 18 நாமாக்கள். அதைக் கூறினாலே பாபம் அகலும். அதி க்ரூர என்பதால் பைரவரிடம் ஸ்நாநம் செய்ய உத்திரவு பெற்றுக்கொள்கிறோம். அவர் உக்ரமானவர், அவர் உத்திரவின்றி ஸ்நாநம் செய்தால் பலன் உண்டாகாது. கெடுதலும் உண்டாகும். கங்கேச என்பதால் ஏழு நதி களையும் அழைக்கிறோம். த்ரிராத்ர மென்பது கங்கைக் கரையில் 3 நாள், யமுனையில் ஏழுநாள் இருந்தால்தான் பாபம் அகலும். காவேரியோ சாகும்வரைச் செய்யும் பாபத்தை உடனே போக்குகிறாள். மருத்வ்ருதே முதல் 3 அர்க்யம் சுலோகங்களால் காவேரியின் மஹிமையைக் கூறி நம் பாபத்தை அகற்றும்படி வேண்டுகிறோம்.]

### ப்ரார்த்தனை.

கவேரகன்யே காவேரி—தேவஸங்காத பூஜிதே !
ஆயுராரோக்யம் ஐச்வர்யம் வித்யாம் தேஹிஸ்ரியஞ்சமே.
அநயா பூஜயா காவேரீப்ரியதாம்.

### வரும்போது ப்ரார்த்தனை.

யன்மயா தூஷிதம் தோயம் சாரீரமல ஸஞ்சயை:
பாபம்மம ஹரக்ஷிப்ரம் ஸஹ்யகன்யே நமோஸ்துதே ॥

[ஸுமங்கலிக்குத் தாம்பூலம் ப்ராம்மண குருதக்ஷிணை தரவும். ஒரு மாதம் துலாஸ்நாநம் செய்தபின் கடைசி யில் விஸ்தாரமாகச் செய்யவேண்டிய காவேரிபூஜையை குரு மூலமாகச் செய்யவும்.]

## விசேஷ ஸங்கல்பம்.

ஶுக்லாம் ...... ஶாந்தயே ... ஓம்பூ; ...... ஸுவரோம் மமோ...... யர்த்தம் அபவித்ர: பவித்ரோவா ஸர்வா வஸ்தாம் கதோபிவா-யஸ்மரேத் புண்டரீகாக்ஷம் ஸ பாஹ் யாப்யந்தர: ஶுசி: । மாநஸம் வாசிகம் பாபம் கர்மணா ஸமுபார்ஜிதம் ஸ்ரீ ராமஸ்மரணேநைவ வ்யபோஹதி ந ஸம்ஶய: । ஸ்ரீராம ராம ராம திதிர் விஷ்ணு: ததா வார:

நக்ஷத்ரம் விஷ்ணுரேவச யோகஸ்ச கரணஞ்சைவ ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத் ஸ்ரீ கோவிந்த கோவிந்த கோவிந்த அத்ய ஸ்ரீ பகவத: ஆதிவிஷ்ணோ: ஆக்ஞயா ப்ரவர்தமாநஸ்ய ஆத்ய ப்ரம்மண: த்விதீயே பரார்த்தே ஶ்வேத வராஹ கல்பே வைவஸ்வத மன்வந்தரே அஷ்டாவிம்ஶதி தமே கலௌயுகே ப்ரதமே பாதே ஜம்பூத்வீபே பாரதவர்ஷே பரதகண்டே மேரோ: தக்ஷிணே பார்ஶ்வே ஶகாப்தே அஸ்மின் வர்தமாநே வ்யாவஹாரிகே ப்ரபவாதி ஷஷ்டி ஸம்வத்ஸராணும் மத்யே—நாம ஸம்வத்ஸரே தக்ஷிணயநே ஶரத்ருதௌ துலாமாஸே—பக்ஷே—திதௌ—வாஸரயுக்தாயாம்—நக்ஷத்ரயுக்தாயாம் ஶுபயோக ஶுபகரண ஏவங்குண விசேஷண விஶிஷ்டாயாம் அஸ்யாம்— ஶுப திதௌ.

அநாத்யவித்யா வாஸநயா ப்ரவர்தமாநே அஸ்மின் மஹதி ஸம்ஸார சக்ரே விசித்ராபி: கர்மகதிபி: விசித்ராஸு யோநிஷு புந: புந: அநேகதா ஜநித்வா கேநாபி புண்ய கர்ம விஶேஷேண இதாநீந்தந மாநுஷ்யே த்விஜ ஜன்ம விஶேஷம் ப்ராப்தவத: மம ஜன்மாப்யாஸாத் ஜன்ம ப்ரப்ருதி ஏதக்ஷண பர்யந்தம் பால்யே வயஸி கௌமாரே யௌவநே வார்த்தகேச ஜாக்ரத் ஸ்வப்ந ஸுஷுப்தி அவஸ்தாஸு மநோவாக்காய கர்மேந்த்ரிய க்ஞானேந்த்ரிய வ்யாபாரை: ஸம்பாவிதாநாம் இஹ ஜன்மநி ஜன்மாந்தரேச க்ஞாநாக்ஞாநக்ருதாநாம் ப்ரகாஶ க்ருதாநாம் பிரும்மஹத்யாதி பஞ்சமஹாபாதகாநாம் அதிபாதகாநாம் உபபாதகாநாம் ஸங்கலீகரணநாம் மலிநீகரணநாம் அபாத்ரீகரணநாம் ஜாதிப்ரம்ஸகரணநாம் ப்ரகீர்ணகாநாம் க்ஞாநத: ஸக்ருத்க்ருதாநாம் அக்ஞாநத: அஸக்ருத்க்ருதாநாம் ஸர்வேஷாம் பாபாநாம் ஸத்ய: அபநோத நார்த்தம் ஸமஸ்த பாப க்ஷயார்த்தம்,

பாஸ்கர க்ஷேத்ரே விநாயகாதி த்ரய ஸ்த்ரிம் ஶத் கோடி தேவதாஸந்நிதௌ [அபய ப்ரதாம்பா ஸமேத மாயூரேஶ்வர ஸ்வாமி ஸந்நிதௌ, மங்களாம்பா ஸமேத வைத்தீஶ்வர ஸ்வாமி ஸந்நிதௌ ஶிவகாமி ஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சித்ஸபேஶ்வர ஸ்வாமி ஸந்நிதௌ அகிலாண்டநாயகீ ஸமேத ஸ்ரீ ஜம்புகேஸ்வர ஸ்வாமி ஸந்நிதௌ பர்வத வர்த்தனீ ஸமேத ஸ்ரீ ராமநாத ஸ்வாமி ஸந்நிதௌ விஶாலாக்ஷீ ஸமேத ஸ்ரீ விஶ்வநாத ஸ்வாமி ஸந்நிதௌ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வாமி



ஸந்நிதௌ ] தைவ ப்ராம்மண ஸந்நிதௌ ஸ்ரீ காவேரி ஸ்நாநமஹம் கரிஷ்யே.

அதிக்ரூர மஹாகாய கல்பாந்த தஹநோபம ।
பைரவாய நமஸ்துப்யம் அநுக்ஞாம் தாதுமர்ஹஸி ॥
துர்போஜந துராலாப துஷ்ப்ரதிக்ரஹ ஸம்பவம் । பாபம் ஹர மம க்ஷிப்ரம் ஸஹ்ய கன்யே நமோஸ்துதே ॥ த்ரிராத்ரம் ஜான்ஹவீதிரே பஞ்சராத்ரந்து யாமுநே । ஸத்ய: புநாதி காவேரீ பாபம் ஆமரணாந்திகம் ॥ ஷஷ்டி வர்ஷ ஸஹஸ்ராணி கங்காயாம வகாஹநம், ஸ்நாநமே தந்து காவேர்யாம் துலாயாந்து திவாகரே-துஷ்டபாப ப்ரஶமநம் குஷ்ட வ்யாதி நிவாரணம்-காவேரீ வந்தநம் புண்யம் கைவல்யம் தத்ஜலம்பிபேத் ॥

## காவேரீ விசேஷ பூஜை.

ஶுக்லாம்...... ஶாந்தயே, ஓம் பூ:...... ஸுவரோம்—ஶுபே.......... திதௌ, மமோ..........யர்த்தம், விசேஷத: ஸர்வபாப நிவாரணார்த்தம், ஸர்வாபீஷ்ட ஸித்யர்த்தம் காவேரீ பூஜாம் கரிஷ்யே. கையலம்பி, ஆகமார்த்தந்து தேவாநாம் கமநார்த்தந்து ரக்ஷஸாம் । குரு கண்டாரவம் தத்ர தேவதாஹ்வாந லாஞ்சநம் ॥ (மணி அடித்து) கலசத்தில் கீழ்கண்ட மந்த்ரங்களைக் கூறி ஆவாஹநம் செய்ய வேண்டும். வேதமறிந்தவர். 1 இமம்மே கங்கே........ ஸுஷோமயா. 2 ஆபோவா.........ஆப ஓம். காவேரீம் ஆவாஹயாமி. கீழ்வரும் பதினாறு நாமாக்களை முதலில் கூறவேண்டும். [2, 3, 4 என்பன வர்க்கக் கணக்கைக் கூறும். 2 கர்ஜூரீ, 3 கஜம், 4 கநம்.]

மருத்$^3$ வ்ருதா$^4$ மஹாலக்ஷ்மீ - ஸஹ்ய கன்யா ஸரஸ்வதீ
அக$^3$ஸ்த்ய பத்நீ காவேரீ - லோபா முத்$^3$ரா வரப்ரதா$^3$ ।
கமண்ட$^3$லு ஸமுத்பந்நா - ஸர்வ தீர்த்த$^2$ அதி$^4$ தே$^3$வதா
விரஜா த$^3$க்ஷிண கங்கா - ப்ரும்ம விஷ்ணு ஶிவாத்மிகா
சதுர்வித$^4$ ப$^2$லோத்தா$^4$த்ரீ - சதுராநந கன்யகா$^2$
ஸர்வாபீ$^4$ஷ்ட ப்ரதா$^3$த்ரீச-நாம்நாம் ஷோட$^3$ஶகம் ஸ்மிருதம்
ஏபி$^4$ர் நாமபதை$^3$ர் நித்யம் - பூஜயேத் பக்திமான் நர:
அச்ச ஸ்வச்ச லஸத் து$^3$கூல வஸநாம் பத்மா ஸநாத்$^4$யாஸிநீம்
ஹஸ்த ந்யஸ்த வராப்ஜ கலஶாம் ராகேந்து$^3$ கோடிப்ரபா$^4$ம்
பா$^4$ஸ்வத் பூ$^4$ஷண க$^3$ந்த$^4$ மால்ய ருசிராம் சாருப்ரஸன்னாநநாம்

ஸ்ரீகங்காதி3 ஸமஸ்த தீர்த்தநிலயாம் த்4யாயாமி காவேரிகாம்.
ஸ்ரீ காவேரீம் த்யாயாமி.

ஸ்ரீ கண்ட விஸ்வேஸ்வர ஸங்நிப4ாநி லிங்கா3நி யத்3 ரோத4ஸி லக்ஷ கோட்ய: । ஜலப்ரவாஹேபி ச கோடி கோட்ய: கவேரஜாயா: ஶிவ மூர்த்தய: ஸ்யு: ॥

பயாம்ஸி தீர்த்தா2நி ஶிலாஶ்ச தேவதா: தி3வௌக ஸோவாலுகதாம் ப்ரபன்னு: । அதோ நதீ ஸஹ்ய கி3ரி ப்ரஸூதா ஸரித்ஸு முக்யா மநுஜை: அலப்4யா ॥
ஸ்ரீ காவேரீம் ஆவாஹயாமி.

ஆதா3 வாதி3 விதா4த்ரு மாநஸ ஸுதா பஶ்சாத் கவேராத்மஜா பூ4ய: கும்ப4 ப4வஸ்ய தஸ்ய த3யிதா தஸ் மாத் நதீ ரூபிணீ । ஸ்ரீரங்கா துல கும்பகோண விலஸத் மாயூர மத்4யார்ஜுந ஶ்வேதாரண்ய முக2 ஸ்த2லேஷு மஹிதா ஸஹ்யாத்3ரிஜா த்3ரும்யதே ॥ ஸ்ரீகாவேர்யை நம: ஆஸநம் ஸமர்ப்பயாமி.

மருத்3 வ்ருதே4 மஹாதேவி - மஹாபா4கே3 மநோ ஹரே । ஸர்வா பீ4ஷ்ட ப்ரதே3 லோக-மாத: பாத்3யம் த3ா3மிதே ॥ ஸ்ரீகாவேர்யை நம: பாத்4யம் ஸமர்ப்பயாமி.

ஸஹ்ய பாதோ3த்3 ப4வே தேவி - ஸ்ரீரங்கோத் ஸங்க பா4மிநி । காவேரீ நாம விக்2யாதே - க்3ருஹாணு ர்க்4யம் ததா3மிதே ॥ ஸ்ரீ காவேர்யை நம: அர்க்யம் ஸமர்ப்பயாமி.

ஸ்ரீ ஸஹ்ய ஶைலதநயே - ஸர்வா ஸஹ்ய நிவாரிணி ப்ரஸாத3ம் குருமே தேவி - ப்ரஸன்னு ப4வ ஸர்வதா3 ॥
ஸ்ரீ காவேர்யை நம: ஆசமநீயம் ஸமர்ப்பயாமி.

துலா மாஸேது காவேரி - ஸர்வ தீர்தா ஶ்ரிதா நதீ பஞ்ச பாதக ஸம்ஹர்த்ரீ - வாஜிமேத4 ப2ல ப்ரதா ॥
ஸ்ரீ காவேர்யை நம: பஞ்சாம்ருத ஸ்நாநம் ஸமர்ப்பயாமி.

காவேரீ தீர ஜன்மாந: - ம்ருக பக்ஷி மஹீருஹா: தத்3 வாரி ஶீத வாதைஶ்ச - ஸ்ப்ருஷ்டா முக்திம் ப்ரயாந் திவை: ॥ ஸ்ரீ காவேர்யை நம: ஶுத்த உத3க ஸ்நானம் ஸமர்ப்பயாமி.

கவேர கன்யே காவேரி - நிம்நகா3 நாத2 நாயிகே । வஸ்த்ராணி வஸ பூ4வஸ்த்ரே பு4க்தி முக்தி ப்ரதா3யிநீ ॥
ஸ்ரீ காவேர்யை நம: வஸ்த்ரம் ஸமர்ப்பயாமி.

ஸர்வ யக்ஞாஶ்ரய தடே - ஸர்வ யக்ஞ ஸஹாயநி யக்ஞாங்க3 ஸம்ப4வே தேவி - ஸர்வ யக்ஞ ப2ல ப்ரதே3 ॥
ஸ்ரீ காவேர்யை நம: யக்ஞோபவீதம் ஸமர்ப்பயாமி.



ஜய தேவி ஜகன்மாத: - லோபா முத்ரே புராதநே ஜய ப4த்3ரே ப4வோத்தா4ரி - மங்களே மங்கள ப்ரதே3 ॥
ஸ்ரீ காவேர்யை நம: மங்கள த்ரவ்யம் ஸமர்ப்பயாமி.

சந்தநாக3ரு கஸ்தூரீ ஹிமவாலுக கேஸரை: ராங்க வை: ஸாங்கவைர் யுக்தம்-க3ந்த4ம் ஸ்வீகுரு ஸஹ்யஜே ॥
ஸ்ரீ காவேர்யை நம: கந்தம் ஸமர்ப்பயாமி.

யஸ்யாம் ஸக்ருத் ஸ்நாந மாத்ராத் - நரோக்ஷய்ய ப2லம்லபே4த் நக்ஷத்ர மால்யவத் ஶுப்4ராம் – அக்ஷதை ரர்சயாம் யஹம் ॥ ஸ்ரீ காவேர்யை நம: அக்ஷதான் ஸமர்ப்பயாமி.

கிரீட ஹார கேயூர - குண்டலாங்க3த3 கங்கணை: ஹம்ஸ கைர் மேக2 வாத்3யைஶ்ச - பூ4ஷயே த்வாம்மருத்:3 விருதா4ம் ॥ ஸ்ரீ காவேர்யை நம: ஆபரணுநி ஸமர்ப்ப3 யாமி.

ப3ஹு ஜன்ம க்ருதாநேக-வாஸநா வாஸிதாத்மபி4: தி3வ்யை: ஸுமவரை: பூஜ்யாம் - பூஜயேத் புஷ்ப ஜாதிபி4: ॥ ஸ்ரீ காவேர்யை நம: பூஷ்பை: பூஜயாமி.

## அங்க பூஜா.

| | | |
|---|---|---|
| மருத்3 வ்ருதா4யை நம: | பாதௌ3 | பூஜயாமி |
| மஹாலக்ஷ்ம்யை நம: | கு3ல்பௌ2 | ,, |
| ஸஹ்ய கன்யாயை நம: | ஜங்கே4 | ,, |
| ஸரஸ்வத்யை நம: | ஜாநுநீ | ,, |
| அகஸ்த்ய பத்ந்யை நம: | மத்4யம் | ,, |
| காவேர்யை நம: | நாபி4ம் | ,, |
| லோபா முத்ராயை நம: | ஹ்ருதயம் | ,, |
| வர ப்ரதா3யை நம: | ஸ்தநௌ | ,, |
| கமண்ட3லு ஸமுத்பன்னுயைநம: | பா3ஹூ | ,, |
| ஸர்வ தீர்தா2தி4 தேவதாயை நம: | கண்ட2ம் | ,, |
| விரஜாயை நம: | நாஸிகாம் | ,, |
| தக்ஷிண க3ங்கா3யை நம: | ஶ்ரோத்ரே | ,, |
| ப்ரும்ம விஷ்ணு ஶிவாத்மிகாயைநம: | நேத்ரே | ,, |
| சதுர்வித4 ப2ல உத்த4த்ர்யை நம: | வக்த்ரம் | ,, |
| சதுராநந கன்யகாயை நம: | ஶிர: | ,, |

ஸர்வாபீ4ஷ்ட ப்ரதா3தன்யைநம: ஸர்வாணி அங்காநி,,

# ஸ்ரீ காவேரி அஷ்டோத்ர சதநாமார்ச்சனே.

அநந்தகுண க3ம்பீ4ராயை நம:
அர்க புஷ்கர ஸேவிதாயை நம:
அம்ருத ஸ்வாது3 ஸலிலாயை நம:
அகஸ்த்யமுநி நாயிகாயை நம:
ஆஶாந்த கீர்த்தி திலகாயை நம: 5
ஆஶா-காக3ம வர்தி4ன்யை நம:
இதிஹாஸ புராணோக்தாயை நம:
ஈதிப3ாத4ா நிவாரிண்யை நம:
உன்மத்த ஜநது3ர ஸ்தா2யை நம:
ஊர்ஜிதா நந்த தாயின்யை நம: 10
ரிஷிஸங்க3 ஸ-ஸம் வீதாயை நம:
ரிணத்ரய விமோசநாயை நம:
லுப்த தர்ம உத்தா4ராயை நம:
லூந பா4வ விவர்ஜிதாயை நம:
ஏ3தி4தாகி2ல லோகஶ்ரியை நம: 15
ஐஹிகாமுஷ்மிக ப்ரதா3யை நம:
ஓங்கார நாத3 நிநதா3யை நம:
ஓஷதீ4 க்ருத ஜீவநாயை நம:
ஔதா3ர்ய குண நிர்தி3ஷ்டாயை நம:
ஔதா3ஸீன்ய நிவாரிண்யை நம: 20
அந்த: கரண ஸம் ஸேவ்யாயை நம:
அச்ச ஸ்வச்ச ஜலாஶ்ரயாயை நம:

கபிலாக்2ய நதீ ஸங்க3தா4யை நம:
கருணா பூர்ண மாநஸாயை நம:
காவேரீ நாம விக்2யாதாயை நம: 25
காமிதார்த்த2 ப2லப்ரதா3யின்யை நம:
கும்பகோண க்ஷேத்ர நாத2ாயை நம:
கௌதுக ப்ரத2ம ப்ரபா4யை நம:
க2க3ராஜ ரரோத்ஸாஹ ரங்கஸ்த2லஸு-ஶோபி4
தாயை நம:
க2க3ாவளி ஸமாக்ராந்த கல்லோலாவளி மண்டி3
தாயை நம: 30
க3ஜாரண்ய ஸ-விஸ்தீர்ண ப்ரவாஹஜந
மோஹின்யை நம:
கா3யத்ர்யாக்2ய ஶிலா மத்யாயை நம:
கருடாஸந பக்திதாயை நம:
க4ந க3ம்பீ4ர நிநத3 நிர்ஜர ப்ராப்த நிர்ஜராயை நம:
சந்த்ர புஷ்கர மத்யஸ் தா2யை நம: 35
சதுராநந புத்ரிகாயை நம:
சோளதேஶ ஜநோத்தா4ர க்ரீஷ்ம கால
ப்ரவாஹின்யை நம:
சுஞ்ச க்ஷேத்ர ஸ்மாநீதாயை நம:
சத்3ம தோஷ நிவாரிண்யை நம:
ஜம்பூ த்வீப ஸரித்ஶ்ரேஷ்டநதீநதக3ரீயஸ்யை நம: 40

ஜங்கார நாத ஸம்மிருஷ்ட ஷட்பதா$^{3}$ளி ஸமா
குலாயை நம:
க்ஞானைக ஸாத$^{4}$ந பராயை நம:
க்ஞப்தி மாத்ர ஆர்த்திஹாரிண்யை நம:
டிட்டிபா$^{4}$ ராவ ஸவ்யாஜ தி$^{3}$விஜ ஸ்துதி
பாத்ரிண்யை நம:
டங்கார நாத$^{3}$ ஸம்பே$^{4}$த$^{3}$ ஜர்ஜரீக்ருத
பர்வதாயை நம: 45
ட$^{3}$ாகினீ ஶாகினீ ஸங்க$^{4}$ நிவாரண ஸரித்தடாயை நம:
ட$^{4}$க்கா நினாத$^{3}$ பாரீண பார்வதீஶ ஸமாஶ்ரிதாயைநம:
ஞந்த வாச்ய த்$^{3}$விஜா ஷ்டாங்க$^{3}$ யோக$^{3}$ ஸாத$^{4}$ந
தத்பராயை நம:
தரங்கா$^{3}$வளி ஸம்வித்த$^{4}$ ம்ருது$^{3}$ வாலுக
ஶோபிதாயை நம:
தபஸ்வி ஜந ஸத்கார நிவேஶித ஶிவாஸநாயை நம: 50
தாபத்ரய தருன்மூல கங்காதி$^{3}$பி$^{4}$ரபிஷ்டுதாயை நம:
த$^{2}$ாந்த ப்ரத$^{2}$ம ஸம்ஸேவ்ய ஸாம்ப ஸான்னித்ய
காரிண்யை நம:
த$^{3}$யா தா$^{3}$க்ஷிண்ய ஸத்கார ஶீல லோக ஸபா$^{4}$வி
தாயை நம:
தா$^{3}$க்ஷிண்த்ய ஜநோத்தா$^{4}$ர நிர்விசார த$^{3}$யான்
விதாயை நம:
த$^{4}$ந மாந மதா$^{3}$ந்தா$^{4}$ இ$^{3}$ மர்த்ய நிர்வர்தந
ப்ரியாயை நம: 55
நமஜ்ஜநோத்தா$^{4}$ர ஶீலாயை நம:
நிமஜ்ஜத் ஜநபாவனாயை நம:
நாகா$^{3}$ரி கேதுநிலயாயை நம:
நாநாதீர்த்தா$^{2}$தி$^{4}$ தேவதாயை நம:
நாரீஜந மநோல்லாஸாயை நம: 60
நாநாரூப ப$^{2}$ல ப்ரதா$^{3}$யை நம:
நாராயண க்ருபா ரூபாயை நம:
நாத$^{3}$ ப்ரும்ம ஸ்வரூபிண்யை நம:
பராபூ$^{4}$த ஸமஸ்த அகா$^{4}$யை நம:
பஶு பக்ஷ்யாதி$^{3}$ ஜீவநாயை நம: 65
பாப தூலாக்நி ஸத்ருஶாயை நம:
பாபிஷ்ட$^{2}$ ஜநபாவனாயை நம:
ப$^{2}$ணீந்த்ர கீர்தித கலாயை நம:
ப$^{2}$லதாந பராயணாயை நம:
ப$^{3}$ஹு ஜன்ம தபோயோக$^{3}$ ப$^{2}$ல ஸம்ப்ராப்த
த$^{3}$ர்ஶநாயை நம: 70
பா$^{3}$ஹுரூப த்$^{3}$வி பார்ஶ்வஸ்த$^{2}$ ஸ்வமாத்ருக
ஜலார்த்தி$^{2}$ நாம் | களம க்ஷேத்ர ஶால்யன்னதா$^{3}$
நநிர்ஜித வித்தபாயை நம: ||
ப$^{4}$கவத் க்ருத ஸந்தோஷாயை நம:
பாஸ்கர க்ஷேத்ரகா$^{3}$மின்யை நம:
பா$^{3}$ஹீரதீ$^{2}$ ஸமாக்ராந்த துலாமாஸ ஜலாஶ்ரயாயை நம:
மஜ்ஜத் து$^{3}$ர்ஜந ப்ராக் ஜன்ம து$^{3}$ர்ஜயா மஹ:
ப்ரமார்ஜன்யை நம: 75

மாக$^{4}$ வைஶாகா$^{2}$தி$^{3}$ மாஸ ஸ்நாந ஸ்மரண
ஸௌக்யதா$^{3}$யை நம:
யக்ஞ தாநதப: கர்மகோடி புண்ய ப$^{2}$லாஶ்
ரயாயை நம:
யக்ஷ கந்தர்வ வித்தா$^{4}$த்$^{3}$யை: அபி$^{4}$ஷ்டுத பத$^{3}$
த்$^{3}$வயாயை நம:
ரகுநாத பதத்வந்த்வ விராஜித ஶிலா தலாயை நம:
ராமநாத புரக்ஷேத்ர காமதேநு ஸமாஶ்ரயாயை நம:
லவோத$^{3}$க ஸ்பர்ஶ மாத்ர நிர்வாண பத$^{3}$
தாயின்யை நம:
லக்ஷ்மீ நிவாஸ ஸத$^{3}$நாயை நம:
லலநா ரத்ந ரூபிண்யை நம:
லகூ$^{4}$க்ருத ஸ்வர்க போ$^{4}$காயை நம:
லாவண்ய குண ஸாக$^{3}$ராயை நம: 85
வஹ்நி புஷ்கர ஸாந்நித்$^{4}$யாயை நம:
வந்தி$^{3}$தாகி$^{2}$ல லோகபாயை நம:
வ்யாக்ரபாத க்ஷேத்ர பராயை நம:
வ்யோம யாந ஸமாந வ்ருதாயை நம:
ஷட்கால வந்த்$^{3}$ய சரணாயை நம: 90
ஷட்கர்ம நிரத ப்ரியாயை நம:
ஷட$^{3}$ாஸ்ய மாத்ரு ஸம்ஸேவ்யாயை நம:
ஷடு$^{3}$ர்மி ஜித ஸோர்மிகாயை நம:
ஸக்ருத் ஸ்மரண ஸம்சுத்த —
தாபத்ரய ஜநாஶ்ரிதாயை நம:
ஸஜ்ஜநோத்தா$^{4}$ர ஸந்தா$^{4}$ந—
ஸமர்த்த ஸ்வப்ர வாஹின்யை நம:
ஸரஸ்வத்யாதி$^{3}$ தேவீபி: அபி—
வந்தித நிர்ஜராயை நம:
ஸஹ்ய ஶைல ஸமுத்$^{3}$ பூ$^{4}$தாயை நம:
ஸஹ்யா ஸஹ்ய ஜந ப்ரியாயை நம:
ஸங்கம க்ஷேத்ர ஸாமீப்யாயை நம:
ஸ்வ வஶார்த்த$^{4}$ சதுஷ்டயாயை நம: 100
ஸௌப$^{4}$ரி க்ஷேத்ர நிலயாயை நம:
ஸௌபா$^{4}$க்ய ப$^{2}$லதாயின்யை நம:
ஸம்ஶயா விஷ்ட ஹ்ருஸ்த$^{2}$ாயை நம:
ஸாங்கோ பாங்க ப$^{2}$லதாயின்யை நம:
ஹரி ப்ரும்ஹேமஶ லோகேஶ வித்த$^{4}$ ப்$^{2}$ருந்தா$^{3}$ர
வந்தி$^{3}$தாயை நம:
க்ஷேத்ர தீர்த்த$^{2}$ாதி$^{3}$ ஸீமாந்தாயை நம:
க்ஷபாநாத$^{2}$ ஸுஶீதளாயை நம:
க்ஷமாதலாகி$^{2}$லா நந்த க்ஷேமஶ்ரீ விஜயா
லஹாயை நம:
ஶ்ரீ காவேர்யை நம:
அஷ்டோத்தர ஶதநாமார்ச்சனம் ஸமர்ப்பயாமி.

த³பராங்கோ³ கு³க்க³ ஞூபேத: ஸுகந்தோ க்⁴ராண தர்பண: மருத் வ்ருதே⁴ம்ப காவேரி தூ⁴போ யந்தே ஸமர் பித:ா ஸ்ரீ காவேர்யை நம: தூபம் ஸமர்பயாமி.

ஆபோ ஜ்யோதிஸ் த்வமஸ்யம்ப³–கும்ப⁴ ஸம்ப⁴வ தேஜஸா | தேஜ: ப்ரதா³த்ர காவேரி தீபோயம் ப்ரதிக் ருஹ்யதாம் ‖ ஸ்ரீ காவேர்யை நம: தீபம் ஸமர்பயாமி.

அன்னம் சதுர்விதம் ருச்யம் – ஶாகவ்யஞ்ஜந ஸம் யுதம் ஸப²லம் ஸக்⁴ருதம் பு⁴ங்க்ஷ்வ – காவேரி தடிதாம் வரே ‖ ஸ்ரீ காவேர்யை நம: ஸக்ருத குளபாயஸம் ஸபக்ஷ்யம் ஶால்யான்னம் நிவேதயாமி–மத்யே மத்யே பாநீயம் ஸமர்ப்பயாமி. (வேதமறிந்தவர் விதிப்படி பரிஷேசந ஆபோஶந ப்ராணுக்நி ஹோத்ர உத்தரா போசந மந்த்ரங் கூறலாம்).

பூகீ³ ப²ல ஸமாயுக்தம் – நாக³வல்லீ த³ளைர் யுதம் | கர்பூர சூர்ண ஸம்யுக்தம்–தாம்பூலம் ப்ரதிக்³ ருஹ்யதாம் ‖ ஸ்ரீ காவேர்யை நம: கர்பூர தாம்பூலம் ஸமர்பயாமி. ஸர்வ தீர்த்தைஸ் துலாமாஸே–த்வம் நீராஜித பாது³கா | நீராஜயாமி பக்த்யாத்வாம் – காவேர்யம்ப மருத் வ்ருதே ‖ ஸ்ரீ காவேர்யை நம: நீராஜநம் ஸமர்பயாமி. ப்ரதக்ஷிணம் கரோமித்வாம்–புருஷார்த்த² ப்ரதா³யிநீ | தக்ஷிண வர்தக ஸ்ரீநிவாஸ ப்ரீதே மருத் வ்ருதே ‖ ஸ்ரீ காவேர்யை நம: ப்ரதக்ஷிணம் ஸமர்பயாமி. நமஸ்தே தடிதாம் முக்யே – நிகமாகம ஸம்ஸ்துதே | பாஹி பாஹ்யம்ப காவேரி–ப்ரபந்நம் மாம் க்ருபாத்³ருஶா ‖ ஸ்ரீ காவேர்யை நம: நமஸ்காரான் ஸமர்பயாமி. (ஸ்ரீ காவேரி ரூபாயை ஸுவாஸின்யை வாயநம் ததாமி என்று ஸுமங்கலிகளுக்கு ஶக்திக்கேற்றபடி புடவை ரவிக்கை மஞ்சள் குங்குமம் பழம் தாம்பூலம் பக்ஷணம் தக்ஷிணை தாம்பூலம் தர வேண்டும்).

பாபக்ஷயம் பாரிஶுத்⁴யம் – ஆயுராரோக்ய மேவச | ஸௌபாக்ய மபி ஸந்தாநம் – க்ஞாநம் தேஹி மருத் வ்ருதே ‖ என்று பிரார்த்தனை செய்து

ஸ்ரீ காவேர்யை நம: சத்ரம் ஸமர்ப்பயாமி, சாமரம் ஸமர்பயாமி. ஸமஸ்த ராஜோபசார தேவோப சாரான் ஸமர்பயாமி. உத்தர நீராஜநம் ஸமர்பயாமி. ஸ்ரீ காவேர்யை நம: யதாஸ்தாநம் ப்ரதிஷ்டாப யாமி. [பிராம்மண ஸுவாஸினீ ஸமாராதனை சக்திக்கேற்றபடி செய்யவும்.]

**ஸ்ரீ காவேரி பூஜை முற்றிற்று.**

## ஸ்ரீ துலா புராணம்.

# காவேரி மஹிமை.

### முதல் அத்யாயம்.

நிசுளாபுரத்தை ஆண்டு வந்த தர்ம வர்மா எனும் ராஜரிஷி உத்தம பாகவதரான தால்பய முனிவரைப் பணிந்து, ஓ பகவன்! எந்த புண்யத்தால் எல்லோரும் ஸத்புத்ரர்களைப் பெற்று சுகமாகவும் தீர்காயுஸ் உள்ளவராகவும் இருப்பர்? எதனல் பாபம் அகலும்? பகவானிடத்தில் எப்படி பக்தி உண்டாகும்? எதனல் பகவான் ஸந்தோஷமடைந்து போக மோக்ஷங்களைத் தருவார்? அதிகமாக பாபமும் துராசாரமும் நிறைந்த கலியுகத்தில் மகாபாபிகளது பாபங்களும் எதனல் அகலும்? தங்களது சிஷ்யனை எனக்கு இவைகளைப் பற்றி கூறவேண்டுமென பிரார்தித்தார்.

பரம தர்மிஷ்டரான அரசனைப்பார்த்து பிராம்மணேத்தமரான தால்பியர் கூறினர். அரசே! நீ மகா பாக்யசாலி! நன்ருகக்கேட்டாய். நீ இந்த கேள்விகளால் பகவானுடைய சுபமான சரித்தைக் கேட்க விரும்புகிருய்! உனக்கு ஸகல தத்துவங்களையும் கூறுகிறேன் கேள். இதே விஷயம் முன்னர் குரு க்ஷேத்ரத்தில் அரிச்சந்த்ரனல் கேட்கப் பட்டது. பகவான் அகஸ்த்யர் மஹர்ஷிகளின் முன்னிலையில் கூறினர். அதை நான் கூறுகிறேன். ஊக்கத்துடன் கேள்: முன்னே அயோத்யையை ஆண்டுவந்த அரிச்சந்த்ரன் என்ற அரசன் மிக ப்ரஸித்தனக இருந்தான். சுப க்ஷேத்ரமான குரு க்ஷேத்ரத்தில் ஒரு யாகம் செய்யவேண்டுமென்று அங்கு வந்தான்.

ஆங்குள்ள மகாபாக்யவான்களான சௌநகர் முதலிய மஹர்ஷிகளை விநயத்துடன் நமஸ்காரம் செய்தான். வேந்தே! வருக! தர்மம் தவராமல் குடிகளைக் காக்கின்ருயா? ராஜ்யம் பொக்ஷம் ஸேனை முதலியன புஷ்டியாக இருக்கின்றனவா? பகைவர்களை எல்லாம் வென்று



வெற்றி பெற்ருயா! பூமியில் ஆறில் ஒரு பங்கு குடிகளிடம் வரியாக பெறுகிருயா? குடிகளை நன்கு ரக்ஷிக்காவிடில் பிரும்ம கல்பம் வரை நரகங்களை அனுபவிக்க வேண்டும். இந்த்ரியங்களை அடக்கி நற்கீர்த்தி பெற்ருல் நீண்ட ஆயுளைப் பெறுவாய். நீ பிராம்மண பக்தன். தான ஶீலன். நற்கீர்த்தி பெற்றவர்களில் மிகச்சிறந்தவன். தன்னடக்கமுள்ளவன். பெரியோர்களால் கொண்டாடத் தக்கவன். என்று அரசனைக் கொண்டாடி முனிவர் அவருக்கு விருந்தளித்தனர். முனிவர் உத்திரவுபடி ஆஸனத்திலமர்ந்து விநயத்துடன் கூறினன். மஹரிஷிகளே! உங்களது ஆசிர்வாதத்தால் எல்லாம் ஸுகம். தங்களைத் தர்சித்ததால் கிருதார்த்தன் ஆனேன். பவித்ரமானேன். உலகத்தவரால் பூஜிக்கத் தக்க தபோராசிகளான உங்களைத் தர்சித்ததால் அநுக்ரஹம் பெற்றேன். தாங்கள் இங்கிருப்பதைக் கேட்டு தங்களிடம் சில விஷயங்களை விக்ஞாபனம் செய்துக் கொள்ளலாமென வந்தேன்.

எதனல் தாண்ட முடியாத ஸம்ஸாரக்கடலைத் தாண்டலாம்? எதனல் புக்தியும் முக்தியும் உண்டாகும்? வம்சம் விருத்தியாகவும் நீண்டகாலம் வாழவும் என்ன செய்ய வேண்டும்? புருஷோத்தமனை பகவான் எதனல் ஸந்தோஷமடைவார்? ஸாரமான தத்துவம் இதுதான் என நிச்சயம் செய்து கூறுங்கள் என்ருன். அரசே! உனது புத்தி எப்போதும் தர்மத்திலேயே செல்கிறது. நன்ருகக் கேட்டாய். அச்வமேதமெனும் மஹாயாகம் பகவானுக்கு பரம ஸந்தோஷத்தை உண்டுபண்ணும். பிரும்மஹத்தியாதி பாபங்களை அகற்றி புக்தி முக்திகளைத் தரும் என்றனர். ஆனல் தாங்களே எனக்கு அந்த வேள்வியைச் செய்துவையுங்கள் எனவேண்டினன் அரசன். இந்த ஸமயத்தில் நைமிசாரண்யத்தில் உள்ள முனிவர்கள் ஸூத புராணிகரை முன்னிட்டுக்கொண்டு அங்கு வந்தனர்.

வஸிஷ்டர் வாமதேவர் ஜாபாலி காச்யபர் பிருகு வீதிஹோத்ரர் தூர்வாஸர் அத்ரி மங்கணர் காலவர் விச்வாமித்ரர் மார்க்கண்டேயர் கண்வர் அஸிதர் யாஜர் உபயாஜர் பரத்வாஜர் கௌதமர் பைலவர் பராசரர் வியாஸர் சாதாதபர் முக்தர் மௌத்கலர் கவஷர் வால்மீகி ஜாதுகர்ணர் ஸுதீக்ஷ்ணர் அகஸ்த்யர் சதாநந்தர் ஸத்ய விருதர் மதங்கர் ஸத்ய தபஸ் ஆஸுரி நாரதர் காளிந்தர் மாண்டல்யர் கவி மதுஹாஸ்ரயர் தௌம்யர் ஹோதா

தூமகேது ஜலப்லவர் சங்கர் லிகிதர் போதாயநர் யக்ஞகேது யாக்ஞவல்க்யர் மருக்ரது புலஸ்த்யர் புலஹர் கௌரர் ஆச்வலாயநர் ஆபஸ்தம்பர் யக்ஞராசி மரீசி பப்ரு.

இதுபோன்ற மற்றும் பலரிஷிகள் சிஷ்ய ப்ரசிஷ்யர்களுடன் வந்தனர். அவர்க்ள் மிகச்சாந்தர்கள், ஜிதேந்திரியர், சிலர் நீரையே ஆஹாரமாகக் கொண்டவர். சிலர் வாயுவையே பக்ஷிப்பவர்! சிலர் இலை கிழங்கு பழம் இவைகளை மாத்ரம் புஜிப்பவர்கள், சிலர் கிருஹஸ்தர், சிலர் துறவிகள், சிலர் வாநப்ரஸ்தர். லோகத்திற்கு அநுக்ரஹம் செய்யும் இவர்கள் தர்க்கம் வேதாந்தம் வேதம் முதலியவைகளை ப்ரசாரம் செய்பவர் ஸ்ரீ விஷ்ணுபக்தர்கள், ஸகல பாபங்களையும் அகற்றவல்லவர். பகவானுக்குப் பிரியமான துலா காவேரீ மஹிமையைக் கேட்க பகவானுக்குப் பிரியமான குருக்ஷேத்ரம் வந்தனர். அவர்களைக் கண்டவுடன் குருக்ஷேத்ர வாஸிகளான மஹர்ஷிகள் மிக ஸந்தோஷத்துடன் வரவேற்றனர். அர்க்ய பாத்ய ஆசமனீயம் அளித்தனர். உலகத்தவர் பாபத்தை யகற்றவல்லவர்களுமான லோக பூஜ்யர்களுமான முனிவர்களைச் சிறந்த முறையில் பூஜித்தனர். ஆஸநத்தில் அமர்த்தி புலகாங்கிதர்களாக க்ஷேமம் விசாரித்தனர்.

அரிச்சந்த்ரன் ஆநந்தக்கண்ணீர் பெருக அஞ்ஜலியுடன் அவர்கள் திருவடிகளில் ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து கூறினான். முனிவர்களே! இன்றே என் பிறவியும் குலமும் விரதமும் ஸபலமாயிற்று. எனது பித்ருக்கள் ஸந்தோஷமடைந்தனர். நான் அர்ச்சித்த அச்யுதனும் ப்ரஸந்நமானார். ராஜ்யம் செல்வம் போகபாக்யம் இவைகளில் மயங்கியவனும் தர்மத்திலே பூர்ணமாக ஈடுபடாதவனுமான மூர்க்கனுக்கு உங்கள் தர்சநம் கிடைத்ததே! முற்பிறவியில் செய்த புண்யத்தால் உங்கள் தர்சநம் கிடைத்தது. இதற்கு பின் மூவுலகிலும் கிடைக்கத்தகாதது ஒன்றுமில்லை என்றான். இதைக்கேட்ட முனிவர் சிறந்த விஷ்ணு பக்தனும் வஸிஷ்டர் சிஷ்யனுமான நீ எங்களை உபசரிப்பது ஆச்சர்யமல்ல. இதில் உட்காரென ஆஸனமளித்தனர். அரசனமர்ந்தபின் ஸகல ரிஷிகளையும் பார்த்து சௌநகர் கூறினார்.

# ஸ்ரீ துலா புராணம்.

அரசன் அச்வமேதயாகம் செய்ய முயற்சிக்கிறான். தற்செயலாக வந்த நீங்கள் இதை நடத்தி வையுங்கள். இதைக்கேட்டு நாரதரும் அகஸ்த்யரும் கூறினர். இவன் சிறந்த மேதாவி, இந்த்ரியங்களை அடக்கினவன். தன்னடக்கமுள்ளவன். யாகம் செய்யலாம். ஆனால் விச்வாமித்ராது கடனை அளிக்க இவ்வரசன் வனம் சென்றான் அல்லவா? அச்சமயம் பசியால் வாடி அலைந்து திரிந்தான். அங்கு தவம் செய்யும் கிந்தமர் என்ற முனிவரைப் பார்த்தும் துரதிருஷ்டமாய் அவரைப் பூஜிக்காமல் பித்தனைப்போல் இருந்தான். கருணையுள்ள முனிவர் இதைத் தியாநத்தால் அறிந்து அரிச்சந்த்ரன் ஸத்யவாதீ. பிராம்மண பக்தன். என்னைப்பார்த்து பூஜிக்காமல் இருக்கிறான். பசிதாஹத்தால் பேசாமலிருக்கிறான். பாபம்! என சபிக்கவில்லை. பிராம்மண அவமானம் செய்த அரசன் பிராயச்சித்தம் செய்துக் கொள்ளவேண்டும். இல்லையேல் யாகம் செய்ய யோக்யதை இல்லை. மநம் வாக்கு உடல் இவைகளால் பிராம்மண அவமானம் செய்தவர், செல்வத்தையும் ஆயுளையும் உடனே இழப்பார். பித்ருக்களுடன் நரகத்தில் வீழ்வர். அறியாமல் செய்தவர்க்கே அந்த கதி. அறிந்து செய்தவர்க்கு நற்கதி ஏது? அறிந்து பிராம்மண அவமானம் செய்தால் பிரும்மரக்ஷஸாக ஆவார்.

காவேரியில் துலாமாஸம் அல்லது வையாசி அல்லது சித்திரை மாதத்தில் ஸ்நாநம் செய்தால் அந்த பாபம் அகலும். நர்மதையில் ஒரு முறை ஸ்நாநம் செய்தாலும் அந்த பாபமகலும். துலா மாஸத்தில் ஸர்வதீர்த்தங்களும் காவேரியிடம் வருகின்றன. ஸர்வ பாபங்களையும் அகற்றி ஸர்வ ஸித்தியையும் அளிப்பாள் காவேரீ. மோக்ஷத்தையும் ஸகலயாகங்களின் பலனையும் தருவாள். அறுபத்தாறு கோடி புண்ய தீர்த்தங்கள், பதினான்கு லோகங்களிலிருந்தும் தங்கள் பாபத்தை அகற்றிக் கொள்ள துலா காவேரிக்கு வருகின்றன. காவேரியின் பெருமையைப் பத்தாயிரம் ஆண்டுகள் ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷன் கூறினாலும்கூட அதன் கரையைக் காணமுடியாது. மூன்று நாள் துலாமாஸத்தில் காவேரீ ஸ்நாநம் செய்தால் மஹாபாபிகளாயினும் ஸகல பாபங்களும் அகன்று முக்தி பெறுவர் எனின் மற்றவர் பற்றி சொல்ல வேண்டுமா?

ஸஹ்யமலையிலிருந்து ஸமுத்ரக்கரை வரை இருபுறங்களிலும் சிவ விஷ்ணு க்ஷேத்ரங்கள் நிறைந்திருக்கின்றன.

முனிவர்களது ஆச்ரமங்களும் இருக்கின்றன. அவை உடனே தபஸ்ஸின் பலனைத் தருபவை. கொஞ்சம் ஆரம்பித்தாலும் பூர்ணபலனைத் தரும். கோடியுகம் கூறினலும் கூறமுடியாது துலா மஹிமை. மும்மூர்த்திகளே இதன் பெருமையைக் கூற முடியும். காவேரியின் அலை சுழல் மணல் இவைகள் எல்லாம் தேவதாவடிவமானவை. புண்யந் தருபவை. பூமியில் எவ்வளவு புழுதிகள் ஆகாசத்தில் எவ்வளவு நக்ஷத்திரங்கள் இருக்கின்றனவோ மழையில் எவ்வளவு தாரைகள் விழுகின்றனவோ பூமியில் எவ்வளவு செடி கொடிகள் இருக்கின்றனவோ அவ்வளவு கோடி புண்ய தீர்த்தங்கள் காவேரியை ஸேவிக்கின்றன.

காவேரீ ப்ரவாஹத்தில் எத்தனை திவிலைகள் இருக்கின்றனவோ அவ்வளவு தனித்தனி புண்ய தீர்த்தங்கள் காவேரியிலிருக்கின்றன. அநேக கோடி பிரும்மாண்டங்களிலும் உள்ள புண்ய தீர்த்தங்களெல்லாம் காவேரியிலிருப்பதால் அதன் பெருமை அளவு கடந்ததாகும். ஆதலால் அரிச்சந்த்ர! துலாமாதத்தில் காவேரீ ஸ்நாநம் செய்தவர் முக்தி பெறுவர். ராஜன்! நீயும் துலா ஸ்நாநம் செய்து ஸகல ஸித்திகளையும் பெறுவாயாக. இப்படி நாரதர் கூறியதைக் கேட்டு ஆச்சர்யமடைந்த அரசன் துலாஸ்நாநம் செய்து பாபத்தை அகற்றியக்ஞம் செய்யக் கருதினன். முனிவர்களே! நீங்கள் கருணாமூர்த்திகள்! நான் உங்கள் தாஸன். விதிப்படி யாகத்தைச் செய்வியுங்கள். துலாமாதத்தில் காவேரியிலும் வையாசியில் நர்மதையிலும் எப்படி ஸ்நாநம் செய்வது? இந்த மாதங்கள் மாத்ரம் என் சிறந்தவை? இச்சமயம் பூஜிக்க வேண்டிய தேவதைகள் யார் யார்? என்னென்ன தாநம் செய்யவேண்டும்? எப்பொழுது ஸ்நாநம் செய்ய வேண்டும்? இதை விரிவாகக் கூறுங்கள் என்றான்.

*(முதல் அத்யாம் முற்றிற்று. 78 சுலோகங்கள்)*

## இரண்டாம் அத்யாயம் — 78 சுலோகங்கள்.

தால்ப்யர் கூறினர்: அரிச்சந்த்ரன் கூறியதைக்கேட்டு அகஸ்த்யர் உரைத்தார். அரிச்சந்த்ர! துலா மாஹாத்ம்யத்தில் ஒரு அத்யாயத்தையோ ஒரு சுலோகத்தையோ கேட்டாலும் ஒருநாள் ஸ்நாநம் செய்தாலும் அதன் புண்யத்தைக் கூறவல்லவர் மஹாவிஷ்ணுவே. அவரைத்தவிர



மற்றெவரால் முடியும்? முன்செய்த புண்யத்தால் உனக்கு ஸத்ஸங்கம் கிடைத்தது. வேள்வி குளம் வெட்டுதல் முதலிய பூர்த்தம் தபஸ் வேதபாராயணம் வ்ரதம் முதலிய புண்யங்களைப் பல ஜன்மாக்களில் செய்தவர்க்கே ஸத்ஸங்கம் கிடைக்கும். ஸத்ஸங்கத்தால்தான் ஸத் கதா ச்ரவணம் கிடைக்கும். ஸத் கதா ச்ரவணத்தினல் மூன்று கரணங்களாலும் செய்த பாபங்கள் அகலும். பாபம் அகன்ருல் மநம் சுத்தமாகும். சுத்தமான மனதால்தான் பகவானை த்யாநம் செய்யமுடியும். விஷ்ணுவை ஒரு முறை த்யாநம் செய்தால் பகவான் ஸாரூப்ய முக்தியைத் தருவார். அது கர்மாக்களால் கிட்டாது. வேந்தே! கிருதார்த்தனான உனக்கு காவேரிமஹிமையை விரிவாகக் கூறுகிறேன்.

காவேரிக்கரையின் இருபுறங்களிலும் ஸ்ரீ கண்டனை விச்வேசுவரனுக்கு ஸமமான லிங்கங்கள் லக்ஷத்திலும் கோடிக்கணக்கிலும் இருக்கின்றன. ப்ரவாஹத்திலும் கோடிக்கணக்கான லிங்கங்கள் இருக்கின்றன. காவேரி ஜலம் அங்குள்ள சிலைகள் மணல் எல்லாம் தேவர்களே. அதனல் காவேரி மிக முக்யமான நதீ. எல்லோருக்கும் சுலபமாகக் கிடைக்காது. முக்தியையே இது தருகிறது எனில் தர்ம அர்த்த காமங்களைப் பற்றி கேட்கவும் வேண்டுமா? ஸகல தீர்த்தங்களும் துலாகாவேரியை அடைவதால் அது பஞ்ச மஹாபாதகங்களை அகற்றி அச்வமேத பலனைத் தருகிறது. என தேவரும் முனிவரும் பித்ருக்களும் இதைக் கொண்டாடுகிருர்கள். துலா மாதம் மூன்று நாட்கள் காவேரீ ஸ்நாநம் செய்தாலும் ஸகல பாபங்களும் அகலும். ஸ்வர்க்கத்தைத் தாண்டி வைகுண்டம் செல்வர். மாக மாஸத்திலும் துலா மாஸத்திலும் காவேரீ ஸ்நாநம் செய்தால் மூன்று கோடி குலத்தவருடன் பிரும்மலோகம் செல்வான்.

துலா மாஸத்தில் செய்யும் அன்ன தாநமும் தீர்த்த தாநமும் கோடிமடங்குப் பலனைத்தரும். ஸத்பாத்ரத்தில் புண்யகாலத்தில் தானம் அளித்தால் அது அநந்தமான பலனைத்தரும். பித்ருக்களை நாடிச் செய்யும் சிராத்தம் பிண்டதாநம் தர்ப்பணம் இவை ஒரு கல்பம் வரை பித்ருக்களுக்கு இன்பமளிக்கும் என வேதம் கூறுகிறது. பிரும்மா முதலிய தேவரும் எழு மாத்ருகைகளும் அப்ஸரஸ்ஸுகளும் கௌரீ ஸரஸ்வதீ

முனிவர்களது ஆச்ரமங்களும் இருக்கின்றன. அவை உடனே தபஸ்ஸின் பலனைத் தருபவை. கொஞ்சம் ஆரம்பித்தாலும் பூர்ணபலனைத் தரும். கோடியுகம் கூறினாலும் கூறமுடியாது துலா மஹிமை. மும்மூர்த்திகளே இதன் பெருமையைக் கூற முடியும். காவேரியின் அலை சுழல் மணல் இவைகள் எல்லாம் தேவதாவடிவமானவை. புண்யந் தருபவை. பூமியில் எவ்வளவு புழுதிகள் ஆகாசத்தில் எவ்வளவு நக்ஷத்திரங்கள் இருக்கின்றனவோ மழையில் எவ்வளவு தாரைகள் விழுகின்றனவோ பூமியில் எவ்வளவு செடி கொடிகள் இருக்கின்றனவோ அவ்வளவு கோடி புண்ய தீர்த்தங்கள் காவேரியை ஸேவிக்கின்றன.

காவேரீ ப்ரவாஹத்தில் எத்தனை திவலைகள் இருக்கின்றனவோ அவ்வளவு தனித்தனி புண்ய தீர்த்தங்கள் காவேரியிலிருக்கின்றன. அநேக கோடி பிரும்மாண்டங்களிலும் உள்ள புண்ய தீர்த்தங்களெல்லாம் காவேரியிலிருப்பதால் அதன் பெருமை அளவு கடந்ததாகும். ஆதலால் அரிச்சந்த்ர! துலாமாதத்தில் காவேரீ ஸ்நாநம் செய்தவர் முக்தி பெறுவர். ராஜன்! நீயும் துலா ஸ்நாநம் செய்து ஸகல ஸித்திகளையும் பெறுவாயாக. இப்படி நாரதர் கூறியதைக் கேட்டு ஆச்சர்யமடைந்த அரசன் துலாஸ்நாநம் செய்து பாபத்தை அகற்றி யக்ஞம் செய்யக் கருதினன். முனிவர்களே! நீங்கள் கருணமூர்த்திகள்! நான் உங்கள் தாஸன். விதிப்படி யாகத்தைச் செய்வியுங்கள். துலாமாதத்தில் காவேரியிலும் வைபாசியில் நர்மதையிலும் எப்படி ஸ்நாநம் செய்வது? இந்த மாதங்கள் மாத்ரம் என் சிறந்தவை? இச்சமயம் பூஜிக்க வேண்டிய தேவதைகள் யார் யார்? என்னென்ன தாநம் செய்யவேண்டும்? எப்பொழுது ஸ்நாநம் செய்ய வேண்டும்? இதை விரிவாகக் கூறுங்கள் என்ருன்.

*(முதல் அத்யாம் முற்றிற்று. 78 சுலோகங்கள்)*

## இரண்டாம் அத்யாயம் — 78 சுலோகங்கள்.

தால்ப்யர் கூறினர்: அரிச்சந்த்ரன் கூறியதைக்கேட்டு அகஸ்த்யர் உரைத்தார். அரிச்சந்த்ர! துலா மாஹாத்ம்யத்தில் ஒரு அத்யாயத்தையோ ஒரு சுலோகத்தையோ கேட்டாலும் ஒருநாள் ஸ்நாநம் செய்தாலும் அதன் புண்யத்தைக் கூறவல்லவர் மஹாவிஷ்ணுவே. அவரைத்தவிர



மற்றெவரால் முடியும்? முன்செய்த புண்யத்தால் உனக்கு ஸத்ஸங்கம் கிடைத்தது. வேள்வி குளம் வெட்டுதல் முதலிய பூர்த்தம் தபஸ் வேதபாராயணம் வ்ரதம் முதலிய புண்யங்களைப் பல ஜன்மாக்களில் செய்தவர்க்கே ஸத்ஸங்கம் கிடைக்கும். ஸத்ஸங்கத்தால்தான் ஸத் கதா ச்ரவணம் கிடைக்கும். ஸத் கதா ச்ரவணத்தினல் மூன்று கரணங்களாலும் செய்த பாபங்கள் அகலும். பாபம் அகன்ருல் மநம் சுத்தமாகும். சுத்தமான மனதால்தான் பகவானை த்யாநம் செய்யமுடியும். விஷ்ணுவை ஒரு முறை த்யாநம் செய்தால் பகவான் ஸாரூப்ய முக்தியைத் தருவார். அது கர்மாக்களால் கிட்டாது. வேந்தே! கிருதார்த்தனை உனக்கு காவேரிமஹிமையை விரிவாகக் கூறுகிறேன்.

காவேரிக்கரையின் இருபுறங்களிலும் ஸ்ரீ கண்டனை விச்வேசுவரனுக்கு ஸமமான லிங்கங்கள் லக்ஷத்திலும் கோடிக்கணக்கிலும் இருக்கின்றன. ப்ரவாஹத்திலும் கோடிக்கணக்கான லிங்கங்கள் இருக்கின்றன. காவேரி ஜலம் அங்குள்ள சிலைகள் மணல் எல்லாம் தேவர்களே. அதனல் காவேரி மிக முக்யமான நதி. எல்லோருக்கும் சுலபமாகக் கிடைக்காது. முக்தியையே இது தருகிறது எனில் தர்ம அர்த்த காமங்களைப் பற்றி கேட்கவும் வேண்டுமா? ஸகல தீர்த்தங்களும் துலாகாவேரியை அடைவதால் அது பஞ்ச மஹாபாதகங்களை அகற்றி அச்வமேத பலனைத் தருகிறது. என தேவரும் முனிவரும் பித்ருக்களும் இதைக் கொண்டாடுகிருர்கள். துலா மாதம் மூன்று நாட்கள் காவேரீ ஸ்நாநம் செய்தாலும் ஸகல பாபங்களும் அகலும். ஸ்வர்க்கத்தைத் தாண்டி வைகுண்டம் செல்வர். மாக மாஸத்திலும் துலா மாஸத்திலும் காவேரீ ஸ்நாநம் செய்தால் மூன்று கோடி குலத்தவருடன் பிரும்மலோகம் செல்வான்.

துலா மாஸத்தில் செய்யும் அன்ன தாநமும் தீர்த்த தாநமும் கோடிமடங்குப் பலனைத்தரும். ஸத்பாத்ரத்தில் புண்யகாலத்தில் தானம் அளித்தால் அது அநந்தமான பலனைத்தரும். பித்ருக்களை நாடிச் செய்யும் சிராத்தம் பிண்டதாநம் தர்ப்பணம் இவை ஒரு கல்பம் வரை பித்ருக்களுக்கு இன்பமளிக்கும் என வேதம் கூறுகிறது. பிரும்மா முதலிய தேவரும் எழு மாத்ருகைகளும் அப்ஸரஸ்ஸுகளும் கௌரீ ஸரஸ்வதீ

லக்ஷ்மீ இந்த்ராணீ முதலியவர்களும் துலாமாதத்தில் காவேரியில் ஸ்நாநம் செய்கிறுர்கள். அதிகமாகக் கூறுவதேன்? மநிதர் புக்தி முக்திகளைப் பெற பிரும்மா காவேரீ எனும் தீர்த்தநாயகியைப் படைத்தார். காவேரீ ஸங்கமத்தில் துலா மாஸத்தில் நித்யம் ஸ்நாநம் செய்தால் தனது வம்சத்திலும் மாமனர் குலத்திலும் உதித்த மூன்றுகோடி மநிதர்களை நரகத்திலிருந்து கரை ஏற்றும்.

காவேரீ தீரத்திலுள்ள மிருகம் பக்ஷி மரம் முதலியவைகள் கூட காவேரியின் காற்றிஞல் முக்தி அடைகின்றன. பக்தியுடன் ஸ்நாநம் செய்பவர் பற்றி கூற வேண்டுமா?

வித்வான் துளஸீ கங்கை ஏகாதசி துளஸியால் ஸாளக்ராமத்தை காவேரியில் அர்ச்சிப்பது இவைகளின் மஹிமையைக் கூற ஆயிரம் முகமுள்ள ஆதிசேஷனுலும் முடியாது. காவேரியை நினைப்பதும் வாயால் காவேரி எனக் கூறுவதும் தர்மிப்பதும் ஸ்நாநம் செய்வதும் பல ஜன்மங்களில் புண்யம் செய்திருந்தால்தான் கிடைக்கும். துலா மாஸத்திலும் மாகமாஸத்திலும் காவேரி ஸ்நாநத்தால் வரும் பயனை பகவானே கூற வல்லவர். நதிகளில் கங்கை, புஷ்பங்களில் துளஸீ, விரதங்களில் ஏகாதசீ, கிருஹஸ்தனுடைய கர்மாவில் பஞ்சமகாயக்ஞம் சுத்தத்தில் மநச்சுத்தி, தேவர்களில் மாதவன், எழுத்துக்களில் பிரணவம், மந்த்ரங்களில் காயத்ரீ, வேதங்களில் ஸாமவேதம், ருத்ரர்களில் சங்கரன், கற்பரசிகளில் அருந்ததீ, ஸ்த்ரீகளில் லக்ஷ்மீ, தாநங்களில் அன்னதாநம் நவக்ரஹங்களில் சந்த்ரன், தேஜஸ்ஸுகளில் சூரியன், யக்ஞங்களில் ஜபயக்ஞம், ஸ்நேஹிதர்களில் தர்மம், தவத்தில் மௌநம், பூஜைகளில் விஷ்ணு பூஜை, ஆச்ரமங்களில் கிருஹஸ்தாச்ரமம், வர்ணங்களில் பிராம்மணன், பொறுமை உள்ளவர்களில் பூமி, அஸ்த்ரங்களில் பிரும்மாஸ்த்ரம், புண்ய க்ஷேத்ரங்களில் ஸ்ரீ ரங்கம், பாவநமாக்குபவைகளில் ராமஸேது, ஸூக்தங்களில் புருஷ ஸூக்தம்.

தேநுக்களில் காமதேனு. யுகங்களில் க்ருதயுகம் எப்படி உயர்ந்ததோ அப்படி நதிகளில் காவேரீ மிகச் சிறந்ததாகும். கங்கையைக் கூறினல் முக்தி. தநுஷ்கோடி எனும் ராமஸேதுவைத் தர்சித்தால் முக்தி. ராமாயணத்தைக் கேட்டால் முக்தி. காவேரியை நினைத்தால்



போதும். முக்தி உண்டாகும். ஹிமவான் முதல் ஸேது வரை கர்மபூமி. ஒன்பது ஆயிரம் யோஜனை தூரம் அகலமும் நூறு ஆயிரம் யோஜனை தூரம் நீளமும் உள்ளது. இது புண்ய பூமி. மற்றவை போகபூமி. இங்குதான் புண்யம் ஸம்பாதிக்க முடியும். ஆயிரம் ஜன்மாக்களில் புண்யம் செய்திருந்தால் தான் ஸாமான்யமான மானிடப் பிறவி உண்டாகும். பிராம்மணனுகப் பிறக்க எத்தனை யோகோடி ஜன்மாக்களில் மஹா புண்யம் செய்திருக்க வேண்டும். காக்கை பனைமரத்தில் உட்கார உடனே பனம்பழம் விழுவது எப்படி தற்செயலோ அப்படியே பல புண்யங்களைச் செய்திருந்தாலும் தற்செயலாக ஒரு புண்யத்தால் மானிட ஜன்மா கிடைக்கின்றது. அத்தகைய மாநிட உடலைப் பெற்றும் காவேரியில் ஸ்நாநம் செய்யாதவன் கழுதைக்குச் சமமாவான்.

துலா மாஸத்தில் காவேரீ ஸ்நாநம் செய்யாதவன் இஷ்டா பூர்த்தம் முதலிய மற்றகர்மாக்களைச் செய்தாலும் வேதமோதினுலும் தவம் புரிந்தாலும் யாதொரு பயனுமில்லை. ஒரு முறை துலா காவேரீ ஸ்நாநம் செய்தால் அவன் நாராயணனுகவே ஆகின்றுன். அப்படியிருக்க அதை விட்டு வேறு தவம் செய்வதேன்? அத்யயநம் தீர்த்தம் வ்ருதம் இவைகள் எதற்காக? மற்ற விரதங்களில் ஏதேனும் குற்றம் குறை உண்டானல் பிராயச்சித்தம் செய்யவேண்டும். கவேரியில் வெறும் ஸ்நாநம் மாத்ரம் செய்தாலும் ஏழுஜன்மங்களில் செய்த ஸகல பாபமும் அகலும். விதிப்படி ஸ்னனம் செய்தால் தாய் வகையிலும் தந்தை வகையிலும் ஏழு தலைமுறைக்கும் இவனுக்கும் வைகுண்டமளிக்கும். பிராம்ம முகூர்த்தத்தில் எழுந்து பகவானைத் தியாநம் செய்து பல்துலக்கி சரீர சுத்தி செய்து கொண்டு காவேரியில் ஸ்நாநம் செய்யவேண்டும்.

புஷ்பங்களை இருகரங்களாலும் காவேரிக்களித்து நமஸ்காரம்செய்து ரங்கநாதனுக்கும் நமஸ்காரம் செய்து ஜலத்தினுல் அர்க்யம் தர வேண்டும். ஸந்த்யாவந்தனம் ஜபம் செய்து பௌராணிகனைப் பக்தியுடன் பூஜித்து புராணம் கேட்க வேண்டும். எல்லோரும் ஒன்ருகச் சேர்ந்து ஏகாக்ரமான மநதுடன் நல்ல ஆஸனம் அளித்து அதில்மிருதுவான அழகிய வெள்ளைவஸ்த்ரத்தை அளித்து அதன்மீது பௌராணிகரை அமரும்படிச் செய்ய

வேண்டும். பௌராணிகர் இந்த்ரியங்களை ஜயித்தவரா கவும் காமகோபமில்லாதவராகவும் வேதம் வேதாங்கம் வேதாந்தம் தர்ம சாஸ்த்ரம் புராணம் இவைகளை நன்கு அறிந்தவராகவும் ஆசார சீலராகவும் சுத்தராகவும் ப்ராம்மணராகவும் இருக்கவேண்டும்.

பௌராணிகருக்குப் புது வஸ்த்ரம் ஆபரணம் முத லியவைகளை அளித்து அவர் மநிதர் எனக் கருதாமல் வேதவ்யாஸர் என்று எண்ணி புராணம் கூறும்படி கேட்க வேண்டும். நாங்கள் துலா காவேரீ மஹிமையைக் கேட்க ஆசைக் கொண்டுள்ளோம். புராண படநத்தால் எங்களைப் பாவநமாகச் செய்யும். என்று ப்ரார்த்தித்து கதை முடியும் வரை மௌநமாக இருக்கவேண்டும். அதனல் ஸகல பாபங்களும் அகலும். துலா ஸ்நாநம் செய்பவர் ஏதேனும் ஒரு நியமத்துடன் செய்தால்தான் பலன் உண்டாகும். சக்தி இல்லாதவர் நியமமின்றியே ஸ்நாநம் செய்யலாம். பூர்ணபலன் உண்டு.

துலா ஸ்நாநம் பூர்த்தியாகும் வரை எண்ணெய் தேய்த்துக் கொள்வது பகலில் தூங்குவது க்ஷவரம்செய்து கொள்வது தாம்பூலம் தரிப்பது ஸதாசாரம் இல்லாத வருடன் புஜிப்பது ஸ்த்ரீ புருஷஸங்கம், துஷ்டர் ஸங் கம் வீண்பேச்சு பாயில் படுப்பது நிஷித்தமான கறி காய்கள் புஜிப்பது தாநம் வாங்குவது பரான்னம் புஜிப்பது ஆகியவைகளை விடவேண்டும். இதை எல் லோரும் எப்பொழுதுமே அநுஷ்டிக்க வேண்டும். துலா மாஸத்தில் விசேஷமாக கவனிக்கவேண்டிய நியமங்களைக் கேள். பூஷிணிக்காய் கத்திரிக்காய் மொச்சை கொள்ளு மொச்சக்கொட்டை மஹாமாஷம் துவரை கேழ்வரகு தினை சிறு கீரை சொரைக்காய் முருங்கக்காய் தருணீ வெண்கலத் தட்டில் உண்பது இரவு உணவு இரு ஸந்தி களில் உண்பது துஷ்டர் அன்னம் பழையது எருமை பால் பித்ருசேஷம் இவைகளை விலக்கவேண்டும்.

ஸ்த்ரீகள் குழந்தைகள் சாப்பிட்டமிகுதியை உண்பது மயிருள்ள அன்னம் சிராத்த சேஷம் மற்ற சேஷம் முத லியவைகளை உண்ணக் கூடாது. காயக்லேசம் செய்யா மல் புண்யம் கிடைக்காது. ஆகையால் நியமங்களை அநுஷ்டிக்கவேண்டும். நிஷித்தமான வஸ்துக்களைப் புஜித்தால் பன்றியாகப் பிறப்பார். முற்கூறிய விடத் தக்கவைகளை விடுவதுடன் நமக்கு பிரியமான கறிகாய் களில் ஒன்றையும் விடவேண்டும். விதியைத் தழுவாமல் ஸாதாரணமாக ஸ்நாநம் செய்தாலே பாபம் எல்லாம் அகலும். விதிப்படி செய்தால் மோக்ஷம் பெறுவர் என் பதில் ஸந்தேஹமில்லை. உடல் நீர்குமிழிபோல் நிலையில் லாதது. மலஜலம் நிறைந்தது. எந்த ஸமயத்தில் இந்த உடலைக்கொண்டு செல்லலாமென யமன் ஜாக்ரதையாக பார்த்துக் கொண்டிருக்கிறன். உதயமும் அஸ்தமநமும் நமது ஆயுஸ்ஸைக் குறைத்துக்கொண்டே வருகிறது. போகிறது. ஆதலால் ஒரு திநத்தைக்கூட வீணுக்கக் கூடாது. உடலும் இந்த்ரியமும் நன்ருகவும் ஸ்வாதீநமாக வும் இருப்பதற்குள் புண்யத்தைச் செய்ய வேண்டும். புண்யமான நதிகள் ஸுலபமாகக் கிடைக்கின்றன. சரத்காலமோ மிக ஸுகமான காலம்.



நித்ரை எனும் பேயை விரட்டிக் காலையில் எழுந்தி ருக்க வேண்டும். நரகம் வேண்டாமென்பவர் காவேரீ ஸ்நாநம் செய்யவேண்டும். வலது கையைத் தூக்கிப் பலமுறைக்கூறுகிறேன். நதிகளில் சிறந்த காவேரீ பிர வாஹம் ஓடுகிறது. அது பாபங்களைத் தொலைக்க தீக்ஷை செய்துக் கொண்டிருக்கிறது. விரதம் நியமம் முதலிய நியமங்களால் எந்த புண்யலோகம் கிடைக்குமோ அது இந்த காவேரீ ஸ்நாநத்தால் உண்டாகிறது. இது ஸத்யம்! ஸத்யம் !!

**இரண்டாம் அத்யாயம் முற்றிற்று.**

## மூன்ரும் அத்யாயம் – 106 சுலோகம்.

**அகஸ்த்யர்,** ராஜன்! துலாஸ்நாநம் ஸர்வ பாக்யத் தையும் அளிப்பதால் ஸர்வ பாபங்களுமகல துலாஸ்நாநம் செய். மாதாவைப் பிதாவைக் கோவை குழந்தையைக் கொன்ற பாபம் அகலும். குருபத்நீ கமநம் வேதாத்யயநம் செய்யா திருத்தல் ஸதாசார மில்லாமை ஸுரா பாநம் அக்நி உபாஸனை இல்லாமை தானே உண்பது முதலிய பாபங்களும் ஒரு முறை துலா காவேரீ ஸ்நாநம் செய்த வுடன் அகலும். பிரும்மலோகமும் செல்லலாம். காவேரீ அல்லது மற்ற நதிகளில் ஸ்நாநம் செய்ய முடியாதவர் வீட்டில் வெந்நீரிலாவது ஸ்நாநம் செய்யலாம். அதையும் செய்ய முடியாதவர் காவேரீ மாஹாத்ம்யத்தை யாவது கேட்கலாம். அதுவும் முடியாதவர் காவேரீ புராணம்

சொல்பவரையாவது தநத்தால் பூஜிக்கலாம். ஏழையாக உள்ளவர் தநமுள்ளவரிடம் நல்ல வார்த்தைகளைக் கூறி அவரைக் கொண்டு பௌராணிகரைப் பூஜிக்கும்படிச் செய்யலாம்.

வேதோக்தமான மந்த்ரம் இல்லை யாதலால் ஸ்த்ரீகளும் தாழ்ந்த ஜாதியினரும் சிறுவர்களும் ஸாதாரணமாக முழுகினல்கூட போதும். துலா ஸ்நாநம் செய்து எள்ளு அக்ஷதை ஜலத்தால் பித்ரு தேவ ரிஷிகளுக்குத் தர்ப்பணம் செய்பவன் நீண்ட ஆயுளைப் பெறுவான். அந்த தர்ப்பணத்தால் பித்ருக்கள் ஸித்தர் ரிஷி தேவர் யக்ஷர் கிம்புருஷர் நாகர் ருத்ரர் ஆதித்யர் மருத்கணம் கின்னரர் வஸுக்கள் ஸாத்யர் முதலியவர்களும் ஸர்வ லோகமும் ஸந்தோஷமடையும். லோக ஸாக்ஷியான ஸூர்யன் உதயமான பொழுது அவரை வணங்கித் துதித்து சக்திக்கேற்றபடி காவேரீ மஹிமையைக் கேட்கவேண்டும். அல்லது அறிந்தவர் அதைச் சொல்லவேண்டும்.

காவேரி மாஹாத்ம்ய க்ரந்தம் எந்த வீட்டிலிருக்கிறதோ யார் அதைப் பூஜிக்கிருனே அவன் வாகீச்வரனுக ஆவான். வேதமறிந்த வேதியனுக்கு தர்ம ஸாதனமான இந்த நூலைத் தாநம் செய்தால் ஸகல பாபங்களும் அகன்று விஷ்ணு லோகத்தில் பூஜிக்கப்படுவான்.

துலா மாஸத்தில் ஸ்நாநம் செய்து பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்து அந்த காலத்தில் உண்டாகும் நல்ல பொருள்களைத் தானம் செய்யவேண்டும். அப்படித் தாநம் செய்பவன் இவ்வுலகில் ஸகல போக பாக்யங்களையும் அனுபவித்து பிரும்ம லோகத்திலும் பூஜிக்கப்படுவான். துலா மாஸத்தில் ஹரிஹரருடைய ஸன்னதியில் நெய் அல்லது எண்ணெயால் நித்யம் தீபம் ஏற்றினுல் சூர்ய லோகம் செல்வான். பிறகு ஞாநியாகவும் ஆவான். தரித்ரனுய் வேதமறிந்தவனுய் குடும்பியாயுள்ள பிராம்மணனுக்கு வஸ்த்ர தாநம் செய்தால் நீண்டகாலம் ஜீவித்திருந்து முடிவில் சந்த்ர லோகம் செல்வான். துலா ஸ்நாநம் செய்து தரித்ரனுயும் குடும்பியாயும் வேதமறிந்தவனுயுமுள்ள பிராம்மணனுக்குப் பூமி அல்லது வீடு தாநம் செய்பவன் பிரும்மலோகஞ் சென்று ஸகல பாக்யங்களையும் அனுபவித்து பூமியில் சக்ரவர்த்தியாகப் பிறப்பான். தரித்ரனை பிராம்மணனுக்குத் தநம் அல்லது தான்யம் அளிப்பவன் நீண்டகாலம் தநிகனுக இருந்து



இறந்தபின் குபேரனுக்கு நண்பனுவான். குபேரனுடன் ஸகல பாக்யங்களையும் பெறுவான்.

துலா மாஸத்தில் பிராம்மணனுக்குத் தேன் தாநம் செய்தால் எத்தகைய மலடு தோஷமிருந்தாலும் அது அகன்று ஸத்ஸந்தாநம் உண்டாகும். பல பிறவிகளில் வேதமறிந்தவனுகப் பிறப்பான். ஏழையான உழவாளிக்குக் காளையைத் தருபவன் கோலோகம் சென்று ஸகல பாக்யங்களையு மனுபவித்து பூமியில் பூமிக்கு அதிபனுகப் பிறப்பான். குழந்தைகள் உள்ள பிராம்மணனுக்குக் கன்றுடன் கூடிய பசுவைத் தாநம் செய்தால் புத்ரன் செல்வம் முதலியவை வளரும். அவனது வம்சமும் மேல் மேலும் விருத்தியாகும். மூன்று வகையான கடனும் அகன்று பித்ரு லோகம் செல்வான். அபமிருத்யுவைப் போக்கடிக்கும். எருமையைத் தாநம் செய்தால் செய்பவனுக்கும் அவன் வம்சத்தவருக்கும் அபமிருத்யு வராது. தீர்க்காயுஸ்ஸாக இருப்பார்கள்.

துலா மாஸத்தில் பிராம்மணனுக்கு விதை தாநம் செய்தால் இங்கு ஸகல போகங்களையும் அனுபவித்து தீர்க்காயுஸ்ஸாக இருப்பான். பல குழந்தைகள் பிறக்கும். பதிநான்கு இந்திரர் ஆயுஸ்காலம் வரை ஸ்வர்க்கத்தில் அப்ஸரஸ்ஸுகளுடன் ரமித்து பிறகு ஒரு கராமத்திற்கு அதிபதியாகப் பிறப்பான். தரித்ரனை பிராம்மணனுக்கு அரிசி தாநம்செய்தால் வீட்டில் ஒருபோதும் ஒருவருடனும் கலக முண்டாகாது. வாழைப்பழ மளித்தால் ஸ்வர்க்க போகம் பெறலாம். தாம்பூலம் தேங்காய் பச்ச கற்பூரம் குங்குமப்பூ கஸ்தூரி சந்தநம் ஸாம்ப்ராணி முதலியவைகளைத் தேவதாராதனம் செய்பவருக்குத் தாநம் செய்தால் ஸ்வர்க்கத்தில் தேவ போகத்தை அநுபவித்து அவனியில் சக்ரவர்த்தியாகப் பிறப்பான். பசும்பாலைத் தாநம் செய்தால் வீட்டில் பசு பாக்யம் புத்ர பாக்யம் ஆயுள்விருத்தி முதலியவைகளை அடையலாம். நெல்லிக்காய் தாநம் தத்வக்ஞாநத்தையும் பக்தியையும் உண்டு பண்ணும். பித்ருக்களது த்ருப்தியை நாடி திலதாநம் செய்தால் கயா ஶ்ராத்தம் செய்ததுபோல் கருதி பித்ருக்கள் ஸந்தோஷமடைவார்கள்.

நல்ல விரிப்பும் ம்ருதுவான தலையணி மெத்தையும் உள்ள கட்டிலை ஏழையாயும் குளிரால் வருந்துபவனும்

குடும்பியாயுமுள்ள வேதவித்துக்குத் தானம் செய்தால் ஸ்வர்க்கம் சென்று அப்ஸரஸ்ஸுகளுடன் கூடி ஆநந்தமடைவான். குளிரால் மெலிந்த ஏழை பிராம்மணனுக்கு கம்பளம் அளித்தால் வாயுரோகம் வராது. வந்த நோயு மகலும். குடை தானம் செய்தால் அரண்மனையில் வஸிக்கும்படி செல்வம் கிடைக்கும். பகவானை அர்ச்சிப்பதற்கு மல்லிகை முல்லை தாழம்பூ அந்தந்தகாலத்தில் உண்டாகும் புஷ்பமிவைகளை அளித்தால் பூமியில் ஸகல போகங்களையும் அனுபவித்து முடிவில் பிரும்மலோகத்தில் பூஜிக்கப்படுவான். செல்வம் புத்ரன் விஷ்ணுபக்தி முதலியன உண்டாகும். நல்ல யக்ஞோபவீதத்தை — பூணலை — அளித்தால் பத்து பிறவிகளில், வேதமோதும் வேதியனுகப் பிறப்பான். பிரும்மசாரிக்கு மௌஞ்ஜீ தானம் செய்தால் ரோகமின்றி கல்வியில் நிபுணன் ஆவான். யக்ஞோபவீதத்திற்கு வேண்டிய பருத்தியை அளித்தால் குஷ்டரோகமகலும். பிராம்மண ஜன்மா கிட்டும். விஷ்ணுவைப் பூஜிக்கத் துளஸீ தானம் செய்தால் ஸகல புண்ய லோகங்களையும் அநுபவித்து ஸார்வபௌமனுக ஆவான்.

ஔபாஸநம் அக்நிஹோத்ரம் செய்பவருக்கு ஸமித்தல்லது விறகு தானம் செய்தால் பத்நியை இழக்காமல் அக்நியுள்ளவனுக இருப்பான். துலா மாஸத்தில் காவேரீ தீரத்தில் பல்வகை ஶாகபாகங்களுடன் அறுவகைச் சுவையுடன் அன்னதானம் செய்தால் அவன் தேவனுவான். பயறு உளுந்து எண்ணை மிளகு மிளகாய் வெல்லம் கடலை நெய் சர்க்கரை முதலியவைகளைத் தனது சக்திக்கேற்றவண்ணம் தானம் செய்வோர் ஸகல புண்ய லோக ஸுகங்களையும் அநுபவிப்பார். துலாமாஸத்தில் ஸ்ரீ ரங்க நாதருடைய ஸன்னதியில் துலாஸ்நானம் செய்பவருடைய பெருமையைக் கூற மஹாவிஷ்ணுவே ஶக்தி யுள்ளவராவர். தாஸித்தொழிலைக் கைக்கொண்ட ஒரு பிராம்மண ஸ்த்ரீ காவேரீ ஜலத்தில் முழுகி ஸ்வர்க்கம் சென்ருள். அவளது புருஷனும் வைகுண்டம்சென்ருன். உலகிலுள்ள மூன்றறைகோடி புண்ய தீர்த்தங்களும் கங்கையை முன்னிட்டுக்கொண்டு கேசவனுணையால் துலா காவேரியை வந்து அடைகின்றன. நியமத்துடன் நூருண்டு கங்க ஸ்நானம் செய்தவனுக்கே துலா மாஸம் பூர்ணமாக காவேரீ ஸ்நாநம் செய்ய பாக்யம் கிட்டும். பாபிகள் தன்னிடம் அளிக்கும் பாபங்களை எப்படி யான் அகற்று



வது? என்று கங்கை பிரும்மாவைக் கேட்க துலா மாஸத்தில் ஸ்ரீரங்கநாதர் ஸன்னதியில் காவேரி ஸ்நானம் செய். உனது ஸகல பாபங்களும் அகலும் என்ருர் அவர்.

ஸங்கல்பம் மந்த்ர தந்தர மிவைகளை விட்டு சாதாரணமாய் காவேரீ ஜலத்தில் முழுகினுலுங்கூட ஏழு ஜன்ம பாபம் அகலும். மநஶ் ஶுத்தியுடன் விதிப்படி துலா ஸ்நாநம் செய்தால் கோடி குலத்தவரை பாபத்திலிருந்து விடுவித்து புக்தி முக்தி இரண்டையும் தரும். இந்த துலா மாஹாத்ம்யத்தைக் கூற ஆயிரம் முகமுள்ள ஆதி சேஷனைத் தவிர வேறெவரால் முடியும்?

**அரிச்சந்த்ரன்:** மஹர்ஷே! ஒரு பிரஷ்ட பிராம்மண ஸ்த்ரீ இதனுல் நற்கதி பெற்றதாகக் கூறினீர்களே! அவள் யார்? எத்தகையவள்? யாருடைய மனைவி? யாரிடம் பிறந்தவள்? நரகத்திற்கே விருந்தாளியாகச் செல்லத் தக்க அவள் எப்படி ஸ்வர்க்கம் சென்ருள்? அதை விவரமாகச் சொல்லுங்கள். உங்களுக்கு நமஸ்காரம். உலக அநுக்ரஹம் செய்வதையே ஸ்வபாவமாகக் கொண்ட தங்கள் போன்ற உத்தம ரிஷிகளுக்கு, தங்களிடம் பக்தியுள்ள என்போன்ற சிஷ்யருக்குச் சொல்லக் கூடாதது உண்டோ? காரணமின்றியே கருணைபுரியும் தாங்கள் எனக்கு இதைக் கூறவேண்டும்.

**அகஸ்த்யர்:** அரசே! ஸத் கதையைக் கூறும்படி நன்கு கேட்டாய்! பாபி எப்படி நற்கதி பெற்ருள் என்று காவேரியின் பெருமையைக் கூறுகிறேன்! கேள்.

## வேதராசி—சந்த்ர காந்தா—வித்யாவளீ சரிதம்.

ரிஷபாத்ரி எனும் மலை அருகே கிருதமாலா எனும் நதீ தீரத்தில் அழகான மதுராபுரீ என்ருேர் நகரமுண்டு. ரதகஜங்களும் ஸ்வர்ண ப்ராகாரங்களும் நான்கு வர்ணத்தவர்களும் நிறைந்த நகரமது. ஸந்தோஷமும் புஷ்டியும் உள்ள ஜநங்கள் நடமாடுமிடம். சிறந்த கோடிக்கணக்கான பசுக்கள் ஸஞ்சரிக்கு மிடம். ஆடுபவர் பாடுபவர் ஆநந்தமாகக் காலங்கழிப்பவர் ஆகியவர் சூழ்ந்த இடம். உயர்ந்த மாட மாளிகை கூட கோபுரம் விசாலமான வீதிகள் கடைத்தெருக்கள் உள்ள இடம். அதில் வேத வேதாங்க மறிந்தவரும் மிக்க அடக்கம் பொருமை ஸர்வத்தையும் ஸஹிக்கும் தன்மை, பொருமை யில்லாமை,

விஷ்ணு பக்தி முதலிய உயர்ந்த குணம் வாய்ந்த வருமான வேதராசி என்றோர் வேதியரிருந்தார். அதிதி பூஜையிலும் யோகத்திலும் மிகச் சிறந்து விளங்கினர். மஹா வித்வான். பஞ்சமஹா யக்ஞம் தவருமல் செய்பவர். ப்ராத ஸ்நாநம் செய்ய ஒரு நாள் கூட தவறியவரில்லை. அவரது மனைவியின் பெயர் சந்த்ரகாந்தை. அவள் மஹா பதிவ்ரதை. சுத்தமானவள். சந்த்ரகாந்திபோன்ற திருமேனி உள்ளவள். கற்பிலும் அழகிலும் அவளுக்கு ஈடு எவருமில்லை. பெருத்த ஸ்தநமும் கருத்த கேசமும் விசாலமான விழியும் கோவைப் பழம் போன்ற உதடும் முத்துகள் போன்ற பல் வரிசையும் ஹம்ஸம் போன்ற நடையும் மிருதுவான குரலும் மெல்லிய இடையும் உள்ளவள். ஸர்வ அவயவங்களும் ஸகல லக்ஷணமும் பொருந்தியவைகளாக இருந்தன. விசாலமான நெற்றியில் அழகான திலகமிட்ட அவள் முகத்தைக் கண்டவர் மோஹிப்பர். பதியைத் தெய்வமாகக் கருதி நித்யம் பூஜை செய்வாள். பணிவிடை செய்வாள். இங்கிதமறிந்து அவர் கூருமலே வேண்டிய காலத்தில் வேண்டிய கார்யத்தைச் செய்வாள். அன்றன்றும் அவர் உறங்கும் போது கால்களைப் பிடிப்பாள்.

அவளது வீட்டிற்கருகே வித்யாவளீ என்றோர் வேதியப் பெண்ணிருந்தாள். ஸகல துர்க்குணங்களுக்கும் இருப்பிடமானவள். கட்டிய கணவனைக் கொன்றவள்! பல குடும்ப ஸ்த்ரீகளைத் தன்னைப்போல் பாபியாக்கியவள். அவள் ஒரு நாள் சந்த்ரகாந்தையிடம் வந்து துர்ப்போதனை செய்ய ஆரம்பித்தாள். சந்த்ரகாந்தே! நீ நல்ல பாக்யமுள்ளவள்! உன்னை யான் எனது கண்போல் கருதுகிறேன். உனக்கு யான் நல்லது செய்ய ஆசைகொண்டுளேன்! ரஹஸ்யத்தை மறைக்காமல் என்னிடம் கூறு. உனது புருஷன் உனக்கு வசமாக இருக்கின்ருனு? உன் சொற்படி நடக்கின்ருனு? யௌவனம் சஞ்சலமானது. கால தேசமும் மாறிக்கொண்டே இருக்கும். உன்னிஷ்டப்படி போகபாக்யங்களை அனுபவிக்கின்ருயா? அப்படி உன் பதி உனக்கு இன்பம் தராவிடில் நன்ருக போகம் தரும்படியான உபாயத்தைச் செய்கிறேன்.

இப்படி கோரமாய் விஷத்தைக் கக்குவதுமான அந்த சொல்லைக் கேட்ட பதிவ்ரதையான சந்த்ரகாந்தை வெட்கத்துடன் வித்யாவளியைப் பார்த்துக் கூறினுள்.



வித்யாவளீ! என்ன துஷ்டத்தனமான வார்த்தைக் கூறினுய்? உனது எண்ணம் மிக மோசமாக இருக்கிறதே! உனக்கு யான் பதில் கூருவிடில் நீ கூறிய துஷ்டச் செயலுக்கு உடன்பட்டவளாவேன். உன்னிடம் பயந்து உனது சொல்லை அங்கீகரித்தவளாவேன். உலகில் நமது எண்ணமே புண்ய பாவத்திற்குக் காரண மாகும். பெண்கள் ருதுவானபின் ஸ்நாநம் செய்த ஐந்தாம் நாளிலிருந்து பதினுரும் நாள்வரை தம்பதிகளுக்கு நன்மை தரக்கூடிய சிருங்கார காலமாகும். இதிலும் சில நிஷித்தமான நாட்கள் உண்டு. ஶ்ருதி ஸ்மிருதி இவைகளை நன்குணர்ந்த எனது பதி சிறந்த நாட்களில் எனக்கு இன்பம் தருகிருர். பரலோகத்தைக் கெடுக்காதபடி நாங்கள் தாம்பத்ய ஸுகத்தை அனுபவிக்கிறோம். சுத்தமான நல்ல தினத்தில் கர்ப்பாதாநம் செய்தால் வித்வானுயும் தீர்க்காயுஸ் உள்ளவனுகவும் செல்வம் உள்ளவனுவும் புத்ரன் பிறப்பான். இந்த நாட்களில் ஸங்கமம் கூடாது என்ற சாஸ்த்ரம் தடுத்த நாட்களில் தம்பதிகள் சேர்ந்தால் அதனுல் பிறக்கும் குழந்தை அல்பாயுஸ்ஸாகவும் ஆரோக்ய மில்லாததாகவும் பெற்ரோருக்குத் துன்பம் தருவதாகவும் இருக்கும் என ஸாதுக்கள் கூறுகிருர்கள்.

**நிஷித்தமான தினங்கள்:** ஷஷ்டி அஷ்டமீ ஏகாதசி த்வாதசீ சதுர்தசீ பௌர்ணமீ அமாவாஸ்யை மாஸ ஸங்க்ராந்தி ஶ்ராத்த திநம் அதற்கு முந்திய நாள் பிந்திய நாள் தம்பதிகள் இருவர்களின் ஜன்ம நக்ஷத்திரம் ஶ்ரவண நக்ஷத்திரம் வ்ரததினம் பகல் ஸந்த்யாகாலம் ஆகிய இந்த காலங்களில் தம்பதிகள் சேரலாகாது. இந்த நாட்களில் தம்பதிகள் சேர்ந்தாலும் எண்ணெய் தேய்த்துக்கொண்டாலும் புருஷன் க்ஷவரம் செய்து கொண்டாலும் அவன் நான்கு வேதங்களைக் கற்றிருந்தாலும் ஸோம யாகம் செய்தவனுக இருந்தாலும் உடனே பதிதனுகிருன். இதே க்ருஹஸ்தருக்குக் கூறப்பட்ட விதி என்று தர்மம் நிறைந்த சொற்களை மஹாபதிவ்ரதையான சந்த்ரகாந்தை கூறினுள். இதைக்கேட்ட வித்யாவளி கூறினுள். அடி அசடே! பாக்யமில்லாதவளே! உனக்கு க்ஷேமகரமான சொற்களைக் கூறுகிறேன் கேள். எல்லோருக்கும் பிரியமான உடல் நோயில்லாமலிருக்க வேண்டுமல்லவா? இந்த யௌவன வயதில் ஷஷ்டி ஏகாதசி என்று எப்படி போகத்தை விட்டிருக்கிருய்? உடல் தளர்ந்து போய்

விட்டால் பிறகு எப்படி இன்பம் அநுபவிப்பது? காலத்தில் போகம் இல்லாவிடில் நோய் உடலை சூழ்ந்துக் கொள்ளும். நீ கிழவியாய் விட்டால் உனது கணவன் யுவதியான வேறு பெண்களை அல்லவோ? அநுபவிப்பான்!

தோழி! நீ கள்ளம் கபடமற்றவள்! உன்பதியின் சமாசாரம் எனக்கல்லவா தெரியும். அவன் பொல்லாதவன்! மூர்க்கன்! அவன் ஒரு தாஸியிடம் அன்பு கொண்டிருக்கிறான். அந்த தாஸி எனக்கு மிகவும் வேண்டிய தோழி! அவளே எனக்கு இதைக் கூறினாள். நீ ரொம்ப ஸாது; ஒன்றையும் அறியாய். உனது சுகம் எனக்கு சுகமாகும். உன் துக்கம் என் துக்கமாகும். இங்ஙனம் வித்யாவளி கூறியதைக் கேட்டு சந்த்ரகாந்தைக் கூறினாள்.

சுத்தனோ அசுத்தனோ ரோகியோ மூர்க்கனோ கோவக்காரனோ எப்படி இருந்தாலும் பெண்களுக்குப் பதியல்லவோ தெய்வம். ஸ்த்ரீகளுக்கு வைதிக ஸம்ஸ்காரமோ அநுஷ்டாநமோ தேவ பூஜையோ தனியே விஷ்ணுபக்தியோ உண்டா? ஸ்வர்க்கம் வேண்டும் என்றால் பெண்களுக்கு பதியே பரமேச்வரன். தன்னிஷ்டப்படி நடந்து பதியை தூஷிப்பவள் மறு பிறவியில் நாயாகப் பிறப்பாள். இதைக் கேட்டு துஷ்டையான வித்யாவளி துஷ்டருக்குப் பிரியமான சொற்களைக்கூறினாள். சந்த்ரகாந்தே! நீ கூறிய ஸ்வர்க்கத்தில் உள்ள ஊர்வசி மேனகா ரம்பா க்ருதாசீ புஞ்ஜிகஸ்தலா முதலியவர்கள் தேவ தாஸிகளல்லவா? புண்யமறிந்த அவர்கள் உடல் அழிவுள்ளது என்பதை உணர்ந்து போகத்தை அநுபவிக்கிறார்கள் பார். இங்கோ மறு உலகிலோ போகாநுபவமே சிறந்த பலன். ஸ்வர்க்கம் கிடைப்பது துர்லபம். அதைப் பெற பசி பட்டினி இருப்பது, போகத்தைத் துறப்பது என்பதெல்லாம் பொய். எல்லோரும் இறக்க வேண்டுமென்பது உண்மை. பாபிகளுக்கு நரகம் புண்யசீலருக்கு ஸ்வர்க்கம் என்பது கல்பனையேதவிர ஸத்யமல்ல. நான் புண்ய பாபங்களை நன்கு அறிவேன்.

என்னை அடக்கிமிரட்டி ஹிம்ஸித்த பதியைக்கொன்றுவிட்டு நான் இப்போது ஸ்வாதீநமாக இருக்கிறேன். ஸ்வாதீநமாக இருந்தால் தான் ஸுகத்தை அடையமுடியும். நல்லது பொல்லாததைச் செய்யமுடியும். ஸ்வாதீநமில்லா



தவர்க்கு ஸுகமேது? இதுபோன்ற பலவார்த்தைகளை உதாரணத்துடன் கூறினாள். ஒவ்வொரு சொல்லும் மனதைப்பரவசப் படுத்தக் கூடியதாக இருந்தது. ஒவ்வொன்றும் த்ருடமான சந்த்ர காந்தையின் மனதையும் கூட கரைத்துப் பாபத்தைச் செய்யத் தூண்டியது. இங்ஙனம் துர்போதனை செய்யப்பட்ட சந்த்ரகாந்தை முற்கர்ம வினையாலும் பெண் சபலத்தாலும் மனஸ் சஞ்சலமானதாலும் போகேச்சையாலும் தற்காலத்தில் உண்டாகும் இன்பத்தில் ஆசைவைத்தாள். அவளது உடலமைப்பும் போகத்திற்கேற்றபடி மிக அழகாக அமைந்திருந்தன.

குலாசாரத்தை சீலத்தை விட்டாள். ஒரு மாதம் வரை பதிக்குத் தெரியாமல் அன்ய புருஷருடன் போகத்தை அநுபவித்தாள். பிறகு அச்சம் தெளிந்து பிரகாசமாகவே வ்யபிசாரம் செய்தாள். பிராம்மணோத்தமரான அவளது பதி வேதராசி பத்து நாட்கள்வரை அவளது செயலை ஆழ்ந்து கவனித்தார். ஸந்தேஹமற அவள் துஷ்டை என உணர்ந்து பின் கடுமையான சொற்களால் தாக்கி அவளை வீட்டை விட்டு விரட்டி விட்டார். அறியாமல் துஷ்டையுடன் இத்தனைநாள் வாஸம் செய்த பாபத்தையகற்றிக் கொள்ள ஸகல ஸம்பத்துகளையும் தியாகம் செய்து விட்டு காவேரீ யாத்ரைக்குச் சென்றார். தனக்கு நேர்ந்தகஷ்டத்தை நினைத்து வருந்தினார். காவேரீ ஸ்நாநத்தால் தான் தனதுபாபமகலுமென காவேரீ தீரத்தில் வஸித்து வந்தார்.

மூன்றும் அத்யாயம் முற்றிற்று.

## நான்காம் அத்யாயம்.]

**அகஸ்த்யர்:** சந்த்ர காந்தை அவ்வூரிலேயே பிரகாசமாக காளைப் பருவத்திலுள்ள ஆண்பிள்ளைகளின் மனதையும் பொருளையும் அபஹரித்தாள். பிரதிதினம் ஒருவகையான ஆடை ஆபரணம் அலங்காரம் அணிவாள். இனிய சொற்களாலும் இதர லீலைகளாலும் அவ்வூரிலுள்ள ஸகல ஜாதி புருஷர்களையும் வசமாக்கி அநுபவித்தாள். தேவர்களும்மோஹிக்கும்படியான அவள்உருவத்தில் மயங்காதவரில்லை. சண்டாளர் முதல் ஸகலருக்குமின்பமளித்து தானும் போகத்தை நிர்பயமாக அநுபவித்தாள். இதை அறிந்த இந்த்ரத்யும்நன் எனும் திராவிட பாண்டிய

அரசன் சந்த்ர காந்தையை இனி இங்கு வைத்திருந்தால் மிகுதி உள்ளோரும் கெடுவர். அதனுல் நாடு அழியும். பாபம் அதிகமாகுமென அஞ்சினுன். அவளது பொருள்களையெல்லாம் எடுத்துக்கொண்டு துஷ்டர்களுடன் அவளை தன் நாட்டை விட்டு வெளி நாடு கடத்தினுன். அவள் ஏழையாகினும் அழகும் யௌவனமும் இருந்ததால் காமுகர் களவாடி பொருள் தேடித் தந்தனர். போகத்திற்கும் குறைவில்லை.

காவேரீ தீரத்தில் வஸித்து முன்போலவே அளவு கடந்து போகத்தில் ஈடுபட்டாள். நாளடைவில் வயது முதிர்ந்தது. அங்கம் தளர்ந்தது. அழகு குறைந்தது. காமுகர் வரவு நின்றது. உடல் மெலிந்தது. நோய்கள் பல சூழ்ந்தன. முடிவில் யமலோகம் சென்ருள். இருபத்தோரு மன்வந்த்ர காலம்வரை பற்பல நரகங்களை அனுபவித்தாள். நிசுளா புரத்திலே தாஸிமகளாகப் பிறந்தாள். பதித்ரோஹ பாபத்தால் பற்பல நோயால் வருந்தினுள். நாஸிகை கர்ணம் விரல்கள் ஆகிய இடங்களில் புண்கள் அதிகமாகி புழுக்களும் உண்டாயின. கோடிக்கணக்கான கிருமிகள் பிடுங்க தீயில் அகப்பட்டவள் போல் தாபத்தால் ஐயோ! ஐயோ! என அல்லும் பகலும் அலறினுள். பிச்சை எடுத்துக்கொண்டு ஊர் ஊராக திரிந்தாள். முற்பிறவியில் செய்த ஒரு சிறு புண்யத்தால் தற்செயலாக காவேரிக் கரைக்கு வந்தாள். ஸாதுக்கள் காவேரீ ஸ்நாநம்செய்ததைக் கண்டாள். ஸ்ரீரங்கநாதருடைய ஸன்னிதியில் ஒரு ஸாது காவேரீ மாஹாத்ம்யம் கூற பலரதைக் கேட்டனர். தனது உடல் தாபமகல இவளும் காவேரியில் முழுகினுள். துலா காவேரீ மாஹாத்ம்யத்தையும் சிறிது கேட்டாள். அச்சமயம் மகாபாபியானுலும் துலாமாஸத்தில் காவேரியில் ஒருமுறை ஸ்நானம் செய்தால் விஷ்ணு லோகம் சென்று அங்கு பூஜிக்கப்படுவான் என்ற ஸ்லோகத்தைப் பௌராணிகர் கூறினுர். அதைக்கேட்டுக் கொண்டிருக்கும் போதே அவள் உயிர் துறந்தாள். அழகான சரீரமுள்ள யமகிங்கரர் திவ்ய விமானத்துடன் அங்கு வந்தனர். சந்த்ர காந்தைக்கு திவ்ய உடலைத் தந்து விமானத்திலேற்றி ஸ்வர்க்கத்திற்கு அழைத்துச் சென்றனர்.



ஒருமுறை துலாகாவேரி ஸ்நாநம்செய்த புண்யத்தால் மகா பாபியான சந்த்ரகாந்தையும் ஸ்வர்க்கம் சென்ருள். ஆங்காங்கு வழியில் அறு சுவை அன்னம் பாநீயம் முதலியவைகளை அநுபவித்துக்கொண்டு காவேரியின் மஹிமையைக் கூறிக்கொண்டு பெரியோர்களை வணங்கிச் சொர்க்கம் சென்ருள். இவளைக் கெடுத்த வித்யாவளியின் ஆயுள் முடிந்த போது, யமனது நாய் அவள் கழுத்தைக் கவ்வி இழுத்துச் சென்றது. ஒரு பிரும்ம ஆயுள் முடியும் வரை ரௌரவம் முதலிய மஹா நரகங்களை அநுபவித்தாள். இருபது முறை நாயாகப் பிறந்தாள். மூன்று பிறவி பன்றியாக ஜநித்தாள். பிறகு பீஷ்மருக்கும் பரசுராமருக்கும் பெரும் போரை மூட்டி வைத்த அம்பா என்ற காசி ராஜன் புத்ரியாகப் பிறந்தாள்.

[அம்பா அம்பாலிகா அம்பிகா என்ற மூன்று பெண்களுக்கும் காசிராஜன் ஸ்வயம்வரம் அமைத்தான். பீஷ்மர் அங்கு வந்த வீரர்களை ஜயித்து இம் மூவர்களையும் தூக்கி வந்தார். அம்பா என்பவள் தான் வேறு ஒரு அரசனை மணப்பதாக மநதினுல் வரித்திருப்பதால் பீஷ்மரது ஸகோதரரை மணக்க மறுத்தாள். பீஷ்மர் அவளைக் காசிக்கனுப்ப அவளால் வரிக்கப்பட்ட அந்த அரசனும் அவளை மணக்க மறுத்தான். மறுபடி அவள் பீஷ்மரிடம் வந்து அவர் தம்பியை மணப்பதாகக் கூற அவரதை ஏற்கவில்லை. பீஷ்மரது குருவான பரசுராமரைச் சரணுகதி அடைந்தாள். அவரும் அம்பையை மணக்காவிடில் போர் செய்வேனென்ருர். இருவருக்கும் கடும் போர் நடந்தது. முடிவில் பரசுராமர் தோற்ருர். மறு பிறவியிலாவது பீஷ்மரைக் கொல்வேனெனக் கடுந்தவம் செய்து உடலை விட்டாள். மறு பிறவியில் சிகண்டி என்ற பேடியாகப் பிறந்தாள். பாண்டவர் ஸேனையில் சேர்ந்து கௌரவருடன் போர் செய்தாள். பகவானுடன் தர்மர் பீஷ்மரிடம் சென்று எப்பொழுது தாங்கள் யுத்தத்தை நிறுத்துவீர்? என்று கேட்க சிகண்டி எதிரில் வந்தால் அஸ்த்ரத்தை விடுவேனென்ருர். அங்ஙனமே அவளைப் பீஷ்மர் முன் அனுப்பி அர்ஜுநன் பீஷ்மரை ஜயித்தான். —பாரதம்]

## வேதராசி நரகவாஸிக்கு நன்மைபுரிதல்.

சந்த்ர காந்தையை விட்டு வைராக்யத்துடன் காவேரீ தீரம் சென்ருரல்லவா அவளது பதியான வேதராசி,

அவரது ஆயுள் முடிந்தவுடன் காவேரீ ஸ்நான பலத்தால் கோடி ஸூர்ய பிரகாசமான திவ்ய விமானம் வந்து அவரை ஸ்வர்கத்திற்கு அழைத்துச் சென்றது. அறியாமல் அவர் பிரஷ்டையுடன் சிறிது காலம் சேர்ந்திருந்த பாபம் அகன்றது. மநமும் நிர்மலமானது. அழகான சரீரத்துடன் யமகிங்கரர் அவரிடம் வந்து புண்யபலனை அநுபவிக்க ஸ்வர்க்கம் வாருங்கள் என பலவகை உபசாரத்துடன் அழைத்துச் சென்றனர். சந்த்ரகாந்தையின் ஸங்க தோஷத்தால் அவரது விமானம் நரகவழியாகச்சென்றது. நரகத்தில் இடர்படும் பாபிகள் அருகே செல்லும்படி அவர் கூற விமானம் அங்கும் சென்றது. ஹா ஹா என்று சிலர் கதறுவதையும் சிலருக்கு உபசாரம் நடப்பதையும் பார்த்தார் வேதராசி.

இந்த அன்னத்தைப் புஜியுங்கள்! இந்த மரத்தின் நிழலில் சிறிது அமருங்கள்! மெதுவாகச் செல்லுங்கள். பாலைப் பருகுங்கள்! இதோ மோர்! இதோ நெய்! இது தயிறு! இது சிறந்த பாநகம்! இது உயர்ந்த ரஸாயநம்! முன்னே நீங்கள் பூமியில் பூஸுரர்களுக்கு அளித்தீர்களே! அந்த அறுசுவை அன்னமிது. ஏலம் லவங்கம் கர்ப்பூரம் இவைகளால் மணமுள்ளதும் சீதளமாகவுமுள்ள நீரிது. மாங்கனி பலாப்பழம் கதளீபலம் இவைகளை உண்டு திவ்ய கந்தத்தைப் பூசிக்கொண்டு செல்லுங்கள்! முன்னே பிராம்மணர்களுக்கு அளித்தது இங்கே இப்பொழுது வந்திருக்கிறது. தானசீலர்களான நீங்கள் இதை ஏற்றுக் கொள்ளுங்கள். ஸாதுவாயினும் பூமியில் தபஸ்வியாயினும் தானம் செய்யாத பொருளை இங்கு பெறமுடியாது. தானத்தால் தநம் கிடைக்கும். தவத்தால் ஸ்வர்க்கம் கிடைக்கும். ஆதலால் பிராம்மணர்களுக்குத் தானம் செய்ய வேண்டும். தனது சக்திக்கேற்றவாறு ஸ்வல்பமாவது தானம் செய்யவேண்டும். தானம் செய்யாதவர்க்கு ஸ்வர்க்க ஸுகமில்லை. பொருள் கிடைக்காது. ஸௌக்யம் கிட்டாது. மநஸ் சுத்தி ஏற்படாது. புத்ரன் உண்டாக மாட்டான். உத்தம க்ஞானம் உண்டாகாது. தானம் செய்யாதவர்களின் பித்ருக்கள் ஸந்தோஷப்படமாட்டார்கள். பசு விருத்தி ஏற்படாது. தானம் செய்யாதவர்க்கு நரகந்தான் கிடைக்கும். தானம் செய்யாதவர் கர்மாக்களெல்லாம் வீணே ஆகுமென்று யமபடர் ஓரிடத்தில் கூறினர். மற்றோரிடத்தில் நீங்கள் பஞ்சமகா யக்ஞம் செய்தீர்கள்.



ஸதா ப்ராதஸ்நானம், மாகஸ்நானம், வைசாகஸ்நானம், துலாஸ்நானம் செய்தீர்கள். காவேரீ பிரவாஹத்தில் முழுகினீர்கள். ஆதலால் சொர்க்க ஸுகத்தை அநுபவியுங்கள் எனக் கூறினர். மற்றோரிடத்தில் ஓ மஹா பதிவ்ரதைகளே! நீங்கள் அருந்ததிக்கு ஸமமானவர்கள். பதி பணிவிடை செய்து பர்த்தாவுக்குப் பிரியமாக இருந்தீர்கள். ஸதாசாரமும் ஸீலமும் உள்ளவர்கள். உங்களது கற்பே சொர்க்கத்தில் திவ்யான்னமாக வந்துளது. இதைப் புஜியுங்கள். பூமியில் செய்யும் புண்யமே பரலோகத்திற்கு பாதேயமாம். (கட்டுச்சாதம்) பதி துஷ்டராயினும் பக்தி செய்தீர்களல்லவா? வாருங்கள்! என்று பெண்கள் பூஜிக்கப்பட்டனர்.

மற்றோரிடத்தில் பாபிகளை யமகிங்கரர், கொல்லு! வெட்டு! அடி என்ற க்ரூரமான சொற்களைக் கூறி பயங்கரமான கத்தி, கதை, உலக்கை முதலிய ஆயுதங்களால் தாக்கினர். கோரப் பற்களும் செம்மட்டை மயிரும் கறுத்த மேனியும் பெருத்த உடலுமுள்ள யமகிங்கரர் வட்டமிடுவதைக் கண்டவுடனே ஐய்யோ என நரகத்திலுள்ளோர் கூக்குரல் கிளம்பிற்று. சுக்காங்கல் நிறைந்த பாதை வழியாக சிலரையும் கொதிக்கும் மணல் வழியில் சிலரையும் பழுக்கக் காய்ச்சிய இரும்பு ஊசி உள்ள வழியிலும் முள் நிறைந்த வழியிலும் சிலரை இழுத்துச் சென்றனர். காட்டுத் தீப்போல் நாலுபுறமும் தீ சூழ, ஐயோ பசிக்கிறதே, தாஹம் எடுக்கிறதே அன்னம் ஜலம் தா என்று அலறுவோரைத் துண்டு துண்டாக வெட்டினர். நீரும் நிழலும் மித்ரரும் பந்துவும் இல்லாத கோரமான காட்டுப்பாதையில் வேட்டை நாய்கள் பற்களால் சிலரைக் கடித்திழுத்தன. ஹா ஹா எனக் கதறும் த்வனி கேட்டது. பிறரை ஹிம்ஸித்தவர், நிந்தித்தவர், பிறர் பொருளை அபஹரித்தவர், நிஷித்த கர்மாவைச் செய்தவர், விஹித கர்மாவை விட்டவர், ஸதாசாரத்தை விட்டவர், ஸாதுக்களை திக்காரம் செய்தவர், தாம்பிகர், பதிதர், துஷ்டர், ப்ராதஸ்நானம், ஔபாஸநம், வேத சாஸ்த்ரம் இவைகளை விட்டவர், தேவதார்ச்சனை, பித்ரு ஶ்ராத்தம் செய்யாதவர், பெற்றோரை நிந்திப்பவர், பிறர் கார்யத்தை கெடுத்தவர், பிறர் தோஷத்திலேயே கருத்துள்ளவர், விற்கத்தகாத பொருள்களை விற்பவர், குபுத்தியுள்ளவர், உண்பதும் உறங்குவதுமாக இருப்பவர், சிவ

விஷ்ணு நிந்தை செய்பவர், வைதிகர்களையும் ஏழைகளையும் பாதிப்பவர், சம்பளம் பெற்று வேதங்கற்பிப்பவர், வேலைக்காரனை ஹிம்ஸித்தவர் தகாத தானங்களை வாங்குபவர் துஷ்ட ஸஹவாஸமுள்ளவர் ஒரு விரதமும் இல்லாதவர், லோபி, நல்ல நாட்களில் தானம் ஜபம் முதலியன செய்யாதவர்

கன்றுக்குப் பால் விடாமல் ஒட்டப் பால் கறந்தவர், தன் வீட்டில் பாகம் செய்யாமல் என்றும் பிறர் பாகத்திலேயே வாழ்பவர் துலா காவேரி ஸ்நானம் செய்யாதவர் பிறர் பூமியை அபஹரித்தவர் அதிகாரியைத் துதித்து ஜீவித்தவர் பங்க்தி பேதம் செய்தவர் தான் மாத்ரம் ருசியான உணவை உண்பவர் பெற்றோரை திக்காரம் செய்தவர் பொய் சொல்பவர் பொய் ஸாக்ஷி சொன்னவர் ஸத்பாத்ரத்தை அவமதித்து அஸத்பாத்ரத்தை கௌரவித்தவர் பச்சைமரத்தை வெட்டியவர் புண்ய கதைகளைக் கெடுத்தவர் புண்ய பூமியை நிந்தித்தவர் இங்ஙனம் பலபாபங்களைச் செய்து யமதூதரால் சிக்ஷிக்கப்படுபவரது கூக்குரல் தோன்றிற்று. அன்னமளி! ஜலம் கொடு! இழுத்துச் செல்லாதே மெதுவாகச் செல். பசி தாஹத்துடன் உள்ள எங்களை ஹிம்ஸிக்காதே என்ற சப்தம் பலமாகக் கிளம்பிற்று. சில பாபிகளை ஆகாசத்தில் தூக்கி சுழட்டி பூமியில் அடித்தனர். கதையால் அடித்து வாளால் கண்டதுண்டமாக வெட்டினர். விரணத்தில் காய்ச்சிய உப்பும் காரமுமுள்ள ஜலத்தை விடும் போது ஹா ஹா என்ற கூக்குரல் கேட்டது. பிரக்ஞை இல்லாமல் விழும் பாபிகளுக்கு ஜலம் தளித்து பிரக்ஞையை உண்டுபண்ணி மறுபடியும் அடித்தனர்.

விரணங்களில் தீயில் பழுக்கக் காய்ச்சிய கூரன ஊசியால் சிலரைக் குத்தினர். நீ செய்த பாபத்தை நினைத்துக்கொள் என்று கூறி காது மார்பு வயிறு ஆகிய இடங்களில் ஆணியடித்து அதில் கயிற்றைக்கட்டி கடின வழியாக இழுத்துச் செல்வர். இங்ஙனம் ஹிம்ஸிக்கப்படும் பிராம்மண க்ஷத்ரிய வைஶ்ய நான்காம் வர்ணர் பஞ்சமர் ஸ்த்ரீ ஆகிய அனைவரும் அலறினர். பரான்னத்திலேயே ஆசை கொண்டவர் புண்ய கதையைக் கேளாதவர் துலா ஸ்நானமில்லாதவர் துரெண்ணங்கொண்டு பதியை நிந்திப்பவளும் கட்டுக்கடங்காமல் திரிபவளுமான பிரஷ்டைகளைப் பழுக்கக் காய்ச்சிய இரும்பு



சங்கிலியால் கட்டி இழுத்துச் சென்றனர். மாமன் மாமி பதி பந்து ஆகியவர்களை தூஷிப்பவர்களை நாக்கில் கட்டி இழுத்தனர். ஆசாரமின்றி பாபகர்மாவைச் செய்பவரும் தயவே இல்லாதவரும் க்ரூரமானவரும் பதியை நிந்திப்பவருமான பெண்களை உங்கள் பாபபலன்களை அநுபவியுங்கள். அழுது பயனென்ன? என்று கூறி கிங்கரர் அடிமேல்அடியாக அடித்து ஹிம்ஸித்தனர். இத்தகையவர்களின் ஹா ஹா ரீங்காரம் ஆகாயமளாவியது. அவரவர் செய்த பாபமகல யமதூதர் யமன் விதித்தபடி ஸம்யமிநி நகரில் பலவகையான சிக்ஷையை அளித்தனர் பாபிகளுக்கு.

நான் பிரபு. நான் ஸமர்த்தன். நான் தனிகன். நான் நற்குலத்தவன் என்று கர்வங்கொண்டு ஏழைகளை மிரட்டி ஹிம்ஸித்தீர்களல்லவா? அதன் பயனை அநுபவியுங்கள். ராஜ்ய போகத்தில் ஆசைகொண்டு செல்வச் செறுக்கால் பிராம்மணர் ஏழை முதலியவர்களது பொருளை அபஹரித்த க்ஷத்ரியர்களை அவரவர் பாபத்திற்கேற்க நரகத்தில் தள்ளினர். ஸ்வதர்மத்தை விட்ட இந்த பிராம்மணர்களை அடி! உதை! பிரஷ்டைகளான இந்த ஸ்த்ரீகளை வெட்டு! சுடு! குடிகளிடம் தானம் தயை இல்லாமல் நன்கு ராஜ்ய பரிபாலநம் செய்யாத அரசர்களைக் கொல்லு! கொளுத்து என்று யம கிங்கரர் கூற நரகத்தில் இடர்படுவோர் அழுகை வேதராசியின் செவியில் விழுந்தது. இளகிய மநமுடைய வேதியர் பரோபகார சிந்தையுடன் இவர்களை எப்படி ரக்ஷிப்பது? இதற்கென்ன உபாயம்? எதனுல் நரகயாதனை அகலும்? என்று நீண்ட நேரம் யோசித்தார். துலா காவேரீ ஸ்நாநத்தில் மூன்று நாளைய புண்யத்தை அளிக்கிறேன். பரோபகாரம் செய்பவனே பிறருக்கு ஸௌக்யமளிப்பவனே ஸாது ஆவான். தயை உள்ளவனும் பிறர் துக்கத்தை அகற்றுபவனுமே நல்லவன். இக்குணமில்லாதவன் செய்யும் இஷ்ட பூர்த்தமெனும் கர்மா வீணுகும். பரோபகாரத்தால் ஸ்வர்க்கம் தபஸ் யக்ஞம் ஜபம் ஸந்த்யை முதலியன பூர்ண பலனைத் தரும். பரோபகாரத்தால் பகவான் ஸந்தோஷமடைவர். ஸகலஸித்திகளும் தீர்த்த யாத்ராபலனும் உண்டாகும். சரீரபலமும் உண்டாகும். ஆதலால் நரகயாதனையிலிருந்து இவர்களை விடுவிப்பேன் எனத் தீர்மானம் செய்து கொண்டார்.

மாதவனை மநதால் நினைத்து நரகத்திலுள்ளோரைப் பார்த்து நீங்கள் துன்பமகன்று இன்பம் பெற ஸர்வ லோகத்தவரும் ஸாக்ஷியாக இருக்க துலா ஸ்நாநத்தில் மூன்று நாள் புண்யத்தை உங்களுக்கு அளிக்கிறேன் என உரக்கக் கூறினர் வேதராசி. அமிருதம் போன்ற இந்த சொல் யமதூதர்களது செவியிலும் நரக வாஸிகளின் காதிலும் விழுந்தது. உடனே கிங்கரர் ஹிம்ஸை செய்வதை நிறுத்தினர். நரகமெலாம் ஸ்வர்க்கமயமாக மாறிற்று. பாசம் அறுபட்டது. பசி தாஹமகன்றது. பரம ஸந்தோஷத்துடன் ஸ்வர்க்க வாஸிகளைப் போல் நடமாடினர். அனைவரையும் தனித்தனி தேவ விமாநம் வந்து அழைத்துச் சென்றது. வேதராசியை வணங்கி விடைபெற்று துலா காவேரி மஹிமையைப் போற்றிக் கொண்டே ஸ்வர்க்கம் சென்றனர். மூன்று நாள் ஸ்நாந பலத்தினாலேயே பாபிகள்கூட நரகத்திலிருந்து ஸ்வர்க்கம் சென்றனர். காவேரீ ஸ்நாநம் எவ்வளவு சிறந்ததென விளங்குகிறது அல்லவா? அதன் பிரபாவத்தைக் கூற ஆயிரம் தலை படைத்த ஆதிசேஷனைத்தவிர வேறெவரால் முடியும்?

**யமகிங்கரர்:** பிராம்மணோத்தமரே! பூமியில் அவரவர் செய்த மகா பாபத்தை இங்கு அநுபவிக்கிறார்கள். தாங்கள் அவர்களை ஸ்வர்க்கத்திற்கு அனுப்பியது யம ராஜனது ஆக்ஞையை மீறியதாகும். மத்யஸ்த்ரான பக்ஷ பாதமில்லாத யமன், பாபம் அகலுவதற்காக எங்களைக் கொண்டு நரகத்தில் பாபிகளுக்கு சிக்ஷை விதிக்கிறார். ரௌரவாதி நரகங்களால் சுத்தமானபின் பாபசேஷத்துடன் பூமியில் அதற்கேற்ற உடலெடுப்பார். மறுபடி பாபம் செய்வர். மறுபடி நரகம் வருவர். அவர்கள் நல் வழிக்கு வரவேண்டுமென்று அன்பினால் தான் சிக்ஷை விதிக்கிறோம். ஆதலால் தாங்கள் இவ்விடத்தை விட்டு சீக்கிரம் செல்லுங்கள் என்று விமானத்தை வேகமாக நடத்தினர். மறுபடியும் முன்போல் அழுகுரல் கேட்டது. வேதராசி குனிந்தார். பலர் பலவகையான நரகத்தில் இடர்படுவதைக் கண்டார். சிலர் சூலத்தில் ஏற்றப்பட்டனர். சிலர் கல்லில் அறையப்பட்டனர். சிலர் பழுக்கக் காய்ச்சிய தாம்ரபாத்ரத்தில் போடப்பட்டனர். சிலர் வாளாலறுக்கப்பட்டனர். அன்னம் ஜலமென்று கதறிக் கொண்டே சிலர் மூர்ச்சித்தனர். கொதிக்கும் எண்ணெயிலும் உருகிய ஈயத்திலும் எறியப்பட்டனர். அடிபட்ட



விரணத்தின் மீது கொதிக்கும் எண்ணெய் விடப்பட்டது. மூர்ச்சையானவரை சீதமான ஜலத்தால் மூர்ச்சை அகலும் படி செய்து மறுபடியும் பிரக்ஞை வந்த பின் அவரை சிக்ஷித்தனர்.

இதைக் கண்டு வேதராசி மிக துக்கப்பட்டார். ஓ நரகவாஸிகளே! பூமியில் பல பாபங்களைச் செய்து விட்டு இப்போது ஏன் அழுகிறீர்கள்? க்ஷணத்தில் அழியக் கூடியதான உடலைக்கொண்டு புண்யம் செய்யாமல் ஏன் பாபத்தைச் செய்தீர்கள்? துர்லபமான மானிட உடலைப் பெற்றும் மாகாதி மாஸத்தில் ஸ்நாநம் செய்து புண்யம் தேடலாகாதா? வஸ்த்ரமோ பாநகமோ பாலோ சத்ரமோ ப்ராம்மணருக்கு அளித்திருந்தால் இப்போது அவை இங்கு வருமல்லவா? காலத்தில் ஸந்த்யாவந்தனம் ஹோமம் அதிதி பூஜை பரோபகாரம் துலா காவேரீ ஸ்நாநம் ஏகாதசி உபவாஸம் சிவ விஷ்ணு பூஜை ஒரு துளஸீ தளமாவது பகவதர்ப்பணம் செய்வது ஶ்ராத்த தர்பணம், பித்ரு மாத்ரு ஶுஶ்ரூஷை குரு பூஜை பகவத் ஸேவை தரித்ரனுக்குத் தாநம் முதலிய ஒன்றும் நீங்கள் செய்ய வில்லையா? ஸகல பாபங்களையும் அகற்றி ஸர்வ இஷ்டத்தையும் தரக்கூடிய விஷ்ணு கதையாவது கேட்டீர்களா? என்று கேட்க நரகவாஸிகள் வேதராசியைப் பார்த்துக் கூறினர்.

**நான்காமத்தியாயம் முற்றிற்று.—119 சுலோகங்கள்.**

## ஐந்தாம் அத்தியாயம்—99 சுலோகங்கள்.

**நரகவாஸிகள்:** ஓ பிராம்மணோத்தமரே! நாங்கள் செய்த பாபம் கணக்கில்லை. சிலதைச் சொல்கிறோம். பிறந்ததிலிருந்து இதுவரை பாபமே செய்து வந்தோம். அருணோதய காலத்தில் ஸுகமாகத் தூங்கினோம். ஸந்த்யை ஜபம் ஒன்றும் செய்யவில்லை. அதனால் துன்பப்படுகிறோம். அக்நியில் ஹோமம் செய்யவில்லை. பஞ்சமகா யக்ஞம் அதிதி பூஜை முதலியதைச் செய்யாததால் தவிக்கிறோம். பகலில் பசியுடன் வந்தவர்க்கு அன்ன மளிக்கவில்லை. ஆதலால் பசியுடன் கதறுகிறோம். அரக்கு உப்பு எண்ணெய் நெய் பால் தயிர் எள்ளு வஸ்த்ரம் முதலியவைகளை விற்றோம். அதனால் அவதிப்படுகிறோம். பரநிந்தை பரத்ரோஹம் செய்தோம். பிறர் அன்னம் பர ஸ்த்ரீ பர திரவியம் இவைகளை அபஹரித்தோம்.

அதனால் இந்த நரகத்தை அநுபவிக்கிறோம். நிஷித்த திநமான ஏகாதசியில் புஜித்தோம். பௌர்ணமி அமாவாஸ்யை போன்ற திநங்களில் ஸ்த்ரீ ஸங்கமம் செய்தோம். அதனால் துன்பமடைகிறோம். அமாவாஸ்யையில் தர்பணம் செய்யவில்லை. பெற்றோருக்கு ஶ்ராத்தம்செய்யவில்லை. பகவத் கதை நடந்துகொண்டிருக்கும்பொழுது அதைக் கேளாமல் வீண்வம்பு பேசினோம். மாதா பிதா குரு பிராம்மணர் முதலியவர்களைப் பூஜிக்கவில்லை. யாசகருக்குத் தருகிறேன் என்று கூறி ஆசைகாட்டி ஏமாற்றினோம். மகாநதியில் ஒருநாள் கூட பிராதஸ்நாநம் செய்யவில்லை. மாத்யாந்ஹிக ஸ்நாநமோ ஸங்க்ராந்தி புண்ய கால ஸ்நாநமோ செய்யவில்லை. வைச்வதேவம் செய்யாமல் ருசியான அன்னத்தைத் தனியாக இருந்து புஜித்தோம். பிரும்மசாரிக்கோ துறவிக்கோ பிக்ஷை அளிக்கவில்லை.

தீர்த்தயாத்ரைக்குச் செல்லவில்லை. உத்ஸவ தர்சநம் செய்யவில்லை. புண்யநாளை தாந தர்மம் செய்யாமல் வீணாக்கினோம். குடும்பியும் தரித்ரனுமான ஶ்ரோத்ரியன் யாசித்தபோது அவருக்கு லோபத்தால் ஒன்றும் தரவில்லை. ஸர்வ பாபங்களையும் அகற்றவல்ல காயத்ரியை ஒரு நாள் கூட ஜபிக்கவில்லை. யக்ஞமும் செய்யவில்லை. ஏகாதசி அமாவாஸ்யை துவாதசி பௌர்ணமிகளில் முள்ளங்கி முருங்கக்காய் முதலியவைகளை உண்டோம். எண்ணெய் தேய்த்துக்கொண்டோம். பழையது பிறரது பித்ரு சேஷம். ஸ்த்ரீ ஶேஷம் முதலியவைகளை உண்டோம். சுரைக்காயைப் புளியுடன் சேர்த்துச் சாப்பிட்டோம். தயிருடன் முள்ளங்கியும் உப்புடன் பாலையும் புண்ணைக்கு முருங்கைக்காய் கத்திரிக்காய் மொச்சக்கொட்டை முதலியவைகளையும் சாப்பிட்டோம். இரவில் எண்ணெய் தேய்த்துக்கொண்டோம். பகலில் தூங்கினோம். எண்ணெய் தலையுடன் உறங்கினோம்.

அகாலத்தில் புஜித்தோம். அரசர் விருத்தர் பாலர் ஸ்த்ரீ இவர்களுடன் சேர்ந்து புஜித்தோம். பகவானுக்கு நிவேதநம் செய்யாத அன்னத்தை உட்கொண்டோம். கர்வத்தால் கடுமையான சொற்களைக் கொண்டு தாய் தந்தைகளைத் தாக்கினோம். அன்னம் என்று பசியுடன் வந்த குழந்தைகளை மிறட்டினோம். ஒரு மாதம்வரை லோபத்தினால் பருப்பில்லாமல் உண்டோம். இரவில்



தயிரும் பகலில் பாலும் உட்கொண்டோம். பஹிஷ்டையுடன் கூடி ரதி சுகமனுபவித்தோம். பிறர் கார்யத்தைக் கெடுத்தோம். கோள் சொன்னோம். நான் வித்வான், நான் ஸமர்த்தன் நான் நற்குலத்தில் பிறந்தவன் நான் தநிகன் என்று கர்வத்தால் பிறரை அவமதித்தோம். பகலில் மைதுநம் செய்தோம். சூதாடினோம். காலை மாலை எனும் ஸந்திகளில் எண்ணெய் தேய்த்துக்கொண்டோம். மனைவியுடன் ஸமபந்தியில் உட்கார்ந்து புஜித்தோம். முருங்கக்காயை புளியுடன் சேர்த்துப் பாகம்செய்து புஜித்தோம். வெள்ளைக் கத்திரிக்காயையும் சுரக்காயையும் துவாதசியில் புஜித்தோம். தர்மத்திற்கென்று யாசித்து வந்த பொருளை தர்மம் செய்யாமல் உண்டோம்.

வேத சாஸ்த்ரங்களைக் கற்றும் நிஷித்த கர்மாக்களைச் செய்து தர்மத்தைக் கைவிட்டோம். பணம் பெற்று வேதங் கற்பித்தோம். பொய் சொன்னோம். இவைகளால் ரௌரவம், கால ஸூத்ரம், மகா ரௌரவம், கராளம், விகராளம் துஷாக்நி க்ருகசம் கும்பீபாகம் தப்த ஜலம் காய்ச்சிய இரும்பைப் பக்ஷிக்கும் தப்தாய: பிண்ட பக்ஷணம் ஜல மல பக்ஷணம், பயங்கரமான ரேத: பாநம், நாய் மாம்ஸ போஜநம் தனது மாம்ஸ பக்ஷணம் ரக்த பாநம் வஸா பக்ஷணம் தேள் பாம்புகள் பீடிக்கும் நரகம். கோரமான உப்பு ஜல நரகம், வைதரிணீ, கொதிக்கும் மலையில் தள்ளுதல், கதையாலடித்தல் கொளுத்துங் குழவியால் அறைத்தல், அக்நி ஜ்வாலையில் நுழைதல், நெருப்புத் தணலைப் புஜித்தல், அதில் படுத்தல், நகத்தில் ஊசியைக் குத்துதல், ஆண் குறியில் ஆணி அடித்தல், விருஷணத்தில் பாறையைக் கட்டித் தொங்கவிடல், தாமிஸ்ரம் அந்ததாமிஸ்ரம் ஹாலாஹலம் முதலிய பல பயங்கரமான கோர நரகங்களில் வீழ்ந்து பலமுறை மோஹமடைகிறோம்.

சிலர் ஏழு மன்வந்தரகாலமும் சிலர் பதினான்கு மன்வந்தர காலமும் பலகோடி வர்ஷங்களும் மேல் மேலும் துன்பந்தரத்தக்க நரகங்களை அநுபவிக்கின்றோம். பூர்வ கர்ம பலனை அநுபவிக்கும் எங்களுக்கு விடுதலையே இல்லை. எங்களைவிட மிகக் கோரமான துக்கத்தை அநுபவிக்கும் பெண்களது துக்கமே மிகப் பொறுக்கமுடியாதது. இதோ பாருங்கள் ! இவளைத் தலை கீழாகத் தொங்கவிட்டு வாளால் அறுக்கிறார்கள். தேள் பாம்பு புழுக்கள் இவளைக் கடிக்கின்றன. இவள் பிராம்மண

ஸ்த்ரீ. குலத்தைக் கெடுத்த பதிதை, பாவி! உஜ்ஜயினீ நகரில் அழகான ஆடை ஆபரணங்களை அணிந்து கற்பை யிழந்தவள். துராசார முள்ளவள். ஸதா கோபமுள்ளவள். பல குழந்தைகளைப் பெற்றவள். மாமன் மாமியை ஸதா நிந்தித்து தன் வயிற்றை நிறப்புபவள். பொருளாசை கொண்டு மூத்தாள் புத்ரனைக் கொன்றவள். சோம்பேரி. ஸதா பதியை மிரட்டுபவள். பதி பணிவிடை செய்தறியாள். ஸாதுக்களுக்கு அப்ரியம் செய்தவள். பெற்றோராலும் திக்காரம் செய்யப்பட்டவள். ஏழை பிக்ஷுகர்களைத் திட்டுபவள். துஷ்டரிடம் அன்புகொண்டு ஸாதுக்களை வெறுப்பவள். பதி ஏதேனும் கூறினாலும் உன் முன்னே பிராணனை விடுவேன் என்பாள். தாஸிகளுக்கு ரஹஸ்யமாகத் தனது பொருளைத் தருபவள். தேவர் பிராம்மணர் குரு ஆகியவர்களுக்கு துரோஹம் செய்பவள். பிரஷ்டைகளிடமே பிரியமுள்ளவள். மிகக் கொடிய பாபத்தால் ஶ்வாஸகாஶம் என்ற யமகிங்கரர்கள் உலக்கையால் இவளை அடித்து யமலோகத்திற் கொண்டு சேர்த்தனர். முன் கூறிய ஸகல நரகங்களையும் பலகோடி வர்ஷங்கள் அநுபவித்து இப்போது கோலாஹலம் எனும் நரகத்தில் தலை கீழாகத் தொங்கவிடப் பட்டிருக்கிறாள்.

மல ஜலங்களே அவளுக்கு ஆஹாரமாக அளிக்கப் படுகிறது. தேள் பாம்பு காட்டு ஈ முதலியன அவளைக் கடிக்கின்றன. அவளருகே இரு புருஷர்கள் ஹா ஹா எனக் கதறிக்கொண்டு மூர்ச்சையாகி விழுகிறார்களே, இவ்விருவர்களில் ஒருவர் ராஜா. பிராம்மண ஹிம்ஸை செய்த மஹா பாபீ. ராஜ்யத்தில் அவன் பொருள் சேர்க்கும் பொருட்டு பல தீய கார்யங்களைச் செய்தான். தாந தர்மம் செய்யாதவன். அதனால் இந்த நரகத்தை அநுபவிக்கிறான். அவனருகில் உள்ளவன் பிரும்ம ஶ்ருதி என்ற பிராம்மணரின் புத்ரன். அளக க்ராமத்தில் வஸித்து வந்தான். பிரும்மசாரியான அவன் குரு த்ரோஹம் செய்தவன். தாம்பூலம் தரித்தவன். பிக்ஷை எடுப்பதில்லை. ஸமிதா தாநம் செய்வதில்லை. அத்யயனம் செய்வதில்லை. எவருக்குமஞ்சான். பிரஷ்ட ஸ்த்ரீகளிடம் பற்றுகொண்டவன். அதனால் அல்பாயுஸாக இறந்து மஹா பாப பலனை நரகத்தில் அநுபவிக்கிறான். இவ்விருவர்களும் முப்பது பிரளயம் வரை துக்கத்தை அநுபவிக்கின்றனர்.



எங்கள் துக்கத்தைவிட மிகக் கடுமையான துக்கத்தை இவர்கள் அநுபவிக்கிறார்கள் பாவம்!

பிராம்மணோத்தமரே! ஒரு முகூர்த்தகாலம் நீர் இங்கிரும். உமது தர்சநத்தால் சிறிது ஸுகமுண்டாகிறது. ஸுகத்தைத் தரும் ஸாக்ஷாத் ஹரியே நீர்! என்று வேத ராசியைப் பார்த்துப் பேசினார்கள். அதனால் அவர்களது பாபம் அகன்றது. ஹரி என்ற இரு அக்ஷரங்களைக் கூறினார்கள். அதனால் அவர்களது ஸகல பாபங்களும் அடியோடு அகன்றன. யாதனைகளை உதறித் தள்ளிவிட்டு ஸ்வர்க்கத்திற்குச் சென்றார்கள். இதைக் கண்டு வேத சர்மா ஆஶ்சர்யமடைந்தார். எந்த புண்யத்தினால் திடீரென நரகத்தில் உள்ளவர் ஸ்வர்க்கம் சென்றனர்? பிராரப்த கர்மாவை அநுபவிப்பவரை எது அந்த கர்ம பலமான நரகத்திலிருந்து கரை ஏற்றும்? யக்ஞமோ தானமோ உக்ரமான தவமோ மஹா பாபங்களின் பயனை நரகத்தை அகற்ற வல்லவைகளல்ல. தர்ப்பத்தால் பூமியெல்லாம் மூடினாலும் தவத்தால் உலகை வருத்தெடுத்தாலும் எண்ணிறந்த பொருளைத் தாநம் செய்தாலும் அந்த துக்கம் அகலாது. அநுபவித்தால்தான் அது குறையும். வைதிகமான சுபகர்மாவை ஸங்கல்பத்துடன் செய்தாலும் காமனை இன்றி ஒரு கர்மாவைச் செய்தாலும் அதன் பயனை அவச்யம் அநுபவித்தே ஆகவேண்டும்.

கர்ம பந்தம் மிக த்ருடமானது. அதை அகற்ற மகா விஷ்ணு ஒருவரே ஶக்தி உள்ளவர். அவர் ஸ்வதந்த்ரமானவர். திரிலோகாதிபதி. அப்படிப்பட்ட பகவன் நாமாவை இவர்கள் கூறவில்லையே. எதனால் இவர்களது பாபமகன்றது? இப்படி சிந்தனை செய்த வேதராஶிக்கு ஒரு நினைவு வந்தது. தெரிந்தது! தெரிந்தது! என ஸந்தோஷத்தால் கூத்தாடினார். விஷ்ணு பக்தியின் பெருமையை நினைத்துப் பரவசமானார். நாங்கள் ஹரிநாம ஸ்மரணம் செய்யவில்லை என்று கூறும்போது ஹரி நாமாவைக் கூறினார்களல்லவா? அந்த புண்யத்தால் கொடிய நரகங்களிலிருந்து ஸ்வர்க்கம் சென்றனர். ஆஹா! என்னே பெருமை ஹரிநாமாவிற்கு. ஆனால் இங்கு இன்னும் சிலர் கர்ம பந்தத்தால் நரகயாதனையை அநுபவிக்கிறார்களே! யம கிங்கரர் கோபங்கொண்டு நரகத்திலிருந்து விடுபட்டவர்களை மறுபடியும் நரகத்தில் தள்ளினால் என்ன செய்வது? யமன் கோபங்கொண்டால் ஸம்

ஹாரமூர்த்தியான அவர் இன்னும் கொடுமையாக நரக வாஸிகளைத் துன்பப்படுத்துவார் அல்லவா? ஹரிநாமாவைக் கூறுமலும் இவர்கள் கூறியதைக் கேளாமலுமிருந்த இந்த நரகவாஸிகள் யாதனையையும் அகற்ற வேண்டும். ஆதலால் எல்லோர் செவிகளிலும் படும்படி உரக்க ஹரி நாமாவைக் கூறுகிறேன். அதனுல் திருடன் ஸுராபானம் செய்தவன் மித்ரத்ரோஹி பிரும்மஹத்தி செய்தவன் குரு ஸ்த்ரீ கமனம் செய்தவன் ஸ்த்ரீ ராஜா பிதா கோ இவர்களைக் கொன்றவன் ஆகியவர்கள் இந்த ஹரிநாம கீர்த்தநத்தால் பாபமகன்று ஸுகம் அடையட்டும்.

துலாஸ்நானம் மாகஸ்நானம் கார்த்திகைஸ்நானம் செய்யாதவர்களும் ஹரி நாமத்தால் நற்கதி பெறட்டும். ஔபாஸனம் காயத்ரீ ஜபமில்லாதவர்களும் பஞ்ச மஹா யக்ஞம் பிராதஸ்நானமில்லாதவர் அபுத்ரர் அநாசாரமுள்ளவர் தகாத பொருளைப் புஜித்தவர் பிறர் பொருளை அபஹரித்தவர் பரநிந்தை செய்தவர் அஸத் வார்த்தைகளைப் பேசியவர் விஷ்ணு சரிதம் கேளாதவர் நித்ய நைமித்திக கர்மாக்களை விட்டவர் தீர்த்த யாத்ரை செய்யாதவர் ராமாயண பாரத கதைகள் கேளாதவர் ஸாளக்ராம பூஜை செய்யாதவர் ஸதா விருஷளான்ன முண்பவர், மஹாளய அமாவாஸை தர்ப்பணம் செய்யாதவர் குருத்ரோஹி நன்றி கெட்டவர் பெற்றோரை நிந்தித்தவர் தானம் செய்யாமல் புஜித்தவர் பொய் கூறுபவர் த்வேஷ புத்தி யுள்ளவர் ஸ்நானம் செய்யாமல் உண்டவர் பங்க்தி பேதம் செய்தவர் ஆகியவர்களும் பலகோடி பிறவிகளில் பல பாபம் செய்தவர்களும், பரமதயாளுவான ஹரியின் நாமாவை நினைத்த மாத்ரத்தால் பாபமகன்று நற்கதி பெறுவார்கள். பக்த பராதீனனை பகவானைத் தவிர வேறு யார்? பதிநான்கு லோகத்திலும் ஸம்ஸாரக் கடலில் முழுகிய மஹா பாபிகளைக் கரை ஏற்ற முடியும் என்று யோசித்தார். ஆநந்தக் கண்ணீர் பெருக தொண்டை யடைக்க கை கால்களை உதறிக்கொண்டு நர்த்தநத்துடன் ஹரி நாம ஸங்கீர்த்தநம் செய்தார். [ஸ்வாமின்! அநந்த: புருஷோத்தம! புஷ்கராக்ஷ பக்தார்தி பஞ்ஜந ஹரே! பகவன்! முராரே! ஸ்ரீமன் ந்ருஸிம்ஹ! நரலோக விடம்பநாத்த லீலாவதார தரணீந்து விலோசநேஶ!]

ஸ்வாமின்! அநந்த புருஷோத்தம! தாமரைக் கண்ணு! பக்தர் துன்பத்தைப் போக்குபவரே! பகவன்!



முராரே! ஸ்ரீ நரஸிம்ஹ! மானிட உலகில் விளையாட்டாக பல அவதாரம் செய்தவரே! சந்த்ர ஸூர்யரைக் கண்ணாகக் கொண்டவரே!

ஸ்ரீதேவி பூதேவி இவர்களது கராரவிந்தங்களால் லாலனை செய்யப்பட்ட பாதாரவிந்தமுள்ளவரே! புலன்களுக் கெட்டாதவனே! மதுவை அழித்தவரே! அழகிய வேஷமுள்ளவரே! மங்களத்தை அளிப்பவரே! விபோ! உமது திருவடியை நினைத்தமாத்ரத்தில் ஸம்ஸார துக்கத்தைப் போக்குபவரே! நித்ய புருஷர்களால் பூஜிக்கப்பட்டவரே! புதிய மேகம்போன்ற திருமேனி உள்ளவரே! பீதாம்பர மணிந்தவரே! கருட வாஹந அமரேஶ! நாராயண! அச்யுத விபோ! வெண்ணையைத் திருடியவரே! கேஶவ! உபநிஷத்துகளாலும் தர்சிக்க முடியாதவரே!

ஸ்ரீ க்ருஷ்ண! விஷ்ணோ! ரகுநாத! ஜயஶீல! அர்ஜுநனுக்கு ப்ரியமானவரே! ஸூர்ய குல சிரோபூஷண! முகுந்த! கோவிந்த! கஜேந்த்ர பந்தோ! சங்க சக்ர பாணே! விஶ்வேஶ! உலகைப் பரிப்பவரே! உலக வடிவரானவரே! உலகத்தில் எல்லோரையும் விடச் சிறந்த காந்தி உள்ளவரே! ஶாஶ்வதமான உடலுள்ளவரே! ரூப மற்றவரே! நித்யரே! அழிவற்றவரே! மாறுதல் இல்லாதவரே! யானைக்கும் பாம்பிற்கும் மற்றோர்க்கும் பந்துவானவரே!

த்ரிகுண மூர்த்திகளின் ஸ்வரூபத்தைத் தாங்கி பல லீலைகளைச் செய்கிறீர். அதிலீடுபட்ட மஹர்ஷிகள் அதைத் துதித்து நமஸ்கரிக்கிறார்கள். வாமனர் இந்த்ரன் ராக்ஷஸர் தேவர் குஹன் முதலியவர்களால் ஸ்தோத்ரம் செய்யப்பட்டவரே என்னை ரக்ஷி! இங்ஙனம் ஹரி குண கணத்தை வேதராசி கூற அதைக் கேட்டவுடன் நரகத்திலுள்ளவர்களது ஸமஸ்த பாபங்களும் அகன்று இவரை நமஸ்கரித்துவிட்டு அருகில் வந்த விமாநத்திலேறி எல்லோரும் வைகுண்டம் சென்றனர். துலா காவேரி மஹிமையை வேதராசி இங்ஙனம் உலகமறியக் காட்டினர். அதற்கு ஸமமானது விஷ்ணு குணகண ஸ்தோத்ரம் என ஹரி நாம மஹிமையையும் விளக்கினர் வேதராசி.

**ஐந்தாமத்யாயம் முற்றிற்று.**

## ஆறும் அத்தியாயம் – 74 சுலோகங்கள்.

**அகஸ்த்யர்:** முன்னே கருணமூர்த்தியான பிரும்மா மகா புண்யையான காவேரீ மஹாநதியைப் படைத்தார்.

ஜடர்களான மனிதர்களும் கூட யம பாசத்திலிருந்தும் ஸம்ஸாரக் கடலிலிருந்தும் விடுபடட்டும் என இவ்வுத்தம காவேரியைப் பூமிக்குமனுப்பினர். அக்னி பூஜை யாகம் முதலியவைகளைச் செய்யாதவர்களும் மகா பாபிகளும் வைச்வ தேவம் செய்யாமல் உண்பவரும் துராசாரமான உணவைப் புஜித்தவரும்கூட காயக்லேஶம் செய்யாமலே ஸகல பாபங்களை அகற்றித் தங்களது இஷ்டத்தைப்பெற பூமியில் காவேரி ஜலம் பிரவஹிக்கின்றது. உலகில் உள்ள ஸகல தீர்த்தங்களிலும் ஸ்நாநம் செய்தால் என்ன புண்ய பலமோ அது ஒரு முறை காவேரீ ஸ்நாநம் செய்வதால் கிடைக்கும். துர்பிக்ஷகாலத்தில் பிரதிதினம் அன்ன தானம் செய்தால் என்ன புண்யமோ அந்த புண்யம் ஒரு முறை காவேரீ ஸ்நாநம் செய்வதால் கிடைக்கும். ஏழையான வேதியனுக்கும் ஸ்வ தேசத்தையும் ஸ்வ ஜனங்களையும் விட்டு தேசாந்தரம் வந்த வேதியனுக்கும் பொருள் தானம் செய்தவருக்கு உண்டாகும் புண்யத்தை ஒரேமுறை துலாமாதத்தில் காவேரீ ஸ்நாநம் செய்தால் பெறலாம்.

வைஶ்வதேவம் முடிந்தபின் வந்த அதிதிக்கு அன்னமிடும் புண்யம் ஒரு துலாஸ்நானத்தால் கிடைக்கும். நித்ய கர்மா, அக்னி கார்யம் வேதாத்யயநம் இவைகளைச்செய்ய முடியாதவர் துலா காவேரீ ஸ்நாநம் செய்தால் அவைகளை விட்ட பாபமகன்று அவைகளைச் செய்ததா லுண்டாகும் பலனைப் பெறுவர். இல்லையேல் நரகந்தான். ப்ராத ஸ்நாநம் செய்து காயத்ரீ ஜபம் செய்வது, மஹாளய காலத்தில் தினந்தோறும் சிராத்தம் செய்வது துவாதசீ வியதீபாதம் ஏகாதசீ முதலிய தினங்களில் தானம் செய்வது ஆகியவைகளால் உண்டாகும் பலனை ஒரு துலா காவேரீ ஸ்நாநத்தால் பெறலாம். காவேரீ தக்ஷிண கங்கையாக பிரும்மாவால் படைக்கப்பட்டாள். மகா பாதகம் உபபாதகம் முதலிய ஸகல பாதகங்களையும் போக்கிக் கொள்ள எல்லோருக்கும் உபகாரமாக தக்ஷிண திக்கை நாடி வந்தவள் காவேரீ. நூறுண்டுகள் கங்கா ஸ்நாநம் செய்ததால் உண்டாகும் பலனை ஒரு துலா காவேரீ ஸ்நாநத்தால் பெறலாம். உலகில் மூன்றரை கோடி புண்ய தீர்த்தங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் மகாவிஷ்ணுவின் ஆக்ஞையால் கங்கையை முன்னிட்டுக் கொண்டு துலா மாதத்தில் காவேரியை வந்தடைகின்றன.



துலா காவேரீ மஹிமையைக் கேட்டாலும், ஸ்நாநம் செய்தாலும் தாநம் செய்தாலும் ஸர்வ பாபங்களும் அகலும். வைகுண்டம் செல்வர். வேதமறிந்த வேதராசி பிரஷ்டையான தன் மனைவியின் ஸங்கத்தால் தோன்றிய பாபத்தைத் துலா ஸ்நாநத்தால் அகற்றிக்கொண்டார். தனது தர்சநத்தாலும் காவேரீ ஸ்நாந புண்யத்தாலும் யம லோகத்திலுள்ள நரகவாஸிகளை எல்லோரையும் வைகுண்டத்திற் கனுப்பி யமனை ஜயித்துத் தானும் வைகுண்டம் சென்றார்.

## வேதராசி யமனை ஜயித்தது.

**ஹரிஸ்சந்த்ரன் :** தேவர்களாலும் ஜயிக்க முடியாத யமனை வேதராசி எப்படி ஜயித்து வைகுண்டம் சென்றார்? அதை எனக்குக் கூறுங்கள்.

**அகஸ்த்யர் :** வேதராசியின் செயலால் நரகத்தில் உள்ளோர் அனைவரும் வைகுண்டம் சென்றதைக் கேட்டு யமன் கடுங் கோபங்கொண்டார். மூவுலகையும் தஹிப்பவர்போல் கர்ஜித்தார். எல்லா உலகையும் விழுங்குபவர்போலவும் மலைகளையும் பக்ஷிப்பவர் போலவும் கடல்களைக் குடிப்பவர் போலவும் ஆக்ரஹத்துடன் கையைக் கையால் முறுக்கினர். பற்களைக் கடகடவென்றுகடித்தார். தலையை ஆட்டினர். மகா பயங்கரமான ராஜ யக்ஷ்மா முதலிய (வியாதி) ஸேனாபதிகளால் சூழப்பட்டார். கால தண்டத்தைக் கரத்திலேந்தி பயங்கரமான எருமை மீது ஏறிக் கிளம்பினர். அவரது த்வனியும் ஸேனைகளின் கர்ஜனையும் பத்து திக்குகளிலும் பரவிற்று.

இதைக் கேட்டு உலகெலாம் திடுக்கிட்டது. நடுங்கிற்று. நவக்ரஹங்கள் விபரீதமாக மாறினவா? கடல்கள் கரை புரண்டனவா? என உலகம் அசைவற்று நின்றது. இதென்ன? எங்கிருந்து இந்த சப்தம் உண்டாகிறது? பிரளய காலம் வந்துவிட்டதா? என பயந்து மஹிஷ வாஹநத்தில் ஏறி வரும் யமனைக் கண்டார்கள். பாடபாக்நி போல் ஜ்வலித்தது அவரது ரூபம். அதைக்கண்ட நரக வாஸிகளனைவரும் ஸைன்யத்துடன் கால தண்டத்தைத் தரித்து எருமைமீதிருப்பவர் யமனே தான் என்று ஊஹித்தார்கள். வெகு தூரத்தில் வரும் அவரைக்கண்டு வேதராசியும் நடுங்கி விஷ்ணு கவசத்தைப் பாராயணம் செய்தார்.

## விஷ்ணு கவசம்.

**ஹரிஸ்சந்த்ரன் :** ஓ பகவன் ! ஸ்ரீ விஷ்ணு கவசம் எப்படிப் பட்டது ? எத்தகைய மகிமை உள்ளது ? யார் இதைக் கூறியது ? இதற்கு யார் ரிஷி ? என்ன சந்தஸ் ?

**அகஸ்த்யர் :** ஹரிஸ்சந்த்ர ! திவ்யமான விஷ்ணு கவசம் மிக ரஹஸ்யமானது. உலக ஸ்ருஷ்டியின் ஆதியில் பகவான் மஹாவிஷ்ணு இதை ப்ரும்மாவுக்கு உபதேசித்தார். பாற்கடலில் பிரும்மா அதை எனக்குக் கருணையால் கூறினர். ஜயத்தை அளிக்கக் கூடிய இதை நீயும் ரஹஸ்யமாக வைத்துக்கொள்.

## விஷ்ணுகவச மஹா மந்த்ர ஜப முறை.

ஓம் சுக்லாம் — ஶாந்தயே — ஓம்பூ......ஸுவரோம். மமோ பாத்த ... ப்ரீத்யர்த்தம் ஸர்வாபீஷ்ட ஸித்யர்த்தம் ஸ்ரீ விஷ்ணு கவச மஹா மந்த்ர ஜபம் கரிஷ்யே. அப உபஸ் ப்ருஸ்ய. அஸ்யஸ்ரீ விஷ்ணு கவச மஹாமந்த்ரஸ்ய பிரும்மா ரிஷி: (தலையில்) அநுஷ்டுப் சந்த: (மூக்கில்) ஸ்ரீமன் நாராயணோ தேவதா (மார்பில்).

### கரந்யாஸம்.

கேஶவாய நம: அங்குஷ்டாப் யாம் நம:
நாராயணாய நம: தர்ஜனீப்யாம் நம:
மாதவாய நம: மத்யமாப்யாம் நம:
கோவிந்தாய நம: அநாமிகாப்யாம் நம:
விஷ்ணவே நம: கநிஷ்டிகாப்யாம் நம:
மதுஸூதநாய நம: கரதல கர பிருஷ்டாப்யாம் நம:

### அங்கந்யாஸம்.

த்ரிவிக்ரமாய நம: ஹ்ருதயாய நம:
வாமநாய நம: ஶிரஸே ஸ்வாஹா
ஸ்ரீதராய நம: ஶிகாயை வஷட்
ஹ்ருஷீ கேஶாய நம: கவசாய ஹும்.
பத்ம நாபாய நம: நேத்ர த்ரயாய வௌஷட்
தாமோதராய நம: அஸ்த்ராய பட்
பூர்புவஸ்ஸுவரோ மிதி திக்பந்த:

## ஸ்ரீ துலா புராணம்.

### த்யாநம்.

ஶாந்தா காரம் புஜக ஶயநம் பத்மநாபம் ஸுரேஶம்
விஶ்வாகாரம் ககந ஸத்ருஶம் மேகவர்ணம் ஶுபாங்கம் ।
லக்ஷ்மீகாந்தம் கமல நயநம் யோகி ஹ்ருத் த்யாந கம்யம்
வந்தே விஷ்ணும் பவபயஹரம் ஸர்வலோகைக நாதம் ॥

### பஞ்ச பூஜா.

லம்-ப்ருதிவ் யாத்மநே கந்தான் தாரயாமி
அம்-ஆகாஶாத்மநே புஷ்பாணி ஸமர்ப்பயாமி
யம்-வாய்வாத்மநே தூபம் ஆக்ராபயாமி
ரம்-வஹ்யாத்மநே தீபம் தர்சயாமி
வம்-அமிருதாத்மநே அமிருதம் நிவேதயாமி
ஸம்-ஸர்வாத்மநே ஸர்வோபசாரான் ஸமர்ப்பயாமி.

பூர்வதோ மாம் ஹரி: பாது பஶ்சாத் சக்ரீ ச தக்ஷிணே ।
க்ருஷ்ண உத்தரத: பாது—ஸ்ரீஶோ விஷ்ணுஶ்ச ஸர்வத: ॥
ஊர்த்வம் ஆநந்தக்ருத் பாது—அதஸ்தாத் ஶார்ங்க பிருத் ஸதா ।
பாதௌ பாது ஸரோஜாங்க்ரி:—ஜங்கே பாது ஜநார்தந: ॥
ஜாநுநீமே ஜகந்நாத:—ஊரூபாது த்ரிவிக்ரம: ।
குஹ்யம் பாது ஹ்ருஷீகேச:—பிருஷ்டம் பாது மமாவ்யய: ॥
பாது நாபிம் மமாநந்த:—குக்ஷிம் ராக்ஷஸ மர்தந: ।
தாமோதரோ மேஹ்ருதயம்—வக்ஷ: பாது ந்ருகேஸரீ ॥
கரௌமே காளியாராதி:—புஜௌ பக்தார்தி பஞ்ஜந: ।
கண்டம் காளாம்புத ஶ்யாம:—ஸ்கந்தௌ மே கம்ஸ மர்தந: ॥
நாராயணோ வ்யாத் நாஸாம் மே—கர்ணௌ கேஶி ப்ரபஞ்ஜந: ।
கபோலேபாது வைகுண்ட:—ஜிஹ்வாம் பாது தயாநிதி: ॥
ஆஸ்யம் தசாஸ்ய ஹந்தாவ்யாத்—நேத்ரேமே ஹரி லோசந: ।
ப்ருவௌமே பாது பூமேஶ:—லலாடம் மே ஸதாச் யுத: ।
முகம் மே பாது கோவிந்த:—ஶிரோ கருட வாஹந: ॥
மாம் ஶேஷ ஶாயீ ஸர்வேப்ய:—வ்யாதிப்யோ பக்தவத்ஸல: ।
பிஶா சாக்நி ஜலேப்யோமாம்—ஆபத்ப்யோ பாது வாமந: ॥
ஸர்வேப்யோ துரிதேப்யஶ்ச—பாதுமாம் புருஷோத்தம: ॥

இதம் ஸ்ரீ விஷ்ணு கவசம் ஸர்வமங்கள தாயகம்.
ஸர்வரோக ப்ரஶமநம். ஸர்வ ஶத்ரு விநாஶநம்.

இப்படி மிக ஶ்லாக்யமானதும் தன்னை ரக்ஷிப்பதுமான இதை வேதராஶி ஜபித்தார். ஶூத்தனை இருந்து மூன்று வேளைகளிலும் இதை ஜபித்தால் எங்கும் ஜயம் உண்டாகும். விஷ்ணு கவசத்தை ஜபிப்பவரும் விஷ்ணுவுக்கு மிக ப்ரியமானவருமான வேதராஶியைப் பார்த்து ஸிம்மத்தைக் கண்ட மிருகம்போல் யமதூதர் பயந்து ஓடினர். சித்ரகுப்தனும் யமனும் மாத்ரம் ஓடவில்லை. வேதராஶியினது தேஜஸ்ஸால் எல்லோரும் கொளுத்தப்பட்டனர். விஷ்ணு பக்தனும் ஜிதேந்த்ரியனுமான பிராம்மணனைப் பார்த்து ஆஶ்சர்ய மடைந்து கொண்டாடினர்கள். நரகத்திலுள்ளோர் அனைவரும் அவரவர்கள் பாபமகல வேதராஶியைப் பின் தொடர்ந்தார்கள். யமன் க்ரூரமான ரூபத்தை விட்டு அழகான ரூபமுள்ளவனாகி ரதத்திலிருந்து இறங்கி வந்து வேதராஶியைக் கொண்டாடினர்.

வேதராஶியை நமஸ்கரித்து, "பிராம்மணோத்தம! உமது வரவு நல் வரவாகுக! இதோ அர்க்யம்! இதோ பாத்யம்! இதோ ஆசமனீயம்! என்று தக்கபடி உபசரித்து, உம்மைத் தர்ஶநம் செய்ததால் தன்யன் ஆனேன். க்ருத க்ருத்யன் ஆனேன். எனக்கு அநுக்ரஹம் செய்தீர்கள். மஹர்ஷே! என் ஜன்மம் பவித்ரமானது. தங்கள் திருவடி எனது நகரத்தில் பட்டதால் நகரமும் பவித்ரமானது. ஸதாசாரத்தாலும் உமது புண்ய ப்ரபாவத்தாலும் ஹரி பக்தியாலும் என்னை ஜயித்துவிட்டீர்கள்! அன்புடன் என்னைப் பாரும்."

அவரவர் செய்த பாப பலத்தை அநுபவிக்க நரகத்தில் பல வகையாகத் துன்பப்படுபவர்களை விடுவித்துவிட்டீர். புண்டரீகாக்ஷனிடம் பக்தி உள்ளவர் இந்தத் துன்பத்திற்கு ஆளாக மாட்டார்கள். திருடன், ஸுரா பானம் செய்தவன், மித்ர த்ரோஹி, பிரும்மஹத்தி செய்தவன் குரு பத்நீ கமநம் செய்தவன் நித்ய நைமித்திக கர்மாக்களை விட்டவன், மற்ற பாபங்களைச் செய்தவன் ஆகிய மகா பாபிகளுக்கும் மோஹத்தாலோ டம்பத்தாலோ பகவன் நாமாவைக் கூறுவதே சிறந்த பிராயஶ்சித்தமாகும். பாகவத ஶ்ரேஷ்டரே! பிறர் துன்பத்தை ஸஹிக்காத நீர் பக்தியுடன் பகவன் நாமாவைக் கூறி பாபிகள் எல்லோரையும் ரக்ஷித்தீர். கிருஷ்ண நாமா, திவ்ய ஔஷதம் என்பது மிக ரஹஸ்யமானது. இதை வெளிப்படுத்தினல் எனது அதிகாரம் போய்விடும். அதற்கு இடமில்லை. ஆதலால் இதை வெளிப்படுத்தாதீர் என்று பிராம்மணனிடம் கூறி பெருமூச்சுவிட்டுச் சிந்தையிலமர்ந்தார். தான் அதிகாரத்தை இழக்க நேர்ந்ததை நினைத்து வருந்திக் கூறினர்.



தெரிந்தோ தெரியாமலோ பாபத்தைச் செய்த அதமர்கள் பரவஶமாக இருந்து பகவன் நாமாவைக் கூறினல் கூட பாபமகன்று பகவானது திருவடியை அடைகிறார்கள். இனி முதல் கலியில் பகவன் நாமாவால் பாப மகலும் என்பதில் நம்பிக்கை இல்லாதவர்களாகட்டும். கையில் தீபத்தை வைத்துக்கொண்டே பள்ளத்தில் விழுபவர்போல் ஆகட்டும் பாபிகள். நாம மாஹாத்ம்யத்தை அறியாதவர்களாகி எனது லோகத்திற்கு வரட்டும். இன்று முதல் நாமாவில் நம்பிக்கையே இல்லாமல் போகட்டும். ஆயிரத்தில் ஒருவர் கலியிலும் பாப பயத்தால் பகவன் நாமாவில் பூர்ண நம்பிக்கை கொண்டு நற்கதி அடையட்டும்.

க்ருஷ்ண! விஷ்ணோ! பகவன்! முராரே! என்று பகவன் நாமாவைக் கீர்த்தனம் செய்பவர்களே ஸாதுக்கள். அவர்கள் என்னையும் எனது கிங்கரர்களையும் பார்க்க மாட்டார்கள். பகவன் நாமாவைக் கூறுபவரைக் கண்டால் எனக்கு அச்சம். தங்களைப் போன்ற ஸாதுக்களுக்கு சாந்த ரூபியாகவும் பாபிகளுக்கு பயங்கரமான ரூபியாகவும் இருப்பேன். கோடி ஸூர்ய ப்ரகாஶமான இந்த விமாநத்தில் ஏறி இஷ்டமான லோகத்திற்குச் செல்லும். விஷ்ணுவின் தேஜஸால் எங்கும் உமக்குத் தடை இல்லை. துலாமாதத்தில் காவேரீ ஸ்நாநம் செய்யாதவரும் இஷ்டத்தைத் தருகின்ற அதன் மஹிமையைக் கேளாதவரும் என் லோகத்திற்கு வரட்டும். கோரமான எனது ரூபத்தைக் காணட்டும். விஷ்ணு பக்தரான விப்ரோத்தமரே! உமது இஷ்டமான லோகத்திற்குச் செல்லும் என்று கூறி விஷ்ணுவினிடம் பயமுள்ள யமதர்மன் வேதராசியைப் பூஜித்தார்.

தேவர்கள் துதிக்க திவ்ய விமாநத்தில் அமர்ந்து வேதராஶி வைகுண்டம் கிளம்பினர். யமதர்மன் தனது ஸேனைகளை ஸமாதாநப்படுத்தி வேதராஶியின் மஹிமையைக் கூறினர். ஹரி நாம கீர்த்தன மஹிமை துலாமாஹாத்ம்யம் காவேரீ மஹிமை இவைகளைக் கூறி தன் இருப்பிடம் சென்றார். ஆதலால் துலாமாஸம் வந்தபோது

காவேரியில் ஸ்நாநம் செய்யவேண்டும். தாநம் செய். துலா காவேரி மஹிமையைக் கேள். துலா மாதம் மிகச் சிறந்ததானதால் பணம் செலவாகிறதே என்ற எண்ணத்தை விட்டு சக்திக்கேற்றபடி பிராம்மணோத்தமர்களுக்குத் தாநம் செய்யவேண்டும். அந்த புண்யத்தால் ஸகல விதமான இஷ்டமும் பூர்த்தியாகும். நீ கேட்டதை எல்லாம் கூறினேன். வேதராசியின் பெருமையை விளக்கும் இந்த கதை ஸகல பாபங்களையும் அகற்ற வல்லது. புத்ரன் ஆயுஸ் ஆரோக்யம் முதலியவைகளை அளிக்கும். இதைப் படித்தாலும் பிறருக்குக் கூறினாலும் ஸகல பாபங்களும் அகலும். ஸர்வ ஸம்பத்தும் உண்டாகும்.

**ஆருமத்யாயம் முற்றிற்று.**

## ஏழாம் அத்தியாயம்—98-சுலோகங்கள்.

***ஹரிஸ்சந்த்ரன்:*** ஸர்வ தர்மங்களையும் அறிந்தவரே! துலா மாஸத்தில் காவேரீ நீரில் ஸ்நாநம் செய்துயார், தநம் புத்ரன் ஆரோக்யம் சத்ரு ஜயம் முதலிய பலன்களைப் பெற்றவர்? எப்படி ஸ்நாநம் செய்யவேண்டும்? எப்பொழுது செய்யவேண்டும்? புண்டரீகாக்ஷனை பகவானை எந்த புஷ்பங்களால் எப்பொழுது எப்படிப் பூஜிக்க வேண்டும்? மஹர்ஷே! இவைகளை விஸ்தாரமாகக் கூறும்.

***அகஸ்த்யர்:*** ராஜன்! நன்ருகக் கேட்டாய்! காவேரி மஹிமையைக் கூறுகிறேன் கேள். பூர்வ ஜன்மத்தில் புண்யம் செய்தவர்களுக்கே இதைக் கேட்கவேண்டுமென எண்ண முண்டாகும். முன் ஒரு சமயம் அர்ஜுனன் த்ரௌபதியை மணந்து வாழும்போது அவன் ஒரு காரணத்தால் ஸஹோதரர்களை விட்டுத் தனியே தீர்த்த யாத்ரை செய்ய நேர்ந்தது. தர்மரிடம் விடைபெற்று ஒவ்வொரு தீர்த்தமாகச் சென்று காவேரீ தீரத்திலும் சில நாள் தங்கினன். வைசாக மாதத்தில் மஹர்ஷிகள் காவேரீ ஸ்நாநம்செய்து அதன் மஹிமையைக் கேட்டதைக் கண்டான். தானும் அவர்களுடன் பக்தி ஶ்ரத்தையுடன் ஸ்நாநம் செய்து திவ்ய கதா ஶ்ரவணம் செய்தான். புராணம் கூறுபவருக்கு மாலை வஸ்த்ரம் கோ, தநம் முதலியவைகளைத் தந்து தக்கபடி பூஜித்தான். ஆங்கு அருகிலுள்ள ரங்கநாதனைப் பூஜித்து த்வாரவதீ சென்ருன். ஸுபத்ரையை மணக்க மநம் கொண்டான். தன்னை



மணக்க விருப்பமுள்ளவளும் ஸ்ரீ கிருஷ்ணனது ஸஹோதரியுமான ஸுபத்ரையை மணந்தான். துர்யோதநன் முதலிய ஶத்ருக்களைக் காவேரீ ஸ்நாந புண்யத்தால் ஜயித்து ஸஹோதரர்களுடன் ராஜ்ய ஸுகத்தை அநுபவித்தான்.

***ஹரிஸ்சந்த்ரன்:*** பிரும்மன்! அரசனை அர்ஜுனன் ஸ்வதர்மமான ராஜ்யபாலநத்தைவிட்டு எதற்காகத் தீர்த்த யாத்ரைக்குச் சென்ருர்? எப்படி பகவானது ஸஹோதரியான ஸுபத்ரையை மணந்தார்? எப்படி சத்ருக்களை ஜயித்தார்? ஶிஷ்யனை எனக்கு இவைகளைச் சிறிது விஸ்தாரமாக விளக்கிக் கூறுங்கள்.

***அகஸ்த்யர்:*** பாண்டவர் ஐவரும் தாயின் சொற்படி வியாஸர் ஆமோதிக்க பாஞ்சால ராஜன் பெண்ணை பாஞ்சாலியை மணந்தனர். அழகிற் சிறந்த அவளிடம் ஐவர்க்கும் மோஹம் உண்டானது. ஐவரும் ஶ்ருங்கார பரர்களாகி அவளுடன் ரமித்தார்கள். இவர்களது மநம் காம பரவசமாக இருப்பதைக் கண்டு நாரதரிஷி அவர்கள் இருப்பிடம் வந்தார். திரௌபதியுடன் கூட அவர்களை ஏகாந்தமாக அழைத்து தர்ம ரஹஸ்யத்தைக் கூறினர். உலகில் புருஷர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டு இறக்க ஸ்த்ரீயே காரணம். அன்யோன்யமாக இருப்பவரும்கூட கலஹம் செய்து சண்டையிட ஸ்த்ரீதான் காரணம். ஸ்த்ரீகள் கோபமுள்ளவர்களாக இருந்தாலும் சிரித்த முகத்துடனிருப்பர். ஆழமான அவர்களது மநதைக் கண்டறிய முடியாது. சுசி ஆசாரம் ஸாதுக்களுடன் சேருவது முதலியன பெண்களிடம் கிடையாது. யமனுக்குக் கூட அஞ்சார். தன் வயிற்றை நிரப்புவதில் கண்ணும் கருத்துமாயிருப்பர். அன்ன மளிக்கும் பதியிடம் ஒரு க்ஷணம் த்ருடமாக அன்பு காட்டுவர். கணவன் ரோகியானல் ஏழையாகவும் இருந்தால் அவனைச் சபிப்பார்கள். தன் கார்யமே பெரிது. அபவாதத்திற்கோ யமனுக்கோ நரகத்திற்கோ பயப்படமாட்டார்.

தனது தந்தை குலம் இவ்வளவு சிறந்த தென்பதையோ பதியின் குலம் உயர்ந்த தென்றே கவனிக்க மாட்டார். வெட்கப்படார். ஸ்தோத்ரமான சொற்களைக் கூறுர். உண்பதிலேயே ஊக்கமுள்ளவர். புருஷரைவிட எட்டு மடங்கு காமமுள்ளவர். இரவும் பகலும் ஸதா ரமித்துக் கொண்டே யிருக்க அவாகொண்டவர். தன் பதியிடம் அதிகமாக ஶ்ருங்கார ஆசையைக் காட்டார்.

தன்னைக் காமுகி என எண்ணுவரோ என்ற அச்சமே அதற்குக் காரணம். மற்றவரிடம் தான் வலுவில் சென்றாலும் பதியிடம் தானே விருப்பத்தைக் காட்டார். கலியுகத்தில் சில துஷ்ட ஸ்த்ரீகளின் ஸ்வபாவமிது. பிரஸவமான ஸ்த்ரீகளுக்கு பதியிடம் இரண்டு மடங்கு க்ரூர குணம் தோன்றும். யுவதியாயும் விதவையாயும் புத்ரர்களைப் பெற்றவளாயு முள்ளவர்பற்றிக் கூறவேண்டுமா? மலடும் யுவதியும் விதவையுமான ஸ்த்ரீகள் எந்த ஊரில் வஸிக்கிறார்களோ அங்கு சண்டை, நோய், ம்ருத்யு இவை குடிகொண்டிருக்கும்.

உத்தமமான ஸ்த்ரீகள் உலகில் சுசியுடன் பாபமற்றவர்களாய் புண்ய ஸங்கல்பமுள்ளவர்களாய் பதி, குரு, பதிபந்து ஆகியவர்க்குப் பணிவிடை செய்பவர்களுமாக சிலர் உண்டு. அவர்கள் பெற்றோர் குலத்திற்கும், பதி குலத்திற்கும் பூஷணமாவர். ஸத் புத்ரரைப் பெற்று முடிவில் ஸ்வர்க்கம் செல்வார்கள். ரோகியும், ஏழையும், கோபமுள்ளவனும் தனக்கு அன்னபானமளிக்காதவனும் வெறுக்கத்தக்க துஷ்ட சொற்களைக் கூறுபவனும், பித்தனும், ஜடனும், மூர்க்கனுமாக இருந்தாலும் அத்தகைய பதியைக்கூட பகவான் என்றே எண்ணுவர் பதிவிரதைகள்.

பத்ரே! குழந்தாய்! நான் எதற்காக இங்கு வந்தேன் என்பதைக் கூறுகிறேன் கேள்: ஸுந்தன் உபஸுந்தன் என்ற அரக்கர்கள் அன்யோன்யம் அன்புகொண்ட ஸஹோதரர்கள் மிக்க பலிஷ்டர்கள். ஸாதுக்களைப் பீடிப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள். ஒருநாள் இருவர்களுக்கும் முன்னே அதி ஸுந்தரியான ஒரு பெண் தோன்றினாள். தாமரை இதழ்போன்ற கண் சந்த்ர பிம்பம் போன்ற முகம் கோவைப் பழம் போன்ற உதடு குயில்போன்ற குரல் ஹம்ஸம்போன்ற நடை உடையாள். அவள் திலோத்தமை என்ற அப்ஸரஸ். அவளைக் கண்டவுடன் மூத்தவனான ஸுந்தன் காமவசமானான். அதனால் ஸோதரனிட மிருந்த அன்பு அகன்றது. காமுகனாகித் தம்பியை நோக்கி, "உனது அண்ணன் மனைவி அவள். அவளுக்கு நீ பணிவிடை செய்" என்றான். உபஸுந்தன் என்ற இளையவனும் அவளைக்கண்டு காமவசனானான்.

"அண்ணா! உமது மருமகளவள். உமக்குப் பணிவிடை செய்ய வந்தாள். இவளை மனைவியாகக் கருதினால்



நீர் பதிதனவீர்" என்றான். இதைக்கேட்டு ஸுந்தனுக்குக் கோபம் உண்டானது. வஜ்ரம் போன்ற கதையால் ஸஹோதரன் தலையில் ஓங்கி அடித்தான். உபஸுந்தனும் கோபங்கொண்டு கதையால் அண்ணனை அடித்தான். இருவர்க்கும் பயங்கரமான கதா யுத்தம் நடந்தது. இருவரும் இறந்தனர். பலிஷ்டரான இவர்கள் எல்லோரையும் ஹிம்ஸித்தனர். மற்றவர்களால் இவர்களுக்கு மரணமில்லை. ஆதலால் தேவர், ஸ்த்ரீ மூலம் இவர்களைக் கொன்றனர். தேவ கார்யம் பூர்த்தியாயிற்று. வந்த கார்யமானவுடன் மந்தஹாஸத்துடன் திலோத்தமை ஸ்வர்க்கம் சென்றாள். இப்படிப் புருஷர்களது மரணத்திற்காகப் பெண் படைக்கப் பட்டாள்.

ஆதலால் திரௌபதீ! நீ பக்தியுடன் ஜாக்ரதையாக இருந்து ப்ராதாக்களுக்குள் சண்டை உண்டாகதபடி பணிவிடை செய். பாண்டவர்களே! நீங்களும் இவளிடத்தில் பேரன்பு பூண்டிருக்கிறீர்கள். ஒருவரிடம் ஒருவர் அன்புள்ளவர்கள். உங்களது ஸ்நேஹம் வளரும்படி மனைவியிடம் ரமித்து வாருங்கள். கிருஹஸ்த தர்மத்திலீடுபட்டு பொறுமை யுள்ளவர்களாய் தன்னடக்கமும், கிருஷ்ண பக்தியு முள்ளவர்களாய் க்ஷத்ரிய தர்மத்தை ரக்ஷித்து வாருங்கள். இத்துடன் பிரும்மஹத்தி முதலிய பாபங்களை அகற்றவல்ல துலா காவேரீ ஸ்நானமும் செய்யுங்கள். துலா ஸ்நானம் செய்பவர்க்கு வேறு தவம் வேண்டாம். சாஸ்த்ரம் வேண்டாம். இஷ்டா பூர்த்தம் வேண்டாம். ஶ்ரத்தையுடன் துலா ஸ்நானம் செய்தவர் தனது தாய் தந்தை இரு வம்சங்களிலுள்ள பித்ருக்களை இருபத்தோரு தலைமுறை கரை ஏற்றி தானும் கரை ஏறுகிறான். கண், காது, உடல் த்ருடமாக இருக்கும்பொழுதே மாகமாஸம் வைஶாகம் துலாமாஸம் கார்த்திகைமாஸம் ஆகிய நான்கு மாதங்களிலும் காவேரியில் ஸ்நானம் செய்து ஸகல பாபங்களிலிருந்தும் விடுபடவேண்டும்.

**அகஸ்த்யர்:** இங்ஙனம் நாரதர் கூறிய தர்மஸாரத்தைக் கேட்டு தர்மர் பரம ஸந்தோஷமடைந்து நாரதரை அர்க்ய பாத்யம் முதலியவைகளால் நன்கு பூஜித்தார். ஆநந்தக்கண்ணீர்பெருக, புளகாங்கிதராகி அஞ்ஜலிபந்தம் செய்து, "தேவர்ஷே! காவேரீ ஸ்நாந மஹிமையைக் கூறும். கூறிய நான்கு மாதங்களுக்குள் எந்த மாஸம் உயர்ந்தது காவேரீ ஸ்நாநத்திற்கு? அதன் பலனென்ன?

எப்படி ஸ்நாநம் செய்யவேண்டும்? எந்த தேவனைப் பூஜிக்கவேண்டும்? இவைகளுடன் கிருஹஸ்த தர்மத்தைப் பூர்ணமாகக் கூறுங்கள்,'' என்று நாரதரை வேண்டினர். நாரதர் கூறினர்.

''ராஜன்! நன்ருகக் கேட்டாய்! தர்ம! தர்மஸாரத்தைக் கேட்டாய்! காவேரியின் பெருமையைக் கூறுகிறேன். ஏகாக்ர மநத்துடனிருந்து கேள். காவேரியில் முழுகினுல் போதும். ஏழுஜன்மங்களில் செய்த பாபம் அகலும். காவேரீ மஹிமையை உணர்ந்து விதிப்படி மநஶ்ஶுத்தியுடன் ஸ்நாநம் செய்தால் கோடி குலத்தவரைக் கரைஏற்றும். துலாமாஸத்தில் காவேரீ ஸ்நாநம் செய்வது புக்தி முக்தி இரண்டிற்கும் ஸாதநமாம்.

மூவுலகிலும் காவேரீ மஹிமையைப் பூர்ணமாகச் சொல்லக் கூடியவர் யார் இருக்கிருர்? ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனே கூறலாம். கேட்கலாம். துலா மாஸத்தில் ஸ்ரீ ரங்கநாதனுடைய ஸன்னதியில் ஒருமுறை காவேரீ ஸ்நாநம் செய்து மல்லிகை யாலோ அல்லது அக்காலத்தில் கிடைக்கும் தாமரைகளாலோ விஷ்ணுவைப் பூஜித்து பாயஸான்னம் நிவேதநம் செய்யவேண்டும்.

ஶ்ரவண த்வாதசியில் பகவானுக்கு பாயஸ நிவேதநம் செய்து பக்தியுடன் பிராம்மண போஜநம் செய்வித்தால் ஸார்வ பௌமனுக ஆவான். பன்னிரண்டாண்டுகள் குருக்ஷேத்ரத்தில் பிராமண போஜநம் செய்வித்தால் எவ்வளவு புண்யமோ அவ்வளவு புண்யமும், த்வாதசியில் துலா காவேரியில் அன்னதாநம் செய்வதால் உண்டாகும். அப்படி ஸ்வாமி நிவேதநம் செய்து பிராம்மண போஜநம் செய்வித்த மிகுதி பாயஸத்தை ஸ்த்ரீகள் சாப்பிட்டால் புத்ர பாக்யம் உண்டாகும். தீர்க்க ஸுமங்கலியாகவும் இருப்பர். விதவையாக மாட்டாள். முடிவில் வைகுண்டம் செல்வாள். அமாவாஸ்யை, ஸங்கரமணம் கன்யாமாஸம், ஸூர்யக்ரஹணம் முதலிய புண்ய காலங்களில் ஶ்ராத்தம் (தர்ப்பணமாவது) செய்யாதவன் உடனே சண்டாளனுவான்.

விதிப்படி அன்ன ஶ்ராத்தம் செய்யப் பொருளோ, பிராம்மணரோ கிடைக்காவிட்டாலும், வெளியூர் சென்றிருந்தாலும் ஆபத் காலத்திலும் பிராம்மணன் ஆம ஶ்ராத்தம் செய்யலாம். நான்காம் வர்ணத்தார் எப்போதும் ஆம ஶ்ராத்தமே செய்யவேண்டும். (ஆம ஶ்ராத்த



மென்பது இலையில் அரிசி, கறிகாய் முதலியவைகளை வைத்து பிராம்மணரை உட்காரவைத்துப் பித்ருக்களை வரித்து தக்ஷிணை தாம்பூலம் தருவதாம்.) அதில் அரை பாரம் அரிசி அல்லது கால் பாரமாவது அரிசி தரவேண்டும். இரண்டு பணமல்லது ஒரு பணமாவது தக்ஷிணை தரவேண்டும். பாண்டவ! அமாவாஸ்யை ஸங்க்ரமணம் மஹாளயம் ஆகிய காலங்களில் ஏழையாக இருந்தாலும் நோயாளியாக இருந்தாலும் ஸ்வர்க்கம் வேண்டுமென்றல் ஶ்ராத்தம் செய்யத்தான் வேண்டும். இவைகளைச்செய்ய அடியோடு ஶக்தி இல்லாவிடில் துலாமாஸத்தில் காவேரிக் கரையில் த்வாதசியில் பன்னிரண்டு பிராம்மணர்களுக்கு அன்னமளிக்க வேண்டும். பாயஸத்துடன் அச்சமயம் அன்னமளித்தால் ஸர்வ ஶ்ராத்தங்களையும் காலத்தில் ஒழுங்காகச் செய்த பலன் உண்டாகும். அதையும் செய்ய முடியாமல் பரம தரித்ரனுக இருந்தால் ஆறு பேருக்காவது அன்னதாநம் செய்யவேண்டும்.

வைகாசி மாஸத்தில் தத்யன்ன தாநம், மாசிமாஸம் வஸ்த்ர தாநம், கார்த்திகையில் குடைதாநம், பகவானுக்கு தீபாராதநம், மார்கழி மாஸம் உஷ: காலத்தில் பொங்கல் நிவேதநம், சித்திரையில் பாநகதாநம் இவைகளைச் செய்தால் பித்ருக்களுக்கு நாம் செய்யவேண்டியதைச் செய்து கடனற்றவராவோம். லோபத்தினுல் இதைக்கூடச் செய்யாதிருந்தால் நாஸ்திகனுகவும் பத்து பிறவியில் குஷ்டரோகியாகவும் கங்கை யமுனை ஸேது புஷ்கரம் கங்காஸாகர ஸங்கமம் ஹிரண்வதீ த்வாரகா அயோத்யா, மதுரா, பத்ரீ, நைமிஶம், கௌதமி கோகர்ணம், குருக்ஷேத்ரம் முதலிய புண்ய யாத்ரைகள் கிட்டாது. துலாமாஸத்தில் ஒரு முறை காவேரீ ஸ்நாநம் செய்தால் முற்கூறிய புண்ய யாத்ரைக்குச் செல்லாமலே அந்த பலன் உண்டாகும். ஒருவித கஷ்டமுமில்லாமல் முக்திபெற ஸாதகமானது துலாஸ்நாநம் ஒன்றே.

துலாஸ்நாநம் செய்து ரங்கநாதனையும் ஸேவித்தால் அந்த புண்ய பலத்தைக்கூற ஸாக்ஷாத் நாராயணனே ஶக்தி உள்ளவனுவான். ''ஹே பாபிகளே! நீங்கள் எப்படி பாபம் அகலும் எனப் பயப்படவேண்டாம்! நரகத்தில் விழுவோமோ என்ற சிந்தையும் வேண்டாம்! எனது தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்யுங்கள். உங்களைக் கரை

ஏற்றுகிறேன்'' என்று அலே எனும் கையைத் தூக்கி காவேரி உத்கோஷம் செய்கிருள்.

அரசே! அதிகம் கூறுவதேன்? சுருக்கமாகக் கூறு கிறேன் கேள். காவேரி நீரிலுள்ள ஆறறிவில்லாத ஜந் துக்களும் கூட ஸ்வர்க்கம் செல்கின்றன. ஶ்ரத்தையுடன் ஸ்நாநம் செய்பவர் போகத்தையும் மோக்ஷத்தையும் உடனே அடைவர். முன்னர் காவேரீ ஜலத்தின் ஒரு திவலே பட்டவுடன், ஒரு பன்றி தனது பாபமகல அந்த க்ஷணத்திலேயே ஸ்வர்க்கம் சென்றது.

**தர்ம ராஜன் :—**''வித்வானே! அந்த பன்றி எத்தகை யது? அது எங்குளது? காவேரீ ஜலத்திவலே அதன் மீது எப்படிப்பட்டது? அது எப்படி ஸ்வர்க்கம் சென் றது?'' இதை விவரித்துக்கூறும்.

**நாரதர் :—** தர்ம! எப்படி முக்ய அதிகாரியானவன் விதிப்படி ஸ்நாநம்செய்து பலனையடைகிருனே அப்படியே நாஸ்திகனுக இருந்தாலும் உதாஸீனனுக இருந்தாலும் காவேரியில் மூழ்கினுல்போதும். அவனது பாபமகலும். நற்கதியுமடைவான். இதில் உனக்குச் சிறிதும் ஸந்தே ஹம் வேண்டாம். ஸ்நாநம் செய்தால் போதும். க்ஷேமம் உண்டாகும்.

முன் ஒரு ஸமயம் பால்ஹிக தேசத்தில் பகுதான்ய மென்ற அக்ரஹாரத்தில் பிரும்ம சர்மா என்ருேர் வேதி யர் இருந்தார். ஆங்குள்ள அனைவரும் பிரும்ம சர்மா போல் வேத ஶாஸ்த்ர நிபுணர். பலர் பஞ்சமஹா யக்ஞம் தவருதவர். சர்மா வேதசாஸ்த்ர நிபுணர் என பிரஸித்த மானவர். மிக்க படித்தவர். ஆஶ்வலாயந ஸூத்ரத்தைச் சார்ந்தவர். ஶ்ரௌத, ஸ்மார்த்த கர்மாக்களில் மிக ஸமர்த்தர். ஸர்வ ஶாஸ்த்ரங்களேயும் நன்ருக உணர்ந்த வர். ஸர்வ கர்மாவிலும் ஸமர்த்தர். உழுது பயிரிட்டும் பொருள் சேர்த்தார். அதனுல் ஆறு ஆயிரம் ஸுவர்ணம் அவர் கையில் எப்போதும் இருக்கும். தயிர், மோர், வஸ்த்ரம் முதலிய விற்கத்தகாத பொருள்களேயும் விற்று பொருள் சேர்த்தார். தன் வீட்டிலேயே ஒருநாளும் உண் ணர். பிறர் வீட்டிலேயே நித்யம் புஜிப்பார். ஜோதிஷ ஶாஸ்த்ர மறிந்தவர். அந்த ஊரிலுள்ள அனைவருக்கும் இவரே புரோஹிதர் ஆவர்.

அவர் ஒரு நாளும் ப்ராதஸ்நாநம் செய்வதில்லே. ஔபாஸநமோ, அக்நி ஹோத்ரமோ செய்வதில்லே.



ஸமித்து தர்ப்பம் கூர்ச்சம் முதலியவைகளே எடுத்துக் கொண்டு வீடு வீடாகச் செல்வார். ஊரைவிட்டு வெளி யூரும் சென்று ஶ்ராத்தம் செய்து வைப்பார். உண்பார். லோபத்தினுல் குடையோ செருப்போ தரிக்கமாட்டார். படித்தவரென எல்லோரும் இவரையே ஶ்ராத்தத்திற்கு அழைப்பார்கள். கூப்பிடாத வீட்டிற்கும் ''நம் வீட்டிற் குக் கூப்பிட்டால்தான் வரவேண்டுமா'' என்று நுழைந்து வலுவிலே உணவளிக்கச் சொல்லி உண்பார். இங்ஙனம் தானே கேட்டு உண்பவர் பன்றியாகப்பிறப்பார். அந்த விடத்தில் பித்ருக்கள் வயிருர உண்ணமாட்டார்கள். இவரது பித்ருக்களும் இவர் செய்யும் ஶ்ராத்தத்தில் நன்கு சாப்பிடமாட்டார்கள் என்று தெரிந்திருந்தும் தானே அழைக்காமல் போவதை விடுவதில்லே. அதற்கு ஏற்ற பிராயஶ்சித்தமும் செய்து கொள்வதில்லே. எங்கே ஶ்ராத்தம்? எங்கே ஹோமம்? எங்கே தாநம் கிடைக் கும் என ஸதா அலேந்துகொண்டே இருப்பார். வீட்டில் தங்குவதே இல்லே.

வீட்டில் குழந்தைகள் நல்ல உணவு உட்கொண்டால் செலவாகிறதே எனக் கோபிப்பார். இப்படித் தின்ருல் எந்த வீடு உருப்படும் எனக் கத்துவார். ஏதேனும் தட்டு கெட்டு ஒருவேளே அவர் தன் வீட்டில் புஜித்தால் மற்றவர் களுக்குப் பாடங்கற்பிக்கக் கறிகாய், நெய் இல்லாமல் கேவல அன்னத்தையே புஜிப்பார். ஆனுல் வேளே தவரு மல் வெளியில் சென்று வயிற்றை நிறப்பிக்கொள்வார். ஸுஶீலா எனும் அவருடைய பத்நி மஹா பதிவிரதை. பதிக்கு ஸதா பணிவிடை செய்வாள். அவர் வெளியூர் சென்ருல் அவர் வரும் வரை ஸ்வல்ப ஆஹாரம் செய் வாள். அவர் அநாவஶ்யமாகக் கோபித்துக் கொண்டா லும் மிறட்டினுலும் கோபித்துக்கொள்ளமாட்டாள். நெய், மோர், பால் விற்பது பாபம் என்ருலும் அவர் அடிப்பரே என அஞ்சி அன்றன்றும் அவைகளே விற்றுப் பொருள் சேர்ப்பாள்.

மிக்க ஸாமர்த்யம் வாய்ந்த அவள் ஒரு நாள் அவர் ஆனந்தமாக இருக்கும் பொழுது மெதுவாக நாத! நர உடல் நீர்மேல் குமிழி போன்றதல்லவா? இன்றைக்கோ நாளேக்கோ யமன் நிச்சயமாக பிராணிகளின் உயிரைக் கொண்டு செல்வானல்லவா? தேஹம் த்ருடமாக இருக் கும் பொழுதே தர்மம் செய்யவேண்டாமா? இல்லேயேல்

நரகம் செல்வது ஸத்யம். செல்வம் பலவகையிலும் கஷ்டத்தையே தரும். அரசன், திருடன் முதலியவர் நாம் தேடிய தநத்திற்குப் பங்காளிகள். பரான்னத்தைப் புஜிப்பது அவர்களது பாபத்தை ஏற்று நரகம் செல்ல ஹேதுவாகும். பதிக்குப் பிரியமில்லாத நாரீ, பிக்ஷை எடுத்துண்ணாத பிரும்மசாரீ, பிராம்மணஊ ஸஹாய மாகக் கொள்ளாத ராஜா, அக்நி பூஜை செய்யாத அந்த ணன் ஆகிய அனைவரும் அழிவர். ஆதலால் தாங்கள் இனி முதல் ஔபாஸநம் செய்து நம் வீட்டிலேயே புஜி யுங்கள். குழந்தைகளைத் தாங்கள் கவனிக்காததால் அநாதைகள் போலிருக்கின்றனவே. நானும் பதி இல் லாதவள் போல் ஜீவித்திருக்கும் ஶவம் போலல்லவோ இருக்கிறேன். நான்கு ஆஶ்ரமங்களிலும் கிருஹஸ்தாச்ர மமே மிகச் சிறந்தது அல்லவா?

மனைவி அநுகூலையாக இருந்தால் வீட்டில் லக்ஷ்மி வஸிப்பாள். பிரதி கூலையாயிருந்தால் லக்ஷ்மி தங்கமாட் டாள். இந்தக் குழந்தைகள் வேத ஶாஸ்தரமின்றி பாமரர் களாக இருக்கின்றனர். அநாசாரர்களாகவும் நன்றி கெட்டவர்களாகவும் ஆகாதபடி இவர்களை ரக்ஷியுங்கள். இந்த வீடு, மனைவி, மக்கள், செல்வமெல்லாம் தங்களுடன் கூட வருமா? நீங்கள் செய்த தர்மம் ஒன்று தான் நண் பனைப்போல் கைவிடாமல் உங்களுடன் வரும். ஆதலால் தர்மத்தை நன்கு செய்யுங்கள். வெளியூர் செல்பவருக்கு வழியில் பசியாற அவர் கொண்டுபோகும் பத்தான்னம் உதவுவதுபோல் பரலோகம் செல்பவருக்கு தர்மமே உணவு, வஸ்த்ரம் முதலிய ஸாதநங்களாகும்.

நாமிங்கு பிராம்மணர்களுக்கு அளிக்கும் அன்னமே யமலோகத்தில் நமக்குப் பசியாற்றும் உணவாகும். துலாமாஸத்தில் காவேரீ ஸ்நாநம் செய்யுங்கள். பதி னுன்கு உலகங்களிலுமுள்ள அறுபத்தாறு கோடி புண்ய தீர்த்தங்கள் கேசவனது ஆணையால் துலா மாஸத்தில் காவேரியை வந்தடைகின்றன. நாத! ஆதலால் துலா மாஸத்தில் காவேரி ஸ்நாநம் செய்யுங்கள். காவேரி ஸகல லோகங்களையும் அளிக்கவல்ல மஹிமை உள்ளவள். இந்த பாரத வர்ஷத்தில் விசேஷமாக கர்ம பூமி எனப் போற்றப்படும் தேசத்திலே ஸர்வ காமங்களையும் வர்ஷிக் கின்ற துலா காவேரி ஸ்நாநம்செய்வது சிறந்த தர்மம்.

**ஏழாமத்யாயம் முற்றிற்று.**



## எட்டாம் அத்தியாயம்—89-சுலோகங்கள்.

ஸுசீலா :- காவேரீ தீரத்திலுண்டாகி காவேரி ஜலத் தால் நினைக்கப்பட்டு காவேரீ காற்று பட்டதினுலேயே பகவானுடைய பதத்தை அடைவர். அத்தகைய காவேரீ மஹிமையை முவ்வுலகிலும் கூறவல்லவர் யார்? ஆத லால் ஸர்வஸித்தியையும் நாடி காவேரீ ஸ்நாநம் செய் யும். பகவான் ஸந்தோஷிக்கக் கூடிய தர்ம ஸாரத்தைக் கூறுகிறேன். குடும்பியான ஏழைக்குத் தநமளியும், க்ருஹதாநம் செய்யும், அன்னமளியும், தேஹி என்று ஸத்பாத்ரமான ஒருவர் வந்து யாசித்தால் உமது உடலைக் கூடக் கொடுக்கலாம். முற் பிறவியில் செய்த புண்யத் தால் தான் தாந தர்மம் செய்வதைத் தடுக்காத உத்தம பத்நீ கிடைப்பாள். பசிக்கு அன்னமளி என்று கேட்ப வருக்கு இல்லை! இல்லை! என்ருல் உனக்குத் துன்பம் இருக்கிறது! இருக்கிறது! எனத் தேவர் கூறுவர். நாம் இருவரும் முற்பிறவியில் செய்த புண்யத்தால் தம்பதி களாகச் சேர்ந்தோம். எனது பூர்வ புண்யத்தால் தர்ம சிந்தை இருக்கிறது. ஆதலால் தர்மம் செய்யுங்கள்.

உலகில் யாருக்கு யார் பந்து? யாருக்கு யார் இன்ப மளிப்பவன்? யாருக்கு யார் போஷகன்? பிராம்மணேத் தம! மரண காலத்தில் யாருக்கு யார் மித்ரனுவான்? தர்மமே எப்போதும் இங்கும்அங்கும் நம்மை ரக்ஷிக்கும். நீங்கள் செய்த பாப பலனை நாங்கள் அநுபவிக்க மாட் டோம். நீர்தான் அநுபவிக்கவேண்டும். ஸத் பிராம்மண னுக்கு தாநம் செய்யாவிடில் ஏழையாவீர். பகவதநுக்ர ஹத்தால் கண் காது கைகால் உடல் நன்ருகஇருக்கும் பொழுது தர்மத்தைச் செய்யும். இங்ஙனம் நல்ல ஸமயத் தில் பக்வமாக மனைவி கூறியதைக்கேட்டார் பிரும்ம சர்மா. புன்னகையுடன், தனக்கு ஹிதத்தைக் கூறும் ஸதியைப் பார்த்து கூறினர்: ஓ கல்யாணி! நீ சொல் வதையெல்லாம் நன்கறிவேன். தெய்வமல்லவோ பல முள்ளதாக இருக்கிறது! மோஹத்தினுல் இவ்வளவு காலத்தை வீணுக்கி விட்டேன். இனியாவது நரகம் செல் லாதபடி தர்மத்தைச் செய்கிறேன். நிர்ணயம் செய்து ஏதாவதொரு முக்ய தர்மத்தைச் சொல். அதனுல் நன்மை அடைகிறேன். நதி, ஸ்நாநம், ஔபாஸநம், பில்வத்தால் சிவார்ச்சநம், துலா ஸ்நாநம், பிராம்மண போஜநம் ஹரி கதா ஶ்ரவணம் ஒன்றும்செய்யாமல் ஜன்மாவை வீணுக்கி

னேன். உண்பது உறங்குவதைத் தவிர ஒன்றும் செய்திலேன் என வருந்தினர்.

**ஸுசீலா :-** நாத! பிராதஸ்நாநம் செய்து ஸந்த்யாவந்தனம், பஞ்சமஹா யக்ஞம் செய்யும். இஷ்டாபூர்த்தங்களைச்செய்யும் அச்வத்த பிரதிஷ்டை செய்து, அச்வத்த ஸேவையாவது செய்யும். அச்வத்த விருக்ஷத்தை ஒன்றல்லது இரண்டை ப்ரதிஷ்டை செய்து நன்கு வளர்த்து வாரும். அதை விருத்திசெய்தால் ஸந்ததி ஸம்பத் முதலியன விருத்தியாகும். ஏழுமுறை அச்வத்த பிரதக்ஷிணம் செய்தால், ஏழுகடல் கிரிவனத்துடன் கூடிய பூப்ரதக்ஷிண புண்யம் உண்டாகும். த்ரிமூர்த்தி ஸ்வரூபமான அச்வத்தத்தை நமஸ்கரித்தால் மும்மூர்த்திகளையும் ஸகல தேவர்களையும் நமஸ்கரித்த பலனுண்டாகும். தூப தீபம், ஸத்கந்தம், தாம்பூலம் புஷ்பமிவைகளால் பூஜை செய்து அச்வத்த நமஸ்காரம் செய்தால் தநம் விருத்தியாகும்.

பகலில் மாலையில் அபரான்னத்தில், சுக்ர அங்காரக வாரங்களில் அச்வத்தத்தை ஸேவிக்கக்கூடாது. பௌராணிகர் மூலமாக நான் கேட்ட ரஹஸ்யத்தைக் கூறுகிறேன் கேளும். சுத்தமான தினங்களில் ஸ்திரவாரமே சிறந்த நாளாம். அன்று பிராம்மணன் சுத்தனாக அச்வத்த விருக்ஷத்திற்கு பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து, புருஷ ஸூக்தம் பித்ரு ஸூக்தம் தத்விஷ்ணோ: என்ற மந்த்ரம் இவைகளை ஜபித்துக்கொண்டே வேறென்றும் பேசாமல் அதற்கு ஜலம் விடவேண்டும். அச்சமயம் பித்ருக்களை மநதால் ஸ்மரித்தால் கயாச்ராத்தம் செய்த பயன் உண்டாகும். பித்ருகடனும் நிவிருத்தியாகும். சனிக்கிழமை காலை அச்வத்தத்தை ஆலிங்கநம் செய்துகொண்டால் உடனே வ்யாதி, மரணம் முதலியவைகளில் இருந்து விடுபடுவான். பானுவாரத்தில் அபிஷேகம் செய்தால் நேத்ர ரோகம் அகலும். ஸோமவாரத்திலும் பௌம வாரத்திலும் அபிஷேகம் செய்தால் க்ரகங்களால் உண்டாகும் தீமை அகலும். "பூராத்த - அஸ்வத்தேவ, அச்வோ ரூபம்" என்ற ரிக்குகளாலும், ஆலிங்கனம் செய்து கொள்ளவேண்டும். குருவாரத்தில் அபிஷேகம் செய்தால் மங்களமான கன்யகை உண்டாவாள். ஆஸத்யேந என்ற ரிக்கால் உபஸ்தாநம் செய்தால் ஸர்வ இஷ்டமும் ஸித்தியாகும்.



இங்ஙனம் அச்வத்த ஸேவை செய்து கொண்டு ஸதாசாரத்துடன் சிவ பூஜை செய்யவேண்டும். ஸதா சிவ சிவ என ஜபித்தால் ஸகல காமனைகளும் பூர்த்தியாகும்.

**நாரதர் :-** இங்ஙனம் ஸதியால் போதிக்கப்பட்ட பிரும்மசர்மா வயதானவராயினும் அச்வத்த ப்ரதிஷ்டை செய்தார். அதைச்சுற்றி அழகிய மணிமயமான மேடை அமைத்தார். அதில்கோலம்போடச்சொல்லி விருக்ஷத்தை ஜலம்விட்டு வளர்த்தார். ப்ராத ஸ்நாநம் செய்து அச்வத்த ஸேவையிலீடுபட்டார். ஸுசீலா பக்தி ச்ரத்தையுடன் பதிஸேவை, தேவ பித்ரு கர்மாவில் பணிவிடை இவைகளில் மிக ஊக்கத்துடன் இருந்தாள். பதி கோபித்தால் தான் செய்தது தவறு என ஏற்று வருந்துவாள். மிரட்டினுல் அஞ்சுவாள். ஸந்தோஷமாக இருக்கும்போது அருகில் செல்வாள். பதி புஜித்தபின் உண்பாள். பின் படுத்து முன் எழுந்திருப்பாள். பதியை பகவானுகக் கருதி வணங்குவாள். காலையில் ஸூர்யனையும் ஆலயத்தில் பகவானையும் கதை நடக்கும்போது பிராம்மணர்களையும் நமஸ்கரித்து நான் ஸுமங்கலியாகவும் தன் பதி நோயற்ற வாழ்வுடனும் வாழவேண்டும் எனப் பிரார்த்திப்பாள். கௌண்டின்ய கோத்ரத்தில் பிறந்த ஸுசீலை, துலா கார்த்திகை மாதமாகிய மாஸங்களில் காவேரீஸ்நாநம் செய்வாள். பதிக்கு இஷ்டமானதைப் பாகம் செய்து புஜியுங்கள், என ஆதரவுடன் கூறுவாள். அவர் அழைத்தால் உடனே கை கார்யத்தை விட்டு விட்டு அருகே விரைந்து செல்வாள். அவர் எவ்வளவு அப்ரியமாக கடிந்தாலும் பதில் கூருள்.

வீட்டு வேலையை முடித்து இரவில் பதிக்குப் படுக்கை விரித்து அவர் விருப்பத்திற்காக நல்ல வாசனை புஷ்பங்களை அணிந்து செல்வாள். அவர் உறங்கும்வரை அவர் காலைப்பிடிப்பாள். தனது கால் அவர் மீது படுமோ என அச்சத்துடன் அவரருகே படுத்து காலையில் பதி எழுந்திருப்பதற்குள் தானே முன்னதாக எழுந்து விடுவாள். காலையில் எழுந்திருந்து வீட்டைச் சுத்தி செய்து அலங்காரம் செய்வாள். பதி நீண்ட ஆயுள் ஜீவித்திருக்க வேண்டுமென ப்ராதஸ்நானம் செய்வாள். பஹிஷ்டை ஆகும் காலத்தில் வீட்டின் கோடியில் ஓரிடத்திலிருந்து மூன்று நாட்களும் கூடியவரை மௌனமாக இருப்பாள்.

மிக்க பசி உள்ளவளாக இருந்தாலும் பதியை ஹிம்ஸிக்காமல் பெரும்பாலும் உபவாஸத்துடன் இருப்பாள். பஹிஷ்டைக்குக் கூறிய நியமப்படி நீண்ட அகண்ட (அகர் வேணவர பாத்ரேண) பாத்திரத்தின் மூலம் நீர் அருந்துவாள். நான்காவது நாள் ஸ்நானம்செய்து நல்ல வஸ்த்ரம் அணிந்து மஞ்சள் குங்குமத்துடன் வேறு எவரையும் கண்ணால் பாராமல் தன் பாதத்தையே பார்த்துக்கொண்டு வீடு வந்து சேருவாள். பர்த்தாவைச் சிவனென்று த்யானம் செய்து பிரதிதினம் அவரையும் குரு, விருத்தர், ஸாதுக்கள், பிராம்மணர்கள் அனைவரையும் நமஸ்கரிப்பாள். காலத்தில் வரும் ஸன்யாஸிகளுக்கும் மற்ற அதிதிகளுக்கும் அறுசுவை அன்னமிடுவாள். சுத்த மனதுடன் தேவருக்காகவும் வைச்வ தேவத்திற்காகவும் பாகம் செய்வாள். பதியினனுமதிபெற்று தரித்ரர்களுக்குத் தனஉதவி செய்துவந்தாள். ஒரு ஸமயம் பிக்ஷுக்களுக்கும் அதிதிகளுக்கும் அன்னமிட்டு பர்த்தாவுக்கு அன்னம் பரிமாறிக்கொண்டிருந்தாள். அச்சமயம் பிரும்மசர்மாவின் ஆயுள் முடிந்ததால் யமனால் தூண்டப்பட்ட கிங்கரர்கள் அவ்விடம் வந்தனர். ஸுசீலையின் கற்பின் மஹிமையால் தஹிக்கப்பட்டு அருகே அண்டமுடியாமல் யமனிடமே ஓடி முறையிட்டனர். ஸுசீலையின் தேஜஸ்ஸினால் அவ்வீட்டின் அருகே செல்ல முடியாமல் பிழைத்தால் போதுமென்று பயந்து பத்து திக்குகளிலும் பறந்து ஓடிவந்தோம் என்றனர்.

இதைக்கேட்ட தர்ம ராஜன், "சித்ரகுப்தனை நோக்கி, கண்ட இடங்களில் உண்பது முதலிய பாபங்களால் பிரும்ம சர்மாவின் ஆயுஸ் முடிந்து விட்டது, நீ வேகமாகச் சென்று அவனைக் கொண்டுவா" என்று உத்தரவிட்டார். சித்ரகுப்தனும் அங்ஙனமே அவ்வீட்டிற்கு வந்து கற்பரசியினிடம் பயந்து அவள் கண்ணில் படாமல் ஒளிந்து நின்றார். அச்சமயம் பிரும்ம சர்மா மனைவியை நோக்கி, "இன்று செய்த பாகம் மிகவும் ரஸமாக இருக்கின்றது. இதை அப்படியே இரவு போஜனத்திற்கும் வைத்துவை புஜிக்கிறேன்" என்றார். இதைக் கேட்டவுடன் சித்ரகுப்தன் கலுக்கென சிரித்தான். சிரிக்கும் த்வனியைக் கேட்ட ஸுசீலை யார் சிரித்ததென நாலு புறமும் சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். ஒருவரும் கண்ணில் படவில்லை.

# ஸ்ரீ துலா புராணம்.

சித்ரகுப்தன் சிரித்ததைக் கேட்டு ஸுசீலை ஆச்சரியமடைந்து "நான் தெய்வத்தைப் பூஜித்திருந்தால், என்னிடம் கற்பிருந்தால், நான் நல்ல எண்ணத்துடன் இருந்தால் சிரித்தவர் எதிரில் தோன்றட்டும். உலகத்தில் காணப்படுவதிலும் கேட்கப்படுவதிலும் உள்ளும் புறமும் எங்கும் வியாபகமாயிருப்பவர் நாராயணனே என்ற ஸ்மிருதி வாக்யம் ஸத்யமானால் சிரித்தவர் என் எதிரில் தோன்றட்டும்! பெண்களுக்குப் பதியே தெய்வம் என்ற பெரியோர் சொல் ஸத்யமானால் பெரியோருக்கு நான் ஆதித்யம் செய்தது பலன் உடையதானால், காவேரியில் துலாமாஸத்தில் நான் ஸ்நானம் செய்தது நற்பலன் உள்ளதானால், நான் ஸாதுக்களைப் பூஜித்திருந்தால், நாராயணனே பரப்பிரும்மம். நாராயணனே சிறந்த தத்வம். நாராயணனே சிறந்த ஜ்யோதிஸ். நாராயணனே ஆத்மா என்ற வேத வாக்யம் ஸத்யமானால் சிரித்தவர் என் முன் தோன்றட்டும்" என்று கூறினாள்.

இங்ஙனம் ஸுசீலை சொன்ன சபத வார்த்தைகளைக் கேட்டுச் சித்ரகுப்தன் ஆச்சர்யமடைந்தான். நடுநிலை புத்தி உள்ளவனும் விஷமயமான பாசயந்த்ரமுள்ளவனும் சுத்தனும் ஹிதனுமான சித்ரகுப்தன் அவள் எதிரில் தோன்றினான். பிரகாசமுள்ளவனும் அழகான சரீரமுடையவனும் விசித்ரமான திவ்யாபரணங்கள் அணிந்தவனுமான சித்ரகுப்தனைக் கண்டாள். இவர் அக்னியோ? இந்திரனோ? சிவனோ? என பலவாறு யோசித்தாள். கற்பின் மஹிமையால் பதியைக்கொண்டு செல்லவந்த சித்ரகுப்தனே வந்திருக்கின்றான் என உணர்ந்தாள். உடனே அவர் திருவடியில் விழுந்து வணங்கினாள்.

உடனே சித்ரகுப்தன் முறைப்படி தீர்க்க ஸுமங்கலியாக இருப்பாய் என ஆசீர்வாதம் செய்தார். அதைக் கேட்டுத் தனக்கு ஸௌமங்கல்யம் கிடைத்து விட்டதென ஸந்தோஷம் அடைந்தாள் ஸுசீலை. அர்க்யம், பாத்யம் முதலியன அளித்து, "உமது வாக்யம் ஸத்யமானதால், எனக்கு ஸௌமங்கல்யம் கிடைத்துவிட்டது. அதை நன்கு ரக்ஷியும்" என்றாள். இதைக் கேட்டு வெட்கமடைந்த சித்ரகுப்தன், "உனது கணவனைக் கொண்டு செல்லவே வந்தேன். நீ வணங்கியபோது ஆசீர்வாதத்தைக் கூறினேன். அப்படி சிறியோர் வணங்கும்பொழுது பெரியோர் ஆசீர்வாதம் செய்யாவிடில், பெரியோரது ஆயுஸ்

குறையும். ஆதலால் உபநயனம் ஆகாத சிறியவனுக்கு (ஆயுஷ்மான் பவமேதாவி), பிரும்மசாரிக்கும், கிருஹஸ்த னுக்கும் (ஆயுஷ்மான் பவ ஸௌம்ய) என்று கூறி, அவனது சர்மாவின் கடைசி எழுத்தில் ப்லுதத்தையும் கூறவேண்டும். (கடைசி எழுத்திற்கு முன் உள்ள எழுத்தை மூன்று மாத்திரை நீட்டிச் சொல்வதாம்.) கன்னிகை நமஸ்கரித்தால் நல்ல பதி கிடைக்கட்டும் என்றும் விவாஹமானவள் வணங்கினல் தீர்க்க ஸுமங்கலியாய் இரு என்றும் விதவை வணங்கினல் ஞானவதியாய் இரு என்றும் ஆசீர்வதிக்கவேண்டும். இங்ஙனம் ஆசீர்வாதம் செய்பவர் ஸௌக்யமாய் இருப்பார். ஆதலால் உன்னை தீர்க்க ஸுமங்கலியாய் இரு என ஆசீர்வதித்தேன். உனது பதி தீர்க்காயுஸ்ஸாக இருக்கவேண்டும். எனது வாக்கும் ஸத்யமாய் இருக்கவேண்டும். அதற்கு நீ துலா காவேரிஸ்நானம் செய்ததில் ஓராண்டு ஸ்நானபலனைத் தா. உன் பதியை அழைத்துச் சென்று யமனிடம் காட்டித் திருப்பிக் கொண்டு வருகிறேன் என்றான்.''

இதைக் கேட்ட ஸுசீலை, ''காரணமின்றி நீர் எதற்காகச் சிரித்தீர்?'' என்று கேட்க. ''உன் கணவன் பாபத்தினல் ஆயுஸ்ஸை இழந்து அடுத்த க்ஷணத்தில் உயிரை விடப்போகிறான். இதை யறியாமல் ராத்திரிவரை, தான் இருக்கப் போவதாக எண்ணி, ருசியாயுள்ள இதை வைத்து வை, இரவில் சாப்பிடுகிறேன் என்றான். அன்றியும் இந்த பிள்ளைகளையும் வீட்டையும் மனைவியையும் நான் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணிப் பல பாப கார்யங்களைச் செய்தான். நான் வீட்டிலேயே இருந்தால், இவர்கள் கதி என்ன ஆகும்? என்று எப்பொழுதும் ஸம்ஸார பாசத்தினல் கட்டப்பட்டுத் திரிந்து கொண்டே இருந்தான். திரியும் காலத்தில் ஆசாரத்தைக் கை விட்டான். இங்ஙனமே எல்லோரும் இந்திரியங்கள் தளர்ந்தபின் உடலில் நோய் சூழ, மனைவி மக்களைப் பார்த்து, ''என்னை ரக்ஷி'' என அழுகிறார்கள். இதைக் கண்டு பந்துக்கள் நல்ல பலமிருக்கும்பொழுது இவன் பரலோகத்துக்கு வேண்டிய புண்யத்தை அணுவளவு கூடச் செய்யவில்லையே? இனி எங்கே செல்வது என்பர். அவன் கத்தும் பொழுது, ''உனக்கு இங்கு அன்னமில்லை, வெளியில் செல் என்று லோபத்தினல் பிள்ளை முதலியவர்களும் விரட்டுகிறார்கள். இனி புண்யம் செய்ய



முடியவுமில்லையே, என்று அழுகிறான். பூனை எலியைப் பிடிப்பதுபோல் அச்சமயம் பார்த்து யமன் ஜீவனைப் பிடித்துச் செல்கிறான். ஆதலால் என்னுடையது என்ற எண்ணத்தை விட்டு தர்மத்தை அனுஷ்டிக்க வேண்டும். ஸுசீலே! நீ கொடுக்கும் காவேரீ ஸ்நான புண்யத்தாலும் என்னுடைய அனுக்ரஹத்தாலும் உன் கணவன் தீர்க்காயுஸ்ஸாக இருப்பான். ஒரு யாம காலம் வரை இந்த உடலை ஜாக்ரதையாக ரக்ஷி. அழாதே! ஜீவனைத் திருப்பிக் கொண்டு வருகிறேன்'' என்று கூறினான்.

எட்டாம் அத்யாயம் முற்றிற்று.

## ஒன்பதாம் அத்யாயம்—110 சுலோகங்கள்.

**அகஸ்த்யர்:** துலா காவேரீ மஹிமை ஸர்வ இஷ்டத்தையும் தரும். அபமிருத்யு பயத்தையும் அகற்றும். ஸர்வ பாபங்களையும் அகற்றும். ஏகாக்ர மனதுடன் இதைக் கேள். துலாமாஸ ஸ்நான பலத்தைத் தந்ததினல் இறந்த ப்ரம்மசர்மா யமலோகம் சென்று திரும்பினன், எனில் காவேரீ மஹிமையை யாரே வர்ணிக்கவல்லவர்? அதை விபரமாகக் கூறும்படி தர்மர் கேட்க, நாரதர் கூறினர்.

ஸுசீலையும் சித்ரகுப்தனும் பேசியது மிக ரஹஸ்யமானது. அதை ப்ரம்மசர்மாவும் அறியான். விரைவாக அன்ன மளி. யான் வயலுக்குச் செல்லவேண்டுமென்று வேகமாகப் பேசினன் சர்மா. அச்சமயம் அன்னம் அவன் தொண்டையில் அடைத்துக் கொண்டது. அதை வியாஜமாகக் கொண்டு சித்ரகுப்தன் அவனது ஜீவனை இழுத்து யமலோகத்திற்குப் புறப்பட்டான்.

### இரு சண்டாளர்.

வழியில் செருப்புத் தைத்து ஜீவிக்கும் இரு சண்டாளர்கள் இவனது வழியை மறித்து, ''அயோக்ய ப்ராஹ்மணா! எங்கே செல்கிறாய்? இப்போது எங்களிடம் அகப்பட்டுக்கொண்டாய்! உன்னை விடுவோமா? எங்களிடம் பாதரக்ஷையை வாங்கிக்கொண்டு அதன் விலையைக் கொடுக்காமல் ஏமாற்றினாய் அல்லவா? அந்த பாதரக்ஷையை இப்போது கொடு! இல்லையேல் உன்னை விட மாட்டோம்!'' என்றார்கள். சித்ரகுப்தன், அவர்களைப் பார்த்து ''அதன் விலையை நான் தந்துவிடுகிறேன். பொருளைப்பெற்றுக்கொண்டு இவனை விடுங்கள்'' என்றார்.

அவர்கள், "ஸ்வாமின், நாங்கள் பசியோடு தவிக்கும் பொழுது இதை இவரிடம் விற்ருேம். அப்பொழுது அவர் பணம் கொடுக்காமல் வீட்டில் பதுங்கிக் கொண்டார். சில நாள் சென்றபின், (நாங்கள் அவர் வீட்டிற்குப் போக முடியாதாகையால் தூரத்திலுள்ள எங்களை) அவர் வீட்டிலிருந்தே செருப்பேது? பணம் ஏது? என்று எங்களைத் திட்ட ஆரம்பித்தார். ஆதலால் இப்பொழுது பணம் வேண்டாம். அந்த செருப்பிற்குச் சமமாக அவரது தோலை அறுத்துத் தரட்டும். பசு, ப்ராஹ்மணன், ஸ்திரீ இவர்களைக் கொன்றவர்களுக்குக் கூட ப்ராயஸ்சித்தம் செய்து கொண்டால் நற்கதியுண்டு. கடனைக் கொடுக்காமல் செல்பவனுக்குவேறு ப்ராயஸ்சித்தம் கிடையாது. பொருளைத் திருப்பிக் கொடுப்பதே ப்ராயஸ்சித்தமாகும். இல்லையேல் ஓர் ப்ரளயகாலம் வரை நரகத்தில் துன்பப்பட வேண்டும். நாங்கள் இவருக்குப் புத்ரர்களாகப் பிறந்து கடன் அடையும் வரை அவர் வீட்டில் இருந்து புஜிக்கிருேம். கடன் கழிந்தபின் இறப்போம்" என்று கூறி ப்ரும்மசர்மாவை அடிக்க ஆரம்பித்தார்கள்.

## அச்வத்த மஹிமை.

அச்சமயம் இரண்டு ப்ரம்மசாரிகள் அங்கு வந்து அவர்கள் வாதத்தைக் கேட்டு, "முன்னே உதவி செய்த இவருக்கு ப்ரத்யுபகாரம் செய்ய நாங்கள் வந்துளோம். அவர் என்ன கொடுக்கவேண்டும்? எவ்வளவு கொடுக்க வேண்டும்? கூறுங்கள்" என்றனர். சண்டாளர்கள், நடந்ததைக் கூறி பாதரக்ஷைக்குச் சமமான தோலை இவர் கொடுக்கவேண்டும் என்ருர்கள். "இவர் கடனிலிருந்து விடுபட்டுச் செல்லட்டும். அவரை விடுங்கள். அதற்குச் சமமான தோலை நாங்கள் தருகிருேம்" என்று தங்கள் தொடையிலிருந்து தோலை அறுத்து அளித்தார்கள். அதைத் துலையில் வைத்து நிறுத்து எடுத்துக்கொண்டு ப்ராம்மணனை விட்டு விட்டார்கள். பிரம்மசாரிகளைக் கண்ட ப்ரம்மசர்மா ஆச்சர்யம் அடைந்து, "தாங்கள் யார்? எங்கே உள்ளவர்கள்? யாதொரு காரணமுமின்றி என்னிடம் அன்புவைத்தீர்களே! தயை நிறைந்த உங்களுக்கு யான் என்ன உபகாரம் செய்தேன்? ஸத்துக்களின் ஸங்கம் எதனுல் எனக்குக் கிடைத்தது? ஸாதுக்களின் தர்சனத்தினுல் கருடனைக் கண்ட பாம்பு பறப்பதுபோல் என் பாபமெல்லாம் பறந்தது என்ருர்.



பிரும்மசாரிகள், "ஐயா! நாங்கள் உங்களால் வைத்து வளர்க்கப்பட்ட இரண்டு அரச மரங்களே ஆவோம். தினந்தோறும் ஜலம்விட்டு வளர்த்து எங்களை ஸேவித்தீர்கள்! பாபம் அகலும்படி வேண்டி, ஸ்திரவாரத்தில் ஏழு ப்ரதக்ஷிணமும் செய்தீர். ஆதலால் நாங்கள் உனது கடனை நீக்கினேம். நீர் திரும்பி வந்தபிறகு, நீர் செய்த பூஜையும் நாங்கள் தோல் இல்லாமல் இருப்பதையும் நதிக் கரையில் பார்ப்பீர்கள்" என்று கூறி மறைந்தார்கள்.

சித்ரகுப்தன், "ஐயா! அச்வத்த விருக்ஷத்தின் மஹிமையைப் பாரும். நீ செய்த பாபங்களெல்லாம், அச்வத்தத்தைக் கண்டவுடன் பறந்தோடின. பூமியில் சென்று உத்தமமான புண்யங்களைச் செய். இப்பொழுது யமனை ஸந்தோஷப்படுத்தவும் நான் அளித்த ஆயுஸ்ஸை ரக்ஷிக்கவும் யம ஸ்தோத்ரத்தைச் சொல்லுகிறேன் கேள்" என்று யம ஸ்தோத்ரத்தை உபதேசித்தார். யமனருகில் உன்னை யான் அழைத்துச் செல்லும்பொழுது அவரைக் கண்டவுடன், தண்டம்போல் விழுந்து நமஸ்காரம் செய். இந்த ஸ்தோத்ரத்தையும் சொல். அவர் உன்னை ஆசீர்வதிக்கும் வகையில் தீர்கா யுஸ்ஸைத் தருவார் என்று கூறி அவரை யமாலயத்திற்கு அழைத்துச் சென்ருர்.

அவர் யம ஸ்தோத்ரத்தைக் கூறிக்கொண்டே ஸபையிலுள்ள யமதர்மனை வெகு தூரத்திலேயே கண்டார். நவரத்ன மிழைத்த ஸிம்ஹாஸனத்தில் ஸூர்யனைப்போல் பிரகாசிக்கும் கிரீடமணிந்தவரும், கேயூரம், கடகம் முதலிய திவ்ய ஆபரணங்களால் பிரகாசிப்பவரும், அழகிய கடி ஸூத்ரமணிந்தவரும், இடையிடையே மாணிக்கமும், ரத்னமும் கலந்த முக்தாஹாரம் அணிந்தவரும், உருக்கிய தங்கம் போன்ற குண்டல மணிந்தவரும், வெண்பட்டு அணிந்தவரும், வேத ரூபியும், தயாநிதியும், யக்ஞோபவீதம், உத்தரீயம் இவைகளால் பிரகாசிக்கும் மார்புடையவரும், சாந்தமாயுள்ள மிருத்தியு, காலன், அந்தகன் முதலியவர்களால் ஸதா சூழப்பட்டவரும், தர்மம், அதர்மம் இவைகளைப் பகுத்தறிந்து கூறும் முனிவர்களால் சூழப்பட்டவரும், கங்கணத்தினுல் பிரகாசிக்கின்ற இரு திவ்ய ஸ்த்ரீகளோடு கூடியவருமான யம மகாராஜனைக் கண்டு, ப்ரும்மசர்மா சிறிது பயந்தார். தண்டம் போல் பூமியில் விழுந்து யம ஸ்தோத்ரத்தைக் கூறினர்.

## யம ஸ்துதி.

தர்மராஜ நமஸ் தேஸ்து ஸாக்ஷாத் தர்ம ஸ்வரூபிணே |
தர்மிஷ்ட சாந்த ரூபாய ஸத்ய ரூப நமோ நம: ||
யமாய ம்ருத்யவே துப்யம் காலாயச நமோ நம: |
ஸூர்ய புத்ர நமஸ்தேஸ்து ஸர்வபூத க்ஷயாயதே ||
ஸாதூநாம் பித்ரு துல்யாய வசநாமிருத தாயினே |
கடகாங்கித கேயூர ஹார நூபுர தாரிணே ||
தூரா தேவ ஸதோ த்ருஷ்ட்வா தூராசாராத் யவிப்லுதான் |
அர்சதே கந்த புஷ்பாத்யை: ப்ரத்யுத்தா நாஸநார் ஹணே: ||
மத்யஸ்தாய நமஸ்துப்யம் தத்வஜ்ஞாய நமோ நம: |
தததே நிஜ ஸர்வஸ்வம் ஸாதூநாம் ஸமதர்சிநாம் ||
தேவ தேவ நமஸ்துப்யம் வேத வேதாந்த வேதினே |
ஸத்கிருதம் ஸத்கிருதம் பூர்வம் ஜாதம் பா தேய மத்யவ: ||
ஸ்வர்லோகான் கச்சத க்ஷிப்ரமிதி ஸம்பிரிய வாதினே |
நமஸ்தே பித்ரு ரூபாய பக்தா நாமபயம் கர ||
கமலா காந்த பக்தாய கமலோதர சக்ஷுஷே |
கமலோத்பவ பவ்யாய கமலா பாஸகத் விஷே ||
நமோ லாவண்ய நிதயே காருண்ய வச நாலய |
பாபி நாம் கோர ரூபாய கர்ஜதே தூர்ஜ நாக்ரத: ||
தம்ஷ்ட்ரா கரால ப்ருகுட பீஷணானனதே நம: |
ஊர்த்வ ரோம்ணே மஹா ரோம்ணே தீர்க்க ரோம்ணே நமோநம:
கண்டாரவ மஹா சண்ட காலதண்டாய சண்டிநே |
தண்ட்யான் தண்டயதே நித்ய முக்ர தண்டாயதே நம: ||
கோதண்ட கால தண்டாஸி பரஸ்வத வராயுதான் |
தாரிணே மாரிணே லோகான் புண்ய ராசி ஸ்வரூபிணே ||
க்ரஹணே ஸர்வலோகாநாம் ஜாக ரூகாதி காரிணே |
திவ்யஞ் ஜான ப்ரசஸ்தாய ஸமஸ்தாங் காயதே நம: ||
ஸமஸ்த லோக வந்த்யாய ஸமஸ்த ஸ்தோத்ர ரூபிணே |
காளாம்புத மஹாநீல மஹா மஹிஷ வாஹந ||
கல்பாலன மஹாகில ஜ்வல லோசனதே நம: |
பயங்கராய பாபானும் அபயாய ஸுதர்மிணம் ||
த்ரவத் ஸுதாம்சு ஸம்பூர்ண சந்த்ராஸ்யாய நமோ நம: |
ப்ரளயாம் புத நிர்கோஷ பீஷயித் ரே ஹதர்சிநே ||



கோப்யாம் காருண்ய பூர்ணப்யாம் பச்யதே ஸுக்ரு தாத்மநாம் |
தத்வாய தத்வ ரூபாய தத்வத்ருஷ்டே நமோ நம: ||
அதீவகர்ஜத் ப்ரளயாம் புதத்வநி ப்ரமூர்ச்சிதா சேஷ திகந்தராய |
சிந்தீதி பிந்தீதிச சூர்ணே ஸதோ வீக்ஷ்ய விபோ நமஸ்தே ||
கராள காயாதி கடோரவாசா பாபிஷ்ட ஸங்கம ப்ருஶ பீஷயித்ரே
ஜ்வலத் யுகாந்தோத்யம பாடபாக்னி ஸமோர்த்வரோம்ணே பர
பீடகாணும் ||
விஷோல்பண பீஷண க்ருஷ்ண ஸர்ப தண்டா பிகாதாகி
விமோ ஹயித்ரே |
ஸாது மித்ராயதே ஶஸ்வத் மித்ர புத்ராயதே நம: ||
சாந்த காத்ராய சாந்தாணும் மேரு கோத்ர ஸமஞ்ஜஸே |
பூஜா மாத்ராதி துஷ்டாய பக்தாபீஷ்ட ப்ரதாயினே ||
சிபிவிஷ்ட நமஸ்தேஸ்து நமஸ்தே பரமேஷ்டினே |
வாசா ப்ரீணயதே ஸாதூன் பூஜ்யான் பூஜயதே நம: ||
ப்ரதாத்ரே ஸாது ஸல்லோகம் அபஹர்த்ரே ஸதாம் பயம் |
தர்ம சாஸ்த்ர ஸ்வரூபாய ந்யாய சாஸ்த்ரார்த்த சக்ஷுஷே ||
வ்ருகோதர நமஸ்துப்யம் யமுனா ஸோதராய ச |
யமாய தர்ம ராஜாய ம்ருத்யவே சாந்த காய ச ||
வைவஸ்வதாய காலாய ஸர்வபூத க்ஷயாய ச |
ஔதும் பராய தத்நாய நீலாய பரமேஷ்டினே ||
வ்ருகோதராய சித்ராய சித்ரகுப்தாயதே நம: |
பூயோ பூயோ நமஸ்துப்யம் பக்த ரக்ஷகதே நம: ||

### ஸ்தோத்ரத்தின் கருத்து.

பெரும்பாலும் இந்த ஸ்துதியில் யமதர்மனது நாமாக்களே கூறப்படுகின்றன. சில இடத்தில் ஸம்போதனமாகக் கூறி சில இடத்தில் உமக்கு நமஸ்காரம் என்று வர்ணிக்கப்படுகிறது. விசேஷமானவைகளை அறிந்து கொள்வோம். நீ தர்ம ஸ்வரூபீ, சாந்த ரூபி, ஸத்ய ரூபி, யமன், ம்ருத்யு, காலன், அந்தகன் என்பதெல்லாம் நீரே. ஸூர்ய புத்ர, ஸர்வ பூதங்களையும் அழிப்பவரும், ஸாதுக்களுக்குத் தந்தைபோலுள்ளவரும், அமிருதம்போல் இனிய சொற்களைக் கூறுபவரும், கடகம் முதலிய ஆபரணம் தரித்தவரும், ஸதாசாரமுள்ள ஸாதுக்களைப் பார்த்தவுடனேயே வரவேற்று கந்த புஷ்பாதிகளால் அர்ச்சிப்ப

வரும், மத்யஸ்தராக இருப்பவரும், தத்வ முணர்ந்தவரும், ஸமதர்சிகளான ஸாதுக்களுக்குத் தன் பொருளையெல்லாம் தருபவரும், வேத வேதாந்தங்களை உணர்ந்தவரும், "நீங்கள் நல்ல புண்யம் செய்தீர்கள்! இதோ உங்களுக்கு உணவு வந்திருக்கிறது! அதை ஏற்று ஸ்வர்க்கலோகம் செல்லுங்கள்!" என்று ஸாதுக்களிடம் பிரியமாகப் பேசுபவரும், பித்ரு ரூபியும், பக்தர்களுக்கு அபயம் அளிப்பவரும், விஷ்ணு பக்தரும், தாமரை போன்ற கண்ணுள்ளவரும், ப்ரம்மாவினிடம் விநயமுள்ளவரும், தாமரை போன்ற காந்தியுள்ளவரும், அழகுக்கு இருப்பிடமானவரும், கருணை ததும்பும் சொல்லுக்கு இருப்பிடமானவரும், பாபிகளுக்குக் கோரமான ரூபம் உடையவரும், துர் ஜனங்கள் எதிரில் கர்ஜிப்பவரும், கோரப் பல்லும், பயங்கரமான புருவமும் உள்ளவரும், மேல் முகமாக உள்ளதும், நீண்டதுமான ரோமாக்களை உடையவரும், மணியின் சப்தத்தினுல் மிக்க பயங்கரமானவரும், காலதண்டமுள்ளவரும், கோபமுள்ளவரும், குற்றவாளிகளைத் தண்டிப்பவரும், எப்பொழுதும் உக்ரமாகத் தண்டிப்பவரும், வில், கால தண்டம், கத்தி, கோடாலி முதலிய ஆயுதங்களைத் தரிப்பவரும், உலகைத் தரிப்பவரும், அழிப்பவரும், புண்ய ராசியானவரும், எல்லோரையும் கொண்டு செல்வதில் ஜாக்ரதையான அதிகாரியும், திவ்ய ஞானத்தினுல் சிறந்தவரும், அழகான ஸர்வ அவயவ முள்ளவரும், நாலுகைகள் உடையவரும், ஸாதுக்களிடம் ஸௌம்ய முகமாயிருப்பவரும், எல்லோராலும் வணங்கப்பட்டவரும், ஸர்வ ஸ்தோத்ர ரூபியும், காளமேகம் போன்ற எருமை வாஹன முடையவரும், ப்ரளயாக்னி போல சிவந்த கண்ணுள்ளவரும், சந்திரன் போன்ற முகமுள்ளவரும், பாபிகளிடம் ப்ரளயகால இடி போல் கர்ஜிப்பவரும், ஸாதுக்களைக் கருணை நிறைந்த கண்களால் பார்ப்பவரும், தத்வமாயும் தத்வ ரூபியாயும், தத்வ த்ருஷ்டியாயுள்ளவராயும் இருப்பவரும், அஸத்துக்களைப் பார்த்து வெட்டு, கொல்லு என்று பத்து திக்குகளிலும் பரவும்படி உரக்க கர்ஜிப்பவரும், பாபிகள் கூட்டத்தில் பயங்கரமா யிருப்பவரும், பயங்கர சொற்களால் பயப்படுத்துபவரும், பிறரைப்பீடிப்பவருக்கு ப்ரளயகால அக்னிக்குச் சமமான ஊர்த்வ ரோமாக்களை உடையவரும் விஷத்தைக் கக்கும் பயங்கரமான க்ருஷ்ண ஸர்ப்பம் போல் பாபிகளை மோகிக்கும்படிச் செய்பவரும், ஸூர்ய



புத்ரனும், சாந்தர்களுக்கு மேருமலை போன்ற தேஜஸ் உள்ளவரும், தன்னைப் பூஜிப்பதால் அதி ஸந்தோஷமுள்ளவரும் பக்தர்களுக்கு இஷ்டத்தை அளிப்பவரும், ப்ரும்ம ரூபியும், ஸாதுக்களுக்கு நல்ல லோகம் அளிப்பவரும், ஸாதுக்கள் பயத்தை அகற்றுபவரும், தர்ம சாஸ்த்ர ஸ்வரூபியும், ந்யாய சாஸ்த்ரத்தையே கண்ணுக உடையவரும், யமுனையின் ஸஹோதரரும், யமன், தர்மராஜன், ம்ருத்யு, அந்தகன், ஸூர்ய புத்ரன், காலன் என்ற பெயருள்ளவரும், அத்தி மரத்தில் பிரியமுள்ளவரும், ரத்ன ரூபியும், கருப்பு நிற முள்ளவரும், சிறந்தவர்களால் கொண்டாடப்பட்டவரும், வயிற்றில் விருகம் என்ற அக்னியுள்ளவரும், விசித்ரமானவரும், சித்ரகுப்த ரூபியாயுமிருக்கின்ற உமக்கு நமஸ்காரம்! பக்த ரக்ஷக, உமக்கு நமஸ்காரம்!! உமக்கு நமஸ்காரம்!! எனப் பன்முறை பிரும்ம சர்மா விழுந்து எழுந்து நமஸ்கரித்தார்.

அதி தர்மிஷ்டரும், ஸ்தோத்ரமெனும் கவசமுடையவருமாகித் தைர்யமாகப் பல முறை விழுந்து நமஸ்கரித்துத் துதித்தார் சர்மா. இதனுல் ஸந்தோஷமடைந்த யமன் துந்துபியின் சப்தம்போன்ற குரலுடன் "ஆயுஷ்மான் பவ ஸௌம்ய" என ஆசீர்வதித்தார். சித்ரகுப்தன் அவரைப் பற்றிக் கூற, ஆச்சர்யமடைந்த தயாநிதியான யம தர்மன் "இந்த ஸ்தோத்ரத்தினுல் ஸந்தோஷமடைந்தேன். உனக்குத் தீர்க்காயுஸ்ஸைத் தருகிறேன். விரைவாக வீட்டிற்குச்செல். இனி பாபத்தில் மனத்தைச் செலுத்தாதே. பாபத்தையும், ம்ருத்யுவையும் போக்கடிக்கின்ற இந்த ஸ்தோத்ரத்தினுல் பிரதிதினம் என்னைத் துதிப்பவர் ஸகல பாபங்களும் அகன்று நீண்ட ஆயுளை அடைவர். மற்றொரு ரஹஸ்யத்தையும் கூறுகிறேன் கேள். அவரவர் ஜன்ம நக்ஷத்திரத்திலும், யம நக்ஷத்திரமான பரணியிலும் சுத்தனுக இருந்து இந்த ஸ்தோத்ரத்தைப் படிப்பவன் நோயற்றவனுய் நீண்ட ஆயுளைப் பெற்று அபமிருத்யு அகல நூறுண்டு போகத்தை அனுபவிப்பான்." என்று கூறினுர்.

பிரும்ம சர்மா, "எந்த புண்யத்தால் எனக்கு நீண்ட ஆயுள் கிடைத்தது? எதனுல் என் ஆயுஸ் குறைந்தது? நீர் அறியாதது ஒன்றுமில்லை. ஆதலால் இதை விவரித்துக் கூறும்" என்று வேண்டினுன்.

யமன், "நீர் முற்பிறவியில் ஏழையும், தேசாந்தரத்திலிருந்து வந்தவனுமான நோய்வாய்ப்பட்டு இருந்த ஓர் பிராம்மணனை வீட்டில் இடங்கொடுத்து மருந்தளித்து காப்பாற்றினாய். உன் மனைவி ஓராண்டு துலா ஸ்நான பலனை அளித்தாள். அதனால் நீண்ட ஆயுளைப் பெற்றாய்! பிறருடைய அன்னத்தைப் புஜித்தல், ஔபாஸனம் முதலிய அக்னி பூஜை இல்லாமல் இருத்தல், உண்ணத்தகாதவைகளை உண்பது இவைகளால் நீ அல்பாயுஸ் உள்ளவனாக ஆனாய். இனி நீ ஆசாரத்துடன் இரு. தர்மமுள்ளவனுக்குப் பயமில்லை."

**யமன் கூறும் தர்மங்கள்.**

முன்னர் நளமகாராஜன் இந்த ஸ்தோத்ரத்தினால் என்னைத் துதித்தான். அதனால் மூவுலகையும் ஜயித்து தீர்க்காயுளையும் பெற்றான். பாவிகள் நரகத்தையும் ஸத்துக்கள் ஸ்வர்க்கத்தையும் அடைவார்கள். எட்டு வயதுள்ளவள் கன்யகை, ஒன்பது வயதுள்ளவள் ரோஹிணி, பத்து வயதுள்ளவள் கௌரி. அதற்கு மேற்பட்ட வயதுள்ளவள் ரஜஸ்வலை யாவாள். பத்து வயதுள்ள கௌரியைக் கன்யகா தானம் செய்பவன் ஸ்வர்க்கம் செல்வான். ஒன்பது வயதுள்ள ரோஹிணியை விவாஹம் செய்து கொடுப்பவன் வைகுண்டம் செல்வான். எட்டு வயதுள்ள கன்யகையை கன்யகா தானம் செய்பவன் ப்ரும்மலோகம் செல்வான். பத்து வயதுக்கு மேற்பட்ட ரஜஸ்வலையைக் கன்யகாதானம் செய்பவன் ரௌரவ நரகம் செல்வான். ஹரி பூஜைக்கு தசாங்கம் குக்குலு முதலிய தூப வஸ்துக்களையும் தீபம் ஏற்ற நெய்யையும், நைவேத்யம் செய்ய அரிசியையும் வைச்வதேவம் செய்யும் ப்ராம்மணனுக்கு அளிப்பவர் ஸ்வர்க்கம் செல்வர். ஐப்பசி, கார்த்திகை, மாசி, வைகாசி ஆகிய நான்கு மாதங்களில் அந்தந்த மாஸ ஸ்நானம் செய்பவர், புராணத்தில் நம்பிக்கையுள்ளவர் ஸ்வர்க்கம் செல்பவர். சாஸ்த்ரார்த்தத்தைக் கூறுபவரும், புராணம் கூறுபவருமான பிராம்மணனைத் தனம், வஸ்த்ரம் முதலியவைகளால் பூஜிப்பவர் ஸ்வர்க்கம் செல்வர். தூப, தீப, பாத்ரங்களையும் பகவானுக்கு வஸ்த்ரத்தையும் அளிப்பவர் ஸ்வர்க்கம் செல்வர்.

பாபிகளுடைய கதியைக்கேள். "சிரித்துக்கொண்டே பாபத்தைச் செய்கிறார்கள். அழுது கொண்டே அதன்



பலனை அனுபவிக்கிறார்கள். பிராத ஸ்நானம் செய்யாதவர், பகவானுக்கு நிவேதனம் செய்யாமல் உண்பவர், புராணத்தில் நம்பிக்கை இல்லாதவர், பிறர் கார்யத்தைக் கெடுப்பவர், பூஜைக்காக மணி அடிக்காதவர், துளஸீ, தூப தீபாதிகளால் விஷ்ணு பூஜை செய்யாதவர்கள் பல வகை நரகங்களை அனுபவிப்பார்கள். கொட்டைமுத்து இலை, எருக்கை இலை, பலாசை இலை இவைகளில் துளஸியை எடுத்து வருபவரும், ஸ்நானம் செய்யாமல் புஜிப்பவரும், அமாவாஸ்யை, ஏகாதசி முதலிய நிஷித்த தினங்களில் ஸ்திரீ ஸங்கம் செய்தவனும் அக்னி பூஜை செய்யாதவனது வீட்டு அன்னத்தைப் புஜிப்பவனும், பெண்களோடும், குழந்தைகளோடும் ஸமமாக உட்கார்ந்து புஜிப்பவனும், ஒரே பாத்திரத்தில் அவர்களுடன் புஜிப்பவனும் நரகம் செல்வார்கள். இங்ஙனம் மற்றும் பற்பல பாபங்களுண்டு. சாஸ்த்ர விசாரம் செய்து நரகம் செல்லாதபடி புண்யங்களைச் செய்யவேண்டும். உமது பந்துக்கள் மிக்க துக்கப்படுவதால் நீ சீக்ரம் வீட்டிற்குச் செல்" என்றார் யமதர்மராஜன்.

பிரும்ம சர்மாவும் வினயத்துடன் யமனை நமஸ்கரித்துத் தூதர்களால் கொண்டு விடப்பட்டுச் சவத்திற்குள் புகுந்து தூங்கி விழித்தவனைப்போல் எழுந்தார். இறந்து மறுபடியும் தன்னிடம் வந்த கணவனைக்கண்டு பேரானந்தம் அடைந்த ஸுசீலை த்ருடமாக அவரை ஆலிங்கனம் செய்து கொண்டு பிறகு நமஸ்காரம் செய்தாள். ஆச்சர்யத்துடன் அவரைப் பல முறைப் பார்த்து, யமலோக விருத்தாந்தத்தை விசாரித்தாள். யமலோக விருத்தாந்தத்தையும் இடையில் நடந்த தனது விருத்தாந்தத்தையும் சர்மா விரிவாகக் கூறினார். அதைக்கேட்டு அச்வத்த விருக்ஷங்கள் கடனை அடைத்ததை மிகவும் கொண்டாடினாள். அன்று முதல் இருவரும் காவேரீ ஸ்நானத்தில் ஈடுபட்டு அச்வத்த ஸேவையும் நன்கு செய்து வந்தார்கள். பதிக்குப் பணிவிடை செய்து வந்த ஸுசீலா நற்கருமத்திற்கேற்ற வண்ணம் ஸுமங்கலியாகவே இறந்தாள். பதி பணிவிடை எனும் படிக்கட்டு வழியாக திவ்ய விமானத்திலேறி தேவர்கள் துதிக்கப் பிரும்மலோகம் சென்றாள். பாவனமானதும், ஆச்சர்யமாயுமுள்ள ஸுசீலையின் சரிதத்தைக் கேட்பவரும், படிப்பவரும் நூறாண்டு ஜீவித்திருப்பர்.

**ஒன்பதாம் அத்யாயம் முற்றிற்று.**

## பத்தாம் அத்யாயம் — 96 சுலோகங்கள்.

### பிரும்மசர்மா பாபத்தால் பன்றியானது.

**நாரதர்:** பிரும்ம சர்மாவின் மனைவி பிரும்மலோகம் சென்றதும், துக்கத்தினுல் வருந்தினுரவர். ஒரு ஸமயம் திருடர்கள் இவரது வீட்டிற்குள் புகுந்து எல்லா பொருளை யும் அபகரித்துச் சென்றனர். ஏழ்மையும், பசி தாகமும் பீடிக்க அவர் மறுபடியும் தகாத உணவை உட்கொண்டார். நன்ருக இருந்த காலத்தில் இவர் உதவி செய்யாததால் புத்ரர்களும், பந்துக்களும் இவரைக் கைவிட்டார்கள். பரிஹாஸமாகப் பழிக்கவும் ஆரம்பித்தார்கள். வெட்க மடைந்து ஊர் ஊராகச் சுற்றி ஓரிடத்தில் பழையதை யும், ஓரிடத்தில் பலர் உண்டு மிகுந்ததையும், ஓரிடத்தில் ஸ்திரீ, நான்காம் வர்ணத்தவர்கள் உண்டுமிகுத்ததையும் உண்டு வயிறு வளர்த்தார். ஆசாரத்தையும் கைவிட் டார். ஸ்நானம், ஜபம் முதலியவைகளை விட்டுப் பசி, பசி எனப் பல இடங்களிலும் அலைந்து வயிற்றை நிறப்பி னுர். ஸுசீலை கூறிய, அபமிருத்யுவைப் போக்கும் தத்வங்களை எல்லாம் மறந்தார். துராசாரத்துடனிருந்து, துஷ்டர்களுடன் சேர்ந்தார். இங்ஙனம் சுற்றிக்கொண்டு அதமரான பிரும்ம சர்மா ஒரு நாள் மாத்யான்ஹிக காலத்தில் ஒரு க்ருஹஸ்தனுடைய வீட்டிற்கு வந்தார். அச்சமயம் அந்த க்ருஹஸ்தர் பூஜை, வைஸ்வ தேவங் களைச் செய்து அதிதியை எதிர்பார்த்துக் கொண்டிருந் தார். இவரை அழைத்து க்ருஹஸ்தர் நன்கு ஆதித்யம் செய்தார். புஜித்த பின் தனது வித்யையைக் காட்ட உரக்க வேதம் கூறினுர் சர்மா. அதைக்கேட்ட க்ருஹஸ் தன் ஸர்வ சாஸ்த்ரங்களையும் அறிந்தவர் இவர், வித்தை யுள்ளவர், வயதானவருமா யிருந்ததால் தனது வீட்டி லேயே வைத்துக் கொண்டார்.

ஒரு நாள் அந்த கிருஹஸ்தனுக்கு ஏதோ ஒரு தீட்டு வந்த பொழுது நித்ய சிவ பூஜையைச் செய்யும்படி இவரை வேண்டினுர். இவர் ரஹஸ்யமாக வேருெரு இடத்தில் போய் சாப்பிட்டு விட்டு வந்து தேவ பூஜை செய்தார். அந்த பாபத்தினுல் அஜீர்ண தோஷத்தின லேயே அவர் இறந்து பலவகை நரகங்களை மூன்று மன் வந்த்ர காலம் அனுபவித்தார். மலபோஜனமெனும் நரகத்தில் வீழ்ந்தார். இரண்டு மன்வந்தர காலம் தேள்



முதலிய விஷ ஜந்துக்களால் கடிக்கப்பட்டு நரகத்தை அனுபவித்தார். புஜித்தபின் தேவதார்ச்சனை செய்த பாபத்தால் ஐந்து பிறவிகளில் யவனுகவும், துலுஷ்க ளுகவும் பிறந்தார். அக்னி பூஜை இல்லாததால் ஒட்டை யாகவும் பிறந்து ஸ்ரீ முஷ்ணத்தின் அருகில் உள்ள காட் டில் மலத்தைத்தின்னும் ஒரு பன்றியாகப் பிறந்தார்.

### பத்ம கர்ப்பரும், பிரும்ம சர்மாவும்.

விருத்தாசல க்ஷேத்ரத்தில் ஆத்ரேய கோத்ரத்தில் தோன்றிய பத்ம கர்ப்பர் என்று ஓர் வேதியர் இருந்தார். பஞ்சாக்ஷரீ, பஞ்சமஹா யக்ஞம் முதலியவைகளை விடா மல் செய்வார். அடக்கமும், பொறுமையும் உள்ளவர். ஆன்ஹிகங்களை ஒழுங்காக அனுஷ்டிப்பவர். ப்ராத ஸ்நானமும், மாத்யான்ஹிக ஸ்நாநமும் தவருதவர். ஜபம், வேதாத்யயனம், விஷ்ணு புராணம், விஷ்ணு பூஜை இவைகளில் ஈடுபட்டவர். நித்யம் ராம ஸஹஸ்ர நாமத்தினுல் பாவனமானவர். அவர் ஒரு ஸமயம் துலா மாஸம் நேர்ந்த பொழுது பிரும்ம வித்துக்கள் பலர் சூழ காவேரீ ஸ்நானம் செய்யக் கிளம்பினுர். அருணேதயகாலத்தில் ஸ்நானம் செய்ய வேண்டுமென்று அர்த்த ராத்திரியிலேயே கிளம்பிவிட்டார். அச்சமயம் ஆகாயமெல்லாம் மேகம் சூழ்ந்திருந்தது. புயல் காற்று வீசியது. இடிகள் கர்ஜித்தன. மின்னல் கண்ணைப்பறித் தது. எங்கும் ஒரே கடுமையான இருள் சூழ்ந்திருந்தது. வழி தெரியாமல் அனைவரும் பத்மகர்பருடன் மழையினுல் கஷ்டப்பட்டு அரண்யத்தில் சுற்றினுர்கள். அச்சமயம் மழை பொழிந்ததால் பூமியில் உண்டான வாஸனையை முகர்ந்து கொண்டு "குர், குர்" என்ற சப்தத்தோடு ஓர் பன்றி ஓடிவந்தது. அதே பிரும்ம சர்மாவாம். கோரப் பற்களால் பூமியைப்பெயர்த்து கோரைக்கிழங்கு களைப் பிடுங்கித் தின்றுகொண்டு, கால் நகத்தால் மண்ணைவாரி எறிந்து கொண்டு இவர்களைத் துரத்த ஆரம்பித்தது. யமன் வாஹனமான எருமை போலுள்ள அதைக்கண்டு அனைவரும் நடுங்கினுர்கள். அது இவர் களைத் துரத்த மூலைக்கொருவராக ஓடினுர்கள். ஓடும் வேகத்தினுலும் கல், முள்ளுகளாலும், சேற்றினுலும் பெருமூச்சுவிட்டுக்கொண்டு ஓடும் பத்ம கர்பரையே அது துரத்திற்று. தெற்கு திக்கைநாடி அவர் ஓட, பின்னர் அது துரத்திவர மெதுவாக காவேரீ தீரம் வந்து சேர்ந்தார்.

அந்த பிராம்மணனை அது கடித்துக் கொல்ல ஆரம்பிக்க முயற்சித்தது. அப்பொழுது ஒரு தாஸி காவேரியில் ஸ்நானம் செய்து தலை மயிரை உதறினாள். அருணோதய காலத்தில் அதிலிருந்து தெறித்த ஓர் திவலையானது அப்பன்றியின் மீது விழுந்தது. அந்த க்ஷணத்திலேயே அதன் பாபங்களெல்லாம் அகன்று அது சுத்தமானது. முன் அச்வத்தத்தை ஸேவித்ததாலும், சிவபூஜை மஹிமையாலும், பன்றி சரீரத்தை விட்டு தேவ சரீரத்துடன் ஆகாசத்தில் திவ்ய விமானத்தில் நின்றது.

அழகிய மாலை, வாஸனையுள்ள கந்தம், திவ்ய வஸ்த்ரம், ஆபரணம் இவைகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தார். தேவ ஸ்திரீகள் அவரை ஆலிங்கனம் செய்து கொண்டிருந்தனர். அத்தகைய பிரும்ம சர்மாவைப் பார்த்துக் காவேரீ ஸ்நானத்திற்கு வந்த அனைவரும் ஆச்சர்யமடைந்தார்கள். ஆகாயத்தில் துந்துபி முழங்கிற்று. பன்றி சரீரமகன்று சிறந்த தேவ சரீரத்தைப் பெற்ற அவரது நிலை யாருக்குத்தான் ஆச்சர்யத்தை உண்டு பண்ணாது? பய மகன்ற பத்ம கர்ப்பர் அவரைப் பார்த்து "தேவர் போலிருக்கின்ற தாங்கள் யார்? எந்த பாபத்தினால் பன்றி சரீரத்தைப் பெற்றீர்? எந்த புண்யத்தினால் அதிலிருந்து விடுபட்டீர்"? என்றுகேட்டார். பிரும்ம சர்மா, தனது பூர்வ கதைகளைச் சொல்லி "தாஸியினுடைய தலைமயிரில் பட்ட காவேரீ ஜலம் என் மீது தற்செயலாகப் பட்டதால் நான் இந்த திவ்ய சரீரத்தைப் பெற்றேன். உம்மைத் துரத்தி வந்ததால் காவேரிக்கு வரும்படியும் அந்த ஜலம் மேல் படும்படியும் நேர்ந்தது. அதனால் பாபமும் பன்றி ஜன்மமும் அகன்றது. தயா சீலரான பிராம்மணோத்தமா! உமக்கு நமஸ்காரம். திவ்யலோகம் செல்ல எனக்கு விடையளியும்" என்றார். தாஸியையும் கொண்டாடி ஸ்வர்க்கலோகம் சென்றார். ஆங்குள்ள அனைவரும் துலா காவேரீ ஸ்நான மஹிமையைக் கொண்டாடி விதிப்படி ஸ்நானம் செய்தனர். பித்ரு தேவதைகளுக்குத் தர்ப்பணம் செய்து வேத மாதாவான காயத்ரியை ஜபித்துக்கொண்டிருக்கும் பத்ம கர்ப்பரை அணுகி, பிராம்மணர் அனைவரும், "ஓ பகவன்! ஸர்வ தர்மத்தையும் சாஸ்த்ரங்களையும் அறிந்த நீர் எங்களிடம் கருணை புரியும். காவேரீ மாஹாத்ம்யத்தைப் படித்து எங்களைக் கரையேற்றும். உங்களைப் போன்ற ஸாதுக்களின் சேர்க்கை மோக்ஷத்தையே அளிக்கும். பாபத்தை



அகற்றக்கூடிய காவேரீ ஸ்நான விதியைக் கூறும். எதை த்யானம் செய்யவேண்டும்? என்ன விதி? தேவதை யார்? நியமம் என்ன? கேவலம் தாஸியின் கேச ஜலம் பட்டவுடனேயே பன்றியும் விமானமேறி ஸ்வர்க்கம் சென்றது. ஆதலால் விவரமாக அதைக் கூறும்" என்றார்கள்.

இங்ஙனம் அனைவராலும் பிரார்த்திக்கப்பட்ட பத்ம கர்ப்பர் கேட்பவர் பாபத்தை அகற்றுவதும் விசித்ரமானதும் அழகாயுமுள்ள துலா மாஹாத்ம்யத்தை வர்ணித்தார். அதைக்கேட்டு அனைவரும் அங்ஙனமே ஸ்நானம் செய்து ச்ரவணம் செய்தார்கள். வேதத்தில் அதிகாரம் இல்லாத ஸ்திரீ போன்றவர்களுக்கும் ஸர்வ பிராணிகளுக்கும் ஞான ஸித்தியை அளிக்கத் தக்க தீபம் இது. பிரதிதினம் நியமத்துடன் ஒரு முகூர்த்த காலமேனும், அரை முகூர்த்த காலமேனும் இதை ச்ரவணம் செய்தால் அவர்களுக்கு ஒரு நாளும் துர்கதி தோன்றாது. ஜனன மரணமெனும் துன்பத்தைப் போக்கடிக்க ஸத்கதா ச்ரவணம், பகவன் நாம கீர்த்தனம் என்ற இரண்டு மருந்துகள் தான் உண்டு. பாலனோ, யுவாவோ, வ்ருத்தனோ, தரித்ரனோ, ச்ரோத்ரியனோ, புராணமறிந்தவன், எப்பொழுதும் புண்யத்தை விரும்புகின்றவர்களால் பூஜிக்கத்தக்கவன், நமஸ்கரிக்கவும் தக்கவனாவன். அவனைத் தாழ்ந்தவனாகக் கருதக்கூடாது. மோக்ஷத்தை அளிக்கும் புராணக்ஞனைத் தவிர வேறு யார் சிறந்த குரு? ஸம்ஸாரத்தில் பலகோடி ஜன்மங்கள் எடுத்து மரித்துவரும் ஜீவராசிகளுக்கு நல்வழி காட்டும் குரு புராணக்ஞனே ஆவான். பௌராணிகன் புராணத்தைக்கூறுமிடம் வ்யாஸாஸனம் எனப்படும். கதை முடியும் வரை அவர் ஒருவருக்கும் நமஸ்காரம் செய்யக்கூடாது. துர்ஜன ஸமாஜத்திலும், நீசர், துஷ்ட பிராணிகள் உள்ள தேசத்திலும், த்யூதமாடும் இடத்திலும், புராணம் சொல்லலாகாது. கேட்பவர்கள் ச்ரத்தையுடனும், பக்தியுடனும் மௌனமாக இருந்து கேட்டால், புண்யத்தை அடைவார்கள்.

## புராணம் கேட்க வேண்டிய நியமம்.

வேதத்தில் புருஷ ஸூக்தம் போலும், பாரதத்தில் கீதை போலும், மந்த்ரங்களில் காயத்ரீ போலும், வ்ரதங்களில் ஏகாதசி போலும், ஸ்நானங்களில் துலா காவேரீ ஸ்நானம் சிறந்தது. அதிலும் ஸ்ரீ ரங்கநாதனுடைய

ஸங்கதியில் ஸ்நானம் செய்வது மிக மிகச் சிறந்தது. தேவாலயம், மடம், உத்யானம், அக்ரஹாரம், ஸ்மிருதி சொன்னபடி ஒழுங்காக ராஜ்ய பரிபாலனம் இவைகளைச் செய்தால் என்ன புண்யமோ அதைவிட துலா காவேரீ ஸ்நானம் செய்தால் புண்யம் அதிகமாம். துலா மாதத்தில் முப்பது நாட்களும் ஸ்நானம் செய்து முடிவில் ப்ராம்மண போஜனம் செய்விக்க வேண்டும். த்வாதசியில் ஆயிரம் ப்ராம்மணர்களுக்கு பாயஸான்னம் அளிக்க வேண்டும். மாகமாஸம் ரதஸப்தமியிலும், வைசாக மாஸம் பூர்ணிமையிலும் ஆயிரத்தெட்டு அல்லது நூற்றெட்டு பிராம்மணர்களுக்கு அன்னதானம் செய்ய வேண்டும். கார்த்திகை மாதம் வரையில் துலா காவேரீ கதை கேட்டுப் புராணம் கூறியவரைப் பூஜிக்க வேண்டும். துலா மாஸ த்வாதசியில் ஸ்நானம் செய்து பிராம்மணர்களுக்குப் பாயஸான்னம் அளித்தால் மலடி கூட குழந்தை பெறுவாள். விதவை விஷ்ணுபதம் செல்வாள்.

தாம்பூலம், கற்பூரம் முதலியவைகளால் புராணத்தைப் பூஜித்துப் பக்தியுடன் கதை கேட்போர் தரித்ரராக மாட்டார். கதை நடக்கும் பொழுது பூர்த்தியாவதற்குள் எழுந்து செல்லக்கூடாது. அப்படிச்சென்ருல் போகத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும்பொழுது, அவரோ, அவர் மனைவியோ, ஸம்பத்தோ அழிந்துவிடும். தலைப்பாகை கட்டிக்கொண்டு கதை கேட்டால் கொக்காகப் பிறப்பார். கதையின் நடுவில் தாம்பூலம் தரிப்பவர் நாய் விஷ்டையைத் தின்னும் பிராணியாகப் பிறப்பார். பௌராணிகரை விட உயர்ந்த ஆஸனத்தில் அமர்ந்து கதை கேட்பவர் காக்கையாக ஜனிப்பார். கால்மேல் காலை போட்டுக்கொண்டு கேட்பவர் அர்ஜுன மரமாவார். நமஸ்காரம் செய்யாமல் கதை கேட்பவர் விஷ விருக்ஷமாவார். படுத்துக்கொண்டே கதை கேட்பவர் மலைப்பாம்பாகப் பிறப்பர். பௌராணிகருக்கு ஸமமான ஆஸனத்தில் அமர்ந்து கேட்டால் குரு பத்னீ கமனம் செய்த பாபியாவார். புராணமறிந்தவனையோ, பாபத்தை அகற்றும் புராண கதையையோ நிந்திப்பவர் நூறுபிறவி நாயாகப் பிறப்பர். கதை நடக்கும் பொழுது அஸத்தான கேள்விகளைக் கேட்பவர் கழுதையாகப் பிறந்து பிறகு ஓணாகவும் ஜனிப்பர். (கதை கேட்பதில் இவ்வளவு சிரமம் இருப்பதால்) கதையே கேட்கவேண்டாம் என்று இருப்பவர்கள் பன்றியாகப் பிறப்பார்கள்.



கதையைக் கேட்க முடியாவிடினும் அதை ஆமோதிப்பவர் நற்கதி பெறுவர். எல்லோரையும் கதை கேட்கும்படி ஏற்பாடு செய்பவர் ப்ரும்ம பதம் அடைவர். புராணத்திற்கும், பௌராணிகருக்கும் ஆஸனமாகக் கம்பளி, வஸ்த்ரம், மஞ்சம், பலகை முதலியவைகளைத் தருபவர் இஷ்டமான லோகங்களுக்குச் சென்று முடிவில் ப்ரும்மலோகம் செல்வர். புராணத்திற்கு நூலாலாகிய ஸூத்ரத்தையோ, வஸ்த்ரத்தையோ புராணத்தைக் கட்டும்படி தானம் செய்பவர்கள் பல பிறவிகளில் போகமுள்ளவர்களாகவும் ஸம்பத்து உள்ளவர்களாகவுமாவார்கள். காவேரீ மஹிமை விதிப்படி கூறுகிறேன். நன்கு கேளுங்கள்! என்று பத்ம கர்பர் படித்துக் கூறினர். துலாமாஸத்தில் காவேரீ ஜலத்தில் ஒருமுறை ஸ்நானம் செய்தாலும் ப்ரபாஸ தீர்த்தத்தில் ஒருமுறை ஸ்நானம் செய்தாலும் விஷ்ணுலோகத்தில் கொண்டாடப்படுவர். இதில் ஒரு ஸ்லோகத்தைக் கேட்டாலும் திவ்யமான ஹரிகதையைக் கேட்டாலும் மஹாபாபியாயினும் பாபத்திலிருந்து விடுபடுவான். ஸங்கல்ப நியமாதிகளின்றி கேவல ஸ்நாநம் செய்தாலுமே ஏழு ஜன்ம பாபத்தை அகற்றும். நியமத்தோடு ஸ்நானம் செய்பவன் தாய்குலத்திலும், தன்குலத்திலும் ஏழுகுலத்தை உத்தாகரணம் செய்து பகவானை அடைவான். த்ரவ்யத்தில் லோபப்படாமல் சக்திக் கேற்றபடி துலா மாஹாத்ம்யம் கூறுபவரைப் பூஜித்து காவேரீ ஸ்நானத்திலும், தானத்திலும், மாஹாத்ம்யத்தைக் கேட்பதிலும் பாபமகன்று ஸ்வர்க்கம் செல்வார்கள். புத்ரனை விரும்புபவர் புத்ரனையும், தனத்தை விரும்புபவர் தனத்தையும், ஆயுஸ்ஸை விரும்புபவர் ஆயுஸ்ஸையும் காவேரீஸ்நானத்திலும், சிரவணத்திலும் பெறுவர். ஸகல காமங்களையும் பெறுவதற்கு நீங்கள் இதைக் கேளுங்கள்.

பத்தாம் அத்யாயம் முற்றிற்று.

## பதினேரும் அத்யாயம்—58 சுலோகங்கள்.

**நாரதர்:** ஓ தர்ம புத்ர! பத்ம கர்பர் ப்ராம்மணர்களுக்குக் கூறியதைச் சொல்கிறேன் கேள். துலாஸ்நானம் செய்பவர் பாபமகன்று வைகுண்டம் செல்வர். காவேரி தீரத்தில் உண்டானதும், பலவகையான ரஸமுள்ளதுமான கறி காய்களுடனும், பால் தயிருடனும், மது,

சர்க்கரை நிறைந்த பாயஸான்னத்தைக் காவேரீ தீரத்தில் ஸ்நானம் செய்து காவேரி ஜலத்தால் பக்வம் செய்ததை அளிப்பவன் நூறு வம்சத்தை உத்தாணம் செய்கிறுன். இஷ்டமான ஸகல போகங்களேயும் அநுபவிப்பான். குடும்பியாயும், தரித்ரனுயும் உள்ள ச்ரோத்ரியனுக்குத் தக்ஷிணே, தாம்பூலத்துடன் இரண்டு வஸ்த்ரமளிப்பவன் தேவர்களால் பூஜிக்கப்பட்டு நூறு வம்சத்தவருடன் சிவ லோகம் செல்கிறுன். துலா மாஸத்தில் சிவாலயத்தில் தீபம் ஏற்றுபவன், தீபத்தைத் துடைத்து வைப்பவன் ஆகியவர் சிவலோகம் செல்வர். புண்ய க்ஷேத்திரத்தில் புண்ய ஜலத்தில் ஸ்நானம்செய்து சிவதர்சனம் செய்தால் மோக்ஷமடைவான். துலா ஸ்நானம் செய்து ஶாகமூல பலங்களேயும், அரிசி, பருப்பு, உளுந்து, தாம்பூலம், எள்ளு, தேன், நெய், பால், வெல்லம், ஸ்வர்ணம், இவை களேயும் தரித்ரனை ப்ராம்மணனுக்குப் பிரதிதினம் அளிப் பவன் மற்றெல்லா தான பலனேயும், ஸர்வ யக்ஞ பலனே யும், ஸர்வ தீர்த்த ஸ்நான பலனேயும் அடைவான் என்ப தில் ஸந்தேகம் இல்லே. அதிகம் கூறுவதேன்? ஸ்நானத் திலேயே மோக்ஷத்தை அளிக்கும் காவேரியைத் தேவர் களும் கொண்டாடுகிறுர்கள். துலா மாஸத்தில் ஸ்நானத் தில் விருப்பமில்லாதவர் ஜீவித்திருந்தும் ஜீவனற்றவர் ஆவர். அவர் ஜன்மாவும் வீணுகும் என்று பத்ம கர்பர் கூறிக்கொண்டிருக்கும்பொழுது, க்ரூரமான ஓர் முதலே ஸ்நானம் செய்ய இறங்கிய ஓர் ப்ராம்மணனேக் காலேப் பிடித்து விழுங்க ஆரம்பித்தது. ஆனுல், பூர்வபுண்யத்தி னுல், புராணத்தில் ஒரு ஶ்லோகத்தைக் கேட்டது. துலா மாஸத்தில் காலேயில் காவேரியில் ஸ்நானம் செய்பவர் எல்லா பாபங்களேயும் விட்டு, விஷ்ணுவின் பரமபதத்தை அடைவர் என்ற ஶ்லோகம் அதன் காதில் விழுந்தவுடன், அதன் பாபமகன்றது. முதலே உடலே விட்டு திவ்ய தேஹம் பெற்றது. திவ்ய ஆடை ஆபரணங்களே அணிந்து விமானத்தில் நிற்கும் அவரைப்பார்த்து ஆஶ்சர்யமடைந்த பத்ம கர்பர் அவரைக் கேட்டார். விமானத்தில் அப்ஸரஸ் ஸுகள் சூழ ப்ரகாசிக்கும் நீர் தேவனு? உப தேவனு? எங்கே உள்ளவர்? எங்கே ஜனித்தவர்?

**தேவபுருஷன்:** ஐயா! நான் தேவனல்ல; பாஞ்சால தேசத்தில் பிறந்த ப்ராம்மணன். கங்க கோத்ரத்தில் ஜனித்தவன். ஸூர்யபந்து என ப்ரஸித்தமானவன்.



ஶ்ருதி, ஸ்மிருதிகளில் சிறந்த அறிவுள்ளவன். ஆனுல் தயவில்லாதவன். கடினமானவன். கோபமுள்ளவன். அயோக்யன். யார் எதைக்கேட்டாலும் இல்லே, இல்லே என்பவன். புஷ்கலம் என்ற அக்ரகாரத்தில் பொருள் தேடுவதற்காக வந்து வஸித்தேன். அங்கு எந்த யாசக ருக்கும் பொருள் கொடாதபடி தடுப்பேன். பாபி, ப்ராம் மணர்களுக்கே தீங்கு செய்வேன். ஆட்டக்காரன், தாஸி, நடிகன் ஆகியவர்களுக்குத் தானம் செய்வேன். துலா ஸ்நானம் செய்தவனல்ல. நித்ய கர்மாவை விட்டவன். ஆசாரப்ரஷ்டன். காமத்திலும், உணவிலுமே காலத்தைக் கழித்தவன். கண்வர் எனும் தரித்ர ப்ராம்மணன் யக்ஞம் செய்வதற்குப் பொருள் வேண்டுமென்று ஆங்குள்ளோ ரை யாசித்தார். லோபத்தினுல் நான் கொடுக்காததுடன் ஊரில் உள்ளவரையும் அவருக்குக் கொடுக்காதீர்கள் எனத் தடுத்தேன். அதனுல் என் ஆயுள் குறைந்து, நரகங் களே அநுபவித்து முதலேயாகப் பிறந்தேன். அந்த ப்ராம் மணனேப் பிடித்தபோது நீர் கூறிய ஶ்லோகம் என் காதில் விழுந்தது. காருண்ய மூர்த்தியான உம்மால் இந்தப் பாப ஜன்மாவிலிருந்து விடுபட்டேன். ஸாதுக்கள் காரணம் இன்றியே எல்லோரிடமும் தயவு செலுத்துவர். தர்சன மாத்ரத்தினுல் ஸம்ஸாரத்தி லிருந்து கரை யேற்றுவர். உம்மால்தான் தன்யனுனேன். அருள்புரியப்பட்டேன். சரணுகதியடைந்த என்னே ரக்ஷியும். மஹா பாபியான எனக்கு உமது தர்சனமும், துலா மாஹாத்ம்ய ஶ்ரவண மும் எதனுல் கிடைத்தது? என்று வேண்டினுர். இதைக் கேட்டு எல்லோருடனும் ஆஶ்சர்யமடைந்து, முகூர்த்த காலம் த்யானம் செய்து பத்மகர்பர் கூறினுர்.

"நீ முற்பிறவியில் ஸஹ்யாத்ரியில் காவேரிஸ்நானம் செய்து பௌராணிகர் கூறிய காவேரீ ஸ்தோத்ரத்தைக் கேட்டாய். தெய்வச் செயலாக வங்கதேசத்தரசன் அங்கு வந்தார். அவர் வேட்டையை நிறுத்திக் காவேரி ஸ்நானம் செய்யும் ஸாதுக்களே தர்சித்துத் தானும் ஸ்நானம் செய் தார். புராணத்தைக் கேட்டு எல்லோருக்கும் தானம் செய்தார். நீ அரசனிடமிருந்து அதிகமான பொருளேக் கவர ஸாதுபோல் வேஷம் தரித்துக் காவேரி ஸ்நானம் செய்தாய். ஆங்குள்ள ப்ராம்மணர்களே நமஸ்கரித்தாய். அந்த புண்யத்தால் ஸத்ஸங்கமும், காவேரி மாஹாம்யத் தைக் கேட்டதால் இங்கு காவேரியின் பெருமையைக்

கேட்கும் பாக்யமும் கிடைத்தது. அதனால் பாபமகன்று நற்கதி பெற்றாய். ஶ்ரத்தையாய் விதிப்படி ஸ்நானம் செய்தவர் புக்தி முக்திகளைப் பெறுவார் என்பதில் ஸந்தேஹமில்லை. இதைக் கேட்டு ஆஶ்சர்யமடைந்த தேவ புருஷன் பத்மகர்பரை ப்ரதக்ஷிணம் செய்து விடை பெற்று ஸ்வர்க்கம் சென்றான். புண்யகரமானது சூர்ய பந்துவின் சரிதம்.

**பத்மகர்பர்:** ஆயுஸ்ஸையும், ஆரோக்யத்தையும் விருத்திசெய்யக்கூடிய ஸௌர்யபந்துவின் சரிதத்தைக் கூறுகிறேன், கேளுங்கள். அதைப் படித்தாலும் கேட்டாலும் பாபம் அகலும். யாகங்களைவிட, தானங்களைவிட, உக்ரமான தவத்தைவிடவும் துலா ஸ்நானம் சிறந்ததென கர்ஜிக்கின்றது. காவேரீ, ப்ரும்மாவர்த்தம், குருக்ஷேத்ரம், புஷ்கரம், காசி, ப்ரயாகம், கங்கா ஸாகர ஸங்கமம் முதலிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தால் என்ன புண்யமோ அந்த புண்யம் துலா காவேரீ ஸ்நானம் ஒன்றினால் மாத்ரம் கிடைக்கிறது. ஸ்வர்க்கத்திலோ பூமியிலோ ஸ்திரமாக ஸௌக்யத்தை அநுபவிக்க விருப்பமிருந்தால் துலா மாஸத்தில் காவேரியில் எந்த இடத்திலாவது ஸ்நானம் செய்யவேண்டும். ஆயுஸ், ஆரோக்யம், ஸம்பத்து, அழகு, யௌவனம் இவைகளை வேண்டுபவரும், நரகம் வேண்டாம், ஏழ்மை, ஸங்கடம் அகலவேண்டும் என விரும்புபவரும், தௌர்பாக்யம், பாபம் எனும் மலம் அகலவேண்டுமென்று விரும்பினாலும் துலா காவேரி ஸ்நானமே இதற்கு ஏற்ற உபாயமாகும். உலகிலுள்ள மூன்றரை கோடி புண்ய தீர்த்தங்கள் துலா மாதத்தில் காவேரியில் வருகின்றன என்று பத்மகர்பர் கூறியதைக் கேட்டு பல ப்ராம்மணர்கள் துலா காவேரீஸ்நானம் செய்ய ஆரம்பித்தனர். ஆதலால் நீயும் துலா காவேரி ஸ்நானம் செய் என தர்மருக்கு நாரதர் கூறினார்.

பதினோராம் அத்யாயம் முற்றிற்று.

## பனிரெண்டாமத்யாயம்—142 சுலோகங்கள்.

**நாரதர்:** கார்த்திகை மாஹாத்ம்யத்தைக் கேள். நூறாண்டு எவர் கூறினாலும் அதைக் கூற முடியாது. ப்ரும்மாவே அதன் பெருமையை நன்றாக அறிவார். நெல்லி மரத்தின் நிழலில் நீர்ப்பாம்பால் பிடிக்கப்பட்டு



ஒரு தவளை நற்கதி அடைந்தது. பூர்வ ஜன்ம விஷயத்தையும் அது உணர்ந்தது.

**தர்மராஜன்:** மஹரிஷே! தவளை அறிவில்லா அற்ப ஜந்து அல்லவா? நற்கர்மாவால் அடையத் தக்கதான நெல்லி மரத்தடியில் காவேரியில் கார்த்திகை ஸ்நானம், ஸ்வர்க்கம் ஆகியவைகளை எப்படி அடைந்தது? மனஶ்ஶுத்தி இல்லாதவர்க்கு உடலும் சுத்தமில்லை. நற்கதியும் கிடைக்காதென ஶாஸ்த்ரம் அறிந்தோர் கூறுகிறார்களே! ஶாஸ்த்ர விரோதமாக இருப்பதால் என் மனம் கலங்குகிறது. சித்தம் தெளியும்படி விஷயத்தை விளக்கிக் கூறுங்கள். இந்த தத்வத்தை உம்மைத்தவிர வேறு யார் அறிவர்? என்னைப் போன்ற இந்த தத்வத்தை அறிய ஆவல்கொண்ட ஶிஷ்யன் வேறு யார்?

**நாரதர்:** தர்ம! தத்வக்ஞானத்தை அறிந்தவன் நீதான் ரஹஸ்யமான தத்வத்தை அறிய என்னைக் கேட்கிறாய்; நீ கூறுவது உண்மை! ஜன்மாந்தரத்தில் செய்த தவத்தாலும், புண்ய தீர்த்த ஸேவையாலும், ஸத்பாத்ரத்தில் தானம் செய்ததாலும் தத்வக்ஞானம் உண்டாகிறது. எப்போதும் எவருடனும் ஸங்கமென்பது கூடாது. ஸங்கமில்லாதிருக்க முடியாதெனில் ஸத்துக்களுடன் சேர வேண்டும். ஸத்ஸங்கமென்பது ஸங்கத்தால் உண்டாகும் துக்கத்தைப் போக்கும் மருந்தாகும். நீ உலகில் ஸத்புருஷன், கிருதார்த்தன், புண்யங்களால் ஸ்வர்க்கம் செல்லப்போகிறாய். உனது தந்தைபோல் யக்ஞாதிகளைச் செய்தவன் ஆதலால் உனக்கு ஸத்ஸங்கம் ஏற்பட்டது. ஸத்ஸங்கத்தால் உனக்கு ஸத்கதை கேட்க ஆசை உண்டானது. ஸம்ஸாரமெனும் நோயகலவும் ஸத்ஸங்கமே சிறந்த மருந்தாம்.

### தவளையும் பாம்பும்.

ஸத்ஸங்க பாக்யத்தாலும் கிருத்திகா ஸ்நான புண்யத்தாலும் நீர்ப்பாம்பினால் பக்ஷிக்கப்பட்ட தவளையும் ஸ்வர்க்கம் சென்றது. மறுபடி பூமியில் விஷ்ணுபக்தனாக ஜனித்து வைகுண்டம் சென்றது. விராட நகரத்தில் வாஸ்து ஹோமம் என சிறந்த ஒரு அக்ரஹாரம் இருந்தது. அடிக்கடி வாஸ்துஹோமம் செய்து அதனால் பவித்ரமாகி காரணப்பெயர் பெற்றது. வேதசாஸ்த்ரம் உணர்ந்தவர்களும் விஷ்ணு பக்தி ஶாந்தி ஶத்ருவையும் மித்ரனையும்

ஸமமாக என்னுதல், ப்ரும்ம நிஷ்டை, இந்த்ரிய ஜயம், காமக்ரோதமில்லாமை, விஷ்ணுபூஜை, விஷ்ணு புராணம் படித்தல் முதலிய நற்குணம் நிறைந்த ப்ராம்மணோத்தமர் களுக்கு அது இருப்பிடமாம். ஆங்குள்ள குழந்தைமுதல் விருத்தர் வரை அனைவரும் அருணோதய காலத்தில் எழுந்து கார்த்திகை ஸ்நானம் செய்வார்கள். விதிப்படி காயத்ரீ ஜபம் செய்து விஷ்ணுவைப் பூஜித்து நெல்லி மரத்தடியில் அமர்ந்து கார்த்திகைப் புராணம் கேட்பர்.

ஒரு நாள் காக்கை ஒன்று ஒரு தவளையை மூக்கால் கொத்தி ஹிம்ஸித்தது. அது தாவித்தாவி வந்து ப்ராம் மணர் திருவடியைச் சரணமடைவதுபோல் ப்ராம்மணர் காலில் விழுந்தது. அங்கும் காக்கைக்குப் பயந்து காவேரி ஜலத்தில் குதித்தது. எங்கு சென்றாலென்ன? அவரவர் வினை பின்தொடருமல்லவா! ஜலத்திலிருந்த ஒரு நீர்ப் பாம்பு ஆஹாரம் கிடைத்ததென தவளையின் காலைப் பிடித்துக்கொண்டது. தவளை கத்திக்கொண்டே இருக்க பாம்பு நீரில் சிறிது மூழ்கி சிறிது வெளியில் கிளம்பி தவளையை விழுங்க ஆரம்பித்தது. களைத்து சாகும் தருவா யில் இருந்த தவளை தைர்யத்துடன் பாம்பைப்பார்த்துக் கூறிற்று. பாப ஜன்மாவான ஓ நீர் பாம்பே! ஏன் என்னை நீ ஹிம்ஸிக்கின்றாய்? மஹா கஷ்டமான உனது முற் பிறவி ஸமாசாரத்தை அறியாமல் கர்வங்கொண்டு சுய நலமே முக்யமாகக்கருதி ஸாதுவை கஷ்டப்படுத்து கிறாய்? இத்தகையவர் பிழைத்திருந்தாலும் பிழைத்திருக் கும் பிணமாவர். ஓ மூட! ஸர்வ ப்ராணிகளுக்குள் மிக ஸாதுவானவன்நான். எவரையும் ஹிம்ஸிக்காமல் கிடைத் ததைக்கொண்டு ஜீவிக்கிறேன். சீதோஷ்ணங்களில் ஸம மானவனும் கிடைத்ததைக் கொண்டு ஸந்தோஷமடைபவ னுமான ஸாதுவை ஹிம்ஸிப்பவன் பதிதனுவான். நீ மஹா பாப ஜன்மா! பாப புண்யம் நரகம் முதலியவை களைக் கருதாமல் என்னைத் துன்பப்படுத்துகிறாய். நானும் முற்பிறவியில் புண்ய பாப விவேகமில்லாதிருந்ததால் இப் பிறவியைப் பெற்றேன். நான் பலவான். தனமுள்ள வன். கெட்டிக்காரன். என கர்வங்கொண்டு ஸாதுவை ஹிம்ஸிக்கும் துஷ்டனைக்கண்டு யமன் சிரிக்கிறான் மானி டப்பிறவியில்தான் பாப புண்ய பகுத்தறிவுத்தோன்றும்.

மற்ற பிறவிகள் பாபத்தால் அதோகதியடைகின்றன. ஒரே துக்கமயமானதும், அழியக்கூடியதும், மல ஜலம்



நிறைந்ததுமான உடலை நித்யமானது என நினைப்பவன் மூச்சுள்ள ஶவமாவான். இதை அறியாமல் வயிற்றை நிறப்புபவன் பல துக்கங்களை அனுபவித்து, நாய் மாம் ஸத்தை உண்ணும் நரகம் செல்வான். ஓ மூட! உனது முற்பிறவியை யானறிவேன். என்னை விட்டு விட்டு வேறு இடம் செல். நீ நன்மை பெறுவாய்! பரோபகாரியும் ஸர்வ ப்ராணிகளிடமும் தயை உள்ளவனுமான மனிதன், தபஸ்வீ, யாகம் செய்தவன், முக்தி பெற்றவன், ஸர்வ தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்தவன், யோகீ, தீக்ஷிதன் ஆவான். ஸாதுக்களை ஹிம்ஸிப்பவன் நரகம் சென்று உன்னைப்போல் பிறப்பான். ஆதலால் நீ தயையுடன் இரு. என்று தவளை கூறியதைக் கேட்ட பாம்பு அதை விட்டு விட்டு வெகுநேரம் அதைக் கவனித்துப் பார்த்தது. கொஞ்ச தூரம் அப்புறம் சென்றது. ஆஶ்சர்யமடைந்து தவளையைப் பார்த்து என்னை மன்னித்துவிடு என்று கூறி பயத்துடன் ஆஶ்சர்யமுமடைந்தது. பஶ்சாத்தாபம் தயை முதலியவைகளுடன் கூட அதைப்பார்த்துக் கேட்டது. மூடனான நான் புண்ய பாபங்களை அறியேன். ஹீன ஜன்மா என்பதையும் அறியேன். வயிற்றை நிறப்பிக் கொண்டிருக்கிறேன். ஸாதோ! உபகாரியான உமக்கு நமஸ்காரம். உமது அறிவைக் கண்டு ஆஶ்சர்யப்படுகி றேன். இவ்வளவு க்ஞானியும், முற்பிறவியை அறிந்தவரு மான உமக்கேன் இந்த ஜன்மா?

நான் யார்? எங்கிருந்தவன்? என்ன பிறவி பெற்றி ருந்தேன்? யாருடைய புத்ரன்? ஹீநஜன்மாவாக இருந் தாலும் நீர் புண்யவான் ஆவீர் என்று நீர் பாம்பு கூறுவ தைக் கேட்டு பயத்தை விட்டுச்சிரித்துக்கொண்டே தவளை கூறிற்று. ஓ பாம்பே! கபடமுள்ள உனது சொல்லை நம்புவதற்கில்லை. மூர்க்கன், பாபி, ஹிம்ஸிப்பவன் இவர் களுடன் பேசலாகாது. துஷ்டர்கள் வாக்யத்தை நம்பவே கூடாது. ஸந்தேஹமில்லை. கருநாகம் ஸ்திரீ இவர்களை நம்பினாலும் நம்பலாம். மூர்க்கனை நம்பக்கூடாது. இதைக் கேட்ட பாம்பு கூறிற்று: ஐயா! உமது ஸங்கத்தால் நான் ஶுத்தமாகி விட்டேன்! துஷ்டனல்ல, ஸத்யமாகக் கூறு கிறேன். என்னை நம்பும். நீர் எதனால் தவளை யானீர்? எந்த புண்யத்தால் நல்லறிவு பெற்றீர்? முற்பிறவியில் நீர் யார்? நான் எந்த பாபத்தினால் க்ரூர ஜன்மாவான இவ்வுடலைப் பெற்றேன்? இதெல்லாவற்றையும்

விரிவாகக் கூறும். தவளை தன் விருத்தாந்தத்தை முதலில் கூறிற்று.

## தவளையின் முற்பிறவி.

நான் முற்பிறவியில் காஞ்சீநகரத்தில் நான்கு வேதங்களையும் சகல சாஸ்த்ரங்களையும் கற்றுணர்ந்த பண்டிதன். ஶ்ரௌத (ஶ்ருது கூறிய யாகாதிகள்) ஸ்மார்த்த (ஸ்ம்ருதி கூறிய) கர்மாக்களில் நிபுணன். ஆயினும் துராசாரமுள்ளவன். பரான்னமே புஜிப்பவன். வாதத்தில் எல்லோரையும் ஜயித்தவன். டம்பத்திற்காக ஜனங்களை கண்டபோது வேத சாஸ்த்ரங்களைக் கூறுவேன். உபன்யாஸம் செய்வேன். பரம கோபீ. ஊரில் அனைவர்க்கும் உபாத்யாயம் செய்து வைப்பேன். உயர்ந்த பிராம்மணன் என்று எல்லோரும் சிராத்த நிமந்த்ரணத்திற்கு அழைப்பார்கள். பிரதி தினம் நிமந்த்ரணம் புஜிப்பேன். விவாஹ உபநயநாதி காலங்களில் வைதிகர்களுக் கெல்லாம் தக்ஷிணை தரும்படி என்னிடம் நம்பிப் பொருளைத் தருவர். ஸ்வல்பம் தந்து விட்டு மிகுதியை லோபத்தினுல் நானே எடுத்துச் செல்வேன். சிலர் நேராக மற்றவருக்கு அளிக்கும் தக்ஷிணையை அவர் ஸத்பாத்ரமல்ல, ஸத்பாத்ரமான எனக்கே கொடு என அதையும் நானே வாங்கிச் செல்வேன். ஔபாஸனம் ஸதாசாரம் பிராதஸ்நாநம் முதலியவைகளை விட்டவன். ஆனுல் வெளியில் சிறந்த சிஷ்டனை போல் வேஷம் தரிப்பேன். நித்யம் ஸ்த்ரீ ஸங்கம் செய்பவன். நன்கு புஜிப்பேன். ஆனுல் ஒருவருக்கும் ஒரு நாளும் ஆதித்யம் செய்யவில்லை.

காலையில் மடம் ஆலயம் முதலிய இடங்களில் புராணம் கூறுவேன். பிறருக்கு உபதேசிப்பேன். ஆனுல் ஒரு தர்மமும் செய்யமாட்டேன். புராணத்தில் வரும் வருமானத்தில் ஒருவருக்கும் ஒரு சிறிது கூட அளித்தறியேன். வாசாலகனை நான் ஸபையில் நன்ருக கௌரவிக்கப்பட்டேன். வித்யா கர்வத்தால் மற்றவர்களை த்ருணமாகக் கருதுவேன். ஒரு ஸமயம் மாக மாஸத்தில் பயோஷ்ணீ ஜலத்தில் ஆண்களும் பெண்களும் சிறியவரும் விருத்தரும் காலு வர்ணத்தாரும் துறவிகளும் விதிப்படி ஸ்நாநம் செய்தார்கள். க்ஞான விருத்தரும் வயோ விருத்தரும் கூடி மாக மாஹாத்ம்யம் கூறும்படி என்னை வேண்டினர். அங்ஙனம் யான் கூற மாக விருதம் முடிந்தபின் எனக்கு எதேஷ்டமாக ஸன்மாநம் செய்து பல்லக்கிலேற்றி வாத்யத்துடன் என்னை என்வீட்டில் கொண்டு விட்டனர். கம்பளம் வஸ்த்ரம் பட்டு தநம் முதலியவைகளை அளித்தனர். ஆயினும் லோபத்தினுல் யாருக்கும் சிறிதளவுகூட நான் தரவில்லை. பிறரை நம்பும்படி செய்வதற்காக ஆடம்பர அநுஷ்டாநம் செய்தேன். மநப்பூர்வமாக ஒன்றும் செய்யவில்லை. எல்லோரும் வருவதற்கு முன் அதிகாலையில் நதிக்கரையில் மடி வஸ்த்ரம் தரித்து புண்ட்ரமணிந்து ஜபம் செய்வது போல் அமர்ந்திருப்பேன்.

ஸம்ஸார வாழ்க்கையில் ஸதா சிந்தை கொண்டேன். யோகிகள் த்யாநம் செய்யும் பகவானை ஒரு நிமிஷம் கூட த்யாநம் செய்யவில்லை. அதிதி பூஜை வைஶ்வதேவம் துளஸி தளத்தால் விஷ்ணு பூஜை முதலியன செய்தறியேன். மாக புராணம் முடிந்த பின் ஒரு பிராம்மணனுக்குக் கூட அன்னமளிக்கவில்லை. பிறர் வீட்டில் அறுசுவை அன்னம் அருந்தினேன். லோபத்தால் க்ரஹணம் ஸங்க்ரமணம் முதலிய புண்ய காலங்களில் ஹிரண்ய ஶ்ராத்தங்கூட செய்ததில்லை. புராணத்தில் பலர் நவரத்ந மோதிரம், அறணுன், கடுக்கன், பட்டு வஸ்த்ரம், புடவை, கம்பளம் முதலியவைகளை அளித்தனர். முன்னூறு வராஹன் ஸ்வர்ணமும் வந்தது. பட்டுப் புடவையை மனைவிக்கும் மோதிரத்தைப் புத்ரனுக்கும், மாமனுர் மாமியாருக்கு வேஷ்டி புடவைகளையும் மைத்துனனுக்குக் கடுக்கனையும் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் வேஷ்டி புடவைகளையும் தந்தேன். ஒரு ஏழை பிராம்மணன் குளிரால் கஷ்டப்பட்டு தனக்கொரு வஸ்த்ரம் தரும்படிவேண்டினுன். பணமிருந்தால் கொடுத்து வஸ்த்ரம் வாங்கிச் செல் என அவரை விறட்டி விட்டேன்.

வயதானதால் அஜீர்ணம் அதிஸாரம் முதலிய நோய்கள் பீடிக்க பந்துக்களை விட்டு விட்டு இறந்து விடுவேனே என்றஞ்சி கதறினேன். புத்ரன் என் அருகில் வந்து அப்பா! ஏன் அழுகிறீர்? எங்களால் உமக்கென்ன உதவி? எங்களை நினைக்க வேண்டாம். தாங்கள் தேடிய பொருளை அபஹரிக்கும் சத்ருக்களல்லவா நாங்கள்? மனைவிமக்களிடம் ஸ்நேஹத்தால் உண்டாகும் மோஹத்தை விடுங்கள். பரலோகத்திற்கு பாதேயமும் (கட்டுஞ்சாதம்) பகவானுக்குப் பிரியமுமான தாநத்தைச்

செய்யுங்கள். புண்யமான கிதையைப் படியுங்கள். சக்தி இல்லையேல் ஒரு சுலோகமாவது கூறுங்கள். எங்களை மறந்து யதேஷ்டமாக தானம் செய்யும். ஸம்ஸார மோஹத்தால் இதுவரை தாங்கள் ஸத்கர்மாக்களைச் செய்ய வில்லை. வேதமறிந்த ஒருவருக்காவது அன்னமளிக்க வில்லை. ஒரு வித்வானையோ பக்தனையோ பூஜிக்கவில்லை. பொருள் தேடவே புராணம் படித்தீர். ஸகல ஶாஸ்த்ரங்களை அறிந்தும் முற்கர்ம வினையால் ஸம்ஸார பாஶத்தால் கட்டப்பட்டீர்.

தாங்கள் யார்? நான் யார்? கர்ம வஶத்தால் ஏற்படுவது உறவு. முற்செய்த வினையை சக்ரனும் அனுபவிக்க வேண்டும். பாபத்தால்தான் படித்தும் பரலோகத்திற்கு வேண்டியதைத் தேடிக்கொள்ளவில்லை, காலத்தை மீற எவராலும் முடியாது. விஷ்ணுமாயையை ஜயிக்க எவர் வல்லவர்? தாங்கள் கூட புண்ய பாப சிந்தையின்றி இருப்பது மாயையின் கார்யம்! எனது பார்யை பதிவ்ரதையாதலால் எனது இஷ்டத்தை அனுஸரித்து ஆயிரம் வராஹனைக் கொண்டு உம்மிடம் வந்திருக்கிறாள். அதை ஏழையான ஶ்ரோத்ரிய ப்ராம்மணனுக்கு தானம் செய்யும். அது பாபங்களை அகற்றும். கோதானம் ஸாளக்ராமம் பூமி க்ருஹம் உமக்கு விருப்பமாயுள்ள வஸ்துக்களை தானம் செய்யுங்கள். ஸ்மஶானத்திற்கு ஸமமான வீட்டில் ஏன் பற்றுக்கொண்டு வருந்துகிறீர்? வழிப்போக்கர் ஓரிடத்தில் கூடிப் பிரிவது போல் ஸம்ஸாரத்தில் சேர்ந்துப் பிரிகிறோம். பயங்கரமான யம கிங்கரர்களையும் கோரமான நரகங்களையும் தடுக்க முடியாது. எல்லாவற்றையும் அநுபவித்துவிட்டேன் என நீங்களே முன் கூறினீர்கள். ஸர்வக்ஞரான தாங்கள் ஏன் தர்மத்தை மறந்தீர்கள்? செய்த பாபத்திற்கேற்ற நரகங்கள் எது எது என உங்களுக்கே நன்கு தெரியுமே! பொருள் வீட்டிலேயே தங்கும். ஶ்மசானத்தில் பந்துக்கள் திரும்புவார்கள். புண்யமும் பாபமுமே இறந்து மேலே செல்பவனுடன் வரும். ஆதலால் அவச்யம் தர்மம் செய்யுங்கள். துன்பத்தையும் நரகத்தையும் தரும் ஸம்ஸார சிந்தையை விடுங்கள்.

தாங்கள் தநம் தேடித்தரும்வரை ஸந்தோஷமாக இருந்து பொருள் தேடாவிடில் கோபித்துக் கொள்ளும் மனைவி மக்கள் சத்ருக்களல்லவா? பற்றின்றி உடல் நன்றாக இருக்கும் போதே தர்மம் செய்யவேண்டும்.



ஸம்ஸாரத்தில் ஆசையுள்ளவன் நுனிகிளையிலுள்ள பழத்தில் ஆசைகொண்டு மரத்திலேறி விழுவதுபோல் பதிதனாகிறான். மனைவி மக்களுக்கு அடிமைப்பட்டு ஸ்வதந்த்ரமில்லாத மனிதன் நாஶமாவான். பாட்டில் ஈடுபட்ட மான் வலையில் சிக்குவது போலும் புல்லில் ஆசை கொண்டு பசு பாழுங்கிணற்றில் விழுவது போலும் அபத்யமானதைப் புசித்து நோயாளி அழிவதைப் போலவும் பயனற்ற ஸம்ஸாரத்தில் ஈடுபட்டவன் அழிவான். மரத்தைப் பலகையாக அறுத்து அதில் வைத்திருந்த முளையை ஒரு குரங்கு பிடுங்கிற்று. அந்த சந்தில் அதன் வால் அகப்பட்டுக் கொண்டு தவித்தது. அதைப் போன்றது அந்த ஸம்ஸாரியின் நிலை. இங்ஙனம் புத்ரனாலும் மனைவியாலும் போதிக்கப் பட்டாலும் அது என் காதில் ஏறவில்லை. பிழைக்க மாட்டோமா? நோயகலாதா? செல்வத்தையும் மனை மனைவிமக்களையும் அநுபவிக்கமாட்டோமா? என்றசிந்தையுடன் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தேன்.

இதனிடையில் வெட்டு கொல்லு என க்ரூரமாகப் பேசுகிறவர்களும் காளமேகம் போல் கருத்த பருத்த உடலுள்ளவர்களும் மேல் நோக்கி நிற்கும் செம்மட்டை மயிருள்ளவர்களும் கோரப் பற்கள் உள்ளவர்களும் புருவத்தை நெரித்துக்கொண்டு கதை, உலக்கை, சூலம் கோடாரி முதலியவைகளை ஏந்தியவர்களுமான யம படர் என்னிடம் வந்தார்கள். இரும்பு பாசத்தால் என்னைத் தலைகீழாகக்கட்டி நாக்கில் ஒரு பாசத்தைக்கட்டி இழுத்தார்கள். நிமிஷத்திற்கு நிமிஷம் அடித்தார்கள். நாயைக் கொண்டு கடிக்கச் செய்தார்கள். கற்களாலடித்துப் பொடியாக்குவது, வாளால் அருப்பது, கட்டைத்தணலை வர்ஷிப்பது, சுக்காங்கல் நிறைந்த வழி, கொதிக்கும் மணல் வழி, கூறான ஆணிகள் உள்ள வழி, கொசு, தேள் உள்ள வழி ஆகிய வழிகளில் அழைத்துச் செல்லுதல், துன்பத்தால் கதறி பசி தாஹத்தால் வாடி வதங்கும் என்னை மிரட்டி அடித்து இழுத்துச் செல்லுதல் முதலிய சிக்ஷைகளுடன் கோரமான மஹாரௌரவத்தில் தள்ளினார்கள். மலஜலநாற்றமுள்ளதும் இருள் சூழ்ந்ததுமான நரகத்தில் தள்ளி தலைகீழாக உள்ள என்னைத் தேள் பாம்பு முதலிய வைகளால் துன்புறச் செய்தார்கள்.

பலகோடிவர்ஷங்கள் ஹா! ஹா! என கதறிக்கொண்டு பல நரகங்களையநுபவித்தேன். கட்டைத்தணலில் படுத்தல் மூச்சு விடமுடியாத விடத்தில் தங்குதல் கொதிக்கும் நீரில் வஸித்தல் ஹாலாஹல விஷத்தை உண்ணல் கால ஸூத்ரம் மல போஜநம் தூமபாநம் முதலிய நரகங்களில் பல துன்பங்களை அநுபவித்தேன். ரேதஸ்ஸைக் குடித்தல் சிச்நத்தில் ஆணி அடித்தல் போன்ற மற்றும் பல நரகங்களில் மன்வந்தர காலம் ஸஹிக்க முடியாத கஷ்டங்களை அனுபவித்தேன். பிறகு மலத்தில் உண்டாகும் புழுவாகவும், நூறு பிறவி காக்கையாகவும், பத்து பிறவி பன்றியாகவும், ஐந்து பிறவி கழுகாகவும் பத்து பிறவி கழுதையாகவும், ஏழு பிறவி நரியாகவும், நாலு பிறவி தவளையாகவும் பிறந்தேன். ஸகலத்தையும் சாப்பிடுவது இப்பிறவி. இறந்து விடுவோமோ என்ற பயமுள்ள பிறவி இது. முன்னே மாநிடப் பிறவியில் கார்த்திகை மாஹாத்மியம் நெல்லி மரத்தடியில் கூறினேன். அச்சமயம் லோகாப வாதத்திற்கு பயந்து பத்து பிராம்மணர்களுக்கு அன்னமளித்தேன். பிராம்மணர்கள் விஷ்ணு பக்தியுள்ளவர்கள். அவர்களுக்குத் தக்ஷிணை தந்தேன். தாம்பூலத்துடன் ஸாளக்ராம தாநமும் செய்தேன். அந்த புண்யத்தால் நெல்லிமரத்தடியே கார்த்திகை மாதத்திலே புண்ய தீர்த்தமும் ஸாதுக்கள் திருவடி ஸம்பந்தமும் கிடைத்தது. பூர்வக்ஞாநமும் உண்டாயிற்று. ஸாள க்ராம தாநத்தால் எனது ஸகல பாபங்களும் எரிந்து விட்டன. அதனுல் ஸ்வர்க்கம் சென்று பலகாலம் இன்பத்தை அநுபவித்து ஒரு பிராம்மணனுகப் பிறக்கப்போகிறேன். விஷ்ணு பக்தியுடன் துலா காவேரீ ஸ்நாநம் செய்து வைகுண்டம் செல்வேன். உனது முற்பிறவியைச் சொல்கிறேன் கேள்.

## பாம்பின் முற்பிறவி.

ஓ ஸர்ப்பமே! நீ முற்பிறவியில் காஞ்சிநகரில் ஒரு வைச்யன். கார்த்திகைமாஸம் பயோஷ்ணீநதியில் ஸ்நாநம்செய்து என்னிடம் புராணஸ்ரவணம் செய்தாய். ஆனுல் பௌராணிகரான எனக்குச் சிறிது கூட தக்ஷிணை தரவில்லை. நிறைய செல்வமிருந்தும் ஒரே ஒரு பிராம்மணனுக்கு அன்னதாநம் செய்தாய். புக்திமுக்திகளைத்தரும் நல்ல க்ஞானத்தைக் கேட்டும் ஶக்திக்கேற்றபடி தக்ஷிணை கொடாதவர்நரகம்சென்று பாம்பாகப்பிறப்பர். ஆதலால்



சிறந்த அறிவைத் தரும் குருவை பக்தியுடன் பூஜிக்க வேண்டும். அப்படி பூஜை செய்யாதவன் நாஸ்திகனுவான். இஹலோக பரலோக சுகத்தை அநுபவிக்க மாட்டான். கிருஹத்திலுள்ள அதிக ஆசையாலும் லோபத்தாலும் தாநம் வ்ரதம் முதலியவைகளைச் செய்யாதவன் ஆலங்கட்டியில் ஆசைகொண்ட பெண் கீரிப்பிள்ளை போல் அழிவான். (ஆலங்கட்டியை புஜிக்கும் கீரி உடனே மரணமடையும்.) இனி நீ ஐந்து பிறவி வேடனுகப் பிறப்பாய். கடைசி பிறவியில் உன்னை ஒரு யானை துரத்திவர கார்த்திகை ஸோமவாரத்தில் நெல்லி மரத்தடியில் சிவனெதிரில் கிருஷ்ண நதியில் விழுந்து இறக்கப்போகிருய். அங்கு பலர் சிவ சிவ என உறக்கக் கூறுவதைக் கேட்டுக் கொண்டே இறப்பதால் பாபமகன்று சிவலோகம் செல்லப் போகிருய். பயோஷ்ணீ நதியில் கார்த்திகை ஸ்நாநம் செய்ததாலும் ஸத் கதா ஶ்ரவணத்தாலும் பல பிறவிகள் சென்றபின் உனக்கு நற்கதி கிடைக்கும்.

இனிமேலாவது எவருக்கும் துரோஹம்செய்யாதே. இப்போது ஏதாவது பாபம் செய்தால் அது அடுத்த பிறவியில் அநுபவிக்க நேரும். ஆதலால் தற்செயலாக வந்ததைப் புஜித்து பேசாமல் காலத்தைக் கழி. மநதாலும் வாக்காலும் உடலாலும் ஒருவருக்கும் தீங்கிழைக்காதே. பரத்ரோகம் துராசாரம் ஸதாசாரத்தை விடுதல் பரான்னத்தை உண்பது இவைகள் மிக பாபகரமானவை. இப்போதநுபவிக்கும் துன்பம் ப்ராரப்த கர்மபயனுகும். பிராரப்தம் அநுபவித்தால் தான் போகும். அதற்கு வேறு பிராயஶ்சித்தமில்லை. ஆதலால் ஸதாசாரத்தை ஸதா கைபற்று. எப்போதும் ஶாந்தனுய் இரு. கிடைத்ததைக் கொண்டு ஸந்தோஷமடைந்தால் இஹபர நன்மையுண்டாகும். நான் சொன்னதைக்கேட்டாயல்லவா? நரகத்தைத் தரும் பரஹிம்ஸையை அடியோடு விடு. உனது கோரப் பற்களால் கடிக்கப்பட்ட நான் இறக்கும் தருவாயில் இருக்கிறேன். நீ பார்த்துக்கொண்டிருக்கும் போதே பிராணன் கிளம்பப்போகிறது என்று கூறி முடிவதற்குள் அது இறந்தது. உடனே திவ்ய விமாநம் வந்தது. தேவ ஶரீரம் பெற்று திவ்யாபரணம் பூண்டு திவ்ய வஸ்த்ரம் மாலை கந்தம் முதலியன அணிந்து தேவ ஸ்த்ரீகள் சூழ விமாநத்திலேறி (தவளை) ஸ்வர்க்கம் சென்றது. இத்தகையது கார்த்திகையின் பெருமை. தற்செயலாக

கார்த்திகை ஸ்நாநம் செய்தாலும் கூட அவரது வைபவத்தைக்கூடக் கூற எனக்கு ஶக்தி இல்லை. இத்தகைய மஹிமையைக் கேட்டாலே பாபமகலும்.

பன்னிரண்டாமத்யாயம் முற்றிற்று.

## பதிமூன்ருமத்யாயம் — 154 சுலோகங்கள்.

**தர்மராஜன் :** தேவர்ஷே! எல்லா மாஸங்களுக்குள் துலா மாஸம் மிகச் சிறந்ததென பிரஸித்தம். எல்லா வாரங்களிலும் கார்த்திகை ஸோமவாரம் மிகச் சிறந்தது என கூறப்படுகிறதே. எதனுல் அது சிறந்தது? அதனுல் உண்டாகும் பலனென்ன?

**நாரதர் :** எல்லா மாஸங்களிலும் "துலா மாஸமும் கார்த்திகை மாஸமும்" எப்படிச் சிறந்ததோ அப்படி வார விரதங்களில் ஸோமவார விரதம் மிகச் சிறந்தது. பித்ருக்களுக்குப் ப்ரீதியைத் தருவது. கார்த்திகை முப்பது நாட்களிலும் விஷ்ணுவிற்கு தீபாராதனம் செய்தால் நரகத்தில் உள்ள அவனது பித்ருக்கள் ஸ்வர்க்கம் செல்வார்கள். ஸோமவாரத்தில் சிறப்பாக சிவன் ஸன்னதியில் நெய் தீபம் ஏற்றினுல் கோடிகுலத்தை உத்தரணம் செய்வான். கார்த்திகை ஸோமவாரத்தில் சிவபூஜை செய்தால் ப்ரும்மஹத்தி முதலிய பாபங்கள் அகலும். க்ருதயுகத்தில் கார்த்திகை சுக்ல பக்ஷ நவமியில் சந்திரன் தோன்றினுன். அன்று பக்தியுடன் சிவபூஜை செய்தால் ஸகல இஷ்டமும் பூர்த்தியாகும். கார்த்திகை மாதத்தில் திரயோதசியோ நவமியோ ஸோமவாரத்துடன் சேர்ந்தால் அன்று பூஜைசெய்பவர் அக்ஷய்யமான பலனைப் பெறுவர். பாக்யமுள்ளவரே அன்று பூஜை செய்வர்.

ஸோமவாரத்தில் எட்டு யாமங்களிலும் ருத்ரத்தைக் கூறி அபிஷேகம் செய்து ஆராதிப்பவரும், அன்று உபவாஸமிருந்து ஸாயங்காலம் யாதொரு காமனையுமில்லாமல் பக்தியுடன் சிவனை அர்ச்சிப்பவரும் ஸாக்ஷாத் சிவனுவார். ஏதேனும் ஒரு காமனையுடன் பூஜித்தாலும் பகலில் உபவாஸமிருந்து இரவில் புஜித்தாலும் மஹா பாபியுங்கூட பாபமகன்று ஸ்வர்க்கம் செல்வான். அசுத்த அன்னத்தைப் புஜிப்பவன் வைச்வதேவம் செய்யாதவன், தற்கொலை செய்துகொண்டவன் போலாவான். மஹாளயம் செய்யாதவன், பித்ருக்களைக் கொன்றவன், யக்ஞம் செய்யாதவன், தேவர்களைக் கொன்றவன், அக்நிஹோத்ர



ஔபாஸனம் செய்யாதவன் வீரஹத்தி செய்தவன், கோள் சொல்பவன், புத்ரனைக்கொன்றவன், ஸாதுக்களை நிந்திப்பவன், விஷ்ணுவைக்கொன்றவனுவான். இத்தகைய பாபிகளும்கூட கார்த்திகை ஸோமவாரத்தில் உபவாஸமிருந்து இரவு கண்விழித்து சிவபூஜை செய்தால் பாபத்திலிருந்து விடுபடுவார்கள். பஞ்சாக்ஷரத்தைக் கூறி பில்வத்தினுல் சிவனுக்கு ஸஹஸ்ரநாமார்ச்சனை செய்பவன் ஶிவ ஸாரூப்யத்தைப் பெறுவான். பிரதோஷ காலத்தில் வெளுப்பு அல்லது சிவப்பு வர்ணமுள்ள அரளி புஷ்பங்களால் சிவனுக்கு ஸஹஸ்ரநாமம் செய்தால் ஏழு பிறவிகளில் செல்வமுள்ளவனுவான்.

கார்த்திகை மாதம் சுக்ரவாரம் கூடிய திரயோதசியில் பிரதோஷ காலத்தில் தூர்வை அல்லது சுத்த அக்ஷதைகளால் சிவ ஸஹஸ்ரநாமார்ச்சனை செய்தவன் பிறவி முதல் தரித்ரனுக இருந்தாலும் உடனே குபேரனுக்குச் சமமாக செல்வம் பெறுவான். கார்த்திகை ஸோமவாரத்தில் பில்வத்தினுல் மூன்று முறை ஸஹஸ்ரநாமார்ச்சனை செய்தால் புஷ்டி பசு ஸ்ரீ அழகு புத்ரன் இவைகளை நூறு ஜன்மாக்களில் பெற்று ஸார்வபௌமனுக ஆவான். ஏழு மன்வந்த்ர காலம் ஸ்வர்க்க ஸுகத்தை அனுபவித்து பிறகு சிவஸாயுஜ்யத்தை அடைவான். இது ஸத்யம். அரச மரத்தின்கீழ் அரச பத்ரத்தால் அச்யுதனை அர்ச்சிப்பவன் துராசாரமுள்ள துஷ்டனுக இருந்தாலும் நல்லறிவு பெறுவான். நெல்லிமரத்தடியில் சிவனையோ விஷ்ணுவையோ முநி புஷ்பத்தால் பூஜித்து எட்டு ப்ராம்மணர்களுக்கு அன்னமளித்தால் தனவானுக ஆவான். கார்த்திகை மாத கிருத்திகா நக்ஷத்ரத்தில் ஆயிரம் வத்தி தீபங்களால் பகவானை அர்ச்சித்தால் ப்ரும்மக்ஞானியாவான். தீபாராதன காலத்தில் சிவனை தர்சித்தால் ஸர்வ ரோகங்களும் அகன்று புஷ்டிமானுகவும் பசுமானுகவும் ஆவான்.

மாக மாஸத்தில் ப்ரயாகத்தில் நூராண்டு ஸ்நானம் செய்வதால் உண்டாகும் பலன் ஏகாதசியில் விஷ்ணு தீபாராதனத்தை தர்சிப்பதாலுண்டாகும். ஸோமவாரத்தில் ப்ராம்மணனுக்கு சிவலிங்க தானம் செய்தால் அந்த புண்ய பலத்தைக்கூற எனக்கு ஶக்தியில்லை. விஷ்ணுவின் தீபாராதனையைத் தொட்டு தன் உடலைக் கையினுல் ஸ்பர்சித்தால் குஷ்டரோகம், ஜ்வரம் முதலிய நோய்களிலிருந்து விடுபடுவான். தூப தீபமில்லாமல் விஷ்ணுவைப் பூஜிப்

பவன் புகை சூழ்ந்த நரகத்தை அனுபவித்துப் பூமியில் நூறு பிறவி கோட்டானுகப் பிறப்பான். ஸோமவாரத்தில் பகலில் உபவாஸமிருந்து மாலையில் சிவனைப் பூஜித்து இரவில் சிவ ஸன்னதியில் கண்விழிப்பவன் முக்தி அடைவான். கங்கை முதலிய புண்ய தீர்த்தங்களை விட ஸ்வாமிக்களிக்கும் தூபத்திலிருந்து உண்டாகும் பஸ்ம மிகப் பாவனமானது. சிவ பக்தியுடன் அந்த தூப பஸ்மாவைத் தரிப்பவன் ஸர்வ பாபங்களிலிருந்தும் விடுபடுவதுடன் அபஸ்மாரம், குல்மம், குஷ்டம், ஜ்வரம் முதலிய ரோகங்களிலிருந்தும் விடுபடுவான். தூப பஸ்மாவை அணிந்து சிவபூஜை செய்தால் ஸகல ஸுகங்களையும் அடைவான். தூப பஸ்மமணிந்து சிராத்தம் செய்தால் கயா ஶ்ராத்தம் செய்ததுபோல் பித்ருக்கள் ஸந்தோஷமடைவார்கள். தூப பஸ்ம அணிந்து அமாவாஸ்யை தர்ப்பணம்செய்தால் நரகத்திலிருந்தாலும் இரு குல பித்ருக்களும் ஸ்வர்க்கம்செல்வர்.

ஸோமவார பூஜை செய்து பாலால் அல்லது ஜலத்தால் சிவன், அம்பிகை, ஸுப்ரமண்யர் ஆகிய மூவருக்கும் அர்க்யமளிக்கவேண்டும். அவர்களுக்கு நமஸ்காரத்தைக் கூறி உங்களுக்கு அர்க்யமளிக்கிறேன். (விரதம் பூர்ணமாக ஆகட்டுமென்பது அர்க்ய சுலோகங்களின் கருத்து.) அர்க்யமளித்து சக்தி உள்ளவர் இரவிலும் உபவாஸம் இருந்து கண்விழிக்கவேண்டும். சக்தியில்லாதவர் இரவில் மாத்ரம் புஜித்து கண் விழிக்கவேண்டும். கல்யாணத்திலும், விஷ்ணு உத்ஸவத்திலும் ப்ராம்மணர்கள் வீட்டிற்கு வந்தபோதும் இன்ன திதி வாரங்களில் புஜிக்கக் கூடாது என சாஸ்த்ரம் நிஷேதம் செய்திருந்தாலும் சாப்பிடுவது தோஷமல்ல. ஆனல் காமனையின்றி பக்திமாகை இருக்க வேண்டும். ஜனன மரண ஸம்ஸாரம் அகலவேண்டுமென விரும்பினல் மஹாராஜ! ஸோமவாரத்தில் உபவாஸம் இருந்து மறுநாள் பாரணை செய். பற்றின்றி கர்மாவைச் செய்! ஹரிஹரர்களுக்குப் பூஜை செய். நித்ய ஹோமம் நித்ய தானம் மஹாளயம் செய்! அக்நிகார்யமும் பித்ரு கர்மாவும் செய்யாமல் வேறு எந்த கர்மாவைச் செய்தாலும் அழகுள்ள பல பார்யைகளைப் படைத்த நபும்ஸகன் போல் ஆவான். கார்த்திகை ஸோமவாரத்தில் உபவாஸமிருந்து எட்டு ஜாமங்களிலும் சிவபூஜை செய்து கண் விழிப்பவன் முக்தி அடைவான். இதற்கு ஓர்இதிஹாஸம் கூறுகிறேன் கேள்.



## ஸோமவார பலன் - விநதன் சரிதம்

கோதாவரீ தீரத்தில் ஸர்வ சாஸ்த்ரங்களும் வேதமும் அறிந்த விநதன் என ஒரு வேதியனிருந்தான். கல்வி பல கற்றும் கர்மாநுஷ்டானம் இல்லாதவன். ஆனல் பிறர் பொருளைக் கவருவதற்காக கபடமாக கர்மானுஷ்டானம் செய்வதுபோல் பாவனை செய்வான். விபூதி ருத்ராக்ஷம் த்ரிபுண்ட்ரம் இவைகளைத் தரிப்பான். ஸதா துராசாரமுள்ளவன், காமுகன், வாயாடி, புத்ர பௌத்ர கணம் நிறைந்தவன், மஹா வித்வான், ஸோமயாஜி என ப்ரஸித்தமானவன். ஒருநாளும் ஹோமம் செய்தறியான். நித்ய கர்மாக்களையும் செய்வதில்லை. ஸாதுக்களது ஸபையில் க்ஞானியைப்போல் சிவோஹம் என உறக்கக் கூறுவான். துஷ்டன், கோபி, அஸூயை நிறைந்தவன், கர்வீ. வேதாந்தத்தைக் கூறி, தாநதர்மங்கள் ஏல்லாம் பந்தத்தைத் தரும் என ஒருவருக்கும் ஒரு சிறு பொருளும் தரமாட்டான். ஸாதுக்களிடம் ஏதேனும் ஒரு தோஷத்தைக் கல்பிப்பான். ஐந்தாயிரம் வராகன் சேர்த்தான். புத்ராதிகளிடம் அளவு கடந்த பற்றுள்ளவன். யவனனைப்போல் நாஸ்திகன். இப்படிப்பட்ட துராசாரமுள்ள விநதனுக்கு வயது எண்பது ஆகியும் வயிறு வளர்ப்பது, காமஸுகமனுபவிப்பது என்ற இரண்டு கார்யந்தவிற வேறொரு நற்கர்மாவையும் செய்தறியான்.

ஒரு நாள் பகலில் இவன் உண்ணப்போகும் ஸமயத்தில் ஒரு அதிதி வந்தார். அன்று அமாவாஸ்யை. வந்தவர் வயதானவர், ஏழை. வெகுதூரம் நடந்து களைத்தவர். பசியால்மெலிந்தவர். விநதன் தர்ப்பணம்கூடசெய்யாமல் புத்ர பௌத்ர கணங்களுடன் இலையிலுட்காரும் சமயம் அது. தீநஸ்வரத்துடன் வெட்கத்தால் தலைகுனிந்து துற்பலமான உடலுடன் வந்து சிறிது அன்னம் அளியுங்கள், உமக்கு க்ஷேமமுண்டாகும் என்ருர். இதைக்கேட்டவுடன் சிறி எழுந்தான் விநதன். யாரையா அது? இன்று தர்ஶ ஶ்ராத்தம் செய்தீரா? பிறர் வீட்டில் அன்னம் கேட்கலாமா? என்ருன்.

**அதிதி:** ஐயா! ஆபத் காலத்தில் தர்ஶ ஶ்ராத்தத்தை விடுவது தோஷமல்ல. க்ருஹஸ்தன் அதிதியைப் பூஜிக்க வேண்டாமா? தாங்கள் வித்வான். ஸோமயாஜி! ஏன் என்னை அவமானப்படுத்துகிறீர்?

**விநதன்:** மஹாகோபத்துடன் நீ ஏழையானுலென்ன?

அன்னம் இல்லை என்றால் மறுபடியும் கேட்கிறீரே! தர்மத்தைவிட்ட பித்ருத்ரோஹியே! வீடு வீடாகச் சென்று அரிசி பிச்சை எடுத்தாவது ஶ்ராத்தம் செய்து சாப்பிடு. பரான்னம் நரகத்தைத் தரும்.

**அதிதி :** ஐயா! என் மனைவி இறந்துவிட்டாள். நான் பரம தரித்ரன். நோயாளி. பந்துக்களும் என்னைக் கைவிட்டனர். பொருள் உள்ளவனுக்கே பந்துமித்ரர்கள். எனக்கு ஈஶ்வரன்தான் பந்து, பொருள். உடன்பிறந்தவனும் என்னைக் கைவிட்டான் எனில் எனக்கு மித்ரன் யார்? பந்து யார்? நானும்சிறிது படித்தவன். எல்லா வைதிகமும் தெரியும். ஏழையும், வழிப்போக்கனும், பசியால் வாடியவனுமான நான் என்ன செய்யமுடியும்?

ஶ்ராத்த நியமம் : அன்னியர் வீட்டில் ஶ்ராத்தம் செய்தாலும், பத்நி தவிர மற்றவர் பாகம் செய்தாலும் கர்த்தா பித்ருக்களையே புஜிப்பதாகும். பித்ருக்கள் புத்ரனுடைய வீட்டிற்கே வந்து அங்கு ஶ்ராத்தம் செய்யாததால் கோபங்கொண்டு புத்ரனைச் சபிப்பார்கள். இவன் ஏழையாகி பல புத்ரர்களைப் பெறட்டும். பூதப்ரேத பிஶாசங்கள் இவனது ஸந்ததியைப் பீடிக்கட்டும் என சபிப்பார்கள். பித்ருக்கள் கோபங்கொண்டால் பஞ்சு பொதியைத் தீ ஒரு நிமிஷத்தில் எரிப்பதுபோல் அந்த வம்சம் உடனேயே அழியும். பார்வண விதிப்படி செய்யாததும், அன்னியர் பாகம் செய்ததும், பிறர் வீட்டில் செய்ததும், வேதமறியாத ப்ராம்மணர் உண்பதும், தக்ஷிணை இல்லாததும், நீசனனவர் த்ரவ்யத்தால் செய்ததும், பவித்ரமில்லாததும், வேகமாகச் செய்வதும், நாலாவது யாமத்தில் செய்வதும், நிஷித்தமான காய்கரிகளால் செய்வதும், தேன், உளுந்து இல்லாததும், விஷ்ணுவுக்கு அர்ப்பணம் செய்யாததும், ஶ்ராத்த போஜன காலத்தில் கர்த்தா போக்தாக்கள் மௌனமில்லாதிருப்பதுமான ஶ்ராத்தம் நஷ்டமாகும். பித்ருக்களுக்கு த்ருப்தியைத் தராது. ஆதலால் நன்கு விசாரித்து ஶ்ரத்தையுடன் ஸாவதானமாக ஶ்ராத்தம் செய்யவேண்டும். வேத விதிப்படி செய்யாத ஶ்ராத்தம் அஸுர ஶ்ராத்தமாகும். அந்த வம்சத்தில் பிறக்கும் புத்ரர்கள் அஸுரர்களாவர். நாஸ்திகர்களாகவும், வைதிகாசாரமில்லாதவர்களுமாக இருப்பார்கள். பித்ருகணங்கள் கோபங்கொண்டால் அந்த வம்சமே அழியும். ஆதலால் ஆபத்காலத்தில் ஆமஶ்ராத்தமாவது செய்ய



வேண்டும். ஹிரண்ய ஶ்ராத்தம் செய்தாலும் அது விதிப்படி செய்த ஶ்ராத்தம்போலாகும். மனைவி இல்லாதவனே தரித்ரனே விஷ்ணுவிடம் பக்திகொண்டு ஞான வைராக்யங்களால் ஶுத்தாத்மாவாக வேண்டும். ஸுக துக்கம் லாப நஷ்டங்களை ஸமமாகக் கருதவேண்டும். இந்த்ரியங்களை ஜயிக்கவேண்டும். பரலோகம் வேண்டுமானால் ஸன்யாஸம் செய்துகொள்ளவேண்டும். வீட்டில் ஒரு க்ஷணம் கூட வஸிக்கக்கூடாது. ஆபரணம் அணிந்த விதவைபோல் ஒரு ஆஶ்ரமுமில்லாமல் வீட்டிலிருப்பவன் அழிவான்.

இவைகளை அறிந்த நான் பதிதனுவேனே என்று பயந்து கங்கா ஸ்நானம் செய்யச் செல்கிறேன். காசியில் இறந்தவன் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபட்டு ஸ்வர்க்கம் செல்வான். எனது ஶக்திக்கேற்ற வண்ணம் இன்று ஹிரண்ய ஶ்ராத்தம் செய்து விஷ்ணுவை ஆராதித்தேன். இதனால் ஶ்ராத்தம் செய்ததுபோல் பூர்ண பலன் கிடைக்கும். அரைவயிற்றுக்காவது அன்னமளியும். இல்லையேல் நான் இறப்பேன்.

**விநதன் :** அன்னம் இல்லையென்றால் மறுபடியும் மறுபடியும் யாசிக்கிறீரே! சீ! என்ன ஜீவனமிது? இல்லை என்றால் போகமாட்டேன் என்கிறீரே. போ போ.

**நாரதர் :** இவ்வளவு அவமானமடைந்த அதிதி வேறு வீட்டிற்குச் சென்று பசியாற்றிக்கொண்டார். விநதனும் ஸந்தோஷமாக பந்துக்களுடன் புஜித்தான். அதுவரை காத்திருந்த விநதனது பித்ருக்கள் ஶ்ராத்தம் செய்யாததால் துக்கமடைந்து பயங்கரமான ஶாபத்தை அளித்து வந்த வழியே சென்றார்கள். ஶ்ராத்தம் செய்யாததுடன் அதிதியை அவமானம் செய்ததால் உடனே விநதன் அழியட்டும் என்ற பித்ரு ஶாபம் பலித்தது. அன்றிரவே நள்ளிருளில் திருடர்கள் வந்தனர். ஆயுதபாணிகளாக விநதன் வீட்டில் புகுந்தனர். அச்சமயம் தற்செயலாக விநதன் ஜலம் கழிப்பதற்காக வாசலில் சென்றான். இதே தக்க ஸமயமென வாசற் கதவைத் தாளிட்டு அங்குள்ள ஸகல வஸ்துக்களையும் கள்வர் களவாடிச் சென்றனர். விநதனின் புத்ரன் விழித்தெழுந்து ஐயோ திருடன்! எனக் கூக்குரலிட்டான். திருடர்கள் அவன் கழுத்தை வெட்டி அவ்வீட்டிற்கும் தீ வைத்துச் சென்றனர். அரை க்ஷணத்திற்குள் வீடு வெந்தது. மனைவி மக்கள் மாண்டனர். தீ நாலுபுறமும் கொழுந்துவிட்டு எரிந்தது. தனக்கும் தீயால்

மரணம் வந்துவிடுமோ என அஞ்சி ஓடினுன் விநதன். பந்துக்கள் எவரும் அவனருகில் வரவில்லை. ஐயோ பாவம்! என்று கூறுவார் எவருமில்லை. மனைவி, மக்கள், மனை, பொருள் எல்லாம் சாம்பலாயின. வெட்கம் ஒரு பக்கம், துக்கம் ஒரு பக்கம் விநதனை வாட்டிற்று. உறக்க அழுது கொண்டே ஓடினுன். ஐந்து யோஜனை தூரத்திலுள்ள பிரும்மேச்வரம் என்ற இடத்திற்குச் சென்ருன். அன்று கார்த்திகை ஸோமவாரமானதால் சிவாலயத்தில் விசேஷ பூஜை நடைபெற்றது. பக்தர் பலர் கூடினர். விநதனும் விபூதி ருத்ராக்ஷதாரியாய் சிறந்த பக்தனைப்போல் சிவ சிவ எனக் கூறினுன். ப்ரதக்ஷிண நமஸ்காரம் செய்தான்.

தானும் விரதமிருப்பவனைப்போல் ஜபம் ஸ்தோத்ரம் முதலியவைகளைச் செய்தான். ஆங்குள்ளோர் பூஜைக்குப் பின் கண்விழித்துக் கதை கேட்டார்கள். ஒவ்வொரு யாமத்திலும் அபிஷேகாதி ஆராதனை நடந்தது. விநதன் மனைவி மக்களையே நினைத்துக் கண்ணீர்விட்டான். அதை பக்திப் பரவசனுகி ஆனந்தக்கண்ணீர் விடுவதுபோல் பாவனை செய்தான். துக்கத்திஞல் தூக்கம் வரவில்லை. கண்விழிப்பவன்போல் பாவனை செய்தான். ஆனுல் அவனது மனம் ஸ்வாமிமீது அணிந்துள்ள ஆபரணங்களை அபஹரிக்கவே எண்ணிற்று. ஸூர்யோதயத்திற்கு முன் பூஜைகளை முடித்து ஆங்குள்ளோர் ப்ராதஸ்நானம் செய்யச் சென்றனர். இதே தக்க ஸமயமெனக் கருதினுன் விநதன். அருகில் சென்று நமஸ்காரம் செய்வதுபோல் தேவியின் அருகே சென்ருன். அன்னை பார்வதியின் காதிலுள்ள ஆபரணத்தை மெதுவாக எடுத்துக்கொண்டு பக்தனைப் போல் வெளியில் சென்ருன். இதனிடையில் அர்ச்சகன் ஸ்நானம் செய்துவிட்டு உள்ளே நுழைந்தான். தேவியின் கர்ணுபரணம் காணவில்லை. இது என்ன விபரீதம்! என விரைந்து இங்குமங்கும் ஓடினுன். இதைக்கண்ட விநதன் கோவிலைச்சுற்றி ஓட ஆரம்பித்தான். அர்ச்சகனும் இவனே திருடியவன் என அவனைத் தொடர்ந்து ஓடினுன். இருவரும் ஆலயத்தை மூன்று சுற்று சுற்றினர். அருகில் அகப்பட்டுக்கொண்ட விநதனை அர்ச்சகன் ஒரு கற்பாறையால் ஓங்கி அடித்தான். விநதனும் தன் கைத்தடியால் அர்ச்சகனை ஓங்கி அடித்தான்.

சிவ சிவ என்று கூறிக்கொண்டே அர்ச்சகன் பூமியில் விழுந்து மாண்டான். பத்தடி நடந்துசென்று ஸ்வர்ணத்தை



அதிலும் சிவ ஸொத்தை அபஹரித்த விநதன் ரத்தம் பெருக மூர்ச்சையாகி விழுந்து இறந்தான். யமதர்மன் உத்தரவுபடி பயங்கரர்களான யமகிங்கரர்கள் இவ்விருவர்களையும் பாசக்கயிற்ருல் கட்டி க்ரூரமான ஆயுதங்களால் அவர்களை அடித்து தலைகீழாக நிறுத்தி இழுத்துச் சென்ருர்கள். அச்சமயம் சிவனுல் தூண்டப்பட்டவர்களும் சிவன் போன்ற உருவமுள்ளவர்களும் சூலம் முதலிய சிவ சின்னங்களைத் தரித்தவர்களுமான சிவ தூதர்கள் யமபடர்களை மிரட்டி அவர்களது பாசத்திலிருந்து இருவர்களையும் விடுவித்தனர். சிவபூஜையால் பாபமகன்ற இருவர்களையும் திவ்ய விமானத்திலேற்றிக்கொண்டனர். இதைக் கண்ட யமபடர் மிகக் கோபத்துடன் சிவபடர்களைத் தடுத்துக் கூறினுர்கள்.

**யமபடர்கள்:** பிறவிமுதல் மஹா பாபிகளான இவர்களை ஏன் விடுவித்தீர்கள்? இவர்கள் நரகமல்லவோ செல்லவேண்டும்! எங்கள் ராஜா தர்மாத்மா, மத்யஸ்தர். சாஸ்த்ரங்களின் தத்துவத்தை நன்கு உணர்ந்தவர். பாபிகளது பாபமகலவே நரகத்தில் தள்ளி தக்க சிக்ஷை விதிக்கிருர். க்ஷணகாலம் இருக்கக்கூடிய தேஹத்தைப்பெற்றும் பாபங்களைச் செய்யும் மனிதர்களைச் சுத்தர்களாக்க நரகத்தீயில் தள்ளு என ஆணையிட்டார் ப்ரும்மா ஸ்ருஷ்டி காலத்திலே எங்கள் அரசனுக்கு. சிவஸபையிலுள்ள நீங்கள் அதை ஏன் மீறுகிறீர்கள்? ஸாதுக்களான நீங்களே இப்படிச்செய்தால் உலகில் தர்மம் எப்படிநிலைக்கும்?

**சிவபடர்கள்:** தனக்குச் சமமில்லாதவரும் ஹீநர்களுமானவர்களிடம் தர்மத்தைக்கூறக் கூடாது. கூறினுல் அது பாம்பிற்குப் பால் அளித்தது போலாகும். ஆதலால் நாங்கள் உங்களிடம் தர்ம தத்துவத்தைக் கூறமாட்டோம். யம தர்மனிடமே சென்று கேளுங்கள் என்றனர். யமபடர்கள். அதிருக்கட்டும், முதலில் இவர்களை விடுங்கள். எங்கள் கடமையைப் பலமுள்ளவரை நாங்கள் செய்தே தீரவேண்டும். எங்களால் முடியவில்லை என்ருல் அது தோஷமல்ல. என்றுகூறி கர்ஜித்துக்கொண்டு க்ரூரமான சூலங்களாலும் தோமரம் முதலிய ஆயுதங்களாலும் சிவ கிங்கரர்களைத் தாக்கினுர்கள். கோபங்கொண்ட சிவ கிங்கரர்கள் முஸலம், சூலம், கத்தி முதலிய ஆயுதங்களால் யம கிங்கரர்களைத் தாக்க இருவர்க்கும் பயங்கரமான யுத்தம் நடந்தது. மகாபலிஷ்டர்களான

சிவ கிங்கரர்கள் யமபடர்களைத் தோற்று பயந்தோடும்படி அடித்தார்கள். தர்மத்தைச் செய்கின்றவர்க்கு இது தான் கதியா? என கூறிக்கொண்டு யமபுரம் சென்றார்கள் யமபடர்கள். மிக்க துக்கத்துடன் தங்களுக்கு நேர்ந்த கதியைத் தெரிவித்தார்கள். இதைக்கேட்டு ஆஶ்சர்யமடைந்த யமன் சித்ர குப்தனுடன் சிறிது யோசனை செய்து தூதர்களை நோக்கி மந்தமாகக் கூறினர்.

**யமன் :** படர்களே! அறியாமையால் பிராம்மணர்களைக் கொண்டு வந்து சிவாபசாரம் செய்து விட்டோம். உங்களுக்கு ஏற்பட்ட கஷ்டத்தை க்ஷமித்துவிடுங்கள். யஜமானனுக்காக ஏற்பட்ட கஷ்டம் புண்யகரமானதென வேதம் கூறுகிறது என்றார். இச் சொல்லால் கஷ்டமகன்ற யம தூதர்கள் புண்ய பாப விவேகமறிய யமனை வேண்டினர். எது பாபம்? எது புண்யம்? என விளக்கிக் கூறுங்கள்?

### யமன் கூறும் புண்ய பாபங்கள்.

**யமன் :** உயிர்போகும் போது விஷ்ணுவை ஸ்மரித்தால் ஸர்வ பாபங்களும் அகலும். ஸத்பாத்ரத்தில் ஸாளக்ராமத்தை தக்ஷிணையுடன் தந்தாலும் பரோபகாரம் செய்தாலும் ஸத்துக்களை லோபமில்லாமல் பூஜை செய்வதும், விஷ்ணு பூஜை செய்தாலும், விஷ்ணு லீலைகளைக் கேட்டாலும் இவை புண்யங்களாம். நாஸ்திகனை இருத்தல், நிஷ்டூரனை இருத்தல் ஸர்வ பிராணிகளிடமும் தயை இல்லாமலிருத்தல் போக காரணமான மனைவி மக்களிடம் அதிக ஆசை வைத்தல் இவை பாபங்களாம். ஶக்திக்கேற்ற அளவு ஸத்கர்மாவைச் செய்வது எல்லோரிடமும் தயை காட்டுதல் விஷ்ணு பக்தராக இருத்தல் ஸாளக்ராம தானம் செய்வது சிவபூஜையிலீடுபடுதல் சிவலிங்கதானம் செய்வது மரண காலத்தில் பகவன் நாமாவைக் கூறுவது வேதமறிந்தவர்க்கு உபகாரம் செய்வது இத்தகைய செயலுள்ளவர் யமபுரம் செல்லமாட்டார். காம்ய கர்மாக்களை விட்டு நித்ய நைமித்திகங்களைச் செய்பவர் தயையுள்ளவர் விஷ்ணு பக்தர் ஆகியவர்கள் ஒரு போதும் என்னிடம் வரமாட்டார்கள்.

பிரும்மஹத்தி செய்தவனாயினும் ஸுராபானம் செய்திருந்தாலும் திருடனாயினும் துஷ்டனாயினும் நாஸ்திகனாயினும் உடலைவிடும் ஸமயத்தில் விஷ்ணுவை நினைத்தால்



அவன் அப்போழுதே பகவானை அடைவான். [ஶம்போ! கிரீஶ! ஹர! பார்வதீஶ! ஸ்ரீ சந்த்ர ஶேகர! மஹேஶ! வ்ருஷத்வஜ!] என்று ஸோமவாரத்தில் உபவாஸமிருந்து சிவனை அர்ச்சித்து வேண்டினால் உடனே கைலாஸம் செல்வான். மஹா பாபியானாலும் உபவாஸமிருந்து கண்விழித்து காமனையின்றி சிவனைப் பூஜித்தால் சிவனை அடைவான். யார் யார் எந்தெந்த மாதிரி கர்மாக்களைச் செய்கிறார்களோ அது அதற்கேற்றபடி என் உத்தரவு பெற்று அந்தந்த லோகம் செல்வர்.

சிவார்ச்சகன் சிவ சிவ என உறக்கக் கூறிக்கொண்டே இறந்தான். அதனால் அவன் செய்த பாபங்களெல்லாம் அகன்றது. சிவலோகம் சென்றான். மகாபாபியான விநதனும் கார்த்திகை ஸோமவாரத்தில் உணவு கிடைக்காததால் உபவாஸமிருந்தான். துக்கத்தினால் சிவ ஸன்னதியில் தூக்கமின்றி கண் விழித்தான். டாம்பிகமாக அருணோதய காலத்தில் சிவார்ச்சனை செய்து சிவ நாமாவைக் கூறினன். ஒரு ஸமயம் தனது பெருமையைக் காட்ட சிவநாபமெனும் சிவலிங்கத்தைப் பௌராணிகருக்கு பன்னிரண்டு நிஷ்கத்துடன் தானம் செய்தான். அதனால் அவன் சிவார்ச்சகனைக்கொன்ற பிரும்மஹத்தி பாபம் அகன்றது. ஸோமவாரத்தில் கண் விழித்து சிவனை ஸ்மரித்ததால் சிவலோகம் சென்றான். ஆதலால் உலகில் கார்த்திகை ஸோமவார மாஹாத்ம்யத்தைப் பூர்ணமாக எவன் கூற வல்லவன்? எவன் கேட்க வல்லவன்? துஷ்ட விநதனும் அதனால் நற்கதி அடைந்தான் அல்லவா? ஆதலால் பிறவிமுதலே பாபஶீலனாக இருந்தாலும் மரணகாலத்தில் ஹரியை நினைக்கவேண்டும். ஸாளக்ராமத்தை தானம் செய்யவேண்டும். அதனால் சுத்தனாகி வைகுண்டம் செல்வான். உடலெலாம் கஞ்சுகம் போல் பாபம் சூழ்ந்து நிறைந்திருந்தாலும் கார்த்திகை மாதத்தில் தீபதானம் ஒன்றைச் செய்தால் போதும். கைலாஸம் செல்வான். காவேரியில் எந்த இடத்திலாவது அருணோதயத்தில் ஸ்நானம் செய்து ஸோமவாரத்தில் உபவாஸமிருந்தால் போதும். பாபமகன்று அவன் சிவனை அடைவான். ஸோமவார பூஜை செய்வோரை என்னிடம் அழைத்து வராதீர்கள்.

ஸோமவார விரதமிருந்து மறுநாள் ஶக்திக்கேற்றபடி ப்ராம்மணர்களுக்கு அன்னம் அளிக்காதவர்களை

என்னிடம் அழைத்துவாருங்கள். லோபியாயும் நாஸ்திகனுகவுமிருந்து டம்பார்த்தமாக ஸகல தர்மங்களையும் செய்தாலும் ஔபாஸனுதி அக்நி பூஜை செய்யாமல் ஸாதுக்களை நிந்திப்பவர்களை என்னிடம் அழைத்து வாருங்கள். **நான் விஷ்ணுபக்தன் என்று சிவனை நிந்திப்பவனையும், நான் சிவபக்தன் என்ற வியாஜத்தால் விஷ்ணு நிந்தை செய்பவனையும் அழைத்துவாருங்கள்** என்று படர்களிடம் கூறி, சிவபடர்களே! எங்கள் குற்றத்தை மன்னித்துவிடுங்கள் என வேண்டி அவர்களை யமன் வணங்கினர். ஓ மஹாராஜ! சிவலோகஞ் செல்ல விருப்பமிருந்தால் கார்த்திகை ஸோமவார விரதம் செய். உபவாஸமிரு. சிவார்ச்சனை செய். இரவு கண் விழி. மறுநாள் ப்ராம்மணர்களுக்கு அன்னதானம் செய். பாலன் ஆனாலும், பலஹீனனுனாலும், விருத்தனை இருந்தாலும் ஸோமவார பூஜை செய்து இரவில் உண்ணலாம். ஆனால் அந்த தோஷமகல ஏதோ சிறிது தக்ஷிணை ப்ராம்மணனுக்குத் தரவேண்டும். இரு வேளைகளிலும் உபவாஸமிருந்து ஒவ்வொரு யாமத்திலும் காமனையில்லாமல் பலவகைப் பழங்களாலும் அன்னங்களாலும் பூஜை செய்து சிவனை நமஸ்கரிக்கவேண்டும்.

**பதிமூன்ருமத்யாயமும், ஸோமவார விரத மஹிமையும் முற்றிற்று.**

## பதினுன்காம் அத்யாயம்—118 சுலோகங்கள்.

## துலாஸ்நான விதி.

**அகஸ்த்யர்:** விதிதவருமல் ஸ்நானம் செய்தால் முக்தி பெறலாம். சிறிது விதிவழுவினும் கூட காவேரீ ஸ்நானம் பாபங்களை அகற்றும். துலா ஸங்க்ராந்தி தினத்தில் ப்ராதஸ்நானம் செய்து ஜபம் முதலியவைகளை முடித்துச் சுத்த மனமுள்ளவனுய் துஷ்டருடைய ஸங்கம், துர்பாஷை, துஷ்டர்கள் அன்னம் முதலியவைகளை விடவேண்டும். சக்திக்கேற்றவண்ணம் ப்ராம்மண போஜனம் செய்துவைத்துக் கீழ்க்கண்டபடி ப்ரார்த்திக்கவேண்டும். "துலா ஸங்க்ரமம் முதல் ஆரம்பித்து காவேரீ ஜலத்தில் ஸ்நானம் செய்யப்போகிறேன். இது நிர்விக்னமாக பூர்த்தியாகவேண்டும். இதனுல் பகவான் ப்ரீதி அடையட்டும்" என்று ப்ராம்மணர்களிடம் அங்ஙனம் அனுக்ரஹம் செய்யுங்கள் என ப்ரார்த்திக்கவேண்டும். அவர்களுக்குத்



தக்ஷிணையும் தந்து தர்மம் கூறுபவரையும் அர்ச்சிக்கவேண்டும். இரவு அக்நிஹோத்ரம் அல்லது ஔபாஸனத்தைச் செய்து உபவாஸமிருந்து ஜிதேந்த்ரியனுக இருக்கவேண்டும். காலையில் எழுந்து ஆசமனம் செய்து ஹரியை நினைக்கவேண்டும். ஊருக்கு நிருருதி திக்கில் சிறிதுதூரம்சென்று திருணங்களால் பூமியைமூடி ஜலமல விஸர்ஜனம் செய்யவேண்டும். வஸ்த்ரத்தினுல் தலையையும், கையினுல் வாயையும் மூடிக்கொள்ள வேண்டும். வழி, உப்புமண் உள்ள இடம், நதி, தேவத்வஜ ஸந்நிதி, விளையும் பூமி, அணைக்கட்டு, சுத்தமான இடம், மரத்தின் அடி இவ்விடங்களில் ஶ்ரேயஸ்ஸை விரும்புகின்றவன் ஜலமலத்தைக் கழிக்கக் கூடாது. ஆண்குறியைக் கையால் பிடித்துக்கொண்டு விதிப்படி சௌசம் செய்யவேண்டும். புற்றுமண், உப்புமண், வழிமண், எலிதோண்டிய மண், இவை சௌசத்திற்கு ஏற்றவையல்ல. வீட்டில் எடுத்து வைக்கப்பட்ட சுத்தமான மண்ணுல் ஜலத்திற்கு ஒரு முழத்திற்கப்பால் தரையில் அமர்ந்து சௌசம் செய்யவேண்டும். மலத்வாரத்தில் பதினுறு முறையும், ஜலத்வாரத்தில் மூன்று முறையும் இடது கையில் பத்துமுறையும், இரண்டு கரங்களிலும் ஏழு முறையும், கால்களில் ஏழு முறையும் மண்ணிட்டுக்கொள்ள வேண்டும். ஜலமாத்ர விஸர்ஜனத்தில் ஆண்குறியில் ஒரு முறையும், கால்களில் மும்மூன்று முறையும் மண்ணிட்டுக்கொள்ள வேண்டும். நெல்லிக்காய் அளவு சௌசத்திற்கு மண் எடுத்துக்கொள்ளவேண்டும். சௌசம் செய்த இடத்தை முதலிலும் முடிவிலும் சுத்தம் செய்யவேண்டும். இங்ஙனம் க்ருஹஸ்தர்களுக்குக் கூறிய சௌசம், ப்ரும்மசாரிகளுக்கு இருமடங்கும், மூன்று மடங்கு வானப்ரஸ்தனுக்கும், நான்கு மடங்கு ஸந்யாஸிக்கும் கூறப்பட்டிருக்கிறது.

ஸ்த்ரீகளுக்கும் விருஷளர்களுக்கும் இந்த கணக்கில்லை. மனம் சுத்தியாகும்வரை சௌசம் வேண்டும். மலவிஸர்ஜனத்தில் பன்னிரண்டு முறையும், ஜல விஸர்ஜனத்தில் ஆறுமுறையும் வாய் கொப்பளிக்கவேண்டும். மணிக்கட்டு வரை கையை ஜலத்தில் நினைத்து ஜலமெடுத்துக் கிழக்கு முகமாக இருந்து ஆசமனம் செய்ய வேண்டும். அச்சமயம் மூன்று வேதங்களை த்யானம் செய்து மாஷம் முழுகுமளவு ஜலமெடுத்துப் பசுவின் காது போல்

கையை வைத்து உள்ளங்கையின் அடி பாகத்தால் ஸௌர்யனைப் பார்த்துக்கொண்டு ஆசமனம் செய்யவேண்டும். (மாஷம் என்பது உளுந்து என்றும், உள்ளங்கையிலுள்ள ஒரு ரேகை என்றும் பொருளாகும்.) பாலுள்ள மரத்திலுண்டான அல்லது முள்ளில்லாத விருக்ஷத்திலிருந்து பற்குச்சியை ஒடித்து கீழ்வரிசையில் ஆரம்பித்து மேல் பல்வரைப் பிரதக்ஷிணமாகத் துலக்கவேண்டும். கிழக்கு திங்முகமாகவும், ஈசான திங்முகமாகவும் அமர்ந்து பல் துலக்கவேண்டும். வேறு திக்குகளில் துலக்குவது பாபம்.

பல் தேய்த்தவுடன் பன்னிரண்டு முறை வாய்கொப்ளிக்கவேண்டும். ஏகாதசி, ச்ராத்ததினம் முதலிய சில தினங்களில் பல் துலக்க வேண்டாமென சாஸ்த்ரம் கூறினாலும் அன்று பன்னிரண்டுமுறை வாய்கொப்பளிக்க வேண்டும். மறுபடியும் ஆசமனம் செய்து, திதி, வார, நக்ஷத்ரங்களைக் கூறி ஸங்கல்பம் செய்யவேண்டும். மனத்தில் மாதவனை நினைத்து காவேரியை நமஸ்கரித்து விரும்பிய பலனைப் பிரார்த்திக்க வேண்டும்.

மருத் விருதே,மஹா பாகே, மஹா தேவி, மனோஹரே ।
ஸர்வாபீஷ்டப்ரதே, தேவி ஸ்நாஸ்யதாம் புண்யவர்தனி ।
ஸர்வ பாபக்ஷயகரி, மம பாபம் விநாசய ।
கவேர கன்யே காவேரி, ஸமுத்ர மஹிஷி ப்ரியே ॥
ப்ரதேஹி புக்தி முக்தீ த்வம்ஸர்வ தீர்த்த ஸ்வரூபிணீ ।
ஸிந்துவர்யே, தயா ஸிந்தோ, மாமுத்தர பவாம்புதே: ।
ச்ரியம்தேஹி, ஸுதம் தேஹி ஸ்த்ரியம்தேஹி ததஸ்வ கா:
ஆயுஷ்யம்தேஹி சாரோக்யம் ருணமுக்தம் குருஷ்வமாம் ॥

என்று ப்ரார்த்தித்து "த்வயிஸ்நாஸ்யேத்ய காவேரி ஸர்வ பாப விசுத்தயே, அர்க்யம் க்ருஹாணமே தேவி யதோக்த பலதா பவ" என்று அர்க்யம் கொடுக்கவேண்டும்.

இங்ஙனம் காவேரியைத் துதித்து நமஸ்கரித்து புஷ்பங்களால் அர்ச்சித்து வருண ஸூக்தத்தைச் சொல்லி ஸ்நானம் செய்யவேண்டும். பகவானை நினைத்து விஷ்ணு காயத்ரீ அல்லது அஷ்டாக்ஷரியை ஜபித்து ஒரு முறை காவேரீ ஸ்நானம் செய்தாலும் ப்ரும்மஹத்யாதி பாபம் அகலும். சிகையை முன் புறமாக வைத்து ஜலம் சிந்தும்படிச் செய்தால் அது பித்ருக்களுக்கு அக்ஷய்யமான த்ருப்தியைத் தரும். தேஹத்தில் பெருகும் ஜலத்தைக் கைகளால் துடைக்கக் கூடாது. பித்ரு, தேவ,



ரிஷிகளுக்குத் தர்ப்பணம் செய்து கரையேறி ரங்கனுதனை நமஸ்கரிக்க வேண்டும். ஸ்நானம் நிர்விக்னமாக நடக்க வேண்டுமெனப் பிரார்த்தித்துக் கையில் ஜலத்தை எடுத்து ப்ரணவம், வ்யாஹ்ருதி, காயத்ரீ, காயத்ரீ சிரஸ் முதலியவைகளைக் கூறி ஜலத்தை மேலே இறைக்க வேண்டும். அதனுல் பத்து ஜன்மாக்களில் செய்த பாபம் அகலும். இங்ஙனம் ஸந்த்யையை உபாஸித்துவிட்டுச் சுத்தமான இடத்தில் ஜலத்தை ப்ரோக்ஷித்துவிட்டு தர்ப்பையை விரித்து ஜிதேந்திரியனுக, நின்றுகொண்டு காலையில் காயத்ரீ ஜபம் செய்யவேண்டும். ஜ என்பது ஜன்மாவை அகற்றுவது. ப என்பது பாபத்தை அகற்றுவது. ஆதலால் ஜன்ம பாபத்தைப் போக்கடிப்பது ஜபமாகும்.

ஸ்வரத்துடன் தன்னைக்கூறுபவனை ரக்ஷிப்பதால் (காயந்தம் த்ராயதே) காயத்ரீ எனப்படுகின்றது. ஸௌர்யமண்டலத்திலோ, ஹ்ருதய கமலத்திலோ காயத்ரியை த்யானம் செய்யவேண்டும். மானஸிகமாகப் பதினறு உபசாரங்களைச் செய்ய வேண்டும். பிரும்மசாரியும், கிருஹஸ்தனும் ஆதியில் ஓங்காரம் கூறவேண்டும். வானப்ரஸ்தனும் ஸந்யாஸியும் ஆறு ஓங்காரம் கூற வேண்டும். விரல்களை மேலே தூக்கி முகத்திற்கு நேராகக் கையை வைத்துக்கொண்டு காலை வேளையில் கிழக்கு முகமாய் நின்றுகொண்டு ஜபம் செய்யவேண்டும். மாத்யான்ஹிக காலத்தில் மார்புக்கு நேராகவும், மாலையில் நாபிக்கு நேராகவும் கைகளை வைத்துக்கொண்டு ஜபம் செய்ய வேண்டும், விரல்களில் சந்தில்லாமல் நுனி சிறிது வளைத்துக்கொண்டு ஜபம் செய்யவேண்டும். கை விரல்களில் சந்து இருந்தால் அது ராக்ஷஸ அம்சமாகும். எண்ணிக்கை இல்லாமலும், அசுத்தமாகவும் இருந்து ஜபித்தால் ஜபம் நிஷ்பலமாகும். விரல் ரேகைகள் மூலமே, ஜபம் செய்ய வேண்டும். ஜப மாலைகளால் காயத்ரி ஜபம் செய்யக் கூடாது. காயத்ரீ வேதமூலமானதால் வேதத்தைப் பர்வாக்களிலேயே ஜபிக்கவேண்டும்.

ஒவ்வொரு பாதத்திலும் நிறுத்தி ஜபித்தால் விஷ்ணுவிற்குப் ப்ரீதிகரமாக இருக்கும். மூன்று பாதமுள்ள காயத்ரியை பாதங்களைச் சேர்த்து ஜபம் செய்தால் பிரும்மராக்ஷஸனுக ஆவான். அஷ்டதளமுள்ள ஹிருதய கமலத்தில் கர்ணிகையின் நடுவில் பலவகை ரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டதும், பவழமயமாகவும், ஸ்படிக

மயமாயுமிருப்பதும், நூறு ஸ்தம்ப முள்ளதும், கோடி ஸூர்யன் போல் விளங்கும் விமானத்தினுல் பிரகாசிப்பதும், கல்ப விருக்ஷத்துடனும், மல்லிகை முதலிய புஷ்பங்களுடன் கூடியதுமான மண்டலத்தின் நடுவில் ஸ்வர்ண பத்மத்தின்மேல் இருக்கும் ஸிம்ஹாஸனத்தில் உட்கார்ந்திருப்பவரும், கோடி ஸூர்யப்ரபை யுள்ளவரும் நான்கு கைகள் உள்ளவரும், பூதேவி ஸ்ரீதேவியுடன் கூடியவருமான விஷ்ணுவை த்யானம்செய்து ஹிருதயத்திலோ ஸூர்யமண்டலத்திலோ நினைத்து காயத்ரி ஜபம் செய்யவேண்டும். காலையில் ஸ்நானம்செய்து ஸூர்யோதயம் வரை ஜபித்து இஷ்டத்தை அளிப்பவரும், ஸம்ஸார துக்கத்தை அகற்றுபவருமான ஸூர்யனை நமஸ்காரம் செய்ய வேண்டும். நமஸ்காரம் செய்து தனது கோத்திரத்தையும், நாமாவையும், சர்மாவையும் கூறவேண்டும். முடிவில் '' அஸ்மி போ :'' என்றும் கூறவேண்டும். ஓம் ப்ராச்யை திஸே நம : என்பது போல் நான்கு திக்குகளுக்கும் நமஸ்காரம் செய்யவேண்டும். ஊர்த்வாய நம: அதராய நம: அந்தரிக்ஷாய நம: பூம்யை நம: என்று நமஸ்காரம் செய்து மஹாவிஷ்ணுவை த்யானம் செய்யவேண்டும்.

ஒருநாள் ஜபம் இல்லாதவன், மூன்றுநாள் ஸந்த்யா வந்தனமில்லாதவன், பன்னிரண்டு நாள் அக்னி இல்லாதவன் விருஷளனுவான். வேதங்களில் புருஷ ஸூக்தம், பாரதத்தில் கீதை, மந்த்ரங்களில் காயத்ரி, வ்ரதங்களில் ஏகாதசி, ஸ்நானங்களில் ரங்கனது ஸந்நிதியில் துலா காவேரீ ஸ்நானம் இந்த ஐந்து உபாயங்களே மோக்ஷம் பெறவும் பஞ்சமஹா பாதகங்களை அகற்றவும் ஸாதனமாகும். கருணையுள்ள பிரம்மா இவைகளையே மனிதர்களுக்கு காருண்யத்தினுல் கலியுகத்தில் காண்பித்தார். தந்தையினிடம் காயத்ரியையும், குருவினிடம் வேதத்தையும் பெற வேண்டும். சௌச ஆசாரங்களுடன் கூடியவன் ப்ரும்ம ஸ்வரூபத்தை அடைகிறுன். சரீரமே தர்மத்திற்கு முதல் ஸாதனம். அதேபோல் விவாஹமும் தர்மத்திற்கு முதல் ஸாதனம். வேத ஸாரமான காயத்ரியே வ்ரதமுள்ளவர்களுக்கு ஸாதனம். ஆதலால் இம் மூன்றையும் அவசியம் கவனித்து நன்கு அனுஷ்டிக்கவேண்டும்.

இரண்டு ஸந்த்யா காலங்களிலும் எந்தவீட்டில் தீபவரிசைகள் இருக்கின்றனவோ, அங்கு பகவான் தங்கி இருக்கிறுர். பழைய ஜலத்தினுல் அன்னம் முதலியவைகளைப்



பக்வம் செய்தாலும், காந்திப்போகும்படி பக்வம் செய்தாலும், பக்வமில்லாததும், கேசமுள்ள அன்னமும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. பிக்ஷுக்களுக்கு அளிக்காததும், உஷ்ணமில்லாததும், ஹோம தூபம் இல்லாததும், வேதத்வனி இல்லாததும், பதியோ ஸதியோ அசுத்தமாக இருக்கும் இடமும் எங்களுக்கு ஸுகமாக வஸிக்கும் இடம் என்று பாபங்கள் கூறுகின்றன. காது படைத்த பயன் நல்ல விஷயங்களைக் கேட்பதற்கே, குண்டலந் தரிப்பதற்கல்ல. கை படைத்த பயன் தானம் செய்வதற்கே, கங்கணம் தரிப்பதற்கல்ல. உடல் படைத்த பயன் ஏற்றவர்க்குப் பரோபகாரம் செய்வதற்கே, சந்தனம் பூசிக் கொள்வதற்கல்ல.

## அக்னி பூஜையின் மஹிமை.

பதி வெளியில் சென்றபோது, சுத்தமாக இருந்து பத்னீ காலை மாலைகளில் ஔபாஸன ஹோமம் செய்ய வேண்டும். ரித்விக் சிஷ்யன் முதலியவர்களோ அந்த பத்னிக்கு எதிரில் செய்யலாம். தம்பதிகள் இல்லாதபோது பிறர் செய்யும் ஹோமம் வீணுகும். அக்னியும் நஷ்டமாகும். ஒரு ஜாண் அளவு உள்ளதாக ஸமித்துக்கள் இருக்கவேண்டும். பரிதி என்பது (அக்னியைச் சுற்றிப் போடுவது.) இரண்டு ஜாண் அளவு இருக்க வேண்டுமது. கட்டைவிரல் பெருமனும், தோலுள்ளதும், நுனி உள்ளதும், புழு முதலியவைகள் அரிக்காததுமான ஸமித்தே ஹோமத்திற்கு ஏற்றது. பாலாசம் (முருக்க மரம்), அச்வத்தம், காதிரம் (கருங்காலி), பில்வம், அத்தி, குசம், நாயுருவி, அருகம்பில் இவை எட்டுவகை ஸமித்துக்களாம். ஶமீ, காதிரம் இரண்டுகளைத் தவிர, மற்ற முள்ளுள்ள சமித்துகளை ஏற்கலாகாது. அக்னியை ஊது குழாயினுல்தான் ஊதவேண்டும். அது கிடைக்காவிடில் கையிலோர் ஸமித்தை வைத்துக்கொண்டு ஊதவேண்டும். மற்றவைகளால் விசறக் கூடாது. அக்னி ஜ்வாலையில் தான் ஹோமம் செய்யவேண்டும். ஜ்வாலை அக்னியின் நாக்காகும். எல்லா கர்மாக்களிலும் கிழக்கு புறத்தில் ஹோமம் செய்யவேண்டும். பித்ருகர்மாக்களில் மாத்ரம் தெற்கு புறத்தில் ஹோமம் செய்யவேண்டும்.

ஜ்வலிக்காத விறகு அக்னியின் பாதமாகும். புகை சூழ்ந்ததும், அல்ப ஜ்வாலை யுள்ள மத்ய ப்ரதேசம், சாம்பலாக உள்ளதுமான இடம் அக்கியின் தலையாகும். ஆதலால்

இந்த இடங்களில் ஹோமம் செய்யலாகாது. செய்தால் நோயும், கர்ப க்ஷயமும், நிந்தையும், ஏழ்மையும் உண்டாகும். ஹோமத்தின் ஆரம்ப காலத்திலும், உபஸ்தான காலத்திலும் ஸமித்தினுல் ஹோமம் செய்யவேண்டும். தேவ தர்ப்பணம், ஹோமம், பலிவைத்தல், போஜனம், துடைப்பது, தேவதார்ச்சனை இவைகளை எல்லாம் நுனி விரல்களால் செய்ய வேண்டும். அது தேவ தீர்த்தம் எனப்படும். நல்ல ஜ்வாலையிலோ, கட்டைத் தணலிலோ, சாம்பல் பூத்த தணலிலோ ஹோமம் செய்யாதவன் ஜீர்ண சக்தி இல்லாதவனுகவும், நோயாளி யாகவும், தரித்ரனுகவும் ஆவான். பன்னிரண்டு பர்வாக்களிலும் உள்ள அரிசியை மேல் நோக்கிய கையுள்ளவனுக ஔபாஸன ஹோமம் செய்ய வேண்டும். அப்படி யானுல்தான் ஹோமம் செய்த பலனைப் பெறலாம். ஸமித் ஸமாரோபணம் செய்திருந்தாலும், ஆத்ம ஸமாரோபணம் செய்திருந்தாலும், இரண்டு வேளை ஹோமம் செய்யாவிடினும், தார்யமான அக்னியிலும் இரண்டு வேளை ஹோமம் செய்யாவிடினும், அந்த அக்னி நஷ்டமாகும். ப்ராத: காலம்வரையில் ஹோமத்திற்கு உத்தம காலமாம். ஸங்கவ காலம் வரை கௌண காலமாம். ஸாயங்காலத்தில் அஸ்தமன காலம் முதல் ப்ரதோஷ காலம்வரை உத்தம காலம். இன்னெரு ஹோம காலம் வரும்வரை ஹோமத்திற்குக் காலம் என சிலர் கூறுவர். ஹோமம் செய்யாமல் சாப்பிட்டால் அவன் மிருகமாவான். மூன்று லோகத்தவரது பாபத்தையும் உண்பவனுவான். மலத்தைப் புஜிக்கும் பன்றியாக ஆவான். ஆதலால் ப்ராணன் போகும் வரை பாபத்திற்குப் பயந்தவன் அக்னியை விடலாகாது.

மோதிர விரலின் மத்ய ரேகையிலிருந்து ஆரம்பித்து ஆள்காட்டி விரல் கடைசி ரேகைவரையில் வலமாக எண்ணி காயத்ரி ஜபம் செய்ய வேண்டும். நடுவிரலின் இரண்டு பர்வாக்களும் மேரு எனப்படும். அவைகளுக்குக் குறுக்கே செல்லக் கூடாது. ஓராண்டு ஔபாஸனம் செய்யாமல் இருந்தால் அறுபது ப்ரஸ்தம் தான்யமும், மூன்று ப்ரஸ்தம் நெய்யும் தானம் செய்ய வேண்டும். உகை அல்லது அக்னி குண்டத்திலும், பெருந்தீயிலும், கல்லின் மீதும், விருஷள அக்னியிலும், ஸூதக அக்னியிலும், விதவை கொண்டுவந்த அக்னியிலும் ஹோமம்



செய்யக்கூடாது. ப்ராத ஸ்நானம் செய்து காயத்ரியை ஜபம் செய்து ஸூர்யோதய காலத்தில் ஹோமம் செய்பவனே வேதத்தின் கரைகண்டவனுவான். மந்த்ரம், தந்த்ரம் முன் பின்னுகச்செய்தல் சரியான காலத்தில் செய்யாமை, அளவுக்குக் குறைவாகவோ, அதிகமாகவோ ஹோமம் செய்வது ஆகிய இவைகளால் உண்டாகும் தோஷத்தைத் துளஸீ கட்டையினுல் ஏற்படும் அக்னி அகற்றுகின்றது. துளஸிக்கட்டை அக்னியில் ச்ராத்தம் செய்தால் ஆயிரம் ஆண்டு கயா ச்ராத்தம் செய்த பலன் உண்டாகும்.

விஷ்ணுவின் பூஜையில் துளஸிக் கட்டையினுல் உண்டான தூப தீபத்தால் பகவானை ஒருமுறையாவது ஆராதித்தால் வைகுண்டம் செல்வான். சிதை அக்னியில் ஒரு துளஸிக் கட்டையாவது சேர்ந்தால் எவ்வளவு பாபியாய் இருந்தாலும் பாபமகன்று வைகுண்டம் செல்வான். மார்கழி மாஸத்தில் அருணோதய காலத்தில் துளஸிக் கட்டையால் பொங்கல் பக்வம் செய்து பகவானுக்கு எவன் அர்ப்பணம் செய்கிருனே அவனது புண்யத்தை அளவிட முடியாது. துலாமாஸத்தில் த்வாதசியில் துளஸிக் கட்டையால் பக்வம் செய்த அன்னத்தைப் பகவானுக்கு நிவேதனம் செய்தால் ஆயிரம் பிராம்மணர்களுக்கு அன்னமிட்ட பலன் உண்டாகும். மாகமாஸம் ரதஸப்தமியில் அல்லது ஏகாதசியில் ஒரு நாள் அங்ஙனம் செய்தால் ஆயிரம் ஆண்டு பூஜா பலனைப் பெறலாம். துலாமாஸம் கார்த்திகை, மாகம், வைசாகம், அக்னி பூஜை இவ்வைந்தும் புண்யத்தை அளிப்பவை. பஞ்சபாதகங்களை அகற்றக் கூடியவை என்பதாகும். இவைகளில் ஸ்நானம் செய்ய முடியாவிடில் துலா மாஸத்திலாவது ஸ்நானம் செய்யவேண்டும். இவைகளில் ஒன்றையும் செய்யாதவன் கோடி ஜன்மாக்களில் சண்டாளனுவான். சக்தியுள்ளவன் அக்னி ஹோத்ரம் செய்யவேண்டும். ஏழை ஔபாஸனம் செய்ய வேண்டும். துளஸிக் கட்டையால் ஸ்மார்த் தாக்னியை, ஔபாஸனுக்னியை ஜ்வலிக்கும்படிச் செய்தால் ச்ரௌதாக்னியைப் பூஜித்த பலனைப் பெறலாம்.

அரசர்களால் உபத்ரவிக்கப்பட்டாலும், நோயாளியாயினும் ஸ்நானம் செய்யவேண்டாம். ஆனுல் அக்நியை விடக்கூடாது. அக்நியை விட்டவன் மஹா பாபியாவான்.

அவனுக்குப்ராயச்சித்தமேகிடையாது. ப்ராம்ம முஹூர்த்தத்திலெழுந்து கால்களையலம்பி ஆசமனம்செய்து கிழக்கு முகமாக அமர்ந்து மௌனமாய் மஹாவிஷ்ணுவை த்யானம் செய்யவேண்டும். கங்கை, காவேரீ, மாகம், வைசாகம், துளஸீ இவைகளையும் த்யானம் செய்து நூற்றெட்டு முறை ஹரிநாம கீர்த்தனம் செய்ய வேண்டும். அததற்கும் ஏற்ற சிறந்த பலன் உண்டாகும். அதில் ஸந்தேகமில்லை.

சிரத்தையுடன் ராமாயணத்தையும், துலா காவேரீ மஹிமையையும் கேட்பவர் ஸூர்ய மண்டலத்தின் வழியாக மேலே செல்வர். ஒரு முறை ரங்கநாதனுடைய ஸந்நதியில் காவேரீ ஜலத்தை அருந்துபவரும், நதியிலோ குளத்திலோ வைசாக ஸ்நானம் செய்து விஷ்ணுவைப் பூஜிப்பவரும், இறக்கும் காலத்தில் துளஸியையும், ஸாளக்ராம ஜலத்தையும் சாப்பிட்டுத் தலையில் தரிப்பவரும், தேவாலயம், மடம், உத்யானம், அக்ரஹாரம் இவைகளை அமைப்பவரும், ஸ்மிருதியில் சொன்னவண்ணம் தர்ம பரிபாலனம் செய்தவரும், காவேரீ ஜலத்தில் இறக்கும்வரை ஸ்நாநம் செய்தவரும் அல்லது துலா மாஸத்திலாவது ஸ்நானம் செய்தவரும், துலா ஸ்நானம் செய்ய முடியாதவர் மாஹாத்ம்யத்தைக் கேட்டாலும், அதுவும் முடியாதவர், காலையில் காவேரியை ஸ்மரித்தாலும் துலா ஸ்நானம் செய்து மல்லிகைகளால் சிவலிங்க அர்ச்சனம் செய்தாலும் துலாமாஸத்தில் பாரத, ராமாயணங்களைப் படித்தாலும், படிக்கக் கேட்டாலும், ஸூர்ய மண்டலத்தைப் பிளந்துகொண்டு செல்வர். தயையுள்ளவரும் இடது புறத்தில் லக்ஷ்மியைத் தரிப்பவருமான மஹாவிஷ்ணுவைத் தர்சிப்பார்கள். 'சத்வாரி ச்ருங்கா' என்ற மந்த்ரம் அல்லது மற்ற மந்த்ரங்களை ஜபித்து, ஹோமம் செய்து உபஸ்தானம் செய்ய வேண்டும். ஸ்வாஹா தேவிக்குப் பிரியத்தைச் செய்பவனே, தயாநிதியே, உமக்கு நமஸ்காரம். கோரமான பாபத்தைப் போக்கடியும். நீர் தேவர்களுக்கு ஹவ்ய கவ்யங்களைக் கொடுப்பவர். எல்லோரையும் ரக்ஷிப்பவர். உலகத்திற்கெல்லாம் நீரே ஆதாரமானவர். ஆதலால் உமக்கு நமஸ்காரம் என்று கூறவேண்டும்.



ப்ரதிகூலமான மனைவியுள்ள க்ருஹஸ்தன் அழிவது போல் பகவானுக்கு நிவேதனம் செய்யாமல் புஜிப்பவன் அழிவான். அக்னி பூஜை செய்பவரது பாபங்கள் எல்லாம் அழியும். நாக்கு, வயிறு, சிஸ்நம் முதலியவைகளை அடக்கினவன் யமனை அழகான ரூபத்தோடு பார்ப்பான். பாபிகள் கோர ரூபத்தோடுள்ளவனைப் பார்ப்பார்கள். நரகத்திற்குப் பயந்தவர்கள் ப்ராதஸ்நானம், இரண்டு வேளைகளிலும் அக்னி பூஜை, ஸாதுக்களுக்கு உபகாரம் முதலியவைகளைச் செய்ய வேண்டும். மற்றவைகளைச் செய்யமுடியாவிடினும் அக்னியை விடக்கூடாது. அக்னி உபாஸகன் ப்ரம்மலோகம் செல்வான் என்று ஞானிகள் கூறுகிறார்கள். ஔபாஸனாக்னியில் வைச்வதேவமெனும் பஞ்ச மஹாயக்ஞத்தையும் ஸ்தாலீ பாகத்தையும் செய்பவன் ப்ரம்ம ஸ்வரூபியாவான். விச்வாமித்ரர் தன் வீட்டிற்கு வந்த வஸிஷ்டருக்கு ஐந்துகோடி வருஷம் செய்த தவத்தின் புண்யத்தைத் தந்தார். வஸிஷ்டர் தனது ஆச்ரமத்திற்கு வந்த கௌசிகருக்கு ஸாயங்கால ஆஹுதியின் புண்யத்தைக் கொடுத்தார். அது விச்வாமித்ரர் கொடுத்த புண்யத்தைவிட அதிகமாக இருந்தது.

**பதினான்காம் அத்யாயம் முற்றிற்று.**

## பதினைந்தாம் அத்யாயம்—53 சுலோகங்கள்.

## தர்மல, தர்மவிருத்தி சரிதம்.

இந்த அக்னி பூஜை விஷயத்தில் பாபத்தை அகற்ற வல்லதான ஒரு ஸம்பவத்தைக் கூறுகிறேன். முன்னொரு ஸமயம் ஸந்தாபநன் என்ற பிராம்மணோத்தமர் இருந்தார். அவர் ஸகல சாஸ்த்ரமு முணர்ந்த வித்வான். தான் தர்மாநுஷ்டாநம் செய்வதுடன் ஊரில் உள்ள அனைவர்க்கும் தர்மத்தைப் போதித்து வந்தார். இரு வேளைகளிலும் தவறாமல் அக்நி பூஜை செய்வார். அவருக்கு காலத்தில் தர்மலன் தர்மவிருத்தி என இரு புத்ரர்கள் பிறந்தனர். தக்க வயதிலே உபநயநம் செய்வித்தார். வேத சாஸ்த்ரங்களைக் கற்பித்தார். நற்குலத்தில் பிறந்த நாரீரத்நங்களை மணம் செய்வித்தார். அவரது முதிர்ந்த காலத்தில் யுவாக்களான புத்ரர்களுக்கு நல்லுபதேசம் செய்தார்.

என்னைப்போல் ஸதா அக்னி பூஜை தவறாமல் செய்யுங்கள். எந்த வீட்டில் ஔபாஸந அக்னி தார்யமாக இருக்கிறதோ அங்கு யமன் தலைக்காட்டமாட்டார். ராக்ஷஸர்

பயப்படுவர் என்று முக்யமாக அக்நி பூஜையையும் மற்ற தர்மங்களையும் கூறி காலகதி அடைந்தார். உடனே அவருக்குத் திவ்ய விமாநம் வர திவ்ய தேஹம் பெற்று அதிலேறிச் சென்றார். அவர் மனைவியும் புத்ர பாசத்தை விட்டு உடன்கட்டை ஏறி பதியுடன் சென்றாள். தர்ம விருத்தி விதிப்படி பெற்றோருக்குப் பரலோக கார்யங்களைச் செய்தான். தந்தை கூறியபடி ஒளபாஸநத்தை விடாமல் செய்து வந்தான். அதிதி பூஜை முதலிய மற்ற தர்மங்களிலும் ஈடு பட்டு இல்லறத்தை நன்றாக நடத்தினான். தர்மிலனும் ஸகல தாநங்களையும் செய்து மற்ற தர்மங்களையும் செய்து வந்தான். ப்ரதிதிநம் ஸத்பாத்ரத்தில் கோதாநம் செய்வான். ஸகல புண்ய தீர்த்தங்களிலும் ஸ்நாநம் செய்து ஸமஸ்த க்ஷேத்ரங்களுக்கும் சென்று தர்சநம் செய்தான். பழைய கோபுரங்களையும் ப்ராகாரங்களையும் புதுப்பித்தான். தடாகம் உத்யாநம் முதலிய பூர்த்தங்களிலும் ஈடுபட்டான். கோ ப்ராம்மணர்களுக்கு ஸதா ஹிதமான கார்யம் செய்வான். ஸதா த்யாகம் செய்வான்.

ஒரு ஸமயம் தர்ம விருத்தி தீர்த்தயாத்ரைக்குச் சென்றிருந்த பொழுது தந்தையின் ஶ்ராத்த தினம் வந்தது. அச்சமயம் பிறந்த வீடு சென்றிருந்த மனைவியை, பால்யமானதால் ஶ்ராத்த கார்யம் செய்வது கஷ்டம் என அவளை அழைக்காமலேயே ஶ்ராத்தம் செய்தான். பத்நீ இல்லாததால் ஒளபாஸநாக்நி துர்பலமானது. ப்ராம்மணர்களை அழைத்து மற்ற விதிவழுவாமல் தானே பாகம் செய்து ஹோமம் செய்தான். அச்சமயம் வந்திருந்த பித்ருக்கள் ஒளபாஸநாக்நி சரியாக இல்லாததால் இந்த ஹோமம் ராக்ஷஸர்களுக்கே உரியது என அதை ஏற்காமல் மறைந்து விட்டார்கள். கோபங்கொண்டு நீ புத்ரபாக்யம் செல்வம் க்ஞானம் முதலியவைகளை இழப்பாய் என சாபமும் கொடுத்தனர்.

தர்ம வ்ருத்தி அநேக ஸந்ததிகளையும் செல்வத்தையும் பெற்று யாத்ரையை முடித்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான். அவ்விருவர்க்கும் ஒரே ஸமயத்தில் ஆயுள் முடிந்ததால் இருவர்க்கும் இருவிமாநமனுப்பி அழைத்து வரலாமா? என சித்ர குப்தன் யமதர்மனை வினவினர். அவரும் உத்தரவளித்து விமாநம் புறப்படும் போது, சித்ர குப்தன், ஒளபாஸநமில்லாதவன் விமாநத்திலேறுவது



கூடாதல்லவா? ஸ்த்ரீயை, தன் தாயைக் கொன்றவன், ஒளபாஸந மில்லாதவன் இவர்களைப் பார்த்தாலே பாபம். அது அகல சூர்யனைப் பார்க்கவேண்டுமே. அவர்களைத் தொட்டால் நதி ஸ்நாநமல்லவோ செய்யவேண்டும்? முக்ய தர்மத்தை விட்டவனுடன் நமது கிங்கரரும் பேசவுங் கூடாதல்லவா? என்று நினைத்து யமனுக்கு நினைவூட்டினான்.

ஆம்! அது உண்மையே! நமது ச்யாம, சபள என்ற இருநாய்கள் மற்றபயங்கரமான நாய்களுடன் கூட தர்மிலனைக் கடித்து இழுத்து வரட்டும். தர்ம விருத்தி விமானத்தில் வரட்டும் என்றார். அங்ஙனமே இருவரும் வர யமதர்மன் அழகிய உருவத்துடன் தர்ம விருத்தியை வரவேற்றான். தனது ஆஸநத்தையே அவருக்கு அளித்து உம்மைக் கண்டு ஸந்தோஷமடைந்தேன். இஷ்டமான லோகம் செல்லும் என்றான். கோரமான அஸிபத்ரம் வாள் முதலிய ஆயுதங்களால் தர்மலனை அவர் எதிரிலேயே சிக்ஷித்தான். இதைக் கண்டு துக்கமடைந்த தர்ம விருத்தி, ஓ மஹாபாக! எனது ஸோதரன் தீர்த்த யாத்ரை க்ஷேத்ராடனம் ஸத்பாத்ர தாநம் அதிதி பூஜை முதலிய பல தர்மங்களைச் செய்தவன். அவனுக்கு இத்தகைய கோர சிக்ஷையா? என்றான்.

யமன், முனிவரே! ப்ராம்மணரது உடலில் ப்ரும்ம விஷ்ணு ருத்ரர்களும் ரோமகூபங்களில் ரிஷிகளும் முகத்தில் அக்நியும் இருக்கிறார்கள். ஆதலால் த்விஜர் அக்நிமுகர் எனப்படுவர். ஸாக்ஷாத் அக்நியில் ஹோமம் செய்து பிறகு பிராம்மண முகாக்நியிலும் செய்ய வேண்டும். உம்மைப்போல் உமது ஸஹோதரன் சரியான ஒளபாஸநாக்நியில் ஹோமம் செய்யவில்லை. ஆதலால் அவனுக்கு நரகம். நீர் ஸ்வர்க்கம் செல்லலாம் என்றான். தர்மவ்ருத்தி, ஆனால் எனது புண்யத்தில் பாதி தருகிறேன். அவனும் ஸ்வர்க்கம் செல்லட்டுமென்றார்.

யமதர்மன், ஒளபாஸநமில்லாதவர்களுக்கு அளிக்கும் தாநம் வீணாகும், அன்ன பாநாதி தாநங்களுக்கு யார் பாத்ரம்? யார் பாத்ர மில்லை என்ற விசாரம் வேண்டாம். பசியுள்ளவன் யாராயினும் அவன் அன்னதாநத்திற்குப் பாத்ரமாவான். ஆதலால் நீர் தேடிய புண்யத்தை அபாத்ரத்திற்களித்து சாம்பலில் செய்த ஆஹுதி போல் வீணாக்க வேண்டாம். என்று கூறி அவரை ஸ்வர்க்கத்திற்கனுப்பி தர்மிலனை ரௌரவ நரகத்தில் தள்ளினான்.

முனிவர்கள், எப்போது அவருக்கு விடுதலை? ஆஹார மென்ன வென்று கேட்க ஸூதர் கூறினர்.

பத்மம் அற்புதம் என்ற பலகோடி வர்ஷங்கள் அக்னி இல்லாதவர் நரகத்தில் துன்பமடைவர். தலை கீழாகவும் கால் மேலுமாக இருந்து பசி தாஹம் என அலருவர். சிஷ்டர்களான பிராம்மணர் அவர்களது திருப்திக்காக போஜநமானபின் எச்சில் ஜலத்தை கீழ்கண்ட மந்த்ரத்தைக்கூறி அளிப்பர்.

ரௌரவேऽபுண்யநிலயே-பத்$^3$மார்பு$^3$த$^3$ நிவாஸிநாம் !
அர்த்தி$^2$நாம் உத$^3$கம் த$^3$த்தம்-அக்ஷய்யம் உபதிஷ்ட$^2$து ॥

அதே அவர்களுக்கு ஜீவனம். ஆதலால் பிராம்மணர் முழு முயற்சியுடன் அக்னி பூஜை செய்யவேண்டும். துலா மாஸத்தில் ஸ்நாநம் செய்து முடிவில் ஆயிரதெட்டு அல்லது நூற்றெட்டு அல்லது இருபத்தெட்டு அல்லது பன்னிரண்டு பிராம்மணருக்காவது சக்திக்கேற்றபடி அன்னம் அளிக்கவேண்டும். துலா காவேரி மஹிமையைப் படிக்கவோ கேட்கவோ வேண்டும். கார்த்திகை மாதம் வரை துலா ஸ்நாநம் செய்தால் ஸகல இஷ்டமும் பூர்த்தியாகும். துலா மாஸ சுக்லபக்ஷ த்வாதசியில் பாயஸத்துடன் அன்னமளிக்கவேண்டும். அது கோடி குலத்தை உத்தரணம் செய்யும். பலனை விரும்புபவர் வாழைப்பழம் தாம்பூலம் வஸ்த்ரம் ஸுவர்ணம் தான்யம் நெய் தேன் எண்ணை பால் மோர் ஆகியவைகளைத் தாநம் செய்யவேண்டும்.

பதினைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

## பதினாறும் அத்யாயம்— 152 சுலோகங்கள்.

*நாரதர்:* அரசே! உனது ப்ரபிதாமஹன் (மூதாதை) சந்தநு மஹாராஜன் காவேரி ஸ்நாந புண்யத்தால் யோஜந கந்தியை மணந்தார்.

*தருமர்:* ஓ வித்வானே! எனது மூதாதையான சந்தநு கங்கையை மணந்து பீஷ்மரைப் பெற்றவரல்லவா? அவர் எப்படி துலாகாவேரி ஸ்நாநம் செய்து யோஜந கந்தியை மணந்தார்? விளக்கிக் கூறும்?

*நாரதர்:* ஒரு ஸமயம் சந்தநு வேட்டையாட வநம் சென்றார். யமுனா தீரத்தில் திவ்ய கந்தம் வீச, அது எங்கிருந்து வருகிறதென அதைத் தொடர்ந்து சென்றார்.



ஸ்வர்ண வர்ணமுள்ள அழகிய யுவதி ஒருவளைக் கண்டார். குழந்தாய் நீ யார்? ஏனிங்கு வஸிக்கிறாய்? உன்னை மணந்த பாக்யவான் யார்? என்றார். வேந்தே! யான் விவாஹமாகாதவள். என் தந்தை சம்படவராஜன். அவர் சொற்படி, ஓடம் ஓட்டிக் கொண்டிருக்கிறேன் என்றாள். சந்தநு, பெண்ணே! அப்படியானால் என்னை மணந்து ஆனந்தமளி என்றான். ராஜன்! என்னிஷ்டப்படி நடப்பவளல்ல நான். எனது தந்தையைக் கேளும் என்றாளவள். சந்தநு அவளுடன் சென்று சம்படவ ராஜனை நோக்கி எனக்கு இப் பெண்ணை அளியும் என்றார். மஹாராஜா! தங்கள் கருத்தின்படி செய்கிறேன். ஆனால் இவளது புதல்வனுக்கே ராஜ்யம் தரவேண்டு மென்றானவன்.

இதைக் கேட்ட சந்தநு, ஆஹா! இது சந்த்ர வம்ஸத்திற்கு அடுக்காத கார்யம்! எனக்குப் பிரியமானவனும் மூத்தவனுமான காங்கேயனை விட்டு சம்படவன் பேரனுக்கா ராஜ்யம் அளிப்பது? என்று கூறி மேலே ஒன்றும் பேசாமல் நகரத்திற்குத் திரும்பினன். ஆனால் அரசனது மநம் அப்பெண்ணிடமே காமனைக்கொண்டு சென்றது. அதனால் அரசன் உண்பதிலும் ராஜ ஸுகத்திலும் ராஜ்ய பரிபாலநத்திலும் நித்ய கர்மாவிலும் பெரியோரைப் பூஜிப்பதிலும் கூட வெறுப்பு கொண்டான். ஒரு ஸமயம் மாத்யான்ஹிக காலத்தில் வந்த குல குருவான தௌம்யரைப் பார்த்தும் பூஜிக்கத்தக்க அவரைப் பூஜிக்கவில்லை. ஆஸ்சர்யம் அடைந்த முநிவர் தனது தவத்தால் உண்மையை அறிந்திருந்தும் அரசனைப் பார்த்து உமக்குப் பிரியமான நான் வந்ததைக் கண்ணால் கண்டும், ஜடனைப் போல் ஏன் பேசாமலும் பூஜிக்காமலும் இருக்கிறாய்? என்று கேட்டார். இப்படி அவர் அறிவித்தும் கூட அவருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு மறுபடியும் வாய் திரவாமலிருந்தான் வேந்தன்.

தௌம்யர் க்ருபையுடன் அரசனது தலையை ஜலத்தால் ப்ரோக்ஷித்தார். உடனே அவன் எழுந்து தண்டம் போல் வீழ்ந்து நமஸ்கரித்தான். விதிப்படி பூஜித்தான். தங்களது தர்ஸகத்தால் கிருதார்த்தன் ஆனேன் என்றான். தனது புத்தி தெளிய நல்ல தர்மத்தைக் கூறுவரா? என மநதில் நினைத்தான். இதை யறிந்த தௌம்யர் அரசே! உனது கருத்தை க்ஞாந த்ருஷ்டியால் அறிந்தேன்.

சம்படவ கன்யகை உனக்கு கிடைக்காததால் நீ வருந்துகிருய். அவளை அடைய ஒரு உபாயம் கூறுகிறேன் கேள். துலா மாஸத்தில் காவேரி ஸ்நானம் செய். ரங்கநாதனைக் கீழ்கண்ட ஸ்தோத்ரங்களால் ஆராதித்து உனதிஷ்டத்தை பெறு. காவேரிக்கு ஸமமான புண்ய நதி வேறில்லை. ரங்கநாதனது நூற்றெட்டு நாமாவுள்ள நாமரத்ந ஸ்துதி போல் வேறில்லை. ஸ்நானம் செய்து ஶூத்தனை வா. உனக்கிதை உபதேசிக்கிறேன் என்ருர். அங்ஙனமே தௌம்யர் உபதேசித்தார் சந்தநுவுக்கு.

## ஸ்ரீ ரங்கராஜ நாம ரத்ந ஸ்தோத்ரம்.

அஸ்யஸ்ரீ ரங்கராஜ நாமரத்ன ஸ்தோத்ர மஹாமந்த்ரஸ்ய
வேதவ்யாஸோ பகவான் ரிஷி: அநுஷ்டுப் சந்த:
பகவான் ஸ்ரீ விஷ்ணுர் தேவதா.
ஸ்ரீ ரங்கஶாயீதி பீஜம். ஸ்ரீ காந்த இதி ஶக்தி: ஸ்ரீ ப்ரத
இதி கீலகம் மம ஸமஸ்த பாபநாஶ நார்த்தே ஸ்ரீ ரங்கராஜ
ப்ரஸாத ஸித்யர்த்தே ஜபே விநியோக:
ஸ்ரீ ரங்க ஶாயீ ஸ்ரீ காந்த: – ஸ்ரீ பத: ஶ்ரித வத்ஸல:
அநந்தோ மாதவோஜேதா – ஜகந்நாதோ ஜகத்குரு:
ஸுரவ்ருத்த4: ஸுராராத்ய:–ஸுரராஜா நுஜ: ப்ரபு:
ஹரிர் ஹதாரிர் விஸ்வேஶ:–ஶாஶ்வத: ஶம்பு4 ரவ்யய:
பக்தார்தி ப4ஞ்ஜநோ வாக்மீ–விந்த்4யோ விக்2யாதகீர்திமான்
பா4ஸ்கர: ஶாஸ்த்ர தத்வக்ஞ:–தை3த்ய ஶாஸ்தா மஹேஶ்வர:
நாராயணோ நரஹரி:–நீரஜாக்ஷோ நரப்ரிய: [பூஜித:
ப்ராம்மண்யோ ப்ரும்ம க்ருத் ப்ரும்மா–ப்ரும்மாங்கோ ப்ரும்ம
க்ருஷ்ண: க்ருதக்ஞோ கோவிந்த: ஹ்ரிஷீகேசோऽக4 நாஶந:
கேஶீ ப்ரப4ஞ்ஜந: காந்த:–நந்த ஸூநு ரரிந்த3ம:
ருக்மிணீ வல்லபோ4 ராம: – பவபத்ரோ பலாநுஜ:
தாமோதரோ ஹ்ரிஷீகேஶ: – வாமநோ மதுஸூதந:
பூத: புண்ய ஜநத்4 வம்ஸீ - புண்ய ஶ்லோக: சிகா2மணி:
ஆதி3 மூர்தி: தயா மூர்தி: – ஶாந்த மூர்தி ரமூர்திமான்
பரம் ப்ரும்ம பரந்தா4ம–பாவந: பவந: ப்ரபு:
இந்துச் சந்தோத3தி4: ஶௌரி: - ஸம்ஸாராம் புதி3தாரக:
ஆதி3 தேயோऽச்யுதோ பா4நு: - ஶங்கர: ஶிவ ஊர்ஜித:



மஹேஶ்வரோ மஹாயோகீ – மஹாஶக்தி: மஹா ப்ரிய:
துர்ஜந த்4வம்ஸக: ஶிஷ்ட: - ஸஜ்ஜநோ பாஸ்தி ஸத்ப2லம்
பக்ஷீந்த்ரவாஹநோ க்ஷோப4ய:–க்ஷீராப்3தி4 ஶயநோவிது4:
ஜநார்தநோ ஜகத்தே4து: - ஜித மன்மத விக்ரஹ:
சக்ரபாணி: ஶங்கதா4ரீ - ஶார்ங்கீ க2ட்3கீ3 கதாதர:

இங்ஙனம் கூறப்பட்ட நாமரத்ந ஸ்தவ மெனும் ஸ்தோத்ரம் மிக உத்தமமானது. ரஹஸ்யமானது. எல்லா மளிக்கும். எல்லா நோய்களையும் அகற்றி நினைத்த ஸர்வ பலனையும் தரும். மஹாராஜ! நீ விரைவாக ஶுபமான ஸ்ரீ ரங்கம் செல். துலா காவேரீ ஸ்நானம் செய்து காவேரீ மஹிமையைக் கேள். கோ அந்நம் வஸ்த்ரம் தான்யம் பொருள் பூமி இவைகளைத் தானம் செய். கன்யாதானம் செய். த்வாதசியில் ஆயிரம் பிராம்மணர்களுக்கு பாயஸான்ன மளி. நாமரத்ந ஸ்தோத்தரத்தால் ரங்கநாதனைத் துதித்து உனது இஷ்டத்தைப் பெறு.

**நாரதர்:** இங்ஙனம் உபதேசித்துவிட்டு தௌம்யர் தனது ஆஶ்ரமம் சென்ருர். ஶந்தநு ராஜன் ஸ்வல்ப பரிவாரம் சூழக் கிளம்பினன். ராஜ்யபாரத்தை மந்திரியிடமும் பீஷ்மனிடமும் ஒப்படைத்தான். வாத்ய கோஷங்கள் பத்து திக்குகளிலும் முழங்க சிறந்த ஆயிரம் யானை, முப்பதினுயிரம் குதிரை, இரண்டாயிரம் தேர், பத்து கோடி காலாட்படை ஆகியவை சக்ரவர்த்தியான ஶந்தனுவைப் பின் தொடர்ந்தன. ரங்கநாதர் ஸன்னதியில் விதிப்படி காவேரீ ஸ்நானம் செய்தான். பிராம்மணர்களுக்கு யதேஷ்டமாகத் தானம் செய்தான். ரங்கநாதனை நமஸ்கரித்து நாமரத்ந ஸ்துதி கூறினன். பல மண்டபங்களை அமைத்தான். சுத்தனுய் மறுபடியும் தனது ஸேனைகளுடன் கூடி நகரத்திற்குக் கிளம்பினன். மாஹிஷ்மதீ எனும் நகருக்கருகே செல்லும்போது முப்பத்திரண்டு அக்ஷோஹிணீ ம்லேச்ச ஸேனை இவருடன் போருக்கு வந்தது. ஶந்தநு துலாஸ்நாந மஹிமையால் சிறிதும் அஞ்ஜாமல் காந்தர்வ அஸ்த்ரத்தால் அனைவரையும் முறியடித்து வெற்றி பெற்ருன்.

ஜயஸ்ரீயுடன் அஸ்திநாபுரம் வந்தான். ஆயினும் காமத்தால் பீடிக்கப்பட்டு மத்ஸ்யகந்தியையே நினைத்து நினைத்து மிக இளைத்துவிட்டான். இதை அறிந்த பீஷ்மன் சம்படவராஜனிடம் சென்ருன். அவன் ராஜபுத்ரனை

வரவேற்று உபசரிக்க, உமது பெண்ணை என் தந்தைக்கு மனைவியாக அளியும் என்ருன். ஐயா ! யான் நீச ஜாதி ! எனது பெண்ணிடம் உன்டாகும் புத்ரனும் நீசனே ஆவான் அன்ருே! அவனுக்கு ராஜ்யம் தருவீரா? அளிப்பதானல் என் பெண்ணைத் தருகிறேன் என்ருனவன். ஸத்யவ்ரதனெனும் பீஷ்மன், நீ விரும்பியபடி உனது புத்ரியின் புத்ரனே ராஜ்ய மாளட்டும். மகளை மன்னனுக் களி என்ருன். ராஜகுமார ! தாங்கள் ராஜ்யத்தை விரும்பாவிடினும் தங்களது புத்ரன் போரில் எனது பேரனைக் கொன்று ராஜ்யத்தை அபஹரித்துக் கொள்ளலாம். ஆதலால் அவளை யான் உமது பிதாவுக்கு அளிக்க முடியாதென்ருன். இதைக்கேட்ட பித்ரு பக்தனன ஸத்யவ்ரதன் அப்படியானல் யான் விவாஹமே செய்துகொள்ளவில்லை. ஜீவித்திருக்கும்வரை பிரும்மசாரியாகவே இருப்பேன். புத்ர னில்லாதவனுக்கு நற்கதி இல்லையாயினும் பித்ரு சிச்ருஷையால் நற்கதி அடைவேன். இது ஸத்யம் ! என உரக்கக் கோஷித்தான். கம்பீரமாய் மயிர்க் கூச்சலிடும் படியான இதைக் கேட்ட தேவர்கள். பீஷ்ம ! பீஷ்ம ! கடுமையாக ப்ரதிக்ஞை செய்தவனே என்று கூறி புஷ்ப மாரிப் பொழிந்தனர். அன்று முதல் ஜனங்களும் பீஷ்ம என்றே அழைத்தார்கள்.

சந்தநுராஜன் யோஜநகந்தியை விதிப்படி மணந்தார். தேவர்களும் பார்த்து மோஹ மடையும்படியான அவளுடன் அரசன் பலகாலம் ஆநந்தமாக இல்லறத்தை நடத்தினர். பீஷ்மரைப் பார்த்துக் குழந்தாய் ! பித்ரு ஶுஶ்ரூஷையால் நீ எல்லா லோகத்தையும் ஜயித்துவிட்டாய் ! உனக்கு யம பயமில்லை. உனக்கு இஷ்டமான காலத்தில் மரண மடைவாய் என்ற வரங்களைத் தந்து கையினல் அவரைத் தடவி ஆசீர்வாதம் செய்தார். சந்தனுவுக்கு யோஜனகந்தியிடம் சித்ராங்கதன், சித்ரவீர்யன் என்ற இரு புத்திரர்கள் உண்டானர்கள்.

**நாரதர்:** தர்ம ! நீ கேட்டதைக் கூறினேன். துலா ஸ்நாநம் செய்து துலா மஹிமையைக் கேட்டாலும் படித்தாலும் புத்ரனை விரும்புபவர் புத்ரனையும் தநத்தை விரும்புபவர் தநத்தையும் பெறுவர். முப்பத்திரண் டாண்டுகள் ஔபாஸநம் ஸ்நாநம் யக்ஞம் முதலியவைகளைச் செய்யாதவன் இருபத்து நான்கு லக்ஷம் காயத்ரீ ஜபம் செய்ய வேண்டும். அதற்குமேல் என்ன ப்ராயஶ்சித்தமென



அறியோம். காவேரியில் ஒருமுறை துலாஸ்நாநம் செய்தால் விஷ்ணுவைத்பாநம் செய்த புண்யத்தை அடைந்து ஹரிபக்தனுக ஆகிருன். த்ருடாங்கனுனவன் மாத்யாந்ஹிக காலத்தில் ஸ்நாநம் செய்யாமல் பகவானை அர்ச்சித்தாலும் வைஶ்வதேவம் செய்தாலும் குல்மரோகமுள்ளவனுவான். ஒரு குளத்தில் ஸ்நாநம் செய்தால் அதிலிருந்து நாலு பிடி மண்ணை எடுத்து வெளியில் போட்டுவிட்டு ஸ்நாநம் செய்யவேண்டும். விஷ்ணுவை அர்ச்சிக்க முடியாதவன் அவரை அர்ச்சித்த துளஸீ தளத்தையேனும் தரிக்க வேண்டும்.

ஆஷாட சுக்ல த்வாதசியில் புருஷோத்தமனை பகவானைப் பசும்பாலால் அபிஷேகம் செய்து துளஸீ தளத்தால் அர்ச்சிக்கவேண்டும். ஆவணி சுக்ல த்வாதசியில் கோ க்ஷீரத்தால் விஷ்ணுவுக்கு அபிஷேகம் செய்து ஒரு துளஸீ தளத்தினலாவது பூஜை செய்தால் தரித்ரனும் குபேரனுவான். அந்த மாத அமாவாஸ்யையில் ஶ்ராத்தம் செய்தால் கயா ஶ்ராத்தம் செய்தது போலாகும். எனது உத்தாநம்–எழுந்திருத்தல்–படுத்துக்கொள்ளல் புரளுவது என்ற ஏகாதசிகளில் ஶாகபாகங்களைக் கூட புஜித்தால் என் மநதிற்குத் துன்பந் தருவதாகும் என்ருர் பகவான். ஆதலால் சுத்தோபவாஸ மிருக்கவேண்டும். மணலில் இல்லாத தீர்த்தம் மறுநாள் பழைய தீர்த்தமாகும். முதல் நாள் பூத்த புஷ்பமும் பழையதாகும். ஆனல் துளஸிக்கு அந்த தோஷமில்லை.

பச்சையானதும் மிருதுவானதுமாயுள்ள துளஸீ தளமே உத்தமம். கறி காய்களை நருக்குவது தான்யத்தைப் பொடிசெய்வது அடுப்பில் கட்டையை எரிப்பது தீர்த்தம் எடுத்து உபயோகிப்பது துடப்பத்தால் பெருக்குவது இவ்வைந்தும் ஐந்துவகையான பிராணி ஹிம்ஸையாகும். அது அகல பஞ்ச மஹாயக்ஞம் என வைச்வதேவத்தைத் திநந்தோறும் செய்யவேண்டும். ஆஹிதாக்நியானல் தனது ஔபாஸந அக்நியில் அல்லது லௌகிக அக்நியில் செய்யவேண்டும். கறிகாயுடன் அன்னத்தால் அந்த கர்மாவைச் செய்யவேண்டும். கறிகாய்கள் இல்லாவிடில் நீர்த்தம் தயிர் பால் இவைகளில் ஒன்றைக் கொண்டு செய்யவேண்டும். கையினல் அந்த ஹோமம் செய்யவேண்டும். ஜலத்தை உத்தரணியால் உபயோகிக்கவேண்டும். வைச்வதேவம் அக்நியில் செய்ய

ஸௌகர்ய மில்லாவிடில் ஜலத்தினாலாவது வைச்வதேவ தர்ப்பணம் செய்யவேண்டும். அல்லது மந்த்ரத்தை ஜபிக்க வேண்டும்.

தேவதைகளுக்கு உள்ளங்கை மேலே இருக்கும்படி ஹோமம் செய்யவேண்டும். அப்படியே நுனி விரலால் பரிஷேசநம் செய்யவேண்டும். ஸ்வாஹா என தேவர்க்கும் ஸ்வதா என பித்ருக்களுக்கும் ஹந்தா என மநுஷ்யர் களுக்கும் கூறி ஹோமம் செய்யவேண்டும். நெல்லிக்கா யளவு அன்னத்தை நுனிக்கையால் பூமியில் பலியாக வைக்கவேண்டும். மந்த்ரமில்லாமல் இவைகளுக்குப் பரி ஷேசநம் செய்யவேண்டும். வைச்வதேவ பலி பரிஷேச நத்தில் முதல் மூன்றிற்குத் தனித் தனியாகவும் பிறகு இரண்டிற்கு ஒன்ருகவும் பிறகு நாலுக்கு ஒன்ருகவும் பிறகு மூன்றிற்குத் தனியாகவும் பின்னர் பத்துக்கு ஒன் ருகவும் பரிஷேசநம் செய்ய வேண்டும். (இது வைச்வ தேவம் செய்யும்போது பார்த்தால்தான் விளங்கும்.)

### ஆஹார நியமம்.

கிழக்கு முகமாக உட்கார்ந்து மௌனியாக கோழி முட்டை அளவு அன்னத்தை பூதபலியாக வைக்க வேண் டும். மூன்று வேளைகளிலும் (ராத்ரியிலும்) இங்ஙனம் பலிவைக்க வேண்டும். திறந்த சுத்தமான இடத்தில் காக்கைக்குப் பலி வைக்கவேண்டும். ஏழை மூன்று கபளம் வைத்தால் போதும். தனிகர் நிறைய வைக்க வேண்டும். நெய் இல்லாததும் புழுவும் கேசமுமுள்ள உணவை உட்கொண்டால் பதிதனுவான். ஸ்த்ரீ புத்ரன் இவர்கள் உண்ட பாத்ரத்திலும் அசுத்தமான இடத்தி லும் சிறுவர்களுடனும் மனைவியுடனும் புஜிப்பதும், கை யால் பரமாரப்பட்டதும் ஒருவர் சாப்பிட்ட மிகுதியும் ஸ்த்ரீ சதுர்த்தன் உண்டு மிகுந்ததும் ஶ்ராத்த மிகுதி யையும் உஷ்ணமில்லாததுமான அன்னத்தையும் புஜித் தால் சாந்த்ராயணமெனும் பிராயஶ்சித்தம் செய்து கொள்ள வேண்டும். இல்லையேல் மஹா பாபம் ஸம்ப விக்கும்.

ஸீமந்த வீட்டன்னம் ஆசாரமில்லாதவரது அன்னம் ஸ்நாநம் செய்யாத ஸ்த்ரீ பாகம் செய்தது விடனது அன் னம் விதவையின் அன்னம் சதுர்த்தரது அன்னம் ஆகிய வைகளை உண்ணக் கூடாது. அவை நாய் மாம்ஸத்திற்கு



ஸமமாகும். க்ருஹஸ்தன் பிக்ஷை எடுத்த அன்னம் பிரும்மசாரியிடம் பிக்ஷை வாங்கிய அன்னம் தனக்காக மாத்ரம் பக்வம் செய்யும் அன்னம் இவை நாய் மாம்ஸத் திற்கு ஸமம். ஆலம் இலை எருக்க இலை அரச இலை இவை களில் வைத்த அன்னம், நீசன் கொண்டுவந்தது, திருடி வந்தது வாழைப்பட்டையின் பின்புரம் வைத்தது இரும்பு பாத்ரத்தில் வைத்தது வெண்கலத்தில் வைத்தது ஆகிய வைகளும் சதுர்த்தன் சண்டாளன் இவர்களருகே அமர்ந்து உண்பதும் நாய் மாம்ஸம் போலாம். சண்டாளன் முதலி யோர் குறலைக் கேட்டுக்கொண்டே புஜித்தால் உடனே சாந்த்ராயண மெனும் பிராயஶ்சித்தம் செய்துகொள்ள வேண்டும். இலையில் உள்ள அன்னத்தைக் கையால் தாண்டி முன் இலையிலுள்ளவைகளை எடுக்கக் கூடாது. அதற்காகவே பிசியாத அன்னத்தை ஒதுக்கி இடையில் வழிவிடுவது.

இலையைத் தொட்டுக்கொண்டே ஸாளக்ராம தீர்த் தத்தை "அமிருதோபஸ் தரணமஸி" என உட்கொண்டு கொஞ்சம் கூட பேசாமல் பிராணுக்நி ஹோத்ரம் செய்யவேண்டும். நெல்லிக்காய் அளவு அன்னத்தைப் பல்லில் படாமல் 'ப்ராணயஸ்வாஹா' என்று ஐந்து மந்த் ரங்களால் ஐந்து முறை ஹோமம் செய்ய வேண்டும். முதல் ஹோமம் மார்புவரை சென்ற பின்பே மற்ற ஆஹுதிகளைச் செய்ய வேண்டும். ஒன்ருேடொன்றைச் சேர்த்துப் புஜித்தால் உடனே சண்டாளனுவான். உப்பு காரம் இல்லாத சுத்த அன்னத்தை அபிகாரம் செய்து நகம் பல் படாமல் ஹோமம் செய்ய வேண்டும். துலா மாஸத்திலும் கார்த்திகை மாதத்திலும் பிரும்மபத மெனும் பேத்தி இலையில் புஜித்தால் அச்வமேத பலனைப் பெறுவான். விரதமும் ஸபலமாகும். கையில் எடுத்த அன்னத்தைப்பாதி வாயில்போட்டு மிகுதியைக் கையிலே எடுத்து இல அன்னத்துடன் சேர்த்தால் வாந்தி செய்த தைச் சாப்பிட்டவனுவான்.

இரும்பு பாத்திரத்திலுள்ள நீரை அருந்துவதும் ஸப்தமியிலும் ஞாயிற்றுக்கிழமையிலும் நெல்லிக்காய் எள்ளு இவைகளை உண்பதும் இரவில் தயிர் பகலில் பால் சாப்பிடுவதும் கையால் கடைந்த மோரும் கள்ளுக்குச் சமமாகும். ஆபத்தில்லாதபோது ராத்ரியில் கடுகை உப யோகித்தால் அது ஸுராபாநம்போலாகும். அஷ்டமியில்

தேங்காய் த்வாதசியில் புடலங்காய் த்விதீயையில் கண்டங்கத்தரிக்காய் (பிருஹதி) பிரதமையில் பூஷிணிக்காய் பஞ்சமியில் தூதுவளையும் ஸுராபான ஸமமாகும். பதியுடன் படுக்கையில் படுத்திருந்த ஸ்த்ரீ ஸ்நானம் செய்யாமல் பாகம் செய்த அன்னம் நாய் மாம்ஸமாம். விஷ்ணுவுக்கு அளிக்காத அன்னம் ஸுரையாம். நித்ய நைமித்திக கர்மாக்களை விட்டு காம்ய கர்மாவை மாத்ரம் செய்பவன் பிரும்மஹத்தி செய்தவனாவான். அவன் சுத்தனாக வேண்டுமானால் பிரும்மஹத்திக்குக் கூறிய பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும்.

எந்த விரதமாயினும் அதைப் பூர்த்திசெய்து தர்மங் கூறியவரை சக்திக்கேற்றபடிப் பூஜிக்காமல் சென்றவனது அன்னத்தைப் புஜித்தால் ரௌரவம் செல்வான். கொஞ்சம் குறைவாகச் சாப்பிட்டு முடிவில் த்ரவான்னத்தையும் உப்புள்ள மோரையும் த்ருப்தி உண்டாகும் வரைச் சாப்பிடுபவன் க்ஷேமமாக இருப்பான். பழையது ஸாரமில்லாதது காய்ச்சிய மோர் இவைகளை ஏற்கக் கூடாது. எலுமிச்சம் பழமும் உப்பும் கலந்ததும் கருவேப்பிலை கலந்ததுமான மோரை தொன்னையில் சாப்பிடுவது எப்போதும் ஆரோக்யத்தை அளிக்கும். அதிதிகளுக்கு அன்னமிட்டு பாலர் வ்ருத்தர் நோயாளி இவர்கள் உண்டபின் தான் உண்டு இரண்டுமுறை ஆசமனம்செய்து 'இந்த்ரஸ்ய' என்று ஆரம்பிக்கும் மந்த்ரத்தை ஜபிக்க வேண்டும். உணவு ஜீர்ணமாவதற்காக பீமன் முதலிய ஐவரை ஸ்மரிக்கவேண்டும். போஜனத்திற்குப் பிறகு விஷ்ணுவின் பாத துளஸியைச் சாப்பிட்டால் அன்ன தோஷத்தினால் ஏற்பட்ட பாபம் அகலும். பிறகு தர்மத்துடன் கூடிய சிவ புராணத்தையோ விஷ்ணு புராணத்தையோ படிக்கவேண்டும். யாரேனும் புராணம் கூறினால் அஸூயையின்றி அதைக் கேட்க வேண்டும். சிவனே விஷ்ணு, விஷ்ணுவே சிவன். இவ் விருவர்களுக்குள் பேதம் பாராட்டுபவன் பித்ருக்களுடன் நரகம் செல்வான். எல்லோரும் வித்வான்களாயிருந்தாலும் தர்மம் சொல்வதற்கு ஒருவரை கௌரவித்து அமர்த்த வேண்டும். முதலில் நைவேத்யம் செய்து ஸத்ஸபைக்கு நமஸ்காரம் செய்து தாழ்ந்த ஆஸனத்தில் அமர்ந்து அஸூயை இல்லாமல் கேட்க வேண்டும். தர்மத்தைச் சொல்லுபவர் ஸாக்ஷாத் ஆதிசேஷன், ஸாக்ஷாத் மஹாவிஷ்ணு.



## கதா ச்ரவண விதி.

கதை சொல்பவரைப் பூஜித்துக் கதை கேட்கவேண்டும். ஸத்கதை கூறுபவனை எங்கே பூஜிக்கவில்லையோ, நிந்திக்கின்றார்களோ, அங்கு அக்னி பயமும், துர்மரணமும், திருட பயமுமுண்டாகும். காவேரி கபிலா ஸங்கமத்தில் ச்ராத்தம் செய்வதும் கயையில் பிண்ட மளிப்பதும் ஸ்ரீரங்கத்தில் ச்ராத்தம் செய்வதும் பித்ருக்கள் துன்பத்திலிருந்து விடுபடக் காரணமெனக் கொண்டாடுகிறார்கள். ஸர்வ தீர்த்தங்களிலும் ஸ்னானம் செய்வதால் உண்டாகும் பலன் துலா காவேரியில் ஸர்வதீர்த்தங்களும் வருவதால் காவேரீ ஸ்னானத்தினாலேயே பெறலாம். காவேரீ ஸ்னான புண்யத்தினால் ஸர்வ யக்ஞ தீர்த்தம் இவைகளை ஸேவித்ததாகும். ராமாயணக் கதையால் ஸகல புராணங்களைக் கேட்ட புண்யமுண்டாகும். ராமாயணத்தின் ஒரு ச்லோகத்தின் பதினாறில் ஒரு பங்கிற்குக் கூட மற்றவை ஸமமாகாது. விசேஷமாக ராம கதையைப் பக்தியுடன் கேட்டால், தேவர்ஷிகளும் பித்ருக்களும் மற்றவர்களும் தாங்களே கேட்பதுபோல் எண்ணி, ஸந்தோஷமடைந்து வம்சம் விருத்தியடையும்படிச் செய்கிறார்கள். ஸந்தோஷமடைந்த பித்ருக்கள் க்ருதார்த்தர்கள் ஆனோம் என ஆனந்தத் தாண்டவமாடுகிறார்கள். என் வம்சத்தைச் சார்ந்தவன், நாம் விடுபட ராமசரிதம் கேட்பானா? என வேண்டுகிறார்கள். சுத்தியில்லாவிடினும், ஆசாரமில்லாவிடினும், மனதினால் பாபத்தைச் செய்பவனாயினும் ராமாயணத்தில் ஒரு ச்லோகம் கேட்டாலும், பாபத்திலிருந்து விடுபடுகிறான். புராணத்தைக் கூற மஹா விஷ்ணுவைத் தவிர யாருக்கு சக்தி உளது? ஆதலால் தர்மம் அறிந்தவரைப் பரிஹாஸமாகக் கூட அவமதிக்கலாகாது.

இதுபற்றி யோர் இதிஹாஸம் கூறுகிறேன் கேள். அது கேட்பவர்களுடைய ஸகல பாபங்களையும் அகற்றி ஸர்வ மங்களங்களையும் கொடுக்க வல்லது.

## சிவமூர்த்தி சரிதம்.

அக்ரபூமி என்ற ஊர் ஆயிரக்கணக்கான ஸாதுக்களும் பண்டிதர்களும் ஆசார சீலர்களும் நிறைந்த இடம். அதில் வேத வேதாந்தமறிந்த சிவமூர்த்தி எனும் வித்வான் ஒருவன் இருந்தான். அவன் பொருள் தேடுவதையே முக்யமாகக் கருதுபவன். வித்வான்களுக்கு நித்தியம்

ஸ்ரீ ராம சரிதத்தைக் கூறிவந்தான். எல்லோரும் முன்னதாகவே வந்து ஊக்கத்துடன் கதைகேட்டனர். ஒவ்வொரு காண்டத்தின் ஆரம்பத்திலும் நூறு நூறு நிஷ்கம் என்ற அளவுள்ள பொருளைக் கொடுப்பது, முதல் ஆரம்பகாலத்தில் ஆயிரம் நிஷ்கம் கொடுப்பது என பஹுமானத்துடன் பேசி முடித்தார்கள். ப்ரதி தினமும் பத்து ஸ்வர்ண புஷ்பமும் சுவையுள்ள பழங்களையும் தேங்காய், தூபதீபம், அக்ஷதை, முறுக்கு, வடை, அதிரஸம், மோதகம், பானகம் முதலிய பல நைவேத்தியங்கள் செய்து ஸ்ரீமத் ராமாயணத்தில் அச்யுதனைப் பூஜித்து, அவருக்கு அளித்து வந்தார்கள். வீணை காவ்யங்களை விட்டு ஸ்ரீராமாயண கதையைக் கேட்டு வந்தார்கள். ஸ்ரீ ராம பட்டாபிஷேக காலத்தில் வஸ்த்ரம் ஆயிரம் நிஷ்கம் ஆபரணம் முதலியவைகளை அளித்து ஊரார் அவரைத் துதித்து அர்ச்சித்தனர். ஆனால் தனிகராக இருந்தும் தனித் தனியாக அவரை ஸன்மானிக்க வில்லை.

இதைக் கண்டு வருந்திய புராணிகர், எல்லோரும் சேர்ந்து உபாயமாக ஸன்மாநம் செய்தீர்கள். அவரவரும் தனியாகக் கதை கேட்டவர் ஏன் தக்ஷிணை தரவில்லை? என்றார். பிராம்மணர்கள் எங்கள் மக்திக் கேற்றபடி மூவ்வாயிரம் நிஷ்கமளித்து உம்மைப் பூஜித்தோம். பேராசை கொண்டவர் பெருந் துன்பமடைவர் என தர்ம நூல் கூறுகிறதல்லவா? பணத்தில் ஆசைகொண்டவன் பாபி. அபமிருத்யுவை அடைவான். தரித்திரனவான். முடிவில் பதிதனுமாவான் என்று கூறினர். சிவசர்மா, நீங்கள் தான் லோபிகள். பாபிகளான நீங்கள் என்னைத் தூஷித்தீர்கள். என்று அவர்களை திக்காரம் செய்துவிட்டுக் கிளம்பினர். பிராம்மணர்கள் ஒன்று சேர்ந்து இந்த அயோக்யர் கோவித்துக்கொண்டு போனல் போகட்டும் என்று அவரை வீடுவீடாக அழைத்துப் பூஜிக்கவில்லை. பகல் வரை தன்னை அழைத்து அர்ச்சிப்பரோ எனக் காத்திருந்தார். பசியுடன் அவர்களைச் சபித்துவிட்டுக் குடும்பத்துடன் கோபித்துக்கொண்டுக் கிளம்பினர்.

பௌராணிகரை அவமதித்ததால் அவர்களது பிரும்ம வர்ச்சஸ் அழிந்தது. சிறிது காலத்திற்குள் திருடர் இவர்களது பொருளைக் கவர்ந்தனர். ஏழைகளாகி க்ஷாமத்தால் பீடிக்கப்பட்டனர். வரிகொடாததால் அரசனலும் பீடிக்கப்பட்டு அல்பாயுஸ்ஸுகளாகவும் ஸந்ததியற்றவர்களாகவும்



ஆனர்கள். ஸ்ரீராம கதையைக் கேட்ட மஹிமையால் நரகம் சென்று துக்கங்களை அனுபவிக்க வில்லை. பௌராணிகனை அவமதித்த பாபத்தால் பகாஸுரனுக்கு மக்களைப் பலிகொடுக்கும்படி நேர்ந்தது.

**தர்மன்:** ராமாயண ஶ்ரவணத்தால் பாபிகள்கூட நற்கதியடைவர் என ஸாதுக்கள் கொண்டாடுகிறார்களே! இவர்கள் மாத்ரம் ஏன் நற்கதி பெறவில்லை?

**நாரதர்:** அது ஸத்யமே, தர்மத்தைக் கூறுபவர் குரு ஆவார். குரு த்ரோஹிக்கு மேலுலஹமில்லை. புராணம் கூறுபவர் ஸாக்ஷாத் ஆதிசேஷனே! அதில் ஸந்தேகமில்லை. குருவையும் மந்த்ரம் உபதேசித்தவரையும் ஒரு போதும் நிந்திக்கக் கூடாது. பௌராணிகரை நிந்தித்து அந்த பிராம்மணர்கள் அவரைப் பூஜிக்கவில்லை. அந்த தோஷத்தால் ஸ்வர்க்கம் செல்லவில்லை. கதை கேட்டதால் நரகமும் செல்லவில்லை. ஸத்கதா ஶ்ரவணத்தால் பிராம்மணர்களாகவே பிறந்தனர். அவமதித்த தோஷத்தால் பகாஸுரனல் பக்ஷிக்கப் பட்டனர். அந்த துர்மரணத்தால் பிரேத உடலைப் பெற்றனர். பிறகு ஸகரனது புத்தரர்களாகப் பிறந்தனர். முன்னேற்பட்ட தோஷத்தால் கபிலரது தேஜஸ்ஸில் வீழ்ந்து எரிக்கப் பட்டு துர்மரணம் அடைந்தனர். பிறகு கங்கா ஜலத்தால் சுத்தர்களாகி ஸ்வர்க்கம் சென்றார்கள். தன்னை அவர்கள் அவமதித்ததை அரசரிடம் பௌராணிகர் அறிவிக்க அரசனும் அவர்களை சிக்ஷித்தார்.

பிராம்மணர்களைச் சபித்த தோஷத்தால் சிவமூர்த்தியும் தேஜஸ்ஸை இழந்தான். இறந்த பின் பகாஸுரனக பிறந்தான். சிறிது புண்ய சேஷத்தால் தயவுள்ளவனக இருந்தான். ஏகசக்ர நகரத்திலுள்ள அந்த பிராம்மணர்களைப் பீடித்துக் கொண்டிருந்த அவன் பீமனல் கொல்லப் பட்டான். இறந்தபின் ஸ்வர்க்கத்தில் அப்ஸரஸுகளுடன் கூட ஒரு கல்பம்வரை ஆநந்தமாக இன்பமுற்றான். புண்ய சேஷத்தால் பரீக்ஷித் மகாராஜனகப் பிறப்பான். ஸார்வ பௌமனகவும் யோகியாகவும் உத்தம பாகவதனகவும் இருப்பான். ஆதலால் பௌராணிகனும் பொருளாசை கொண்டு பிராம்மணரை அவமானம் செய்யக் கூடாது. கதை கேட்பவரும் சக்திக்கேற்றபடி தக்க ஸன்மாநம் செய்யவேண்டும். பௌராணிகரை அவ

மதிக்கக் கூடாது. தர்ம! நீ க்ருத க்ருத்யன்! ஸுகமாக இரு. நான் துலா மாஸ ஸ்நானம் செய்யப் போய் வருகிறேன் என்ருர்.

**அகஸ்த்யர்:** ஓ தர்ம வர்மன்! இப்படி வைஷ்ணவ தர்மத்தைக் கேட்ட தர்மன் ஸ்வர்ணபுஷ்பம் மோதிரம் கேயூரம் குண்டலம் திவ்யாபரணம் கந்தம் புஷ்பம் மாலை வஸ்த்ரம் முதலியவைகளால் நாரதரை நன்கு பூஜித்தார். ஆநந்த பாஷ்பம் பெருக நான்கு பிரதக்ஷிண நமஸ்காரங்களைச் செய்து அஞ்ஜலிபந்தத்துடன் அவர் அருகில் சிஷ்யனைப்போல் நின்ருர். அவரை விட்டுப் பிரிய மனமில்லாது கதறினர். ராஜன்! ஸாதுக்களை விட்டுப் பிரிவதைவிட வேறெது அதிக துக்கம்? நாரதரும் தர்மராஜனது பக்தியைக் கண்டு ஆஸ்சர்யமடைந்தார். தயையுடன் சிறித்துக்கொண்டே மெதுவாக ஆசீர்வாதம் செய்தார். இராஜேந்த்ர! பாண்டவ ச்ரேஷ்ட! சிறந்த புத்தியுள்ளவனே! நீ க்ருத க்ருத்யன்! யோகிகளுக்குக் கூட கிட்டாத அசஞ்சலமான கிருஷ்ண பக்தியுள்ளவனாக இருக்கிருய். என்றுகூறி கிளம்ப ஆரம்பித்தார். அதனிடையில் பீமன் முதலிய அவரது சகோதரர்களும் திரௌபதியும் வந்து நாரதர் திருவடியை வணங்கிக் கூறினர்.

### பதினாரும் அத்யாயம் முற்றிற்று.

## பதினேழாம் அத்யாயம்—80 சுலோகங்கள்.

### பதிவ்ரதா தர்மம்.

**திரௌபதி:** பகவன்! யோகீச்வர! எதனல் எமக்கு கேசவனிடம் பக்தி உண்டாகும்? எந்த உபாயத்தால் நரகம் செல்லாதிருப்போம்? வேதங்கூறிய தத்துவத்தை பூர்ணமாக தயை செய்து எங்களுக்குக்கூறும். முனிவரில் சிறந்த உமக்கு நமஸ்காரம் என்றுள். ஸ்வதர்மத்தை நன்கு அனுஷ்டித்தால் பகவான் தன்னிடம் பக்தி உண்டாக அருள்வார். விஷ்ணுபக்தியினுல்தான் ஸம்ஸாரக் கடலைக் கடக்கலாம். பதிக்கு பணிவிடை செய்வதே பெண்களின் ஸ்வதர்மம் என்பார்கள் ஞானிகள். வேறு தேவதைகளை ஸேவிக்கக் கூடாது. தன் உடலை உபவாஸாதிகளால் உலர்த்துவதும் கூடாது. பதி ஜீவித்திருக்கும் பொழுது விரதாதிகளால் உபவாஸமிருந்தால் பதியின் ஆயுளைக் குறைப்பவளாவாள். அவளும் நரகம் செல்வாள்.



பிரும்மசாரிக்குக் குருபணிவிடை, புத்ரனுக்குப் பித்ரு ஶுஶ்ரூஷை, ஸ்த்ரீகளுக்குப் பதிபணிவிடையும் சிசுக்களைக் காப்பதும் ஸ்வதர்மமாகும். அதனுல் மஹாவிஷ்ணு பரம ஸந்தோஷமடைகிருர். வத்ஸே! பதி புஜித்தபின் நீ புஜி. அவர் தூங்கிய பிறகு நீ தூங்கு. அழைத்தவுடன் பணிவாகச் செல். கேட்டதற்கு ஸுமுகமாக பதில் கூறு.

விஷ்ணுவின் திருவடியைப் பெற ஆசை இருந்தால் பதி கோபித்தாலும் முகத்தைக் கடுத்துக் கொள்ளாதே. விளையாட்டாகக் கூட பதிக்குப் பிரியமில்லாததைப் பேசாதே. ஶ்ருங்கார காலத்தில் திவ்ய அலங்காரம் கந்தம் புஷ்பங்களைத் தரித்துச் செல். அக்நி கார்யம் தேவ பூஜை குருவந்தனம் வீட்டு வேலை ஆகியவைகளில் ஜாக்ரதையாக இரு. அஷ்டாக்ஷரம் ஸதாசாரம் அச்சுதாநந்த கோவிந்த எனும் நாமத்ரயம் உள்ளும் புறமும் சுத்தம் இவைகளைக் கைக்கொள். ஸன்யாஸி, அதிதி, ஸாது இவர்களுக்கு எப்போதும் பூஜை செய். ருதுஸ்நாநம் செய்த பின் பரபுருஷரைப் பார்க்காதே. பதிலுறு நாள்வரை பதியையே நினை. நன்னுளில் பதி ஸங்கத்தை விரும்பாதவள் சிசுஹத்தி பாபத்தை அடைவாள். களைத்திருக்கும்போது பதிக்கு விசிறினுல் ஸ்வர்க்கத்தில் அப்ஸரஸ்ஸுகள் உனக்கு விசிறுவார்கள். களைத்த ஸமயம் அறிந்து தீர்த்த மளித்தால் ஸ்வர்க்கத்தில் அம்ருதம் பெறுவாய். ஒருமுறை பதியின் காலைப் பிடித்தால் விமாநத்திலேறி ஸ்வர்க்கத்தில் கொண்டாடப்படுவாய். பதிஶுஶ்ரூஷை செய்த பலர் ஸ்வர்க்கம் சென்றதைக் கேட்டிருக்கிறேம். சில பெண்களுக்கு ஸத்யம் ஆசாரம் புண்யம் ஆகியவைகள் இரா. பொய் கூறி சுயநலமுள்ளவர்களாக இருப்பார்கள். இவ் விஷயத்தில் ஒரு கதை கூறுகிறேன். அது மூடர்களுக்கும் தர்ம புத்தியையுண்டுபண்ணும்.

### கற்பரசியான எரும்பு.

ஸ்வர்ண வர்ணமாய் அழகுவாய்ந்ததான ஒரு பெண்ணெரும்பைக்கண்டு ஜ்ரும்ப எனும் ஆண் எரும்பு அதை அநுபவிக்க ஆசை கொண்டது. ஓ மஹா பாகே! நீ எவரையும் மணக்கவில்லையே! உன்னைக் கண்டவுடன் எனக்கு காம விகாரம் உண்டாகிறது. என்னை ஏற்று அருள்புரி! உனக்கு நன்மை உண்டாகும் என்றது.

பெண் எரும்பு: நீர் யார்? உம்மை நம்பலாமா? என்னைக் கைவிடாமல் காப்பதானுல் உம்மை மணக்கிறேன். ஸந்தேஹமில்லை. இதுவரை யான் எவரையும் மணக்கவில்லை என்றது. ஜ்ரும்பன் கூறிற்று: பெண்ணே! உனது கேள்வியே உன் ஶீலத்தைக் காட்டுகிறது. ரூபவதியாகவும் யுவதியாகவும் உள்ள உன்னைப் பார்த்தவுடன் உனது ஶீலத்தைக் கண்டு மணக்க விரும்பினேன். இங்ஙனம் ஒன்ருெடொன்று பேசிக்கொண்டு சிற்றின்பத்தை அநுபவித்தன. சில குழந்தைகளையும் பெற்றன. ஜ்ரும்பன் வீட்டில் மனைவியை விட்டு விட்டு ஒரு ஸமயம் உணவு தேடுவதற்காக பந்துக்களுடன் வெளியில் சென்றது. வீட்டிலுள்ள மனைவியையே அது நினைத்துக்கொண்டிருந்தது. அச்சமயம் வேருெரு ஆண் எரும்பு ஏகாந்தத்திலுள்ள ஜ்ரும்பன் மனைவியைப் பார்த்து மந்த ஹாஸத்துடன் கூறிற்று. மிக்க அழகு வாய்ந்த உன்னேடு சேர வேண்டுமென்ற ஆசை வெகுநாளாக இருந்தது எனக்கு. இத்தகைய ரூபத்தைக் கண்டு யார்தான் மோஹிக்க மாட்டார்? இன்று நீ ஏகாந்தமாக இருப்பதால் உன்னை யான் விடமாட்டேன். உன் பதி என்னை என்ன செய்ய முடியும்? நீ ஏற்காவிட்டால் உன்னைப் பலாத்காரமாக அணுகுவேன். இதைக் கேட்ட பெண் எரும்பு ஸமாதானமாகச் சிலவார்த்தைகள் கூறிற்று.

தாங்கள் அறிவாளி அல்லவா? எப்படி பரஸ்திரீயை அபேக்ஷிக்கிறீர்? பரஸ்திரீ கமனத்தில் ஒரு க்ஷணமே சுகம். ஆனல் சிலகாலம் நரகம் வருமே! பிரும்மஹத்தி முதலிய பாபங்களுக்கும் பிராயஶ்சித்தம் உண்டு. பரஸ்திரீகமநத்திற்குப் பிராயஶ்சித்தமே இல்லையே! ஒரு முறை மோஹத்தினல் பரஸ்திரீ கமநம் செய்தால் ப்ரதிதிநம் மூன்ருண்டுகள் ஆயிரம் காயத்ரீ ஜபம் செய்ய வேண்டும். பரஸ்திரீயுடன் கூடும் துஷ்டன் குலத்தை அழித்தவனுவான். அந்த பாபத்தால் அவன் குலம் அழிவதுடன், துஷாக்நி நரகம் செல்வான். பதியை ஒரு முறை நிந்தித்தாலும் ஒரு முறை பரபுருஷ கமநம் செய்தாலும் ஸ்த்ரீ ஸ்வர்க்கத்திலுள்ள தனது பித்ருக்களுடன் நரகம் செல்வாள். ஸகல விதமான பாபங்களுக்கும் பிராயஶ்சித்தம் உண்டு. பரஸ்த்ரீ ஸங்கம், கடனைக் கொடுக்காமல் ஏமாற்றுவது, பொய் கூறுவது இம்மூன்றிற்கும் பிராயஶ்சித்தமே இல்லை. ஆதலால் பர



ஸ்த்ரீ ஸங்கம் கூடாது. மோஹத்தினல் அதைச் செய்தால் ஏழையாகவும் அல்பாயுஸ்ஸாகவும் ஆவான்.

எனது கற்பைக் கெடுக்காதீர். வ்யபிசாரத்தால் உமது வம்ஶமும் என் வம்சமும் அழியும், என்று அது உபதேசித்ததைக் கேளாமல் பலாத்காரமாக ஸங்கத்திற்கு ஆரம்பித்தது அந்த எரும்பு. உடனே இது ஹூம் என்று கூறி கற்பின் அக்நியால் அதைச் சாம்பலாவாய் எனச் சபித்து அழித்தது. நாத! நாத! என உரக்கக் கதறிற்று. இதைக் கேட்டவுடன் விரைவாக வந்த ஜ்ரும்பன் என்ன என்ன? எனப் பரபரப்புடன் விசாரித்தது. மனைவி நடந்தவற்றை விரிவாகக் கூற ஆஶ்சர்யமடைந்த பதி தலையை ஆட்டிக் கொண்டு பத்நியின் செயலைக் கொண்டாடிற்று. நடுங்கிக் கொண்டிருக்கும் மனைவியைப் பார்த்து அழகும் யௌவநமும் வாய்ந்த நீ நானில்லாத போது பரபுருஷனை மறுத்துக் கற்பைக் காத்தாய்! உனக்கு ஸமமான ஸதி வேறு யார்? இருகுலங்களையும் ஶீலத்தையும் ரக்ஷித்தாய்! உன்னைப் பத்நியாகக்கொண்ட நான் கிருதார்த்தன் ஆனேன்! என்றது.

கேகயராஜன் தன்மனைவியுடன் உலாவும் போது இந்த எரும்புகளின் பேச்சைக் கேட்டு சிரித்தான். திடீரென காரணமின்றி ஒருவருமில்லாவிடத்தில் சிரிக்கக் காரணமென்ன? ஏன் சிரித்தீர்? என்னைப் பரிஹாஸம் செய்கிறீரா? எனக் கோபங்கொண்டு மனைவி பற்களைக் கடகடவெனக் கடித்துக் கொண்டு பதியை வினவினுள்? இதையான் கூறினல் இறப்பேன், ஆதலால் ஒருவருக்குமிதைக் கூறமாட்டேன் என்ருர் அரசன். கோபங்கொண்ட ராணி கற்பை சிறிதும் கருதாமல் அரசே! இருந்தாலும் சரி! இறந்தாலும் சரி! அதைக் கூறத்தான் வேண்டும். இல்லாவிடில் விஷமருந்தி உமது அருகிலே உயிரை விடுவேன். துர்புத்தியுள்ள நீர் என்னை வீணிலே பரிஹாஸம் செய்கிறீர்! என்ருளவள். தாஸிபோல் கடுமையாகவும் தயையின்றியும் கூறும் சொல்லைக் கேட்டு ஆஶ்சர்யம் அடைந்த அரசன் திடுக்கிட்டு அசைவற்று நின்ருர்.

மறுபடி மெதுவாக தர்மத்தைக் கூறி அவளை சிக்ஷிக்கக்கருதினர். பெண்ணே! பக்தியுடன் செய்யும் பதி பணிவிடையே பெண்களுக்குத் தவமாகும். பதி ஜீவித்திருந்தால் ஸ்வர்க்க சுகத்தைத் தரும் புண்யம் தானே

கிடைக்கும். ஒரு முறை பதிக்கு அப்பிரியமானதைச் செய்தால் கொதிக்கும் எண்ணெயில் போடும் நரகத்தை அநுபவித்து பூமியில் விதவையாவாள். அப்படி தர்மமிருக்க நீ இறந்தாலும் சரி அதைக் கூறு என்கின்ருயே ஆஶ்சர்யம்! குலத்தை அழிக்கும் துர்புத்தி யுள்ளவளே! உனது அயோக்யத் தனத்தை அறிந்தும் உன்னை எப்படி மனைவியாகக் கொள்வது? புத்தியுள்ளவன் எப்போதும் இத்தகைய ஸ்த்ரீகளை நம்பலாகாது. ஓ ப்ரஷ்டே! சீ! நீ வெளியில் செல். அழிந்துதான் போ! இறந்து போ! இனி உன்னல் எனக்கு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. தூக்குப் போட்டுக் கொண்டு இறந்து போ என்று கூறி அரசன், தன் கார்யத்தையே முக்யமாகக் கருதிய அவளை விரட்டிவிட்டு நோயிலிருந்து விடுபட்டவன் போல் ஸந்தோஷமடைந்தான்.

திரௌபதி! இப்படிப் பட்ட குணமுள்ளவர்கள் பலர் உண்டு. பூர்வ ஜன்ம புண்யத்தால் ஒருவள் மஹா பதிவ்ரதையாக இருப்பாள். அதனல் வைகுண்டம் செல்வாள். கற்பை விட்டு ஸகல தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்தாலும் நரகமே செல்வர். நீ பூர்வ புண்யத்தால் பாண்டவர் பத்நி ஆனய். கற்பினல் ஸ்வர்கத்திலும் பூஜிக்கப் படுவாய். துஷ்ட ஸ்த்ரீகளை நம்பக் கூடாது. அவர்களிடம் ரஹஸ்யத்தைக் கூறக்கூடாது. அத்தகையவளுக்கு அடிமையான புருஷன் வலையில் சிக்கிய மீன்போல் அழிவான். ஆதலால் ஸ்திரீகளிடம் ஜாக்ரதையாக இருக்கவேண்டும். அவர்களை நம்பாதது போல் வெளியில் காட்டக் கூடாது. எப்போதும் அவர்களிடம் ஸுமுகமாகவே இருக்கவேண்டும் என்று கூறிய நாரதரை திரௌபதி நமஸ்கரித்தாள். நாரதர் பாண்டவர்களைப் பார்த்து மறுபடியும் கூறினர்.

நீங்கள் ஐவரும் ஒருவளை மணந்தீர்கள். அவளோ அப்ஸரஸ் போலிருக்கிருள். குருவம்ஶத்தை மற்றவர் பரிஹஸிக்காதபடி நடந்து கொள்ளுங்கள் என்ருர். இதை கேட்டு ஐவரும் சிறிது வெட்கமடைந்தனர். அவர் எதிரிலேயே ஒரு ஶபதம் செய்து கொண்டனர். மூத்தவன் என்ற முறைப்படி ஒவ்வோராண்டு ஒவ்வொருவர் அவளுக்குப் பதியாக இருப்போம். அந்த ஆண்டில் மற்றவர் அவளைப் பார்த்தாலும்கூட ஓராண்டு வெளியே செல்வோம், இது ஸத்யம். உமது பாதத்தின் மீது



ஆணையாகக் கூறுகிருேம் என்றனர். ஸத்யஸந்தர்களான பாண்டவர்களது சொல்லைக் கேட்டு பரம ஸந்தோஷமடைந்தார் நாரதர். பெரியோர் தவறிழைத்தால் அதைப் பார்த்து பாமரரும் கெடுவர். உத்தமரான உங்களுக்குக் கெட்ட பெயரும் ஏற்படக் கூடாது என்பதற்காகவே உங்களை வற்புறுத்தினேன். கடமையையும் மறந்து ஸத்துக்களுடன் ஸத்விஷயம் பேசி வெகு நேரம் கழித்துவிட்டேன். உங்களுக்கு க்ஷேமம் உண்டாகட்டும்! யான்சென்று வருகிறேன் என தர்மரைக்கையால் தடவிக் கொடுத்து மந்தஹாஸத்துடன் புறப்பட்டார்.

அவரை விட்டுப் பிரிய மனமில்லாமல் பாண்டவர் கண்ணீர் பெருக்கி ஸ்வர்ண புஷ்பம் முதலியவைகளால் அவரை அர்ச்சித்து வெகுதூரம் கூடவே சென்று வழியனுப்பினர்கள். அஞ்ஜலி செய்து தன்னுடன் கூடவே வரும் பாண்டவர்களைப் பார்த்து தயையுடன், நீங்கள் இந்திரியம், ஆசை, கோபம் இவைகளை ஜயித்தவர்கள். மறுபடியும் இது ஒன்றைத்தான் வற்புறுத்துகிறேன். ஒரே பத்நியைப் பெற்ற நீங்கள் ஒருவருக் கொருவர் அன்புடன் வாழவேண்டும். குங்குமப்பூ கலந்த சந்தனம் பூசியவளும், உயர்ந்த மார்பில் சிறந்த ஹார மணிந்தவளும், பாதஸரமணிந்து ஹம்ஸம்போல் நடப்பவளுமான ஸ்த்ரீ யாரைத்தான் வசப்படுத்த மாட்டாள்? நீங்கள் உயர்ந்த குணம் வாய்ந்தவர்கள். ஸத்ய ஸந்தர்களாக இருங்கள். விஷ்ணு பக்தரிடம் பிரியமாக இருங்கள் என்று கூறி பாண்டவர்களை நிறுத்திவிட்டு ஆகாயமார்க்கமாகச் சென்ருர். பாண்டவர் மிக்க வருத்தத்துடன் வீடு திரும்பினர். பிரதிக்ஞை செய்தபடி தர்மர் முதலில் திரௌபதியுடன் ஆநந்தமாக இருந்தார். ப்ரதி வர்ஷமும் காவேரியில் துலாஸ்நாநம் செய்து ஸத்பாத்ரத்தில் தாநம் செய்து ஸதா தர்ம பரர்களாகவே இருந்தார்கள்.

**பதினேழாம் அத்யாயம் முற்றிற்று.**

## பதினெட்டாம் அத்யாயம்—82 சுலோகங்கள்.

### பசுக்களை இழந்த பிராம்மணர்.

தர்மராஜன் பதிவிரதையான திரௌபதியை ஸந்தோஷப் படுத்திக்கொண்டு தர்மம் தவருமல் ராஜ்ய பாலநம் செய்தார். ஒருநாள் அரண்மனை வாயலில்

அர்ஜுநன் எதிரில் அந்தணரொருவர் ஓடிவந்து வருத்தத்துடன், ரக்ஷி! ரக்ஷி!! என உறக்கக் கத்தினர். என்ன கஷ்டம்? உமக்கென பார்த்தன் கேட்க பிராம்மணர் கூற ஆரம்பித்தார். செல்வச் செருக்கால் மதோன்மத்தனுய் உள்ள மன்னனது தோஷத்தால் எனது பசுக்களில் சிலவும் சிறுவர்களும் பால் கறக்கும் பாத்ரமும் களவாடப்பட்டன. இல்லற வாழ்க்கையில் சுக துக்கம் ஸஹஜம் எனப் பொருத்திருந்தேன். மறுபடியும் சில நாட்கள் சென்றபின் திருடர்கள் வந்து எனது பசு எருமை எல்லாவற்றையும் கொண்டுசென்றனர். அவைகளை அரசனே அளிக்கக் கடமைப்பட்டிருக்கிருன். கொடுக்கா விடில் காமசுகத்தில் முழுகியுள்ள அரசனைச் சபிப்பேன் என்ருர்.

இதைக் கேட்ட அர்ஜுநன் அஞ்ஜலி செய்து அவரை ஸமாதானப்படுத்தி மெதுவாகக் கேட்டான். ப்ராம்மணு! ஏன் கோபித்துக்கொள்கிறீர்? எல்லாவற்றையும் மன்னிக்க வேண்டும்! தாங்கள் லோக குரு அல்லவா? கோபத்தை விட்டால்தானே ஸுகம் உண்டாகும்? தங்களது தோஷத்தாலும் இந்த கோதநம் திருடுபோயிருக்கக்கூடாதோ? என்ருன். இதைக் கேட்டவுடன் அவருக்கு அஸாத்ய கோபம் உண்டாயிற்று! உதடு துடிக்க கண்கள் சிவக்கக் கூறினர் பிராம்மணன்.

## அந்தணர் அருளிய அருந் தர்மம்.

அரசே! நான் பிரும்மசாரியாய் குருகுலம் சென்று அக்நி குரு இவர்களை ஆராதித்து பிக்ஷாடநம் செய்து வேதமோதினேன். நான்கு வேதம் ஆறங்கம் கற்று குரு தக்ஷிணை தந்து வீடுவந்து பெற்ரேருக்கும் பணிவிடை செய்தேன். அவர்களது ஆக்ஞைப்படி நற் குலத்தில் பிறந்தவளும் தாய் குலம் தந்தை குலம் எனும் இரு குலமும் சுத்தமானவளும் எட்டு வயதுள்ளவளுமான கன்யகையை அவள் தந்தை என்னை அழைத்து தாநம் செய்ய அவளை விதிப்படி மணந்தேன். ஸமான வம்சத்தில் உண்டானவளும் நாணம் முதலிய நற்குண முள்ளவளுமான பத்நியுடன் கிருஹஸ்த தர்மத்தை நன்கு அனுஷ்டித்தேன். மணமானது முதல் ஔபாஸநம் செய்கிறேன். ஸ்நாநம் செய்யாமலோ காலையிலோ நிஸியிலோ இரு ஸந்த்யைகளிலோ பராந்நத்தையோ நிஷித்த அன்னத்தையோ சாப்பிடுவதில்லை.



வ்ருஷளரின் அன்னத்தைப்பற்றிக் கேட்பானேன்? அவர்களிடம் எதையும் வாங்குவதில்லை. அவர்களை ஸேவிப்பதுமில்லை. மாத மிருஸ்தாலீ பாகங்களையோ ஷண்ணவதி எனும் தொண்ணூத்தாறு சிராத்தங்களையோ விட்டதில்லை. அதிதி பூஜையின்றி உண்டதில்லை. தாநம் தருவேன். வாங்குவதில்லை. ஸத்யமே கூறுவேன். பொய் சொல்வதில்லை. கடுமையாக எவரையும் எப்போதும் பேசியதில்லை. பழையதை உண்டதில்லை. எவருக்கும் இல்லை எனக் கூறியதில்லை. பகலிலோ ஸாயங்காலத்திலோ அருணோதய காலத்திலோ ஒரு நாளும் தூங்கியதில்லை. துஷ்டருடன் சேருவதில்லை. சிஷ்டரை அவமதித்ததில்லை. நான் நாஸ்திகனல்ல. மூர்க்கனல்ல, எப்போதும் ஸம்பாதிப்பதிலேயே அவா உள்ளவனல்ல. பக்தியுடன் ஹரிகதைக் கேட்பேன். மாகஸ்நாநம் செய்து மாக மாஹாத்ம்யம் கேட்பேன். நிஷித்தமான கறிகாய்களையோ ஸ்வாமி நிவேதநமில்லாததையோ புஜித்ததில்லை. சிறுவருடன் உண்ணவில்லை. அவர்களைக் கொண்டாடாமலில்லை. ஸ்த்ரீ சேஷத்தைப் புஜித்ததில்லை. ஸ்த்ரீகளுடனும் புஜித்ததில்லை.

ஏகாதசியில் உண்பதில்லை. த்வாதசி பாரணை தவறியதில்லை. தாஸியோ விடனே நடனே என் வீட்டில் நுழைந்ததில்லை. அபாத்ரத்தில் சிறிதும் தநம் தந்ததில்லை. தநுஷ் கோடியில் ஸ்நாநம் செய்து இருநூறு பொற்காசு தாநம் செய்தேன். அதிகமாகக் கூறுவதேன்? என் மஹிமையைச் சுருக்கமாகக் கூறுகிறேன் கேள். என்னைத் துதிப்பதற்காக இதைக் கூறவில்லை. ஸந்தர்ப்பம் வரவே கூறுகிறேன்.

தனது பாபத்தை மூடி புண்யத்தைக் கூறினல் செய்த புண்யம் உடனே அழியும். பாபம் விருத்தியாகும். ரங்கநாதனது ஸன்னதியில் இடைவிடாமல் துலா காவேரி ஸ்நாநம் செய்தேன். அங்கு விதிப்படி சிராத்தம் செய்து தேவ ரிஷி பித்ருக்களை ஸந்தோஷப் படுத்தினேன். ரங்கநாத ஸன்னதியில் துலா ஸ்நாநம் செய்வோருக்கு புக்தி முக்திகள் கைமீது கிடைக்கும். அதன் மஹிமையைக் கேட்பவர்களுக்கு எதுதான் கிட்டாது? ஜன்மாந்தரத்தில் புண்யம் செய்தவர்களுக்கே புண்ய நதீ ஸ்நாநம் கிடைக்கும். அநேக கல்பங்களில் புண்யம் செய்திருந்தால் தான் துலா காவேரீ ஸ்நாநம் கிடைக்கும். சிரத்தையுடன்

ஸ்நானம்செய்து மஹிமையைக்கேட்போருக்கு ரங்கநாதன் பூர்ணமாக அருள் புரிகிறுர். பிரும்மஹத்தி ஸுராபானம் முதலிய பாபங்களும் அகலும் என பௌராணிகர் கூறக் கேட்டேன். பிரதி வர்ஷமும் தவருமல் துலா ஸ்நாநம் கதா ஸ்ரவணம் செய்வேன். தர்மம் கூறிய புராணிகரை யும் அவரைப் போலவே மற்ற பிராம்மணர்களேயும் தக்ஷிணை முதலியவைகளால் அர்ச்சித்தேன். ஆதலால் நான் க்ருதார்த்தன்.

அர்ஜுந! நீ இவைகளே அறியாய்? எனது புத்ரர் களும் நான்கு வேதங்களேயும் வேதாந்தத்தையும் அறிவர். எல்லோரும் விநயமுள்ளவர். பஞ்ச மஹாயக்ஞம் செய்ப வர். ப்ராத ஸ்நாநம் தவருதவர். ஸத்யந் தவருதவர். கோபத்தை ஜயித்தவர். ஸாதுக்களுக்கு உபகாரம் செய் பவர். என்னுடன் துலா காவேரி ஸ்நானம் செய் வார்கள். நியாயமாக நான் ஸம்பாதித்த பொருள் இரு பது ஆயிரம் இருக்கின்றது. நிறைய பால் கறக்கும் எருமைகளும் பசுக்களும் இருக்கின்றன.

அர்ஜுனன்: இப் பொருள்களே எதற்குப் பயன் படுத்துகிறீர்? எப்படி இவ்வளவு பொருள் உம்மிடம் விருத்தியாயின?

பிராம்மணர்: தேவர்க்கும் பிராம்மணருக்கும் குரு வுக்கும் திரவ்யத்தைப் பயன்படுத்திஞல்; தானே தநம் விருத்தியாகின்றது. தர்மமே சிறந்த பொருள். தர்மமே உயர்ந்த மித்ரன். தர்மமே சிறந்த பந்து. அதர்மம் பொருளேத் தரா. லோபம் நாஸ்திக வாதம் அதர்மம் இவை தர்ம சத்ருக்கள் ஆவர். துராசாரம் கடுமையாகப் பேசுதல் க்ரூரமான த்ருஷ்டி லோபம் இவைகளேக் கை விட்டால்தான் ஸம்ஸாரத்தில் ஸுகம் உண்டாகும். பிராம் மணர் ஸாது தேவர் தர்மம் இவைகளுக்கு நியாயமாக ஸம்பாதித்த பொருளேச் செலவு செய்கிறேன். ஐந்து அழகான பெண்களும் எனக்கிருக்கின்றனர். தக்க வரனே அழைத்துப் பூமியுடன் கன்யாதாநம் செய்தேன். பசும் பால் எருமைப்பால் எள்ளு அரிசி உப்பு இவைகளே நான் விற்பதில்லே. எள்ளேயும் அரிசியும் விற்ருல் பத்துநாளில் விருஷளன் ஆவான் என அறிவேன். பாலே விற்பவன் மூன்று நாளிலும் உப்பை விற்பவன் உடனேயும் விரு ஷளன் ஆவான். எள்ளே விற்பது உடனே குலத்தை அழிக்கும். இவைகளே விற்பவர் தைலயந்தர மெனும்



செக்கில் தள்ளி ஆட்டப்படும் நரகத்திற்குச் செல்வர். நானே எனது புத்ரர் புத்ரிகளோ என் வீட்டிலுள்ள மற்றெவரோ யாசகருக்கு இல்லே என்ற சொல்லே அறியோம்.

லோபத்திஞல் ஆயுள் குறைவதுபோல் பாம்பாலோ விஷத்தாலோ தீயாலோ ஆயுதத்தாலோ பிஸாசத்தாலோ அவ்வளவு விரைவில் ஆயுஸ் முடிவதில்லே. பாம்பு முத லியவற்றிற்குப் பரிஹாரமுண்டு. அக்ஞானத்தால் லோப மோஹத்திற்கு ஆளானவன் உடனே அழிவான். ஸகல பிராணிகளேயும் படைத்த பகவான் யாரை ஸ்வர்க்கமடை விக்க விரும்புகிருரோ அவனுக்கு லோபத்தை உண்டு பண்ண மாட்டார். எந்த குலத்தை விருத்தி செய்ய விரும்புகிருரோ அவர்க்கும் அப்படித்தான். பகவான் அல்லவா எல்லோரையும் அடக்கி ஆள்பவர்! ஆதலால் ஸத்துக்களுடன் சேரவேண்டும். ஸத்கதைகளேயே கேட்க வேண்டும். அதஞல் புண்டரீகாக்ஷன் ஸந்தோஷ மடை வான். நல்ல க்ஞான நிஷ்டை, பதிவிருதையான பத்நீ, கர்மபலனேக் கோராமல் ஸ்வதர்மாநுஷ்டாநம், ஸர்வ ஜநங்களுக்கும் உபகாரம்செய்தல் இவைகளால் பகவான் ஸந்தோஷமடைகிருர். கிருஹஸ்த ஆஸ்ரமம் ஸர்வ உப காரத்திற்காகவே ஏற்பட்டதாம்.

ஆசையை அடக்கி வீட்டிலேயே இருந்து தவத்தால் ஆசைகளே அடியோடு அகற்றியவனுக்கு வீடே தபோவந மாகும்! தன் பத்நியும் பதிவிரதையாயிருந்து த்ருடமான க்ஞாநமும் தனக்கிருந்தால் அவருக்கு ஸந்யாஸம் எதற்கு? பத்நி இல்லாவிடில் ஆஸ்ரமமில்லாமலிருக்கக் கூடாதென ஸன்யாஸம் செய்துகொள்ள வேண்டும். இப்படி அவர் கூறிய சிறந்த தர்மத்தைக் கேட்டு ஸந்தோஷமடைந்த அர்ஜுனன், ஓ பிராம்மண ஸ்ரேஷ்ட! உமக்கு நமஸ் காரம்! ஸாதுக்களுக்கு உபகாரம் செய்யும் உம்மிடம் தர்மத்தைக் கேட்க விரும்பியே அப்படிக் கேட்டேன்! மன்னித்துக்கொள்ளும்; பசு முதலிய உமது பொருளேக் கொண்டு வருகிறேன். வீட்டிற்குச் செல்லும், என்று அவருக்கு நமஸ்காரம் செய்தான். ஆயுதத்தை எடுப்ப தற்காக உள்ளே நுழைய அங்கு தர்மரும் திரௌபதியும் கண்ணில்பட்டார்கள். உடனே திரௌபதி வெட்கத்திஞல் விரைந்து ஓடி ஒளிந்தாள். பார்த்தனும் வெட்கத்துடன் தர்மரை வணங்கி நடந்ததைக் கூறி ஆயுதத்தை எடுத்துக்

கொண்டு திருடர்களைத் தேடிச்சென்றான். காலடிச் சுவட்டின் மூலமாக திருடர் இருப்பிடம் கண்டான். ஐயாயிரம் வேடர்களைக் கூறிய ஶரங்களால் அடித்துக்கொன்று பசுக்களை மீட்டு வந்தான். பிராம்மணரிடம் அவைகளைச் சேர்த்து தனது அபராதத்தை க்ஷமிக்கும்படி வேண்டினான். அவரும் ஸந்தோஷமடைந்து நன்கு ஆசீர்வதித்தார். பிராம்மணர்களது ஆசீர்வாதம் அமோகமானதல்லவா? அவரை நமஸ்கரித்து நகரத்தில் பிரவேசித்தான். நகர ஜனங்கள் அர்ஜுனனைக் கொண்டாட அரண்மனைக்கு வந்து அண்ணனுக்கு அஞ்ஜலி செய்தான். திரௌபதியையும் நமஸ்கரித்து, ஆர்ய! தங்களது தேஜஸ்ஸால் பிராம்மணரது கோக்கள் வந்துசேர்ந்தன.

நாம் பிரதிக்ஞை செய்தபடி அதை ஸத்யமாக்க ஓராண்டு தீர்த்த யாத்ரை செய்துவர உத்தரவளியுங்கள். தங்களைப் போன்றவர் தர்ம விதைக்குக் காரணம் அல்லவா? என்று அவரை நமஸ்கரித்தான். மிக்க வருத்தத்துடன் தர்மர் விடைதர, ஆயுதங்களை வைத்துவிட்டு யாத்ரைக்கு ஏற்றபடி கிளம்பினான். பல பிராம்மணர் பின் தொடர பிரபாஸ தீர்த்தத்திற்கு வந்தான் பாண்டு புத்ரன். அங்கு ஸ்நானம் செய்து பித்ரு தர்ப்பணம் செய்து பிராம்மணர்களுக்குத் தக்ஷிணை தந்தான். பிறகு வ்யாஸாஶ்ரமம் சென்று அவரை நமஸ்கரித்து பதரிவநத்தின் அழகைக் கண்டான். வ்யாஸரும் அர்ஜுனனுக்கு ஆதித்யம் செய்து க்ஷேமத்தை விசாரித்தார். கிரிடீ, க்ருதார்த்தன் ஆனேன்! தன்யனானேன்! உம்மால் அருளப்பட்டேன். உமது தர்சநத்தை நாடி உம்மைத் தேடி வந்தேன்! எனது அபிலாஷை பூர்த்தியாக அருள்புரியும். பகவானது ஸஹோதரி, வஸுதேவ புத்ரி, ரூப யௌவனம் வாய்ந்தவள், த்வாரகையில் ஸுபத்ரை எனும் பெயருடன் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவளை அடைய ஒரு உபாயங்கூறுங்கள். அவளது ஸஹோதரரான பலராமன் துர்யோதநனுக்கு அவளை அளிக்க விரும்புகிறாராம். அவளைப்பற்றி கேட்டது முதல் மநம் ஸர்வலோக ஸுந்தரியான அவளிடமே சென்றுளது. என்று பார்த்தன் கூறக்கேட்டு பேசும் திரமை வாய்ந்த முனிவர் உட்கார் என்று கூறினார்.

**பதினெட்டாம் அத்யாயம் முற்றிற்று.**



## பத்தொன்பதாம் அத்யாயம்—82 சுலோகங்கள்.

வ்யாஸர்: தநஞ்ஜய! உனது ஆசை மிகப்பெரிது. கிடைப்பதரிது! ஸுபத்ரையை நீ அடைவது மிக்க ப்ரயத்நப்பட்டால் தான் ஸாத்யமாகலாம். என்று கூறி முகூர்த்தகாலம் மௌநமாக யோசித்தார். பிறகு பார்த்தனைப் பார்த்துக் கூறினார். பார்த்த! மஹா புண்யமானதும் ரஹஸ்யமும் பாவநமும் உடனே ஸித்தியைத் தருவதும் ஸர்வ மங்களங்களையும் தருவதுமான லக்ஷ்மீ ஹ்ருதயம் என ஒரு ஸ்தோத்ரமுளது. அது ஸகல நோய்களையும் அகற்றி ஆயுளையும் ஆரோக்யத்தையும் விருத்தி செய்யும். நீ செய்த பணிவிடையால் ஸந்தோஷமடைந்தேன். அதை உனக்கு உபதேசிக்கிறேன். கேள்! ஜிதேந்திரயனாய் சுத்தமாக மூன்று வேளைகளிலும் மூன்று முறை ஜபி! விசேஷமாக வெள்ளிக்கிழமையில் அப்படி ஜபித்தால் உடனே ஸித்தி பெறுவாய். தானே ப்ரீதியுடன் வந்த ஸுபத்ரையை விரைவில் அடைவாய்! உனது பாக்யத்தால் துலாமாஸமும் ஸமீபித்திருக்கிறது. ரங்கனது ஸன்னதியில் காவேரியில் துலா ஸ்நாநம் செய்து ஸ்ரீ ரங்கநாதனை நமஸ்கரித்து லக்ஷ்மீ ஹ்ருதயத்தை ஜபி.

துலா ஸங்க்ரமணம் முதல், மாநஸம் முதலிய தீர்த்தங்களும் கங்கை முதலிய நதிகளும் காவேரீ ஸ்நாநம் செய்ய வருகின்றன. தங்களிடத்தில் பாபிகளால் விடப்பட்ட பிரும்மஹத்தி உபபாதகம் முதலான ஸகல துரிதங்களையும் காவேரி ஸ்நானத்தால் போக்கிக் கொள்கின்றன. மூன்றுநாள் ஸ்ரீரங்கன் ஸன்னதியில் ஸ்நாநம் செய்து இதை ஜபித்தால் ஸகல பாபங்களும் அகலும். ஸர்வ தீர்த்தங்களிலும் சிறந்த காவேரியில் ஸ்நானம் செய்வதாலும் புண்யமான லக்ஷ்மீஹ்ருதய பாராயணத்தாலும் பகவானுக்கு பிரியம் உண்டாகும். மிகரஹஸ்யமானதும் உடனே ஸித்தி யளிப்பதுமான அதைக் கூறுகிறேன் கேள். புஷ்ய மாஸம் ப்ருகு வாரத்தில் இதை ஜபித்தால் செல்வவானாவான். ஸர்வ யாகங்களையும் செய்து ஸர்வ தீர்த்தங்களிலும் ஸ்நாநம் செய்தால் என்ன புண்யமோ அது துலா காவேரீ ஸ்நாநத்தால் உண்டாகும். ஸத்யம்! ஸத்யமாக சொல்கிறேன். கேஶவன் எதிரில் இதை ஜபித்தால் எது எதை விரும்புகிறானோ அதெல்லாம் கிடைக்கும்.

பார்த்த! ஐஸ்வர்யம் வேண்டுமானால், துர்யோதனனை ஜயிக்கவேண்டுமானால், ஸுபத்ரையை மணக்க வேண்டுமானால் காவேரீ ஸ்நானம் செய்து இதை ஜபி. மறுபடியும் பித்ருக்களுக்குப் பிரியமான கார்த்திகை மாதத்தில் காவேரீ ஸ்நாநம் செய்தால் பித்ருக்கள் ஸந்தோஷமடைந்து நரகத்திலிருந்து ஸ்வர்க்கம் செல்வர். வித்யையோ தநமோ கன்யகையோ வேண்டுமென்போர் துலா ஸ்நாநம் செய்து லக்ஷ்மீ ஹ்ருதயத்தை ஜபிக்கவேண்டும். புத்ரனை விரும்பும் ஸ்த்ரீ இங்ஙனம் செய்வதுடன் ஸ்ரீரங்கநாதனுடைய ஆலயத்தைப் பெருக்கி மெழுகி கோலமிட்டு தீபாலங்காரம் செய்யவேண்டும். இப்படிச் செய்தால் அக்நியை ஆராதிக்காத பாபமுமகன்று பிரும்ம லோகம் செல்வர்.

விதவா ஸ்த்ரீ இங்ஙனம் செய்தால் வைகுண்டம் செல்வாள். பார்த்த! கார்த்திகையிலும் நீ ஸ்நானம் செய்து ஸுபத்ரையைப்பெற ஸ்ரீரங்க ஆலயத்தில் நெய்யால் லக்ஷதீபம் ஏற்று! மற்றொரு ரஹஸ்யத்தையும் கூறுகிறேன் கேள். கிழக்கு ஸமுத்ரத்திற்கு இருயோஜனை தூரத்தில் காவேரிக்கு வலது புரத்தில் மஹா புண்யமான சிவக்ஷேத்ரம் ஒன்றிருக்கிறது. அது மாயூரமென ப்ரஸித்தமானது. அங்கு ஶிவ ஸன்னதியில் துலா ஸ்நாநம் செய்! உடனே ஸுபத்ரையை அடைவாய். பஞ்சமஹா பாபம் செய்தவனாயினும் சிவஸன்னதியில் துலா ஸ்நாநம் செய்தால் சுத்தனாவான். பூமியில் மோக்ஷத்தைத்தர ஸ்ரீரங்கம், மாயூரம் என்ற இரண்டு க்ஷேத்ரங்களைக் கல்பித்தார் பகவான். க்ஷத்ரியனான விஶ்வாமித்ரர் மாயூரத்தில் காவேரீ ஸ்நானம் செய்து துர்லபமான பிராம்மண்யத்தை அடைந்தார். அங்கு துலா மாஸத்திலோ கார்த்திகையிலோ ஸ்நாநம் செய்வோரது புண்ய பலனைக் கூற பகவான்தான் ஶக்தி உள்ளவர். ஸ்ரீரங்கத்தில் காவேரீ ஸ்நானம் முக்தியைத் தரும். துலா மாஸம் வருகிறது! விரைவாகச் செல்! என்றார் வியாஸர்.

ஸுபத்ரையை மணப்பதற் கேற்ற உபாயத்தைக் கேட்டு ஸந்தோஷமடைந்தான். பக்தியோடு பலமுறை அவரை நமஸ்கரித்து உத்தரவுபெற்று ப்ரயாக க்ஷேத்ரம் சென்றான். அங்கு விதிப்படி ஸ்நாந தானங்களைச்செய்து ஜலத்தில் மூழ்கி ஜபம் செய்தான். அங்கே மிக அழகு வாய்ந்த உலூபீ என்ற நாக கன்யகையைக் காந்தர்வ



விவாஹம் செய்து அவளுடன் சிறிது காலம் இன்பத்தை அனுபவித்தான். அவளிடம் இராவான் என்ற புத்ரன் பிறந்தான். கரை ஏறி வந்து அங்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்து ஆஶ்சர்யமடைந்த அந்தணர்களுடன் ப்ரதக்ஷிணமாய் ஒவ்வொரு தீர்த்தமாகச் சென்றான். ஆங்காங்கு பக்தி ஶ்ரத்தையுடன் தேவரிஷி பித்ரு பூஜைகளைச் செய்தான்.

காவேரீ ஸமுத்ரத்துடன் ஸங்கமமாகும் ஸங்கமுகம் எனும் புண்ய தீர்த்தத்திற்குச் சென்றான். காவேரி ஸமுத்ர ராஜனை மணந்த திவ்ய க்ஷேத்ரத்தில் ஸ்நாந தாநங்களைச்செய்தான். பத்துலக்ஷம் தநம் தானம் செய்து ஶ்வேதாரண்யம் என்ற க்ஷேத்ரம் வந்தான். பூமியில் புண்யம் முளை உண்டாகும் இடமது. காவேரீ விவாஹத்திற்காக கைலாஸநாதன் வந்து தங்கிய இடமுமது. அங்கிருந்து மாயூரம் சென்று துலா ஸ்நானம் செய்து யதேஷ்டமாக பிராம்மணர்களுக்குத் தாநம் செய்தான். ஸர்வாபீஷ்டங்களையும் அளிக்கும் தேவ தேவனை நமஸ்கரித்து ஸ்ரீரங்கம் சென்றான். ரங்கநாதனுடைய மஹிமையையும் காவேரீ பெருமையையும் கேட்டுக் கார்த்திகை மாஸம் பூர்ணமாகும் வரை பிராம்மணர்களுடன் ஸ்நாநம் செய்தான். க்ருதார்த்தன் ஆனேன் என அருணோதய வேளையில் காவேரீ ஸ்நாநம் செய்தான். அர்ஜுனன் வந்ததைக்கேட்டு பல ஸாதுக்கள் வந்து சூழ்ந்தனர். ப்ரதிதிநம் நூறு பொற்காசு பிராம்மணர்களுக்களித்து புராணம் சொல்பவரை ஆபரணங்களாலும் ஸ்வர்ண புஷ்பங்களாலும் அர்ச்சித்தான்.

ஸர்வ பாபங்களையும் போக்கக் கூடிய தேவீ மஹிமையையுங் கேட்டான். சந்த்ர புஷ்கரிணியிலும் ஸ்நாநம் செய்து அங்கு தேவியின் பதினாறு நாமாக்களை ஜபம் செய்தான். அந்த தீர்த்தத்திலும் தேவரிஷி பித்ரு தர்ப்பணங்களைச் செய்தான். காவேரீஸ்நாநத்துடன் சந்த்ர புஷ்கரிணீ ஸ்நாநமும் செய்தான். புத்திசாலியான அவன் வியாஸர் சொன்னபடி ஸகல கார்யங்களையும் நன்றாகச் செய்தான். அநேக ப்ராகார கோபுரங்களையும் புதிதாக அமைத்தான். ப்ரதிதிநம் ரங்கநாதனை நமஸ்கரித்துத் துதிப்பான். தநுர் மாஸத்திலும் காலையில் ஸ்நாநம் செய்து பகவானுக்குப் பொங்கல் நிவேதநம் செய்தான். பிராம்மணர்களையும் பூஜித்தான். அங்கிருந்து

ஸாதுக்களுடன் ஸேது ஸ்நானத்திற்குக் கிளம்பினுன். இடையில் ஸத்யகிரிக்குச் சென்று அங்குள்ள ஸத்யகிரீசனை அர்ச்சித்தான். பிரும்மஹத்யாதி பாபங்களை அகற்றும் ஸத்ய புஷ்கரிணியில் விதிப்படி ஸ்நாநம் தேவரிஷி பித்ரு தர்ப்பணங்களைச் செய்து பிராம்மணர்களுக்கு அபரிமிதமாக தாநம் செய்தான்.

அங்கிருந்து தத்யன்னத்தில் பிரியரான கோஷ்டீச்வரர் ஸன்னதிக்குச் சென்றுன். ஹிரண்யனுல் பீடிக்கப்பட்ட தேவர் அனைவரும் கூட்டமாகச் சேர்ந்திருந்ததால் அது கோஷ்டீபுரம் எனப்பட்டது. அங்கே அஸுரர் அணுகமுடியாது. அங்கு வைகுண்டபதவியை அளிக்கவல்லதான அமிருத புஷ்கரிணியில் ஸ்நாநம் செய்து செய்யவேண்டியவைகளைச் செய்தான். ஹிரண்யனுல் பீடிக்கப்பட்ட பிரஹ்லாதனுக்கு அபயமளித்த நரஸிம்மமூர்த்தியை நமஸ்கரித்துத் துதித்தான். பிறகு தர்மாத்மாவான அர்ஜுனன் விஷ்ணுவுக்குப் பிரியமான விருஷபாத்ரிக்குச் சென்றுன். நூபுரநதீ என்ற பெயருடன் ஸாக்ஷாத் கங்கை அங்கு ப்ரவஹிக்கின்ருள். பரம பக்தனுன பாண்டியனுக்காக பகவான் தனது நூபுரமெனும் பாதஸரத்திலிருந்து கங்கையை அங்கு அனுப்பினுர். பன்னிரண்டு நாட்கள் அங்கு தங்கி பிராம்மணர்களுக்கு அபரிமிதமாக தக்ஷிணை தந்தான். நூபுரநதியிலும் விசேஷமாக ஸ்நாந தாந தர்ப்பணுதிகளைச் செய்து முடித்தான். விருஷபாத்ரீஸ்வரனைப் பூஜித்து அங்கிருந்து மோஹநபுரம் சென்றுன். பிரும்மஹத்யாதி பாபங்களைப் போக்கும் பிரும்மதீர்த்தத்தில் ஸ்நாந தாநாதிகளை முடித்து மோஹினீ ரூபமெடுத்து தைத்யரை மயக்கி தேவர்க்கு அமிர்தமளித்த பகவானை நமஸ்கரித்தான். மது எனும் அரக்கன் வேதங்களை அபஹரித்துச்செல்ல மேகச்யாமளனுன பகவான் அவனைக் கொன்று பிரும்மாவுக்கு வேதத்தை உபதேசித்த இடமது.

பிறகு பாண்ட்ய ராஜன் தலைநகரான மதுராபுரிக்குச் சென்றுன். அங்குதான் பகவான் மத்ஸ்யாவதாரம் செய்தார் வைகைஜலத்திலே. அங்கே பாண்ட்யமன்னன் தனது பெண்ணுன சித்ராங்கதைக்கு ஸ்வயம்வர ஏற்பாடுசெய்து இருந்தான். தற்செயலாக வந்த அர்ஜுனனையும் அழைக்க, ராஜகன்யகை, அழகில் சிறந்த அவனையே வரித்தாள். விதிப்படி அவளை மணந்து அவளுடன் சில



காலம் ரமித்து வந்தான். ஸேது யாத்ரை சென்று அதை முடித்துக்கொண்டு தனுஷ்கோடிக்குக் கிளம்பினுன். அது பகவானது லீலை த்வஜம்போல் அமைந்தது. அங்கு ஸ்நானம் செய்து முப்பது லக்ஷம் தநம் பிராம்மணர்களுக்கு அளித்தான். ஸ்ரீ ராமனுல் ப்ரதிஷ்டை செய்து பூஜிக்கப்பட்ட லிங்கத்தை அர்ச்சித்து அங்கேயே தங்கி மாக ஸ்நாநம் செய்தான். மாக மாஹாத்மியத்தைத் தினம் கேட்டு தர்மம் கூறுபவரை நன்கு அர்ச்சித்தான். மாக விரதத்தைப் பூர்த்தி செய்து பிராம்மணர்களுக்கு ஸமாராதனை செய்து மதுரைக்குத் திரும்பினுன். கர்ப்பிணியாயிருந்த சித்ராங்கதையுடன் சிறிது காலம் தங்கி விஷய ஸுகங்களை அனுபவித்தான். பாண்ட்யனிடம் விடைபெற்று சைத்ரோத்ஸவத்தைத் தர்சிக்க ஸ்ரீரங்கம் சென்றுன். அங்கே சித்ராங்கதைக்குப் புத்ரன் பிறக்க விதிப்படி ஜாத கர்மா செய்து பப்ருவாஹநன் என நாமகரணம் செய்தான். ஸ்ரீரங்கநாதனுடைய ஸன்னதியில் வந்த பிராம்மணர்களுக்கெல்லாம் அந்நதாநம் த்ரவியதாநம் முதலியவைகளைச்செய்தான்.

அங்கிருந்து மேற்கே கிளம்பி ஸஹ்யாத்ரி என்ற மலைக்குச் சென்றுன். அங்குதான் மஹாவிஷ்ணு நெல்லி மரமாகத் தோன்றினுர். யோகிக்குறிய லக்ஷணத்துடன் தத்தாத்ரேயரும் அங்கு வீற்றிருக்கிருர். அந்த மலையின் அழகைக்கண்டு ஆனந்தமடைந்து ஸஹ்யாமலக ஸந்நதியில் ஸ்நாநம் செய்தான். அங்கிருந்து பரமசிவன் ஸான்னித்யமுள்ள கோகர்ணக்ஷேத்ரம்சென்றுன். மறுபடியும் ப்ரபாஸ தீர்த்தம் வந்து பிராம்மணர்களைப் பூஜித்து அனுப்பிவிட்டு தான் மாத்ரம் த்வாரகைக்குப் புறப்பட்டான். ஸுபத்ரையை மணக்க விருப்பமுள்ளவனுய் ஏகாந்தத்தில் அமர்ந்து அதைப்பற்றி சிந்தித்தான். த்ரைலோக்ய ஸுந்தரியான ஸுபத்ரையை எப்படி மணந்து கிருதார்த்தனுவேன்? அஹல்யையைக் கௌதமர் மணந்ததுபோல் ஆகும் இந்த மணம். ஸ்த்ரீ ரத்னமான ஸுபத்ரை தானே என்னை வரிப்பாளா? என பல வகை சிந்தை கொண்டு விரஹ தாபத்தால் ஒன்றும் தோன்ருமல் வருந்தினுன். பிறகு ஒரு எண்ணம் உதித்தது. ஸாதுக்களுக்கு வஸிக்குமிடமும், ஆபத்தடைந்தவர்க்கு சிறந்த கதியானவரும் பக்தரின் துன்பத்தைப் போக்குபவருமான கிருஷ்ணனே! எனக்குக் கதி. என

எண்ணினன். த்வாரகாபுரியில் அநந்தனன பகவான் யதுகுலநாதனுக அவதரித்திருக்கிருர். பக்தர்களின் துன்பத்தை எல்லாம் அகற்றுகிருர். தயாளுவான அந்த பகவானே எனக்குச் சரணம் என்று உலகிற்கெல்லாம் சரணமாய் மஹாநுபாவனுய் விளங்கும் கிருஷ்ணனைச் சரணமடைந்தான் பார்த்தன். வேதாந்தத்தால் அறியத் தக்கவனும் வணங்கியவர் துன்பத்தைப் போக்குபவனுமான பகவான் தேரிலேறி அவ்விடம் தோன்றினர்.

**பத்தொன்பதாம் அத்யாயம் முற்றிற்று.**

## இருபதாம் அத்யாயம். – 128 சுலோகங்கள்.

**அகஸ்த்யர்:** தாருகன் ஓட்டும் தேரிலே ஏறி வந்த பகவானைப் பார்த்து பார்த்தன் ஆநந்தக் கண்ணீரால் அவரது பாதங்களுக்கு அபிஷேகம் செய்தான். கண்களால் அவரைப் பருகுபவன் போல் பார்த்தான். இரு கரங்களாலும் இருகக் கட்டிக்கொண்டான். கோவிந்தனும் கன்றைப் பசு நாக்கால் நக்கி தன் அன்பைக் காட்டுவதுபோல் பார்த்தனை ஆலிங்கநம் செய்து கொண்டார். ஶரணுகதரிடம் அன்பு கொண்ட கிருஷ்ணனை அர்ஜுனன் நமஸ்காரம் செய்து அஞ்சலியுடன் நின்று மெதுவாக ஶரண்யனுன க்ருஷ்ண! ஶரணுகதி அடைந்த என்னை ரக்ஷி என்ருன். அர்ஜுன! மிகப் பெரியதான மநோரதங்கொண்டு என்னை நினைத்தாய். அப்படியிருந்தும் உனது பக்தியினல் ஸந்தோஷமடைந்து உனது இஷ்டத்தை ஸாதிக்கிறேன். ஸன்யாஸி வேடம் பூண்டு சாதுர்மாஸ்யம் என்ற வியாஜத்தால் த்வாரகைக்கு வா. உன் கார்யத்தை எல்லாம் ஸாதிக்கிறேன் என்ருர் பகவான். அர்ஜுனன், தேவேஶ! ஸன்யாஸ நிஷ்டையை கைகொண்டவன். மறுபடி எப்படி க்ருஹஸ்தனுவது? என உமது பக்தனை எனக்குக் கூறும். உமக்கு நமஸ்காரம் என்ருன்.

**பகவான்:** வேஷத்தினுலோ வாசா வேதாந்தம் பேசுவதனுலோ ஒருவன் ஸன்யாஸியாக மாட்டான். மனதில் யாதொரு விகல்பமுமில்லாதவனுக்கே ஸன்யாஸம் விதிக்கப் பட்டுளது. எங்கும் ஈஶ்வரன் என்ற க்ஞானம், நிர்விகல்பகமான மநஸ் உண்டாகும் வரை பகவத் பக்தியுடன் காமனையின்றி கர்மாவைச் செய்ய வேண்டும்.



பரமாத்மாவான என்னை எல்லாவிடத்திலும் காண வேண்டும். மற்ற எல்லாவற்றையும் விட வேண்டும். வாக்கினுல் பிரும்மைவாஹம் என்று கூறி மனதினுல் விகல்பமுள்ளவனுன மூடன் கர்மாவைவிட்டு ஸன்யாஸம் செய்து கொண்டால் குருடனைப்போல் உடனே பதிதனுவான். எல்லாவிடத்திலும் என்னையும் என்னிடம் எல்லாவற்றையும் பார்ப்பது பிரும்மக்ஞான மெனப்படும். விரக்தி உள்ள அத்தகையவன் வீட்டைவிட்டு துறவியாகச் செல்லவேண்டும். ஸன்யாஸ வேஷம் மாத்ரம் தரித்துக் கொண்டு கர்மாவை விட்டவன் பதிதனுவான். காயத்ரீ செய்யும்வரை பதிதனுக மாட்டான். விரக்தனும் ஜிதேந்த்ரியனும் பொருமை ஶாந்தியுள்ளவனும் என்னிடம் பக்தி உள்ளவனுமானவன், ஆசையையும் ஸர்வ கர்மாக்களையும் விட்டு ஸன்யாஸியாக வேண்டும். நடனைப்போல் வேஷ ஸன்யாஸியாயினும் த்வாபரயுகாந்தத்தில் கெடமாட்டான். கலியில் அப்படிப் பட்டவன் அழிவான். இது த்வாபராந்தமானதால் நீ பயப்பட வேண்டாம். த்வாரகையின் ஸமீபம் செல். நான் எல்லாவற்றையும் ஸாதிக்கிறேன் என்று கூறி பகவான் தேரிலேறி ஒருவருமறியாமல் த்வாரகை சென்ருர்.

அர்ஜுனனும் ஸந்தோஷமடைந்து விரக்தனைப்போல் த்ரிதண்டி ஸன்யாஸி வேஷம் பூண்டு த்வாரகையருகில் ஒரு மலைக் குகையில் வந்து அமர்ந்தான். (த்ரிதண்டி ஸன்யாஸிக்கு சிகை பூணல் உண்டு). பகவானும் ஏதோ ஒரு விரதத்தை உத்தேசித்து வநபோஜனம் செய்ய பலபத்ரர் முதலிய யாதவர்களுடன் அந்த மலைக்கருகே வந்தார். பலராமனுடன் எல்லோரும், மங்களமான விரதத்தை முடித்து உத்ஸவம் ஆனபின் குஹையிலுள்ள அர்ஜுன ஸன்யாஸியைக் கண்டார்கள். மிக்க வினயத்துடன்கூட எல்லோரும் நமஸ்கரித்தார்கள். உக்ரஸேநர் பலராமனுடன் கூட சாஸ்த்ர விதிப்படி யோசித்து அஞ்ஜலி செய்து, ஸந்தோஷம் தொண்டையை அடைக்கக் கூறினர். ஓ பகவன்! யோகிஶ்ரேஷ்டரே! தாங்கள் எங்கள் இடத்திற்கு வந்ததால் தங்களை ஆதரிக்கக் கடமைப் பட்டுள்ளோம்! நான் என்ன செய்யவேண்டும்? ஓ முனிவரே! நாங்கள் தங்களது கிங்கரர்கள். இங்ஙனம் கூறியதைக் கேட்டும் அவர் கண்ணைமூடி ஜபம் செய்துகொண்டிருந்தார். இப்படி மௌனியாக இருக்கின்ற அவரைக்கண்டு

எல்லோரும் ஆச்சர்ய மடைந்தனர். கிருஷ்ணனிடம் இதைத் தெரிவித்தனர். க்ருஷ்ண! மலைக் குஹையில் மஹாயோகி ஒருவர் இருக்கிறார்! நாங்கள் ஏதேனும் கேட்டாலும் ஒன்றும் பேசவில்லை. பற்றற்ற நிர்மல மான முனிவர் அவர் என்றனர்.

**கிருஷ்ணன்:** இதைப் பற்றி என்னவிசாரம்? யதிகளுக்குக் காடுதான் கதி. எத்தனையோ யோகிகள் இருக்கின்றனர். அவர்களுக்கு நம்மால் ஆகவேண்டியது என்ன? **யாதவர்:** குழந்தாய்! இப்படி இளம் பிள்ளைத் தனமாகப் பேசாதே. ஒரு துறவி ஒரு பிடி அன்னமாவது எவர் வீட்டில் புஜிக்கிறாரோ அவருடைய பித்ருக்கள் ஈஸ்வரனுடனும் முவ்வுலகத்தவருடனும் ஸந்தோஷ மடைகிறார்கள். **கிருஷ்ணன்:** வாஸ்தவந்தானது! ஸந்தேஹமில்லை! ஸன்யாஸி தானே நம் வீட்டிற்கு வந்தால் அந்த பலனுண்டு. நாமே அவரை முன்னடி அழைத்து அன்ன மளிக்கக்கூடாது. முன்னர் ஒருவரால் அழைக்கப்பட்டு ஸன்யாஸி ஒரு வேளை பிக்ஷை செய்தாலும் தேவேந்த்ரன் ஸன்யாஸியை நாய்களுக்கு ஆஹாரமாகச் செய்கிறான். அன்னமளித்தவனும் நரகம் செல்கிறான். ஆதலால் தானே நமது வீட்டை நாடி பிக்ஷைக்கு வந்த ஸன்யாஸிகளுக்குப் பக்தியுடன் பிக்ஷை யளித்து ஆராதிக்கிறோம். இப்படிச்செய்ய ஸம்மதிக்காவிடில் உங்களிஷ்டப்படிச் செய்யுங்கள்.

**உக்ரஸேனர்:** க்ருஷ்ணா! இது சாதுர்மாஸ்யஸந்தர்ப்பம். மழைக்காலம் ஆதலால் துறவியை வீட்டிற்கழைப்போம். **பலராமன்:** ஆர்ய! கிருஷ்ணன் சிறியவன். தர்மா தர்மங்களை அறியான். அவனை எதற்காகக் கேட்கிறீர்? என்று கூற பலபத்ரன் முதலிய எல்லோரும் ஸன்யாஸியிடம் சென்று அஞ்ஜலி பந்தம் செய்து பய பக்தியுடன் வேண்டினர். ஸ்வாமின்! இப்போது தாங்கள் எங்கள் நகரத்திற்குவந்து சாதுர்மாஸ்ய வ்ரதத்தை நடத்துங்கள், என்றனர். அர்ஜுநத் துறவி கண்ணைத் திறந்து மந்தஹாஸத்தால் தான் அதை ஏற்று நகரம் வர இசைந்ததை தெரிவித்தார். யாதவர் அவரை அழைத்து வந்து நகரத்தின் அருகிலுள்ள ஒரு மடத்தில் அமர்த்தி ஆராதித்தனர். அவரும் ப்ரதிதினம் பிக்ஷைக்கு மாத்ரம் நகரத்திற்கு வந்து மடத்திலேயே பிக்ஷான்னத்தைப் புஜித்து மௌனியாக இருந்தார். ஐந்தாறு நாட்கள் சென்றன.



**பலபத்ரர்:** யாதவர் எல்லோருமறியத் துறவி அருகேக் கூறினர். மழைக்காலம் ஆரம்பித்து விட்டது. சாதுர்மாஸ்ய விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும், உலகிற்கே குருவான ஸன்யாஸி மழையில் ஊருக்கும் மடத்திற்கும் எப்படி போய் வர முடியும்? ஆதலால் நமது வீட்டிலேயே மங்களமாக துறவிக்கு ஒரு இடம் அமைக்க வேண்டும். உத்யானத்திற்குள்ளே உள்ள குஹையில் யோகி வஸிக்கட்டும்.

இதைக் கேட்டு உக்ரஸேனர் முதலிய அனைவரும் பலராமனைக் கொண்டாடினார்கள். இதைக் கேட்ட பகவான் ஆச்சர்யமடைந்தவரைப்போல் தலையை அசக்கிக் கொண்டு கூறினர். **கிருஷ்ணன்:** ஆபத்தில்லாத காலத்திலே துறவி ஒருநாள் கிருஹஸ்தன் வீட்டில் தங்கினால் மஹாபாபியாவான். அதற்குப் பிராயச்சித்தமே இல்லை. ஜிதேந்திரியரான துறவி நாமழைத்தாலும் வீட்டிற்கு வரமாட்டார். வைராக்ய மில்லாதவர் பசியுள்ளவர் வீட்டிற்கு வரக்கூடும். **பலராமன்:** குழந்தாய்! கிருஷ்ணா! நீ தர்மா தர்ம நிச்சயத்தை அறியமாட்டாய். ஸமமான மநமுள்ள யதி வீட்டில் வஸித்தாலும் காட்டில் வஸித்தாலும் அவர்களது தேஜஸ்ஸினால் யாதொரு தோஷமும் தோன்றாது. இந்த யதி போன்ற ப்ரபாவமுள்ளவர் பின்னுமில்லை, முன்னுமில்லை, இப்போதுமில்லை. ஆதலால் நமது வீட்டில் இவர் வஸித்தால் உயர்ந்த நன்மை உண்டாகும். பெரியோர் சொல்வதை எதிர்க்காமல் பேசாமலிரு.

**கிருஷ்ணன்:** யதி எல்லோராலும் எல்லா வகையாலும் பூஜிக்கத்தக்கவர்தான். அதில் ஸந்தேஹமில்லை. சிறந்த போகத்தைத் தரும் அழகான அரண்மனையில் துறவி எப்படி வஸிப்பர்? துறவியை எங்குமே நம்பக் கூடாது. அதிலும் ராஜ க்ருஹத்திலே எப்படி நம்புவது? மிக அழகு வாய்ந்த தாஸிகள் யுவதிகள் குமாரிகள் அங்கு ஸஞ்சரிப்பர்.

சிறந்த யோகியான ஸௌபரி மாந்தாதாவின் பெண்களிடம் காமனை கொண்டு மணந்து யோகியானார் எனக் கேட்டிருக்கிறோம். ஜிதேந்திரியரான கௌதமர் ஆயிரமாண்டுகள் கடலில் மூழ்கி தவம் செய்து அஹல்யையுடன் ரமித்தார். விஷ்ணுவின் அம்சமான மஹா

யோகீந்த்ரரான பராசரர் காமார்த்தனுகி சம்படவக் கன்யகையுடன் ஜலத்திலே ரமித்தார். அதிகமாகக் கூறுவானேன்? தானே படைத்த திலோத்தமையிடம் பிரும்மா மோஹங்கொண்டு அவளை அனுபவிக்க ஆரம்பித்தார். அதைக் கண்டு மன்மதன் சிரிக்க, கோபங்கொண்டு அவனை "ஸபையில் என்னைக் கண்டு நகைத்த நீ சிவன் நெற்றிக்கண்ணுல் எரிக்கப்படுவாய்" என்ருர். பிறகு சிவனருளாலேயே லோக க்ஷேமத்திற்காக காமன் உடல் பெற்றெழுந்தான். ஆதலால் துறவிகளை வீட்டில் சேர்க்கக் கூடாது.

**பலராமன்:** கிருஷ்ணு! நீ கூறிய க்ருஹஸ்தர்களுக்கும் இந்த யதிக்கும் எவ்வளவோ வித்தியாஸமுண்டு. நான் ஏதோ செய்கிறேன். நீ ஸாதுவாக இரு. **கிருஷ்ணன்:** யதியைக் காட்டிலிருந்து நாட்டிற்கும் அங்கிருந்து வீட்டிற்கும் அழைத்து வந்தீர்கள்! இதனுல் என்னென்ன நேரிடப்போகிறதோ? இங்ஙனம் கிருஷ்ணன் கூறியதைக் கேளாமல் பலராமன் முதலியவர்களைப் பெரியோர் கொண்டாடி வஸுதேவருடைய உத்யானத்தில் யதியை அமர்த்தினுர்கள். சிலகாலம் சென்றபின் யதியின் வைபவத்தைக் கண்டு பலராமன் அவருக்குப் பணிவிடை புரிய ஸஹோதரி ஸுபத்ரையை அனுப்ப எண்ணி கிருஷ்ணனிடம் கூறினுர். கிருஷ்ணு! பெரியோருக்குப் பணிவிடை செய்வதென்ற தபஸ்ஸினுல் கன்யகைக்கு ஸத்பதி கிடைப்பான். ஆதலால் ஸுபத்ரையை யதிக்குப் பணிவிடை செய்ய அனுப்புவோம். நம்பத்தக்க வேறு யாரிருக்கின்றனர் என்ருர்.

**கிருஷ்ணன்:** ஆர்ய! உமதிஷ்டப்படி செய்யுங்கள். நீங்கள் உலகத்தவரால் பூஜிக்கப்பட்டவர்கள். உக்ரஸேனர் முதலியவர் உம்மை ஆதரித்திருக்க என் சொல் ஏறுமா? **பலராமர்:** வத்ஸ! அப்படிக் கூருதே, உன்னுல்தான் எங்களுக்கெல்லோருக்கும் யஸஸ். யதியின் ஸ்வரூபத்தை அறியாமல் சிறுபிள்ளைத் தனமாக பேசுகிருய். இந்த யதீந்திரர் ஸதா ப்ரும்ம த்யானம் செய்யும் யோகீந்திரர். அவருடன் சிறிது பேசிப் பார். ஸகல பாக்யமும் உண்டாகும். வீணுக தூஷிக்காதே. யதி நிந்தை குலத்தை அழிக்கும் என்று கூறி கிருஷ்ணன் கையைப் பிடித்து உக்ரஸேனர் முதலியவர்களுடன் துறவியிடம் சென்ருர். இவர்கள் வருவதைக்கண்டு பார்த்தன் பத்மாஸநத்தில்



அமர்ந்து கொக்குபோல் த்யானம் செய்தான். கிருஷ்ணர் அஞ்ஜலி செய்து வணங்கி மந்தமாகத், தாங்கள் பரமாத்மாவையே த்யானம் செய்து க்ருத க்ருத்யனுனீர்கள். நன்ருக ப்ரும்ம ஸ்வரூபத்தை தர்சிக்கிறீர். பிருமன்! ஏன் பேசவில்லை! பல்வகை ரூபத்துடன் உமது எதிரில் ப்ரும்மம் இருக்கின்றது. ஹ்ருதயத்தில் செய்யும் த்யானத்தை விட்டு எங்களுடன் பேசுங்கள்.

இங்ஙனம் பகவான் கூறியும் சிறிது கண்ணைத்திறந்து பார்த்து மௌனியாகவே இருந்தார் யதி. **கிருஷ்ணன்:** கார்யத்தை ஸாதிக்கக் கூடியபடி பலராமனைப் பார்த்துக் கூறினுர். ஆஹா! என்ன த்யானம்! என்ன த்யானம்! மஹாத்மாவிற்கு என்னே தியானம்! ஒன்றையும் அபேக்ஷிக்காத யோகிக்கு நம்மால் ஆவதென்ன? யோகி ஆழ்ந்த த்யானத்திலமிழ்ந்திருக்கிருர். ஸந்தேஹமில்லை. அப்படியிருந்தாலும் அந்தப் புரத்தில் வஸிக்கும் இவரிடம் எனக்கு நம்பிக்கையில்லை. வேறெங்காவது வஸிக்கலாம். ஆனுல் அது அலௌகிகமாகும்.

இப்படி பகவான் பேசியது பாதி ஸம்மதம் தந்தது போல் கருதி பலபத்ரன் ஸுபத்ரையை யதிக்குப் பணிவிடை செய்ய அனுப்பினுர். இங்கித மறிந்தவளும் வினய முள்ளவளும் ஸதாசாரமுள்ளவளுமான ஸுபத்ரை அவருக்குப் பணிவிடைச் செய்தாள். ஜலமோ புஷ்பமோ எந்த காலம் எதை விரும்புவரோ அதை அப்போது அளிப்பாள். பிக்ஷை வந்திருக்கிறது என அறிவிப்பாள்.

ஒரு ஸமயம் அவரருகில் சென்று யதியிடம் ராஜ லக்ஷணத்தைக் கண்டு ஸந்தேஹம் கொண்டாள். பார்த்தனை வணங்கி அஞ்ஜலி செய்து மந்தஹாஸத்துடன் யோகின்! தாங்கள் புண்யபூமியில் ஸஞ்சாரம் செய்கின்றீர்களே. தீர்த்த யாத்ரைக்காகச் சென்ற பார்த்தனை எங்கேனும் கண்டீர்களா? என்ருள். இதைக் கேட்டவுடன் யதியின் முகார விந்தம் மந்தமாக மலர்ந்தது. அழகான ஸுபத்ரையின் ரூபத்தைக் கண்ணுல் பார்த்து புன்னகை புரிந்தார்.

**ஸுபத்ரை:** யோகிஸ்ரேஷ்டரே! நீர்தான் அர்ஜுனனே? இப்பொழுது எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது. முனிவரே தத்துவத்தைக் கூறும். **அர்ஜுனன்:** ஓ மஹா பாக்யவதியே. அவனே தான் நான். பார்த்தன் என மிக

ப்ரஸித்தமானவன். உன்னைப் பெறுவதற்காக யதிவேஷமணிந்தான். இனிய இச்சொல்லைக் கேட்டவுடன் பூர்ண சந்த்ரன் போன்ற முகமுள்ள ஸுபத்ரை புளகாங்கிதையானள். மந்தஹாஸம் செய்து அர்ஜுனனிடம் அழகாகக் கூறினள். தங்களிடம் பேரன்பு பூண்டு எப்போது கிடைப்பீர்? என ஏங்கி தாபத்துடன் இருக்கிறேன். என்னைப் பாணிக்ரஹணம் செய்துகொள்ள என்ன உபாயம் செய்திருக்கிறீர். துர்யோதநனுக்கு என்னை அளிப்பதாக பலராமன் முதலியோர் தீர்மானித்திருக்கின்றனர். ஒருவருமறியாதபடி ஒரு உபாயம் செய்யும். மனதினலேயே தங்களை வரித்து விட்டேன். தாங்கள்தான் எனக்குப் பதி. வேறெவரையும் நான் விரும்பவில்லை. இதை ரஹஸ்யமாக முடியும். **அர்ஜுனன்:** கோவைப்பழம் போன்ற உதடுள்ளவளே! உனது அழகையும் உனது விருப்பத்தையும் கேட்டே உன் விருப்பப்படி நானிங்கு வந்தேன். நானும் உன்னைத் தவிர மற்றவளை விரும்பவில்லை. துன்புறுவோர் துன்பத்தை அகற்றும் கிருஷ்ணனையே நீயும் ஶரணமடை.

இதைக் கேட்டு ஸந்தோஷமடைந்த ஸுபத்ரை வெட்கத்துடன் வேகமாகத் தாயினிடம் சென்று தனது கருத்தையும் பார்த்தனது அபிப்பிராயத்தையும் கூறினள்.

ஸுபத்ரையின் ஸ்வயம்வரத்தையும் அர்ஜுனனது அன்பையும் வேஷத்தையும் கேட்டு ஆஶ்சர்யமடைந்தாள். ஸந்தோஷமடைந்தாள். கிருஷ்ணனை ஏகாந்தமாக அழைத்து இவைகளைத் தெரிவித்தாள். இதைக்கேட்டு மந்தஹாஸத்துடன் பகவான் மாதாவையும் மோஹிக்கும்படி பேசினர். தாயே! ஸுபத்ரையின் மனோரதம் கூடிவராது போலிருக்கிறதே! அண்ணன் முதலியவர் விக்நம் செய்வதால் அது முடியாது போலிருக்கிறது. எப்படியிருந்தாலும் நானதைப் பூர்த்தி செய்கிறேன். ஸஹோதரி ஸௌக்யமாக இருக்கட்டும். எப்பாடு பட்டாவது தாய் சொல்லைத் தட்டாமல் செய்வது தவமாம். ஸுபத்ரே! நீ அஞ்சாதே! உனது இஷ்டத்தை எல்லாம் ஸாதிக்கிறேன். என்னைச் சரணமடைந்தவர் மறுபடி துன்பப்படமாட்டார் என்று கூறி பகவான் தீர்த்த யாத்ரை என்ற வியாஜமாகக் கூறி பலராமர் முதலிய யாதவர்களை அழைத்துக் கொண்டு ஸமுத்ர தீரம் சென்ருர். புண்ய தீர்த்தத்தில் புனலாடி உபவாஸ மிருந்து



விரத அனுஷ்டாநம் செய்தார்கள். களைப்புற்று அன்றிரவும் அங்கேயே தங்கினர்கள். அனைவரும் உறங்கி தனது மாயையால் மயங்கி இருக்கும் பொழுது அர்த்த ராத்ரியில் கிளம்பினர் பகவான். தனியாய் ரதாரூடனாக த்வாரகைக்கு வந்தார். அவரைக்கண்டு அர்ஜுனன் ஆநந்தமடைந்து தந்தையான இந்த்ரனையும் ஸப்தரிஷிகளையும் நினைத்தான். அனைவரும் இந்த உத்ஸவத்தைக் காண உத்ஸாஹத்துடன் வந்தனர். அர்ஜுனன் அனைவரையும் வணங்கி ஆசீர்வாதம் பெற்ருன். இந்த்ரன் அர்ஜுனனைத் தழுவி ஆலிங்கனம் செய்தான். பகவானை நமஸ்கரித்து பாரிஜாத மலர்களால் அர்ச்சித்தான். க்ருஷ்ணன் ஸப்தரிஷிகளை நமஸ்கரித்து மதுபர்க்கம் அளித்தார். நல்வரவு கூறி உங்களது வரவால் எனது ஜன்ம ஸபலமானது என்ருர்.

*ரிஷிகள்:* கிருஷ்ண! இது என்ன. உலகை மயக்குவதைப் போல் எங்களிடமும் கூறுகிருயே! நீ ப்ரக்ருதிக்கு மேலான பரம்பொருளல்லவா? என்று தழதழத்த குரலுடன் பகவானைத் துதித்துப் பணிந்தார்கள். கிருஷ்ணன் அவர்களுடன் கலந்து யோசித்து சிறந்த லக்னத்தில் பார்த்தனுக்கும் கங்கணதாரணம் செய்வித்தார். இந்த்ரன் திவ்ய ஆபரணங்களால் அர்ஜுனனை அலங்கரித்தார். கல்ப விருக்ஷத்தின் மலர்களைச் சூட்டி குங்கும சந்தநம் பூசினர். இந்த்ராணீ அருந்ததி லோபாமுத்ரை முதலியவர்கள் அங்ஙனமே ஸுபத்ரையை அலங்கரித்தனர். ஸாக்ஷாத் லக்ஷ்மீபோன்றவளும் சிறந்த நாஸிகை, அழகான பற்கள், நல்ல யௌவநம், ஸ்வர்ண தாடங்கம், சிறந்த பட்டாடை, திலகம் முதலியவைகளால் பிரகாசிக்கும் ஸுபத்ரையை அர்ஜுனன் வலது புறத்தில் அமர்த்தினள் தேவகீ. கிருஷ்ணன் உத்தரவுபடி ஸப்தரிஷிகள் முன்னிலையில் பார்த்தன் ஹோமம் செய்தான். வஸுதேவர் சிறிதுவெட்கப்படும் ஸுபத்ரையை மடிமீதமர்த்தி பகவான் கூறிய வண்ணம் மந்த்ரத்தைக் கூறி கன்யகாதானம் செய்தார். எல்லோருக்கும் இன்பம் தருகின்ற இந்த விவாஹத்தில் தேவர்கள் துந்துபி முழங்கினர். அப்ஸரஸ்ஸுகள் ஆடினர். மூன்று முறை அக்னியை வலம் வந்து லாஜஹோமம் செய்தான். அர்ஜுனன் விதிப்படி ஸுபத்ரையின் வலது காலைத்தூக்கி அம்மி மீது வைத்தான். தம்பதிகள் பரம ஸந்தோஷத்துடன்

பரஸ்பரம் பார்த்துக்கொண்டனர். ஸபையோர் ஆர்த்ரமான மங்களாக்ஷதையால் ஆசீர்வதித்தனர். வதூவரர் க்ருஷ்ணனது பாதார விந்தங்களைப் பணிந்து அக்னியின் முன்னே மங்கள ரூபிகளாய் ஜ்வலித்தனர்.

ஸப்தரிஷிகள் அவர்களுக்கு ஆசீர்வாதம் செய்து பகவானிடம் விடைபெற்றுச் சென்றனர். அங்ஙனமே வணங்கும் தம்பதிகளைத் தழுவி ஆசீர்வதித்து இந்த்ரனும் இந்த்ராணியும் ஸித்த சாரணர் துதிக்க ஸ்வர்க்கஞ் சென்றனர். க்ருஷ்ணனும் ஶுபமாக விவாஹத்தை முடித்து பக்தனை பாண்டவனுக்கு இன்பத்தை அளித்து ஸமுத்ரக்கரையில் நண்பர்களுடன் படுத்துறங்கினர். க்ருஷ்ணனருளால் பார்த்தனும் தேவேந்த்ரன் அம்ருதத்தைப் பெற்றது போல் ஸுபத்ரையைப் பெற்று அவளுடன் ஆனந்தம் அடைந்தான். **அகஸ்த்யர்** : இந்த ஸுபத்ரா கல்யாணக் கதை புண்யமானது. ஆயுளை விருத்திசெய்யும். படித்தவரும் கேட்டவரும் பாபத்திலிருந்து விடுபடுவர். ஶுக்ர வாரத்தில் கேட்டால் நல்ல கன்யகை கிடைப்பாள். புண்ய காலத்தில் கேட்டால் புத்ர பௌத்ராதிகளையும் ஒப்பற்ற செல்வத்தையும் பெற்று முடிவில் வைகுண்டம் செல்வான். ஸர்வ தீர்த்த ஸ்நான பலனையும் ஸர்வ யக்ஞபலனையும் பெறுவான். ஏகாதசியன்று இரவு கண்விழித்து இதைக்கேட்டால் ஶுகரைப்போல் வைஷ்ணவனுவான். தாக்ஷாயணியை த்யாகம் செய்தபின் இதைப் படித்துப் பரமசிவன் பார்வதியை மணந்தார். ரதி தேவியும் சிவாக்ஞையால் இதைக் கேட்டு காமனைப் பெற்றுள். (இது ஸ்துதிபரமானதால் விசாரம் செய்யத்தக்கதன்று) இதற்கு ஸமமான இஷ்டத்தைத் தரும் புண்ய கதை சாஸ்த்ரங்களில் வேறில்லை. இதைக் கேட்டவுடன் சுத்தனுவான்.

**இருபதாம் அத்யாயம் முற்றிற்று.**

## இருபத்தோராம் அத்யாயம்—98 சுலோகங்கள்.

**அகஸ்த்யர்** : அதிரதனும் வில்லாளிகளில் சிறந்தவனுமான அர்ஜுனன் கவசம் தரித்து வில்லேந்தி அதிகாலையில் ஸுபத்ரையைத் தேரில் ஏற்றிக்கொண்டு கிளம்பினன். ஸுபத்ரை பதியின் ஸம்மதப்படி ஸாரத்யம் செய்தாள். அவனும் பத்து திக்குகளிலும் ஒலிக்கும்படி நாணொலி பரப்பினன். காண்டீபத்வனியைக் கேட்டு



வீரர்களான நகர காவலாளிகள் விழித்தெழுந்து வில்லேந்தி வீரவாதம் செய்தனர். யார் நீ? திருடன்போல் ஓடுகிறுய்! என் எதிரில் நீ பிழைத்துத் தப்ப முடியுமா? எனக் கோபங்கொண்டு வழியைத் தடுத்தனர். சதுரங்க ஸேனைகளுடன் பலவித ஆயுதங்களேந்தி யுத்தம் செய்தனர். பாண்டவருக்கும் த்வாரகா பாலகர்களுக்கும் மிக பயங்கரமான போர் நிகழ்ந்தது. அர்ஜுனன் க்ருஷ்ணனை நினைத்து காதுவரை நாணை இழுத்து உக்ரமான ஶரங்களை வர்ஷித்தான். மஹா வீரர்களான அவர்கள் மிக கோரமான அர்ஜுனன் பாணங்களை ஸஹிக்க முடியாமல் மூன்று யோஜனை தூரம் கேட்கும் ஸங்கேத பேரியை அடித்தார்கள். [இதை அடித்தால் ஊருக்கு ஆபத்து என ஸங்கேதம்] நூற்றுக் கணக்கான ஶரங்களால் அர்ஜுனன் ஶரத்தைத் தடுத்தும் தோல்வியுற்றனர். ஜயம் பெற்ற பார்த்தன் ஶங்க த்யாகம் செய்துகொண்டு கிளம்பினன். ஜயலக்ஷ்மியுடன் கூடிய பார்த்தனைப் பார்த்து மந்தஹாஸத்துடன் ஆலிங்கனம் செய்து கொண்டாள் ஸுபத்ரை. ஸாம்ராஜ்யத்தையும் ப்ரும்ம பதவியையும் மோக்ஷத்தையும் விட அதிகமான இன்பத்தைத் தந்தது பார்த்தனுக்கு ஸுபத்ராலிங்கனம்.

த்வாரகையில் அடித்த பேரி ப்ரளயகால இடிபோல் நாலுயோஜனை தூரம் சென்றது. இதைக் கேட்ட யாதவரனைவரும் விழித்துக்கொண்டு இதென்ன? இதென்ன? என பறபறப்புடன் உக்ரஸேநன் முதலியவர்களுடன் பலராமனை முன்னிட்டுக் கொண்டு பரம கோபத்துடன் க்ருஷ்ணனிடம் கூறினர்கள். ஸமயம் பார்த்து பகைவர் நமது நகரத்தைத் தகைக்கின்றனர். எப்படி வேகமாகச் செல்வது? எப்படி யெப்படி பகைவரை வெல்வது?

நகரத்தை உதாஸீநம் செய்து எல்லோரும் இங்கு வந்தோமே. சீ! என்ன புத்திகெட்டத்தனம்! நமது படிப்பு பயனற்றதே! இப்படிப்பட்ட அஸந்தர்ப்பமான கார்யத்தை வேறு எவர் செய்வர்? நாம் பலசாலி என்ற கர்வத்தால் நமது குலத்திற்கே ஒரு களங்கத்தை உண்டு பண்ணி விட்டோம்! இவ்வளவு ஸேனைகளை அழைத்துக் கொண்டு எப்படி வேகமாகச் செல்வது? க்ருஷ்ண! இந்த பெரும் ஸேனைகளை அழைத்துக் கொண்டு நீ பின்னுல் வா என்று கூறி கோபத்துடன் கிளம்பினர்

பலராமன் ரதத்தின்மீதேறி. **கிருஷ்ணன் :** ஆர்ய! மூவுலகிலும் நமக்கு சத்ருக்கள் இல்லை. தேவேந்த்ரன் கூட நமது நகரத்தைக் கண்ணால் கூட காணமுடியாது. பேரியின் சப்தம் சத்ரு விஷயமானதல்ல. ஊரில் யாருக்கோ ஏதோ ஆபத்து வந்திருக்கும். நமது அந்தப்புரத்திலே யோகி இருக்கின்றாரே அவருக்கோ அல்லது அவரால் பிறருக்கோ ஏதேனும் ஏற்பட்டிருக்கவேண்டும். நமது க்ருஹத்தில் அவர் ஒருவர்தானிருக்கிறார். நம்து ஸஹோதரி பாலையான ஸுபத்ரை அவருக்குப் பணிவிடை செய்கிறாள். முதலில் அஸுபமான சகுனமும் பின்னர் சுபமானதும் காணப்படுகிறது. அதனால் நமக்குச் சிறந்த நன்மை உண்டாகுமென்றே தோன்றுகிறது. ஸந்தேஹமில்லை. நானே முன்சென்று காலத்திற்கேற்ற கார்யம் செய்கிறேன். ஸர்வ கார்யத்தையும் ஸாதிக்கின்ற தங்களது ஶிஷ்யனை நானிருக்கும் பொழுது தாங்கள் யுத்தத்திற்குப் போவது உசிதமல்ல. அந்த யதியின் மூலமாக ஏதேனும் அஸுபம் நேர்ந்திருந்தால் பாபியான அவரைக் கொல்கிறேன். ஸந்தேஹமில்லை.

**பலமுள்ள பலராமன் :** கிருஷ்ண! ஜிதேந்த்ரியரான அந்த யதியினிடம் ஆதிமுதலே உனக்கு மஹா த்வேஷம் ஏற்பட்டுளது. அவரை அப்படித் தப்பானவராக எண்ணுதே! சிறிய கார்யத்திற்காக அந்த பேரி அடிக்க மாட்டார்கள். நகரத்தில் பகைவர் வந்து ஆக்ரமித்திருப்பர் நிச்சயமாக. அதனால் கலஹமேற்பட்டிருக்குமென்று கூறி கடல்போன்ற ஸேனையைத் திரட்டிக்கொண்டு கோபத்துடன் பகைவரைத் தஹிப்பவர்போல த்வாரகைக்குக் கிளம்பினர். இப்படி இவர்கள் நான் போகிறேன் என்று பரஸ்பரம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது பார்த்தன் என பெயர் பொறித்த அம்புகளை எடுத்துக்கொண்டு ஒருவன் ஓடோடி வந்தான். பயத்தால் நடுங்கிய பலபத்ரர் முதலியவர், அவனைப் பார்த்து அது யாருடைய ஶரம்? எவர் பெயர் அதில் இருக்கின்றது? எனக் கேட்டுக்கொண்டே பார்த்தன் பெயரைக் கண்டனர். பார்த்தன் எங்கிருந்து வந்தான்? பந்துக்களான நமக்கும் பாண்டவர்க்கும் பகைமை ஏது? என்றனர்.

**தூதன் :** வேறு எவரும் நம் நகருக்கு வரவில்லை. எவரிடமிருந்தும் நமக்கு பயமில்லை. யதிதான் ஸுபத்ரையை அழைத்துக்கொண்டு ரதத்திலேறிக் கிளம்பி



விட்டார். பெரும் போர் நடந்தது. யதியின் ஶரத்தால் நாங்கள் தோல்வியுற்றோம். அவரைப் பார்த்து, இவர் இந்த்ரனே! பரமசிவனே! என்று ஜனங்கள் நினைத்தார்கள். இப்படிப்பட்டவரைப் பார்த்து எல்லோரும் ஆஶ்சர்யமடைந்தனர். தோல்வியுற்று நடுங்கும் ஸேனைகளால் அனுப்பப்பட்டு இவ்வளவு விஷயங்களைத் தெரிந்துகொண்டு நான் இங்கு விரைந்து வந்தேன் என்றான். இதைக் கேட்டு கோபாக்னியால் அக்னிபோல் ஜ்வலிக்கும் பலராமனைப் பார்த்து ஸர்ப்பம்போல் பெருமூச்சுவிட்டுக் கூறினார். **க்ருஷ்ணன் :** ஆர்ய! இதற்குமேல் நாம் உசிதமாக என்ன கார்யம் செய்வது? பெரியோர்களை முன்னிட்டு எல்லோரும் பெரிய அனர்த்தத்தைத் தேடிக்கொண்டீர்கள். காலதேசத்திற் கேற்றபடி முன்னமே நான் கூறினேன். சாஸ்த்ரமறிந்தவரும் தேஜஸ்ஸிலும் வயதிலும் பெரியவர்களுமான நீங்கள் சிறியவன் சொல்லை ஏற்கவில்லை. பரிஹாஸமும் செய்தீர்கள். யோகியானாலும் தபஸ்வியானாலும் வேதாந்த க்ஞானிகளில் சிறந்தவனானாலும் நகரத்தில் பலருடன் பழகும் துறவியை நம்பலாமா? ஸ்வேச்சையாக வனத்தில் திரிபவரை நாட்டிற்கு அழைத்துவந்து அதிலும் அந்தப்புரத்தில் வைத்து புண்ணியம் தேடினீர்கள்! அறிவுள்ளவன் ஸுந்தரியான யுவதியை அவரிடம் அனுப்புவானா? வித்வான்கள் கூட ஸமயத்தில் ஏமாறுகிறார்கள்! காலத்தை மீற எவரால் முடியும்? நான் அதை மறுபடியும் கூறினால் புண்ணில் கோலிட்டது போலாகும். ஜலமெல்லாம் சென்றபின் அணை கட்டவேண்டியிருக்கிறது. இனி விசாரம் செய்வதில் பயனென்ன?

பாண்டவர்களது நகரத்தை த்வம்ஸம் செய்து விரைவில் பாண்டவர்களையும் கொல்கிறேன். ஒருவன் பாபம் செய்கிறான். பலர் அதன் பலனை அனுபவிக்கிறார்கள். ஒரு துஷ்ட புத்ரன் பிறந்தால் அவன் பித்ருக்கள் எல்லோரும் அழிகிறார்கள். யதிரூபியான அர்ஜுனன் ஒருவனால் பாண்டவர் அனைவரும் அழியப்போகிறார்கள். இங்ஙனம் கூறி யோகீஸ்வரர்களுக்கெல்லாம் ஈஶ்வரனான பகவான் கோபத்தால் கண்கள் சிவக்க தன் ஸாரதியை நோக்கி தேரைத் தயார்செய் என்றார். **பலராமர் :** கிருஷ்ணன் சொல்லைக் கேட்டு கோபத்துடனவரைப் பார்த்துக் கூறினார். பாபியான துறவிவேஷம் பூண்ட அர்ஜுனன் ஒருவன்

அயோக்யத்தனம் செய்தால் தர்ம ராஜாதிகள் என் செய்வர்? கபடமாய் குலத்தைக் கெடுத்த அந்த அயோக்யனையே கொல்லவேண்டும். ராவணன் பாபம் செய்தால் விபீஷ்ணன் கொல்லப்பட்டானு? ஹிரண்யன் செய்த பாபம் பிரஹ்லாதனிடம் சென்றதா? என்று கூறி கலப்பையையும் உலக்கையையும் எடுத்துக்கொண்டு ஒருவராகத் தேரில் ஏறி பிரளயாக்னிபோல் பகைவனைக் கொல்லக் கிளம்பினர். அவரது கோபக் கனலைக் கண்டு நரஸிம்மன்போல் உள்ள அவரை அணுக உக்ரஸேநன் முதலிய யாதவர் அஞ்சினர். சிறிது பயந்தவராக கிருஷ்ணன், அஞ்சலி செய்து அவர் கோபத்தைத் தணிக்கச்சில சொற்களைக் கூறினர்.

ஆர்ய! தாங்கள் கடும் கோபத்தால் லௌகிகத்தையும் அறியவில்லை. தாங்கள் இப்படிக் கோபங்கொண்டால் யார் உம்மிடம் அணுகமுடியும்? பின்னர் இப்படி நேரக்கூடும் என்று முன்னமே நான் கூறினேன். தாங்கள் அதைக் கேட்கவில்லை. அது பலித்தது இப்போது. ப்ரபோ! உக்ரஸேநர் முதலிய எல்லோரையும் கலந்து கொண்டு போகவேண்டும். பார்த்தனைக் கொல்வது அவர்களுக்கு ஸம்மதமானுல் கொல்வோம். எல்லா சாஸ்திரங்களுக்கும் ஸம்மதமானதைச் சொன்னேன். அதை ஏற்காததால் நான் எதிர்பார்த்தபடி பலிக்கின்றது. மநு முதலிய பெரியோர்கள் கலியுகத்தில் ஸன்யாஸம் கூடாதென நிந்தித்தனர். ஒருபோதும் கலியில் யதியை நம்பக்கூடாது. (த்வாபரத்தின் கடைசிபாகம் கலி ஸம்மந்த முண்டு. யுக ஸந்தி என்பர்.) எல்லாமறிந்த தாங்கள் அதை மறந்து இதைச் செய்துவிட்டீர்கள். வருவதைக் கவனியாமல் செய்து இப்போது வீணே கோபித்துக் கொள்கிறீர். குஹையில் மௌனியாக இருந்த யதியை நகருக் கருகே அழைத்தபோதே என் மநம் நடுங்கிற்று. காட்டைவிட்டு நாட்டிற்கு வந்தபோது பெரும் அனர்த்தம் உண்டாகும் என நிச்சயித்தேன்.

தத்வமறிந்த நீங்கள் அந்தப்புரத்திலும் அவரை அழைத்து வந்தபோது எல்லோரும் வெறுக்கும்படியும் நகைக்கும்படியும் இருந்தது. என் செய்வேன்? யதியினிடம் யுவதியை யார் அனுப்புவர்? நமது ஸஹோதரி அவருக்குப் பணிவிடை செய்வது என்ற வ்யாஜத்தால் அவரிடம் நிச்சயமாக அன்பு கொண்டிருப்பாள். இப்



பொழுதும் நமது குலத்தில் ஒரு குழப்பத்தை உண்டு பண்ணுகிறீர்! வருவன வந்தே திரும். காலத்தை மீற எவரே வல்லவர்? அர்ஜுனனைக் கொல்வதால் என்ன நன்மை உண்டாகும்?

இவ்வளவு கூறியும் அவர் கோபம் அடங்கவில்லை. கிருஷ்ணனைத் திரும்பியும் பார்க்கவில்லை. சந்த்ரனைக் கண்ட கடல்போல் பொங்கி எழுந்தார். எல்லா யாதவர்களும் அங்ஙனமே கோபங்கொண்டு துஷ்டத் துறவியைக் கொல்வோ மென பலராமனைப் பின் தொடர்ந்தனர். கிருஷ்ணனும் அவர்களுடன் கூடவே சென்று நமக்கு விரோதியான அர்ஜுநனை நானே கொல்வேன். ஸந்தேஹமில்லை! இது நமது பெற்ருேருக்கு ஸம்மதமா என்று கூறி கோபத்துடன் பகவான் ஸஹோதரனைப் பார்த்து கூறினர். அவர் நன்கு பேச அறிந்தவர். அவர்தான் அச்சமயம் அவரிடம் பேசவல்லவர். **கிருஷ்ணன்:** யதிவேஷதாரியான துஷ்ட அர்ஜுநனைக் கொன்ருல் நமது ஸஹோதரியின் கதி என்ன? என யோசியுங்கள். பதியிழந்தவளாக்கப்பட்டாள் ஸுபத்ரை என்ற நிந்தையைக் கேட்க வேண்டும். நம்மெதிரில் அவள் கண்ணீர் விட்டழுவாள்! நானே அர்ஜுநனைக் கொல்வேன்! அது நமக்கு நன்மை தானு?

ஸுபத்ரை தெய்வாநுக்ரஹத்தால் காந்தர்வ விதிப்படி பார்த்தனை மணந்து ஸந்தோஷப்படுகிருள். இது நம் பெற்ருேருக்கும் ஸம்மதமாகும். ஸுபத்ரை விதவையாக என் தாய் ஸம்மதிப்பாளா? அவள் கண்ணீர் விடாதிருக்க வழி கூறுங்கள்! இப்பொழுதே நான் பார்த்தனைக் கொல்கிறேன். **அகஸ்த்யர்:** இங்ஙனம் யுக்தி யுக்தமாகவும் புத்தியை மயக்கும்படியாகவும் பகவான் கூறியதைக்கேட்டு, மந்த்ரத்தால் கட்டப்பட்ட ஸர்ப்பம்போல் பெருமூச்சுவிட்டு கர்வத்துடன் பகவானைப் பார்த்துக் கூறினர் **பலராமன்:** வேஷத்தைக் கண்டு உலகில் எல்லோருந்தான் ஏமாறுவர். மநதில் உள்ளதை யார்தான் அறிவர்? நீ செய்த வேலைதான் இதெல்லாம் எனத் தோற்றுகிறது. அர்ஜுநன் உனது தூண்டுதலாலோ அல்லது தானுகவோ எப்படியோ யது வம்சத்தில் ஒரு தீமையைச் செய்துவிட்டான். **கிருஷ்ணன்:** எல்லாமறிந்த ஸமர்த்தனை அண்ணுகூட இப்படி என்னைக் கூறுகிறீர். ஹா! கஷ்டம்! நான் மௌனியாயிருக்கும்போது

இப்படிக் கூறினால் நான் என்ன சொல்லப்போகிறேன்? உள்ளத்தில் வஸிக்கும் பகவான் விஷ்ணுதான் ஸாக்ஷியாயிருந்து உள்ளதை அறிவார்! ஹரி: ஹரி: என்று உரக்கக் கூறி இருசெவிகளையும் மூடிக்கொண்டார். பந்துக்களின் முன்னிலையில் இங்ஙனம் வருந்தும் பகவானை ஸமாதானப் படுத்திக்கொண்டு கூறினார் **பலராமன்:** குழந்தாய்! கோபித்துக் கொள்ளாதே! மனம் புழுங்கியதால் இப்படிக் கூறினேன், இனி என்ன செய்வது? எது நமக்கு க்ஷேமமானது? நமக்கு லோக அபவாதம் வராதபடி செய்ய வேண்டும்! என்றார்.

***கிருஷ்ணன்:*** நான் பேசாமலிருக்கும் பொழுதே ஒரு பறபறப்பேற்பட்டது. நான் ஏதாவது சொன்னால் என்னதான் ஏற்படுமோ? உங்களுக்கு எப்படி இஷ்டமோ அல்லது நமது பெற்றோர்க்கு எப்படி இஷ்டமோ அப்படி நடவுங்கள் என்றார். இதைக் கேட்டு பலராமனும் மற்ற யாதவரும், நீ தான் நன்கு விஷயமறிந்தவன். உனது யுக்தி உலகத்தில் கொண்டாடப்படுகிறது என்றனர்.

***கிருஷ்ணன்:*** குரோ! சாஸ்த்ர மறிந்த நீங்களே யோசித்துச் சொல்லுங்கள். வேண்டுமானால் எனதிஷ்டத்தைக்கூறுகிறேன். ஸம்மதமா? எந்த உபாயத்தினாலாவது பெற்றோருக்கு ப்ரீதியானதைச் செய்யவேண்டும். அர்ஜுநன் தானே ப்ரீதியுடன் வரித்திருக்கிறான். அவனும் நமக்கு பந்து. க்ஷத்ரியர்களுக்குக் காந்தர்வ விவாஹமே சிறந்தது. இதில் அபவாதமேது? தோஷந்தானென்ன? நமது வீட்டில் இதில் யாருக்கு அப்ரீதி? நமது வம்ஶத்தில் தேவயானீ எனும் சுக்ரரது புத்ரி யயாதி மகாராஜனை வரித்ததாகக் கேட்டிருக்கிறோம். ஶகுந்தலை துஷ்யந்தனை காந்தர்வ விதிப்படி மணந்தாள். அவளிடம் உண்டான தார்மிகனான பரதனால் பாண்டவர் பாரதர் எனப்படுகின்றனர்.

ஶந்தநு மஹாராஜன் லோகபாவனமான கங்கையை காந்தர்வ விதிப்படி மணந்து பீஷ்மரைப் பெற்றான். பரம வைஷ்ணவரான அவர் இன்னும் ஜீவித்திருக்கிறார். அதிகமாகக் கூறுவதேன். நானே இதற்கு த்ருஷ்டாந்தமல்லவா? பிதா முதலியவர்களை மதியாமல் ருக்மிணி என்னை வரிக்கவில்லையா? இந்த நல்லவழியிலே தான் ஸஹோதரி பாண்டவனை வரித்தாள். அவனும் இவளை ஏற்றுக் கொண்டான். இதுதான் நான் சொல்வது. இப்போது நாம்



எல்லோரும் விரைவாக அஸ்தினபுரம் சென்று லௌகிகமாக கல்யாணத்தை நடத்தி ஸந்தோஷமாக இருப்போம். இப்படிச் செய்தால் நமது பெற்றோருக்கும் ஸஹோதரிக்கும் ஸந்தோஷமேற்படும். உலகத்தவரும் இதை நல்ல முறைதான் என ஏற்பர். நமக்கும் நன்மை உண்டாகும்.

**இருபத்தோராம் அத்யாயம் முற்றிற்று.**

## இருப்பத்திரண்டாம் அத்யாயம் – 136 சுலோகங்கள்.

***அகஸ்த்யர்:*** ஸர்வ க்ஷேமமானதும் நன்மையைத் தருவதுமான இதைக் கேட்டு உக்ரஸேநன் உத்தவர் அக்ரூரர், ஸாத்விகர் முதலிய அனைவரும் கிருஷ்ணனைக் கொண்டாடினார்கள். நன்கு யோசித்து ராமகிருஷ்ணர்களைக் கூறினார் **உக்ரஸேநர்:** நீங்களிருவருமே இந்த்ரப்ரஸ்தம் சென்று ஆடை ஆபரணம் முதலிய சீர்களைத் தந்து அர்ஜுநனை ஸபையில் ஆசிர்வதித்து பெண்ணின் விவாஹ உத்ஸவத்தைச் சிறப்பாகநடத்தி விரைவில்வாருங்கள். பகவான் பலபத்ரனுடன் கூட பார்த்தன் மணத்தை ஆதரவுடன் செய்விக்கக் கிளம்பினார். உத்தவாதிகளும் பன்னிரண்டு அக்ஷோஹிணீ ஸேனையும் அவர்களை பின்தொடர்ந்தது. இந்த்ரனுக்கு ஸமமான பகவானை இந்த்ரப்ரஸ்தத்திற்கு அனுப்பி உக்ரஸேநர் பரிவாரத்துடன் த்வாரவதிக்குச்சென்றார். கிருஷ்ணனுக்குத்தாஸனான தர்மராஜன் ஶங்கம் பேரி முதலிய வாத்யங்கள் முழங்க ஸேனையுடன் பகவானை எதிர்கொண்டழைத்து வரவேற்றார். மிக ஸந்தோஷத்துடன் ராமகிருஷ்ணர்கள் தர்மரை நமஸ்கரித்தார்கள். (தேவர் தலைவரான பகவான் மாயாமானுஷ விக்ரஹனாக வந்திருப்பதால் மனுஷ்யனைப் போல் பந்துவும் வயதில் மூத்தவருமான தர்மரை வணங்கினார்).

பீமன் முதலியவர் பலராமனை நமஸ்கரித்தார்கள். கிருஷ்ணன் பீமனை நமஸ்கரித்து அர்ஜுநனையும் தர்மரையும் ஆலிங்கனம் செய்து கொண்டார். நகுல ஸஹதேவர் ராமகிருஷ்ணர்களை நமஸ்கரித்தார்கள். தர்மர் கிருஷ்ணனுக்கு ஸ்வாகதங் கூறி ராமகிருஷ்ணர்களுடன் கூட மிக அழகாக அலங்கரிக்கப்பட்ட நகரத்திற்குள் ப்ரவேசித்தார். தனது அரண்மனைக்கு அழைத்துச் சென்று ஆடை ஆபரணங்களால் அலங்கரித்தார். சந்தனம் பூசி மாலை அணிவித்தார். அங்கு வந்த குந்தியை ராம

கிருஷ்ணர் இருவரும் வணங்கினார்கள். ஸுபத்ரை வெட்கத்துடன் மெதுவாக வந்து மந்தஹாஸத்துடன் ஸஹோதரர்களை நமஸ்கரித்தாள்.

**யுதிஷ்டிரர்:** ஓ ராம! ராமநாத! நீங்களிருவர்களும் சரணமடைந்தோர் துன்பத்தை நீக்குபவர்கள். தாங்களே எனது கிருஹத்திற்கு வந்தீர்கள். எனது தபஸ் ஸித்தித்தது. ஜன்மம் ஸபலமானது. குலமும் ஸபலமாயிற்று என்று கூறினர். பிறகு பாண்டவ ச்ரேஷ்டர்கள், தனக்கு மேல் ஈசனில்லாத ஜகதீசர்களும் ஸகல வஸ்துக்களையுமளித்து பூஜிக்கத்தக்கவர்களுமான இவர்களை நன்கு பூஜித்தார்கள். **ஸ்ரீகிருஷ்ணன்:** அத்தை மஹனே! ப்ரபோ! இப்படி எங்களை மிகப் பெரியவர் போல் எண்ணி பேசலாமா? நாங்கள் சிறுவர், எங்களைத் தாங்கள் போஷிக்கவேண்டுமன்றோ? பந்து ஸ்நேஹத்தால் கொண்டாடுகிறீர் போலும். எங்கள் விருப்பம் கை கூடிற்று. மங்களரூபிணியான ஸுபத்ரை அதைப் பூர்த்தி செய்தாள். வஸுதேவர் உக்ரஸேனர் முதலிய அனைவரும் ஸுபத்ரா விவாஹத்தால் மிக்க ஸந்தோஷமடைந்தனர். உமது முன்னிலையில் கன்யாதானம் செய்து சீரளிக்கவே வந்தோம் என்றார். ஸபையில் ஸிம்மாஸனத்தில் ஸுபத்ரையுடன் பார்த்தனை அமர்த்தி விதிப்படி விவாஹத்தை நடத்தினர்கள்.

பிராம்மணர்கள் அமோகமாக ஆசீர்வாதம் செய்தனர். ஸுமங்கலிகள் ஆர்த்தி எடுத்தனர். ராம கிருஷ்ணர்கள் ஸபையில் ஸ்த்ரீதனமளித்தனர். பத்து கோடி ஸ்வர்ணம், நாற்பது கோடி வெள்ளி, கோடி தனம் பெரும் ஆபரணங்கள், வெண்பட்டுகள், பட்டாடைகள், ஐம்பதாயிரம் ஸிந்து தேச அச்வங்கள், பால ஸூர்யனைப் போல் ஜ்வலிக்கும் அழகிய நாலாயிரம் ரதம், பத்தாயிரம் யானை, மதமத்தர்களான காலாட்படையில் எண்பது கோடி, அழகிய ஆபரணம் அணிந்த மூன்றாயிரம் யுவதிகள், முதலியவைகளைக் கொடுத்தார்கள். கிருஷ்ணன் தனக்கு ஜாம்பவான் அளித்த விலைமதிக்க முடியாத ஒரு ஹாரத்தைத் தந்தார். அது ஸ்ரீராமனால் ஸந்தோஷத்தால் ஜாம்பவானுக்கு அளிக்கப் பட்டது. இங்ஙனம் பலராமனும் பார்த்திபனுக்கு ஸ்ரீதனமளித்தார். ஸஹோதரியான ஸுபத்ரைக்கு உயர்ந்த ஆபரணங்களைத் தந்தார்.

ஐம்பது கோடி பெறுமான ஒட்யாணத்தையும் ரத்ந
மாலையும் முப்பத்திரண்டு கோடி பெறுமான இரு தாடங்
கங்களையும், கோடிதநம் பெறுமான முத்துகளாலான
நாஸிக ஆபரணத்தையும் அழகிய கம்பளங்களையும்
வாஸனைப் பூக்களையும் ஐம்பது கோடி பெறுமானமுள்ள
நதிக்கரையிலுள்ள பூமியையும் தம்பதிகளுக்குத் தந்து
சதை மாதம் வரை அங்கு வஸித்தார்கள். இவர்களைப்
பாண்டவர்கள் நித்யம் பூஜித்தனர். ரத்நம் ஆபரணம்
வஸ்த்ரம் ஆகிய இவைகளால் பாண்டவர்களை ராம
கிருஷ்ணர்கள் பூஜித்து நற்சொற்களால் குந்தியையும்
அர்ச்சித்தனர். தன்னை விட்டு ராமகிருஷ்ணர் த்வாரகை
க்குப் புறப்படுவதால் குந்தி மிக்க வருந்தினாள். ஆர்யே!
எங்களுக்கு அநுக்ரஹம் செய். அடிக்கடி எங்களை
நினை. மேலே மேலே சுபம் உண்டாகப்போகிறது, வரப்
போகிறோம், எல்லோரும் ஸந்திப்போம்.

எங்கள் ஸஹோதரி சிறியவள். உலக விஷயம் அறி
யாதவள். உமது ஸஹோதரரின் புத்ரியல்லவா? பிரிய
மான அவளை எப்படி நடப்பதென கற்பி, என்று புன்சிரிப்
புடன் குந்தியிடம் கூறி ஸாத்வியான திரௌபதியைப்
பார்த்து இருவரும் கூறினார்கள். ஓ கல்யாணீ! திரௌபதீ!
உனக்கு லௌகிகம் நன்கு தெரியும். பந்து முறையில்
நாங்கள் கூறுவதை அஸூயையில்லாமல் கேள். ஸ்த்ரீ
களுக்கு ஸக்களத்தி என்பவள் கழுத்தில் உண்டானக்
கட்டி போலாவாள். இது பொதுவானது. ஆனால் பதி
விரதைகளுக்கு அப்படியல்ல. ஸுபத்ரை நமது குழந்தை!
ஸதா உனக்கும் பணிவிடை புரிவாள். நல்லெண்ணத்
துடன் பழகு! இந்த வீட்டிற்கு நீ தான் ஆதாரமானவள்.
எந்த வீட்டில் குடிலமான பெண் இருக்கிறாளோ அந்த
வீடு விருத்தியாகாது. கெட்ட ஸ்த்ரீயால் எல்லாம்
கெடும். மனைவியைத்தான் வீடு என்பர். ஸாஸ்த்ர அர்த்
தங்களை விசாரித்து தத்துவ சிந்தையுடன் என் ஸஹோ
தரியான சிறுவளை அன்புடன் ரக்ஷி, என்று தங்கள் மூத்த
ஸஹோதரியாக எண்ணி திரௌபதியை வஸ்த்ர ஆபர
ணங்களால் அர்ச்சித்துக் கூறினர்.

பதிவிரதையான திரௌபதி இதைக்கேட்டு மந்த
ஹாஸத்துடன் ஆநந்தக் கண்ணீர் பெருகக் கூறினாள்.
உலகில் பொதுவாக ஸ்த்ரீகள் குடிலமானவர்கள். சுய
லமுள்ளவர்களே! பாம்பைக்கூட நம்பலாம். பெண்களை

நம்பக்கூடாது. அந்தமாதிரி ஸ்த்ரீயாக என்னைக் கருதாதீர்கள். என் பிறவியே மற்றவர்களைப் போலில்லையல்லவா? உமது பக்தியால் எல்லாவற்றையும் செய்கிறேன். உமது பக்தையாகச் செய்யுமென்னை என கிருத கிருத்யையான திரௌபதி இங்ஙனம் பகவானை வேண்டினாள்.

## பாதிவ்ரத்ய உபதேசம்.

பகவான் ஸோதரியான ஸுபத்ரையைப் பார்த்துக் கூறினார். நற்குலத்தில் பிறந்த குழந்தாய்! நான் சொல்வதைக் கேள்! ஸகல ஸித்தியும் பெறுவாய். பதிக்குப் பிரதிகூலமாக இருந்தால் பெண் பெற்றோர் குலத்திற்கு நோயாவாள். பதிவிரதையாக இருந்தால் பெற்றோர் வம்சத்திற்குப் பூஷணமாவாள். பதிக்கு ஸதா அநுகூலமாக இரு. அடக்கமாக இரு. பதி கோபித்துக் கொண்டால் பதில் பேசாதே. ஸுபத்ரே! திரௌபதியைச் சக்களத்தியாகக் கருதாதே! அவளுடன் ஸ்நேகமாக இரு. புகுந்த வீட்டிலிருந்து தாய் தந்தை ஸஹோதரர்களை ஸதா நினைத்துக்கொண்டிராதே. ஸ்த்ரீக்குப் பதியே பந்து. பதியே தநம். பெருந்தெய்வம்! பதியே தர்மம். குருவை நிந்திக்கும் மாணவன், தந்தையை நிந்திக்கும் தநயன், பதியை நிந்திக்கும் ஸ்த்ரீ ஆகியவர்கள் ஜலமலம்நிறைந்த நரகத்தில் விழுவர். கலியில் ஸ்த்ரீயையே வீட்டில் மிருத்யுவாகப் படைத்தார் பிரும்மா. இது பொதுவாக ஸ்த்ரீகளுக் கேற்பட்ட துர்குணம். ஆனால் சிலவிடத்தில் சில ஸாத்விகளும் இருப்பார்கள். முன்னே லோகமாதாவான ஸீதாதேவியும் கூட லக்ஷ்மணனைக் கடுமையான சொற்களால் தாக்கி பதிக்கு துக்கத்தை உண்டுபண்ணி தானும் ஸங்கடத்திற்கு ஆளாகினாள். உலகில் பெண்ணுக்கு அடிமையாகி இந்த்ரியங்களை ஜயிக்காதவனாக இருந்தால் புருஷன் துக்கம் அனுபவிப்பான் எனக்காட்டி ஸ்ரீராமனும் அதை மெய்ப்பிக்க ஸாமான்ய மனிதனைப் போல் கதறினார். ஆதலால் எந்த வகையிலும் பதிக்கு அப்ரியத்தைச் செய்யாதே. பெற்றோர் குலத்தைக் கொண்டாடும்படி நடந்தால் உனக்கு நன்மையுண்டாகும் என்று கூறி ஸுபத்ரையை உச்சிமுகர்ந்து கண்ணீர் பெருக்கும் அவளை ஸமாதாநம் செய்தார்.

போய் வருகிறேன், என்று பாண்டவரிடம் விடை பெற்றுக் கிளம்பினார்கள். தர்மர் அவர்களைப் பார்த்து



துர்யோதநனது கொடுமையை நினைத்துக் கண்ணீர்விட்டுக் கூறினார். அம்மான் மகனே! உலகில் என்னைவிட பாக்கிய ஹீநன் இல்லை. பிறந்தது முதலே நாங்கள் துன்பத்தை அனுபவிக்கிறோம். பிறந்த சில நாட்களில் தந்தையை இழந்தோம். பெரிய தந்தை உபேக்ஷை செய்தார். அஸ்தினாபுரியிலிருந்து வாரணாவதத்திற்கு விரட்டப்பட்டோம். அரக்கு மாளிகையில் புரோசநன் மூலமாக எங்களைத் தீயிலிட முயற்சித்தார்கள். ஏக சக்ர நகரத்தில் பிக்ஷை எடுத்து ஜீவித்தோம். திரௌபதியை மணந்ததைக் கேட்டு திருதராஷ்ட்ரன் எங்களை நகருக்கு அழைத்து வந்து பந்துக்கள் முன்னிலையில் நகரை விட்டுவேறிடம் அனுப்பினார். மாமனும் தாங்களும் ஒரு ஸமயம் கூட இதைக் கவனிக்கவில்லை. ஏழைக்கேது பந்து? தரித்ரனுக்கு ஸுகமேது? தரித்ரனுக்கு தர்மம் ஏது? பணமில்லாதவன் பிணத்திற்குச் சமம்.

ஈச்வர க்ருபை உள்ளவனுக்கே ஸம்பத்து உண்டாகும். ஶத்ருபாதை இல்லாமல் ஸம்பத்து உண்டாகி வம்சம் விருத்தியாகும்படியான தர்மத்தைக் கூறும். அது எங்களுக்கு இஷ்டமான வரத்தைத் தரும். எல்லாவற்றையும் நன்கு விசாரித்துக் கூறும், புருஷோத்தமா என்றார்.

**கிருஷ்ணன்:** தர்ம! தர்மதத்துவத்தை அறிந்தவனாக இருந்தும், மூடனைப் போல் வருந்துகிறாயே? அரசே! ஸம்ஸாரமெனும் நரகக்கடலின் கதி இப்படிப்பட்டது தானே! எங்களுக்கும் இந்தமாதிரி துன்பமில்லையா? என்பதை நீர் விசாரிக்கவில்லை.. எங்கள் மாமனான கம்ஸன் என்னதான் செய்யவில்லை? ஜராஸந்தன் எவ்வளவு துன்பம் செய்யவில்லை? அதெல்லாம் சொல்லில் அடங்காது. அவைகளை நாங்கள் ஸஹிக்கவில்லையா? ஜன்மாந்தரத்தில் செய்த பாபம் நம்மை இப்படிக் கஷ்டப்படுத்துகிறது. ஆதலால் ஶாஸ்த்ரத்தை விசாரித்துப் பொருத்தமான தர்மத்தைச் செய்யவேண்டும். ராஜன்! விசாரப்படாதே! ஸகல நன்மைகளும் உண்டாகப் போகிறது. நீ தர்ம ரூபி. நித்யம் ஸாதுக்களைப் பூஜிக்கின்றாய். இனிமேல் சிறந்த செழிப்பு உண்டாகும். சத்ருக்களை வென்று ஸாம்ராஜ்யத்தை அடையப் போகிறாய்!

தநுர் மாஸத்தில் உஷ: கால பூஜை செய்தால் பகவான் ஸந்தோஷமடைந்து நிச்சயமாக உனதிஷ்டத்தை அக்ஷய்யமாகச் செய்வார். தநுர் மாஸம் உஷ: காலத்தில்

ஸ்நாநம் செய்து ஜநார்த்தநனை நன்ருக பூஜி. பயத்தம் பொங்கல் தத்யன்னம் இவைகளை நிவேதநம் செய். சக்திக்குத் தகுந்தபடி விஷ்ணுபக்தர்கள் அவைகளை அருந்தும்படி செய். இவ்வுலகில் ஸகல போகங்களையும் அனுபவித்து முடிவில் விஷ்ணு பதத்தை அடைவாய். முன்னம் இந்த்ராணீ துக்கம் வந்தபோது இஞ்சியுடன் பொங்கலை பகவானுக்கு நிவேதநம் செய்து ஸுமங்கலியாகவே இருந்து பெரும் செல்வத்தைப் பெற்ருள். லக்ஷ்மீ ஹ்ருதயமெனும் ஸ்ரீ ஸ்தோத்ரத்தை ஜபித்தாள். காவேரியில் துலாஸ்நானமும் செய்து இந்த்ர பதவியைப் பெற்ருள் என்று கூறி பகவான் லக்ஷ்மீஹ்ருதயத்தை உபதேசித்தார்.

## லக்ஷ்மீ ஹ்ருதயம்.

ஸ்ரீ தேவீ ப்ரதமம் நாம—த்விதீயம் அமிருதோத் பவா
த்ருதீயம் கமலா ப்ரோக்தா—சதுர்த்தம் சந்த்ரசோபநா
பஞ்சமம் விஷ்ணுபத்நீச—ஷஷ்டம் ஸ்ரீ வைஷ்ணவீ ததா
ஸப்தமந்து வாரோஹா—ஹ்யஷ்டமம் ஹரிவல்லபா
நவமம் சார்ங்கிணீ ப்ரோக்தா—தசமம் தேவ தேவிகா
ஏகாதசம் மஹாலக்ஷ்மீ-த்வாதசம் லோகஸுந்தரீ
ஸ்ரீ பத்மா கமலா முகுந்த மஹிஷீ லக்ஷ்மீ: த்ரிலோகேச்வரீ
மாக்ஷீராப்தி ஸுதா விரிஞ்சி ஜநநீ வித்யா ஸரோஜாஸநா
ஸர்வாபீஷ்ட பலப்ரதேதி ஸததம் நாமாநி யே த்வாதச
ப்ராதஸ் ஶுத்த தராபடந்த் யபிமதான் ஸர்வான்லபந்தே ஶுபான்.

இப் பன்னிரண்டு நாமாக்களைக் காலையில் ஶுத்தனுக இருந்து ஜபித்தால் ஸர்வ க்ஷேமங்களையும் அடைவான். என்று பிருஹஸ்பதி கூறிய உத்தமமான லக்ஷ்மீ ஹ்ருதயத்தைத் துலா ஸ்நானம் செய்து பில்வ மரத்தடியில் ஜபம் செய்தால் நீ ஸர்வ அபீஷ்டங்களையும் பெறுவாய். ஸ்ரீ ரங்கநாதன் ஸன்னதியில் துலா காவேரீ ஸ்நாநம் செய்யவேண்டும். துலா காவேரி மஹிமையைக் கூறி முடியாது. துலா மாஸம் ஸமீபித்திருக்கிறது. நித்யம் துலா புராணம் ஶ்ரவணம் செய். நான் சொன்னவைகளைச் செய்வதுடன் வஸ்த்ரம் ஸுவர்ணம் தாம்ரபாத்ரம் வெள்ளி பாத்ரம் வெண்கல பாத்ரம் தாம்பூலம் தண்டுலம் தூபம் நெய்விளக்கு தேங்காய் பழம் முதலியவைகளைப் பக்தியுடன் பிராம்மணர்களுக்கு அளி. அன்னதானமும் செய். கல்யாணத்தைப்பெற பாவக்கடலைக் கடக்கவும் கருதினுல் துலா ஸ்நானம் செய் என தர்மருக்குத் தர்மத்தைக்கூறி கிருஷ்ணன் கிளம்பினுர். அவரை விட்டுப் பிரியமனமில்லாத பாண்டவர் திவ்ய வஸ்த்ர ஆபரணங்களால் அவரைப் பூஜித்து துலா மாஹாத்ம்யத்தைக் கூறும்படி வேண்டினர். அவர்களது விருப்பத்திற்கிசைந்து பக்த வத்ஸலனுன பகவான் மேகம் போல் கம்பீரமான த்வனியுடன் கூறினுர். **ஸ்ரீ கிருஷ்ணன்:** நதிகளில் உயர்ந்த காவேரீ ஸர்வ லோகத்தையும் பாவநமாகச் செய்பவள். அதன் மஹிமையைக் கூறுகிறேன் கேளுங்கள். பன்னிரண்டு ஆண்டு ஏழு கடல்களிலும் ஸ்நாநம் செய்தால் என்ன புண்யம் உண்டோ அது துலா காவேரி ஸ்நானத்தால் உண்டாகும். தெற்கு திக்கிற்கு ஹாரம் போலும் முக்திக்குப் படிக்கட்டுப்போலும் காவேரீ மனிதர்க்கு ஸாம்ராஜ்ய ஸுகத்தைத் தர தீக்ஷை செய்துக் கொண்டிருக்கிருள். ஸர்வாபீஷ்டத்தையும் அளித்து ஸர்வபாபங்களையும் போக்க தென் திக்கில் தோன்றினுள்.



ஸர்வ துக்கங்களையும் போக்குபவள். தாரித்ரயத்தை அகற்றி கலியில் ஸ்நாநம் செய்வோரது தோஷங்களை நீக்குவாள். அவள் பெயரைக் கூறினுலே ஸர்வ தோஷங்களையும் அகற்றுவாள். பிரும்மாத்ரியிலிருந்து புறப்பட்டவள். பிரும்மாவின் கன்யகை. பிரும்மலோகத்தை அளிப்பவள். பிரும்ம ஸ்வரூபிணீ! உலகைக் காக்க திவ்ய ஜலத்துடன் பெருகுகிருள். வேதாந்தத்தால் வர்ணிக்கப்படும் இவள் மஹிமையை யார் அறிவார்? மற்ற புண்ய தீர்த்தங்களும் நதிகளும் பிரும்ம ரூபிணியான காவேரியின் பதினுறில் ஒரு கலைக்குக்கூட ஈடாகாது. காவேரீ ஜலத்தால் பக்வமான சாகத்தை அளித்தால் கூட அது கயா ஶ்ராத்த பலனைத் தரும் என்பது நிச்சயம். என் வம்ஶத்தில் பிறந்த எவராவது காவேரியில் தில தர்ப்பணம் செய்யமாட்டார்களா? காவேரியில் துலா ஸ்நாநம் செய்து அவனும் மூன்று கடனிலிருந்து விடுபட்டு எங்களுக்கும் அக்ஷய்யமான பேரானந்தம் அளிப்பனு? என பித்ருக்கள் ஒருவரோடு ஒருவர் சேர்ந்து பிரார்த்திக்கின்றனர்.

கொடிய பாபிகளாயினும் துராசாரமுள்ளவர்களாயினும் பிராம்மணர் வேதங்கற்காதிருந்தாலும் அயோக்கியனுக இருந்தாலும் குரு ப்ராம்மணர் முதலியவர்களை

தூஷிப்பவர்களாக இருந்தாலும் ஏகாதசி யன்று காவேரீ ஸ்நாநம் செய்தால் ஸகல பாபங்களும் அகன்று யோகிகள் அடையக்கூடியதும் திரும்பி வராததுமான லோகத்தையடைவார்கள். எந்த இடமாயினும் துலாமாஸத்தில் அருணோதயத்தில் காவேரீ ஸ்நாநம் செய்து மஹிமையைக் கேட்டு ஸத்துக்களால் மதிக்கப்பட்ட பௌராணிகரை கந்தம் புஷ்பம் வஸ்த்ரம் முதலியவைகளால் பூஜித்தால் பாபிகளும் துராசாரமுள்ளவர்களும் பாஷண்டிகளும் நாஸ்திகரும் கபடமுள்ளவரும் பதிதரும் கூட எனது கடாக்ஷத்தால் பித்ருக்களுடன் கூட பவித்ரர்களாகி புத்ர பௌத்ராதிகள் கொண்டாட இம்மையில் ஸகல போக பாக்யங்களையும் அனுபவிப்பர். முடிவில் எனது ஸாயுஜ்யத்தைப் பெற்று மோக்ஷலக்ஷ்மியை அடைவார்கள். ஸந்தேஹமில்லை. நித்யம் துலாஸ்நாநம் செய்பவர் திரும்பிவராமல் ஸ்திரமாக இருக்கும் விஷ்ணுலோகத்தை அடைவர்.

ராஜன்! எப்படியாவது காவேரீ ஸ்நாநம் செய். நான் கூறிய தாநங்களைச் செய்து ஸகல ஐச்வர்யங்களையும் அடை. இங்ஙனம் அகஸ்த்யர் கூறிய துலா மஹிமையைக் கூறி, பார்த்த! நானிங்கு வந்து வெகு நாட்களாகி விட்டன. நான் வரவில்லையே! என உக்ரஸேநன் முதலியவர்கள் வருந்துவார்கள். என்னை ஸ்நேஹத்துடன் எவ்வெப்பொழுது நினைக்கிறீர்களோ அவ்வப்பொழுது வருகிறேன். உங்களுக்கு நல்லகாலம் உண்டாகப் போகிறது. ஜராஸந்தனது உபத்ரவத்தால் நாங்கள் மதுரையை விட்டு லோகத்தவரைப் போலல்லாமல் ஸமுத்ரத்தின் நடுவில் விலக்ஷணமாக துவாரகையில் வஸிக்கிறோம். பொருள் உள்ளவனையே நற்குலத்தில் பிறந்தவன்! பண்டிதன்! கற்றவன்! குணமறிந்தவன்! நன்றாகப் பேசுபவன்! அழகானவன்! என்பர். எல்லோரும் காஞ்சநத்தையே விரும்பி ஆச்ரயிக்கின்றனர். நீங்கள் தற்சமயம் ராஜ்யத்திலிருக்கிறீர்கள். தனிகர்கள். எப்போதும் மறக்காதீர்கள். எங்களை நினைத்துக் கொண்டு இருங்கள். என்று கூறி குந்தியை நமஸ்கரித்து உத்தரவு பெற்று திரௌபதியிடம் சொல்லிக் கொண்டு கிருஷ்ணன் கிளம்பினர்.

பாண்டவர் சதுரங்கஸேனைகளுடன் பின் தொடர்ந்தார்கள். ரதத்திலேறி வீதிக்குவந்தார் பகவான். வாத்யகோஷங்கள் பத்து திக்குகளிலும் முழங்கின. தர்ம



ராஜன் அவரைப் பின் தொடர்ந்தார். இந்த மஹோத்ஸவத்தைக் காண தேவர்களும் லோகபாலகர்களும் விமானத்திலேறி ஆகாயத்திலிருந்து புஷ்பமாரி பொழிந்தனர். தேவ துந்துபி முழங்க, அப்ஸரஸ்ஸுகள் ஆடினார்கள். கந்தர்வர் காநம் செய்தனர். மஹரிஷிகள் சிறந்த வேத ஸூக்தங்களால் துதித்தார்கள். இரண்டு யோஜனை தூரம் பாண்டவர்கள் பகவானைப் பின்தொடர்ந்தார்கள். பகவான் அவர்களைத் திரும்பிச் செல்லும்படிக் கூற பிரியமனமின்றி பாண்டவர் அழுது கண்ணீர் விட்டனர். ஸாமான்ய மனிதர்களைப் போல் நீங்களும் இப்படித் துக்கப்படலாமா? நாங்களும் நீங்களும் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருப்போம். பந்துக்கள் இப்படித்தான் விட்டுப் பிரியும்படி இருக்கும். இப்படி பகவானால் திருப்பப்பட்ட பாண்டவர், மிக்க வருத்தத்துடன் நகரத்திற்குத் திரும்பினர். பகவானும் பலராமனுடன் நன்றாக அலங்கரிக்கப் பட்ட தனது பட்டணத்திற்குத் திரும்பினர்.

**அகஸ்த்யர்:** அறுபத்தாறு கோடி புண்ய தீர்த்தங்கள் பதினான்கு உலகிலும் இருக்கின்றன. அவை அனைத்தும் விஷ்ணுவின் ஆணைப்படி துலாமாஸத்தில் காவேரியில் ஸ்நாநம் செய்ய வருகின்றன. ஆதலால் ராஜச்ரேஷ்டனே! (ஹரிச் சந்த்ர) நான் கூறியபடி அங்கு ஸ்நாநம் செய்து தீநம் செய். தாநத்தினால் தான் ஸ்வர்க்கம் கிட்டும், ஸுகம் உண்டாகும். ஸத்பாத்ரத்தில் தாநம் செய்யாதவன் இறந்தபின் நரகத்தில் நாய் மாம்ஸத்தை உண்பான். ஆதலால் ஒரு நாளைக்கூட வீணாக்காமல் ஸ்நாந தாநங்களைச் செய்து விரதம் பூர்த்தியாகும் போது அறுசுவையுடன் ஸஹஸ்ர பிராம்மண போஜநம் செய்து வை. காவேரீ மஹிமையைக் கூறுபவரையும், நன்கு பூஜித்து ஸன்மாநம் செய். பல்லக்கில் ஏற்றி வாத்யகோஷத்துடன் நன்கு பட்டணத்தை அலங்கரித்து கிராம பிரதக்ஷிணம் செய்து, அவர் வீட்டில் கொண்டு விடு. எல்லாவகையாலும் அவரைப் பூஜித்து உன் இஷ்டமானதை அடைவாய்.

**இருபத்திரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.**

## இருபத்து மூன்றும் அத்யாயம்-97 சுலோகங்கள்

இப்படி அகஸ்த்யர் கூறிய பாவனமான கதைகளைக் கேட்டு ஸந்தோஷமடைந்து மறுபடியும் **கேட்கிறான்.**

**அரிஸ்சந்த்ரன்:** ஓ பகவன்! யோகிஸ்ரேஷ்ட! மஹாமதே! கும்பஸம்பவரே! உமது பாதாரவிந்த ஸேவையால் க்ருத க்ருத்யனானேன். யோகிவர்ய! உமக்கு நமஸ்காரம். மும்மூர்த்தி ஸ்வரூபியான உமக்கு நமஸ்காரம். முனிஸ்ரேஷ்டரான உமக்கு நமஸ்காரம். தீனபந்துவான உமக்கு நமஸ்காரம். பக்திமுக்திகளைத் தரும் எல்லா புண்யங்களையும் தர்மங்களையும் கேட்டேன். காவேரியின் திவ்ய வைபவத்தைச் சிறப்பாகக் கேட்டேன். ஸநகாதிகளால் நமஸ்கரிக்கப் படும் பகவானான முகுந்தன் ஸத்யமாக எனக்குப் பிரஸன்னமானார். இல்லையேல் முக்தி தருவதும் யக்ஞத்தாலும் தவத்தாலும் பெறத்தக்கதுமான ஸத்ஸங்கம் எனக்கு எப்படிக் கிடைக்கும்? காவேரீ மஹிமையை இன்னும் கேட்க வேண்டுமென ஆசை உண்டாகிறது. என்னை மன்னிக்கவேண்டும்.

காவேரீ ஸஹ்ய மலையில் உண்டானவள். அவள் எப்படி லோபாமுத்ரையானாள்? உலகைப் பாவநமாக்கும் அவள் எப்போது தக்ஷிண கங்கையென பிரஸித்தமானாள்? ஸஹ்யாத்ரியில் எப்படி உண்டானாள்? எப்படி கங்கையை விட அதிகமானாள்? இவைகளையெல்லாம் விரிவாகக் கூறுங்கள். இங்ஙனம் அரசன் கேட்க அஷ்டமூர்த்தியை மநதில் நினைத்து புன்னகையுடன் அகஸ்த்யர் கூறினார். அரிஸ்சந்திர! நல்லது. உலகில் நீயே மிகச்சிறந்த அரசன்! தர்மத்தைக்கேட்பதில் மேன்மேலும் உனக்கு ஸ்ரத்தை இருக்கின்றதே. ராஜேந்த்ர! புண்யஸ்லோகரில் சிறந்தவன் நீ. உலகிற்கு அருள் புரியவே மேன் மேலும் தர்மத்தைக் கேட்கின்றாய்! ஸாதுக்களுக்கு ஸாதுக்கள்தான் தநம். ஸாதுக்களுக்கு ஸாதுதான் நண்பர். ஸாதுக்களுக்கு ஸாதுக்களே விரதம். ஆதலால் புண்யத்தை விருத்தி செய்யும் காவேரீ மஹிமையைக் கூறுகிறேன் கேள் என்று அரசனைக் கொண்டாடி அகஸ்த்யர் மேலும் கூறுகிறார்.

## காவேரியின் உத்பத்தி.

கிருஷ்ணன் த்வாரகைக்குச் சென்றபின் தர்மராஜன் இதே விஷயத்தைக் கூறும்படி தௌம்யரைக் கேட்டார். அவர் கூறியபடி அதைக் கூறுகிறேன். **தௌம்யர்:** ராஜேந்த்ர! கவேரன் என்றோர் ராஜரிஷி இருந்தார். அவர் மிகக் காந்தி உள்ளவர். யோகிகளில் சிறந்தவர். தெளிந்த மனம் உள்ளவர். ஸகல வித்யைகளிலும் கரைகண்டவர். ஜிதேந்த்ரியர். ஆஹாரத்தையும் ஜயித்தவர். பற்றற்றவர். பரிவாராதி க்ரஹமில்லாதவர். சிறிது காலம் கர்ம மார்க்கத்திலீடுபட்டு பிறகு ஸர்வ தர்மத்திலும் வைராக்யமுள்ளவர் ஆனார். பிறர் செய்ய முடியாத அரிய கர்மாக்களைச் செய்த அவர் மோக்ஷத்தில் ஆசை கொண்டு இமய மலையில் கடுமையாகத் தவம்புரிந்தார். ஆயிரம் தேவ வர்ஷங்கள் ஆனபின் ப்ரும்மா அவர் எதிரில் தோன்றினார். ராஜர்ஷே! வரமளிக்க வந்திருக்கிறேன் யான். வரத்தைக் கேளும் என்றார்.



அஞ்ஜலிபந்தம்செய்து அரசன் கூறினார். ப்ரும்மன்! தாங்கள் என் தவத்தால் ஸந்தோஷமடைந்தால், அதற்குப் பலனுமிருந்தால் உம்மிடம் மோக்ஷ வரத்தையே விரும்புகிறேன். மற்றவைகளால் பயனென்ன? என்றார். ப்ரும்மா. கவேர! நானும் மற்ற தேவர்களும் முக்தியளிக்க ஸமர்த்தர்களல்ல. பரபிரும்மமாய் உள்ள அச்யுதனே ஸித்தமான மோக்ஷத்தைத் தருபவர். அவரது உத்தரவுக்படி எனது கன்யகையான விஷ்ணுமாயை எனப் பெயர் உள்ள இவள் உனக்கும் புத்ரியாகப் பிறந்து மோக்ஷம் அளிப்பாள் என்று கூறி உலகத்தை மோஹிக்கும்படிச் செய்யும் விஷ்ணுமாயையை ஸ்மரித்தார். ஸர்வாபரண பூஷிதையாய் விஸாலாக்ஷியாயுள்ள மாயாதேவி அவர் அருகில் வந்தாள். தோஷமற்ற சின்மயமான அவளை தேவர் கந்தர்வர் அனைவரும் போற்றினர். ப்ரும்மா அவளைப் பார்த்து, பத்ரே! நீ இந்த யோகிக்குக் கன்யகையாகத் தோன்றி அவருக்கு முக்தியளி. முக்திக்கு ஸாதநமான, காவேரீநதியாகி ஸர்வ புண்ய தீர்த்த ரூபிணியாகவும் இருந்து உலகை ரக்ஷிக்கப் போகிறாய். ஓர் அம்ஸத்தால் லோபாமுத்ரை என்ற பெயருடன் யோகீந்த்ரரான மஹாத்மா அகஸ்த்யருக்குப் பத்நியாக இரு என்று கூறி ஹம்ஸாரூடராக மறைந்தார்.

விஷ்ணுமாயை கவேர ராஜனுக்கு அழகிய பெண்ணுகத் தோன்றினாள். தாமரைபோன்ற கண்ணுள்ள அக்கன்யகையை மனைவியுடன் கூட எடுத்துக்கொண்டு மோக்ஷம் அடைந்தவன்போல் பேரானந்தம் அடைந்தார். கவேரன் வீட்டில் இருந்து சிறிது காலம் க்ருஹஸ்தனுக்கு ஏற்ற கர்மாக்களைச் செய்தார். கர்ம மார்க்கம் கரை இல்லாதது எனக்கண்டு அறவே ஆசையை விட்டு

வைராக்யத்தில் ஈடுபட்டார். ஒரு ஸமயம் கனக வர்ணமான அக் கன்யகையைப் பார்த்து வத்ஸே! உனக்குப் பிதாவாகிய பாக்யத்தால் யான் முக்தனை ஆனேன். காவேரீ என்ற நதி வடிவமாகி ப்ரஸித்தி பெறுவாய். உன்னைத் தர்ஶித்ததாலேயே எனக்குச் சித்தஶுத்தி உண்டாயிற்று. ஆதலால் எல்லையில்லாததும் மோக்ஷத்திற்குத் தடையாயுமுள்ள கர்மா அனைத்தையும் விட்டு விடுபடுகிறேன். சித்தஶுத்தி வரும்வரை விவேகி நித்திய கர்மாக்களை விடக்கூடாது. அது வந்தபிறகு துறவிபோல் எங்கேனும் ஸஞ்சரிக்கவேண்டும் என்ருர்.

இதைக்கேட்டு, மஹாத்மா கவேரன் புத்ரியான பகவதீ விஷ்ணுமாயை பிதாவைப்பார்த்துக் கூறினள். ஓ மஹாபாக! நீர் கூறியது ஸத்யமே! எனது ஸன்னிதியாலேயே உமக்குச் சித்த ஶுத்தி உண்டானது. நிஶ்சயமாகக் கூறுகிறேன். முக்தி உமது கரத்திலிருக்கிறது. உமது புத்ரீ என உலகில் நானும் பாவனமான கீர்த்தி பெற்று நதியாக இருக்கிறேன். உலகில், தந்தையின் கீர்த்தியை விஸ்தரிப்பவர் வைகுண்டம் செல்வர். அவரது பித்ருக்களும் ப்ரும்மாவை அடைவர். இதைக் கேட்ட கவேரன் பரம ஸந்தோஷமடைந்து காவேரியை மிகக் கொண்டாடி நான் க்ருதார்த்தன் ஆனேன் என்று கிளம்பி ஸன்யாஸிபோல் நாடெல்லாம் சுற்றினர். எல்லோரிடமும் ஸமமாய் த்யாகியாய் ஸ்வர்ணத்தையும், கல், மண்ணையும் ஒன்ருக நினைத்தார். உள்ளும் புறமும் பகவானைப் பார்த்துக்கொண்டு மௌனியாய் வாயுபோல் குற்றமற்றவராக ஸஞ்சரித்தார். இன்ப துன்பங்களைச் சமமாகக் கருதி பொறுமையுடன் கையில் கிடைத்த பிக்ஷையைப் புஜித்தார். ப்ராம்மணர், பஶு, மிருகம் என்ற பேதம் இல்லாமல், மான, அவமானத்தையும் ஸமமாக எண்ணி எப்பொழுதும் பித்தனைப்போல் இருந்தார். பரமானந்த ஸ்வரூபியாய் சின்மயமாயுள்ள மஹாவிஷ்ணுவை த்யானம் செய்து தன்மயமானர். ஸச்சிதானந்த ரூபிணியான காவேரி சிறிது ஜலரூபிணியாகி ப்ரும்மா சொன்னபடியே லோபாமுத்ரை என்ற கன்யகையாகவும் ஆகி தனது புண்ய தீர்த்தத்தில் தானும் ஸ்நானம்செய்து மௌனியாகத் தவம் செய்தாள்.

மஹாவிஷ்ணு ப்ரத்யக்ஷமாகி வத்ஸே! உனது தவத்தால் ஸந்தோஷமடைந்தேன். உனது இஷ்டத்தை அளிக்க



வந்துள்ளேன். வேண்டிய வரத்தைக் கேள் என்ருர். விஷ்ணோ! உலகைப் பாவனமாகச்செய்ய நதி ரூபமாகச் செல்ல வேண்டுமென்று நிஶ்சயித்திருக்கிறேன்; அருள் புரியும்! நாஸ்திகர், நன்றிகெட்டவர், துராசாரமுள்ளவர் பேசத்தகாதவர் ஆகிய பாபிகளனைவரும் என் ஜலத்தில் ஸ்நானம் செய்தவுடன் பாபமகன்று உமது திருவடியை அடையவேண்டும். பக்தர்களிடம் உமக்கு அன்புள்ளது ஸத்யமானல் இந்த வரத்தைத் தாரும்.

**பகவான்:** உலகில் புண்யம் செய்தவர்க்கே இந்த வரம் மிக துர்லபமானது. இப்படிப்பட்ட பாபிகள் விஷயத்தில் நினைக்கக்கூட முடியாதது. ஆயினும் நீ கேட்டபடி ஆகட்டும். எனது பக்தி வீணுகாது முக்தியைத் தரும். எனது பக்தையான உனது இஷ்டத்தைப் பூர்த்தி செய்கிறேன். நினைத்த மாத்ரத்தில் பாபத்தைப் போக்கும் மஹா புண்யமான ஸஹ்யமலையில் திவ்யமான நெல்லி மரமாக யான் தோன்றுவேன். ப்ரும்மா விரஜா நதியின் புண்ய தீர்த்தத்தை ஶங்கத்திலேந்தி எனக்கு அபிஷேகம் செய்யப் போகிருர். அந்த தீர்த்தத்துடன் பூர்ண ப்ரவாகமுள்ளவளாகக் கிளம்பி தக்ஷிண கங்கை என்ற பெயருடன் தென் திக்குக்குச் செல்.

தென்னுட்டில் உள்ளவர் அனைவரும் உனது நீரைத் தர்சித்தவுடன் ஸ்வர்க்கம் செல்வார்கள். உலகில் அத்யந்தம் துர்லபமான கங்கையைவிடச் சிறந்த பெருமையை உனக்களிக்கிறேன். மஹா நதிகள் எல்லாம் உன்னைக் கொண்டாடும். உனக்கு ஸமம் ஒன்றுண்டா என்ற விசாரத்திற்கே இடமில்லை. புண்யத்தை விருத்தி செய்யக்கூடிய உனது உத்பத்தி ஸ்தானத்தில் தத்தாத்ரேய அவதாரம் செய்து வஸிக்கப்போகிறேன். எனது பாத ஸம்மந்தத்தால் அதி பவித்ரமாவாய், மற்ருேர் மஹா வரத்தையுமளிக்கிறேன். எனது பாதத்தில் உண்டானதால் கங்கை நதிகளில் மிகச் சிறந்தவள் ஆனள். உனது மடியிலும் (ஸ்ரீரங்கத்தில்) நானிருக்கப்போகிறேன். ஆதலால் கங்கையைவிட நீ சிறந்தவளாவாய். புண்ய தீர்த்தங்கள் எல்லாவற்றையும் விட நீ அதிகமாவாய். உனது தலையிலும், மடியிலும் நானிருக்கிறேன் அல்லவா? கங்கை முதலிய ஸர்வ புண்யதீர்த்தங்களிலும் நான்கு யுகம் ஸ்னனம் செய்வதால் உண்டாகும் புண்யம் ஸஹ்யமலையில் நெல்லி

மரத்தடியில் உனது ஜலத்தில் ஸ்நானத்தால் உண்டாகும் புண்யத்தில் பதினறில் ஒரு கலேக்கு ஈடாகாது.

நைமிசாரண்யத்தில் நான்கு யுகம் கடுந்தவம் செய்வதால் உண்டாகும் பலனை ஸஹ்யமலை நெல்லிமரத்தடியில் உனது ஜலத்தில் ஸ்நானம் செய்து பெறலாம்.

## துலா காவேரி மாஹாத்ம்யம்.

நைமிஶாரண்யத்தில் நான்கு யுகம் கடுந்தவம் புரிவோர் எந்த புண்யத்தை அடைவாரோ அது உனது ஸஹ்யாமலக தீர்த்த ஸ்நானம் ஒன்றினலேயே கிடைக்கும். ஓ கல்யாணீ! உனது தீர்த்தத்திற்கு ஸஹ்யாமலக தீர்த்தம், ஶங்கதீர்த்தம் என இரு பெயர்கள் உண்டாகும். எனது அம்சத்தாலுண்டான அகஸ்த்ய முனிவர் இங்கு தவம்புரியும் உனது தீர்த்தத்தை ஸ்தாலியில் எடுத்து ஸஹ்யமலையில் கொண்டு விடுவார். லோபாமுத்ரை என்ற பெயருடன் அவருக்குப் பத்நியாகவும் ஆவாய் என்று கூறி விஶ்வரூபியாய் உலக வடிவமாக உள்ள பகவான் மறைந்தார். விஷ்ணுமாயையும் பகவானையே நினைத்து மறுபடியும் அங்கிருந்து தவம்செய்தாள்.

## இல்லறச் சிறப்பு

இச்சமயத்தில் அகஸ்த்யர் ஸம்ஸாரத்தில் வெறுப்பு கொண்டு ப்ரும்மசாரியாக இருந்து முக்தி பெற கடுந் தவம்புரிந்தார். ஸர்வலோக பிதாமஹனை சதுர்முகன் அவர்முன்னே தோன்றினர். தேவர்ஷிகள் அஞ்ஜலிசெய்து அவரைத்துதித்தனர். ப்ரும்மா: ஓப்ரும்மன்! உலகம் நடுங்கும்படி ஏன் உக்ரமாகத் தவம்புரிகிறீர்? உமது செயலை யானறிவேன். நான் சொல்வதைக்கேளும். மோக்ஷம் பெற துரீயாஶ்ரமத்தில் உமக்கு விருப்பமிருக்கிறது. நித்ய கர்மாஸம்ஸாரத்தை விருத்திசெய்யும் என எண்ணுகிறீர். கர்மாவினலே முக்தி உண்டாகும். ஜனன மரணமும் ஒழியும். காம்ய கர்மாவை விட்டால் அது ஸன்யாஸம் போலாகும். ஸன்யாஸ ஆஶ்ரமம் அனுஷ்டிக்க சிரமம் ஆனது. சிறிது தவறினலும் பதிதனவான். கர்மாவைப் பிரும்மார்ப்பணமாகச் செய்தால் அதில் சிறிது குறை இருந்தாலும் முக்தி தரும். இல்லறத்தில் மாத்யான்ஹிக காலத்தில் களைத்து வரும் அதிதிக்கு காமனையின்றி அன்னம் அளித்தால் கங்காதி ஸர்வ தீர்த்த ஸ்னனமும்,



கோடிக்கணக்கான விரதமும் செய்வதால் உண்டாகும் பலன் இதற்கு ஈடாகாது.

இந்த்ரியங்களை இழுக்கும் விஷயங்களில் விரக்தனய் புத்ர களத்ராதிகளிடமும் ஆசையை விட்டு, மான அவமானங்களை ஸமமாகக் கருதி கர்மா செய்பவன் முக்தி பெறுவான். விரக்தனய் விஷ்ணு பக்தியோடு பஞ்ச மஹா யக்ஞம் செய்தால் ஸகலவுலகும் அவனைக்கண்டு அஞ்சும். லோகோபகாரியாய் ஸர்வ பூத தயாளுவாய் நிஷ்காம கர்மா செய்தால் அவனுக்கு கைமீது முக்தி இருக்கிறது. கேஶவார்ப்பணமாக ஆசையின்றி செய்யும் கர்மா நிஶ்சயமாக முக்தி தரும். இதில் அணுவளவும் ஸந்தேஹமில்லை. ஸன்யாஸி ஸ்வதர்மத்தைச் சிறிது கைவிட்டால்கூட பதிதனவான். ஸன்யாஸி பிரும்மசர்யத்தை அனுஷ்டிப்பதில் கஷ்டமதிகம். மநதினல் போகத்தைச் சிந்தித்தால்கூட பதிதனவான். போகங்களை அனுபவித்து வைராக்யமுள்ளவனை துறவி முயற்சி இன்றியே முக்தி பெறலாம். க்ருஹஸ்த தர்மமல்லது வாநப்ரஸ்த தர்மத்தைக் கைக்கொண்டு உனது ஸஞ்சாரத்தால் உலகைப் பாவனமாகச் செய். அதே ஸன்யாஸம் போலாகும். ஸத்கர்மாவைச் செய்து வைகுண்டம் செல் என்றார்.

அகஸ்த்யர்: ஓ ப்ரபோ? என்னை ஏன் நரகத்வாரமான ஸம்ஸாரத்தில் தூண்டுகிறீர்?

ப்ரும்மா: துஷ்ட மனைவியுடன் வாழ்வதே நரகத்வாரமாகும். முற்பிறவியில் செய்த பாப கர்மாவால்தான் துஷ்ட பத்நீ கிடைப்பாள். வ்யபிசாரியாகவோ பிரதிகூலமானவளாகவோ இருந்தால் அந்த மனைவியை விட்டு விலக வேண்டும். அதனல் பாபம் சேராது. ஸ்வர்க்கமே கிடைக்கும். பதியை நிந்திப்பவளும் ஸதா கோபிப்பவளும் பூர்வத்திலும் நிறைய பாபம் செய்தவள். இந்த பாபத்தாலும் நூறு பிறவி நாயாகப் பிறப்பாள்.

பிராம்மணோத்தம! நீர் தபஸ்ஸித்தி உள்ளவர். விசேஷமாக என்னருளால் நல்ல ஆசாரமுள்ளவளும், பதிவ்ருதையும் மந்தஹாஸமுள்ளவளுமான பத்நி கிடைப்பாள் உனக்கு. வத்ஸ! என் சொல்வேன்? உனது தவத்தாலும், பிர்மசர்யத்தாலும் மிக்க ஸந்தோஷமடைந்தேன். வைதிக கர்மா முக்தியைத் தரும். எனது பெண் காவேரீ என ப்ரஸித்தமானவள் இருக்கிருள். அவள் மிக்க அழகானவள். உலகிற்கு அருள்புரிய அவாகொண்டு தவம்

செய்கிருள். விதிப்படி அவளை மணந்து அவளிஷ்டத்தைப் பூர்த்திசெய். ஸர்வ லோகங்களுக்கும் உபத்ரவம் செய்கின்ற துஷ்டனை விந்த்ய மலையின் கர்வத்தை உனது தவத்தால் அடக்கு. உத்தமமான ஸஹ்யமலைக்குச் செல். ஒரு அம்சத்தால் காவேரீ என்ற நதியாக ப்ரவஹி. அங்கே லோபாமுத்ரை என்ற பெயருள்ள மற்ருேர் அம்சத்தை ஏற்று உலகத்தைக் காக்க மலயமெனும் குலாசலத்திற்குச் செல் என்று கூறி தேவ கணங்களுடன் பிரும்மா சென்ருர். முனிவரும் தவத்தால் இளைத்திருந்த தனது உடல் பெருத்திருப்பதைக் கண்டு ஆச்சர்யமடைந்தார். அங்கிருந்து கிளம்பி ஸூர்யனது ஸஞ்சாரத்தைத் தடுத்து மேலே வளர்ந்துசெல்லும் விந்த்யத்தின் அருகே சென்ருர். ஸமாதானமாகப் பேசி பூமியோடு பூமியாகச் செய்து; ஓ மலையே! நான் வரும்வரை இப்படியே இரு. ஸத்யம் தவருதே. நீ கீர்த்தியை விரும்புகிருய். அதிக ச்ரேயஸ்ஸை அடைவாய். இங்ஙனம் அதைக் கொண்டாடி காவேரியைக் காண அவா கொண்டார். காவேரியைத் தேடிக்கொண்டு வடக்கே சென்று ஹிமவானது அருகே தவம் புரியும் காவேரியைக் கண்டார். அழகு வாய்ந்த அவளைப் பார்த்து ஸந்தோஷமடைந்து கேட்டார். பத்ரே! காவேரீ! கல்யாணீ! நல்லதிருஷ்டியுடன் என்னைப்பார். கோமளமான உடலை இளமையில் ஏன் இப்படிக் கஷ்டப்படுத்துகிருய்? ஜகதம்பிகே! உனது மனதிலுள்ள எல்லாவற்றையும் அறிவேன். நல்ல அழகும் யௌவனமும் வாய்ந்த நீ ஏன் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருக்கின்ருய்? என்று அகஸ்த்யர் கூறியதைக் கேட்டு எதிரில் அவர் நிற்பதையும் கண்டாள். பரபரப்புடன் எழுந்து அவள் முனிவரை நல்வரவு கூறி பூஜித்தாள். அர்க்யம் பாத்யம் முதலியவைகளை அளித்தாள்.

**இருபத்துமூன்ரும் அத்யாயம் முற்றிற்று.**

## இருபத்துநான்காம் அத்யாயம்—60 சுலோகங்கள்.

**தௌம்யர்:** மந்தஹாஸத்துடன் அஞ்ஜலிபந்தம் செய்து, கருத்த கண்ணும், சிவந்த உதடும், கருத்து அடர்ந்த கூந்தலுமுள்ளவளான அந்த காவேரீ தேவியைப் பார்த்துக் கூறினர் ரிஷி.

**அகஸ்த்யர்:** ஓ தேவீ! பிரும்மாவின் கட்டளைப்படி யான் இங்கு வந்தேன். உனது இஷ்டத்தைப் பூர்த்தி



செய்கிறேன். நீயும் எனது கோரிக்கையை நிறைவேற்று என்ருர்.

**காவேரி:** முநிஸ்ரேஷ்டரே! நீர் கூறுவது ஸத்யமே. உமது சொல் அழகாக இருக்கிறது. தேவ! தாங்களும் எனது மனதிலுள்ள இஷ்டத்தைப் பூர்த்தி செய்வீர் என்று கூறினள்.

**தௌம்யர்:** இங்ஙனம் கூறி அவரிடம் ஒரு வரம் கேட்டாள். நான் லோக மோஹினியான விஷ்ணு மாயை. ப்ரும்மாவின் கன்யகை. லோபாமுத்ரா என்ற பெயர் உள்ளவள். லோகாநுக்ரஹத்திற்காக காவேரீ என்னும் நதியாகித் தென்திசைக்குச் செல்வேன். பதிநான்கு லோகங்களிலும் உள்ள புண்யதீர்த்தங்கள் நதீ ரூபமாக என்னுடன் வரட்டும்.

என் நீரில் ஸ்னனம் செய்பவர் ஸர்வ தீர்த்தங்களாலும், யக்ஞங்களாலும், வ்ரதங்களாலும் உண்டாகும் பயனைப் பெறட்டும். இதில் ஸ்நானம் செய்தமாத்ரத்தில் ஸகல பாபங்களுமகன்று தென்தேசத்தவரனைவரும் வேறு ப்ரயத்னமின்றியே சுத்தர்களாகவேண்டும். என் கரையிலுள்ள பூமி ஸத்யம் நிறைந்து செழிப்பாக இருக்கவேண்டும். அங்கு எல்லோரும் தநதான்யமுள்ளவர்களாகவும் ஏழ்மை இல்லாதவர்களாகவும் வஸிக்கட்டும். என்னருகே ஒருமுறை ச்ராத்தம் செய்தால் பித்ருக்கள் அக்ஷய்யமான த்ருப்தியடைந்து வைகுண்டம் செல்லட்டும். ஒரு முறை த்யானம் செய்தாலும், எனது ஜலத்தை அருந்தினுலும் காவேரீ எனக் கூறினுலும், தர்சித்தாலும் பாபிகள்கூட பாபமகன்று ஸ்வர்க்கம் செல்லட்டும். இங்ஙனம் என் இஷ்டத்தை அளித்தால் லோபாமுத்ரை என்றபெயருடன் உம்மை மணக்கிறேன். ஓரம்ஸத்தினல் காவேரிநதியாகப் பெருகுகிறேன் என்ருள்.

**அகஸ்த்யர்:** பத்ரே! உனதிஷ்டமெல்லாம் பூர்த்தியாகட்டும். அதில் ஸந்தேஹமில்லை. உன்னைப்பற்றி நீ கூறினபடி முன்னம் ப்ரும்மா எனக்குக் கூறினர். மஹேஸ்வரீ! எனது ஸ்தாலியில் கங்கை, அதைச்சார்ந்த உபநதிகள் ஆகிய எல்லா தீர்த்தங்களும் இருக்கின்றன. ஓரம்சத்தால் காவேரி நதியாக நீ இதில் பிரவேசி. பிரும்மகிரி செல்லும்வரை இந்த ஸ்தாலியிலிரு. புண்யமான பிரும்மகிரிக்கு ஸஹ்யகிரி என்றும் ஒரு பெயர் உண்டு. அது உனக்குத் தகுந்த இடம். அங்கிருந்து

காவேரியாகச் செல். தத்தாத்ரேய ரூபத்துடன் பகவான் அங்கு யோகியாக வஸிக்கிருர். அவரது பாததூளியாலும் பாவனமாகி பாபிகளையெல்லாம் பவித்ரர்களாகச் செய். ஸர்வலோக பவித்ரையாவாய். இந்த வரம் முன்னம் அச்யுதனல் உனக்கு அளிக்கப்பட்டதல்லவா? எனது ஸம்மந்தத்தாலும் உனது பெருமை மிக அதிகமாகும். உன்னிடம் ஸந்தோஷமடைந்த நான் மற்ருேர் வரம் தருகிறேன். ஏற்கனவே நீ பெற்ற வரங்களை யான் திரும்பவும் கூறுவது உசிதமல்ல.

ஏழு கடல்களிலும் பன்னிரண்டாண்டு ஸ்நானம்செய்வதால் எவ்வளவு புண்யமுண்டாகுமோ அது உன்னிடம் ஏகாதசியில் ஸ்நானம் செய்த மாத்ரத்தினல் உண்டாகட்டும் என்று முனிவர் கூறியதைக் கேட்டவுடன் ஸந்தோஷத்தால் அவள் உடல் பெருத்தது. அழகான சரீரமுள்ள அவள் புன்னகை புரிந்தாள். மாலை, பாதஸரம், கேயூரம், கிரீடம் முதலிய அலங்காரத்தைச் செய்துகொண்டாள். கோவைப்பழம் போன்ற உதடும் விசாலமான கண்களும் பழுத்த பில்வப்பழம் போன்ற ஸ்தநமும் உள்ள அவள் இருபட்டுகளையணிந்தாள். ஸ்வர்ண தாடங்கம் தரித்தாள். ஒட்யாணமணிந்தாள். மாணிக்கம், ரத்னம் முதலியவை பதித்த மோதிரங்களைத் தரித்தாள். முன் கூறியபடி நதியுமாகி ஸ்தாலியில் பிரவேசித்தாள். மன்மதனே மோஹிக்கத்தக்க அழகான வேஷத்துடன் அகஸ்த்யரது முன்னே நின்ருள். அவளைப் பார்த்து முனிவர் உடல் பூரித்தது. விதிப்படி விவாஹம் நடைபெற பிரும்மாவை ஸ்மரித்தார். தேவரிஷிக் கூட்டத்துடன் ப்ரும்மா ஹம்ஸவாஹனத்தில் ஏறி ஸரஸ்வதியுடன் அங்கு தோன்றினர். அப்படியே கருட வாஹனத்தில் மஹாவிஷ்ணு மஹாலக்ஷ்மியுடனும், மஹேச்வரியுடன் மஹேச்வரன் வ்ருஷபவாஹனத்திலும் அமர்ந்து வந்தார்கள். உலக க்ஷேமத்திற்காக அங்கு விசித்ரமான தேவஸமாஜம் கூடிற்று.

அகஸ்த்யர் மும்மூர்த்திகளது திருவடிகளிலும் விழுந்து நமஸ்கரித்தார். அனைவரும் அவரை அணைத்து உச்சிமுகர்ந்து ஆசீர்வதித்தனர். லோக மாதாவான லோபாமுத்ரையும் லக்ஷ்மீ, பார்வதீ, ஸரஸ்வதீ ஆகியவர்களை நமஸ்கரித்தாள். அவர்களும் இவளைத் தழுவி உச்சிமுகர்ந்து பத்ரே! நீ நல்ல பதியுடன் சேர்வாய் என ஆசீர்வதித்தனர்.



ஜகன்மாதாவும் தனது பெண்ணுமான லோபாமுத்ரையைப் பார்வதி திவ்யமான ஆபரணங்களாலும், ஆடைகளாலும், சந்தன, குங்குமங்களாலும் அலங்கரித்து முனிவாருகே அழைத்துவந்தாள். பிருஹஸ்பதி, பிரும்மா விஷ்ணு ருத்ரர், ஸப்தரிஷிகள், மற்ற தபஸ்விகள் ஆகியவர்களின் முன்னிலையில் க்ருஹ்யஸூத்ரம் கூறியபடி பிரும்மா அகஸ்த்யருக்கும் லோபாமுத்ரைக்கும் விவாஹம் செய்வித்தார். விஷ்ணு சொற்படி பிரும்மா முனிஸ்ரேஷ்டரான அகஸ்த்யருக்குத் தன் கன்யகையை தாரை வார்த்து தானம் செய்தார். ப்ராம்மணர்களுக்கு யதேஷ்டமாக தனமளித்தார். அகஸ்த்யர் பத்னியுடன் முனீந்த்ரர்களாலலங்கரிக்கப்பட்ட ஸபையை ப்ரதக்ஷிணம் செய்தார். அச்யுதன் எதிரில் பிருகு முதலிய முனிவர்கள் அமோகமான சிறந்த ஆசீர்வாதம் செய்தனர். ஆகாயத்தில் மங்கள வாத்யம் முழங்கிற்று. கந்தர்வர் கானம் செய்தனர். நர்த்தன கலையில் நிபுணர்களான அப்ஸரஸ்ஸுகள் ஸந்தோஷத்துடன் ஆடினர். தேவர்கள் மந்தார மலர்களை மழைபோல் வர்ஷித்தனர். பத்நியுடன் முனிவர் ஸபையை நமஸ்கரித்து ஸப்யர்களால் கொண்டாடப்பட்டார். ஹிமாலயத்தில் பார்வதியுடன் பரமசிவன் அமர்ந்திருந்தது போல் வேதியிலமர்ந்து விளங்கினர்.

முனீந்த்ரர் ரிஷிக்கூட்டத்தினிடையே எழுந்து சிவனது பாதாரவிந்தத்தை நமஸ்கரித்தார். ஈச்வரன் அவரை ஆலிங்கனம் செய்து தக்கபடி ஆசீர்வாதம் செய்தார். பிறகு லக்ஷ்மீ நாராயணனுக்கு நமஸ்காரம் செய்து அவரது திருவடிகளை அபிஷேகம் செய்து அந்த அதி பவித்ரமான தீர்த்தத்தைத் தானுமருந்தி ஸபையிலுள்ள அனைவரையும் அருந்தச் செய்தார். யோகீச்வரரான அகஸ்த்யர் தனது ஸ்தாலியை உலக பவித்ரமான அந்த தீர்த்தத்தால் நிரப்பினர். யோகிகளையும் மோஹிக்கும்படிச் செய்யும் லோபாமுத்ரை மந்தஹாஸத்துடன் லக்ஷ்மி துர்க்கா ஸரஸ்வதிகளின் பாதாரவிந்தங்களை நமஸ்காரம் செய்தாள்.

## ஸரஸ்வதீ கூறும் ஸதீ தர்மம்

ஸர்வலோகசுந்தரியும் முவ்வுலகிலும் மிக்க காந்தியுடன் கூடியவளும் தன்னை நமஸ்கரிப்பவளுமான லோபா முத்ரையை ஸரஸ்வதீ தன் மடிமீது வைத்து சில உபதேசங்களைச் செய்தாள். பத்ரே! நீ உலகிற்கெல்

லாம் மாதா! பதிவ்ரதைகளுக்குள் மிக்க உயர்ந்தவளாக இரு. பதி ஒரு ஸமயம் உன்னைக் கோபித்தாலும் கடுமையாக பேசினலும் பதில் கூருமல் சாந்தமாக இரு. துஷ்ட ஸ்திரீகளின் அருகே செல்லாதே. எப்போதும் ஸத்யத்தையே பேசு. தெரியாததைக்கூருதே. எப்போதும் யாரிடமும் மெதுவாகப் பேசு. விஷ்ணுகதையைக் கேள். மங்களமான விஷ்ணு திருவடிகளை ஸதா வேண்டிக்கொள். மங்களமான சொற்களையே கூறு. பதியையே ஆபரணமாகக் கொள். வீட்டிற்கு வேண்டிய பொருள்களை காலத்தில் ஸாமர்த்திய மாகச் சேர்த்து வை. இஷ்டத்தை அளிக்கும் அச்யுதாநந்த கோவிந்த என்ற மூன்று நாமாக்களை ஸதா கூறு. பதியினிடமே தர்மத்தைக்கேள். பதியையே ஸதா நினை. பதி பாதாரவிந்தத்தைப் பக்தியோடு பஜி. ஏதேனும் கார்யவசமாக பதி வெளியூர் சென்ருல் ஔபாஸனதி அக்நியை நன்கு ரக்ஷி. தவருமல் அதிதி பூஜை செய். அச்சமின்றி வெளியில் செல்லாதே. விஷ்ணு கைங்கர்யத்தில் ஊக்கத்துடன் இரு. பதி தூங்கிய பின் தூங்கு. காலையில் அவர் எழுந்திருப்பதற்குள் விழித்துக்கொள். பதியின் பந்துக்களை ரக்ஷி. பெற்ருேரையோ உனது பந்துக்களையோ ஸதா நினைத்துக் கொண்டிராதே. இம்மாதிரி பதிக்குப் பிரியமாக நல்ல செயலுடன் சுறு சுறுப்பாக சுசியாக இருக்க வேண்டும் பத்நீ. ஸந்தோஷமாய் பக்தியுடன் பதியிடம் ஸகல போக பாக்யங்களையும் அனுபவித்து ஸ்வர்க்கம் செல்வாய்.

துஷ்ட ஸ்த்ரீகள் துஷ்ட ஸங்கமுள்ளவளாய் துஷ்ட பார்வையுடன் தர்ம சிந்தையின்றி உள்ளவள், உரக்கப் பேசுபவள் தன் வயிற்றை நிறப்புபவள் பதியை த்வேஷிப்பவள் ஆகியவர்கள் நரகமே வீடாகக் கொள்வார்கள். இங்ஙனம் பார்வதி கூறக் கேட்டு லோக மாதாவான லோபாமுத்ரை, அம்மா! நீ சொல்கிற தர்மங்களை நன்ருக அனுஷ்டிக்கிறேன். இவைகளை எல்லாம் நான் நன்கறிந்தவளே! தாங்களும் மறுபடி சொன்னதால் இன்னும் சிறப்பாக அனுஷ்டிக்கிறேன்.

நான் பல பிறவிகளில் தேடிய புண்யத்தால் எனக்கேற்ற பதி கிடைத்தார். இதனுல் எனக்கு ஸ்வர்க்கம் முதலிய ஸகல ஶ்ரேயஸ்ஸும் கிடைக்கும் என்ருள். **தௌம்யர்:** பிறகு விஷயப் பற்றற்றவரான அகஸ்த்ய



முநிவர் பிரும்மாவை வணங்கி விபோ! உமது உத்தரவின்படி கிருஹஸ்தனுனேன். தாண்ட முடியாத பிறவிக் கடலைக் கடக்கும் வகையாது? கூறும் என்ருர். இதைக் கேட்டு ஆஸ்சர்யமடைந்த பிரும்மா விஷ்ணுவின் முகத்தைப் பார்த்துக் கொண்டு அவர் தூண்ட புன்னகையுடன் கூறினர்: முநிவரே! நீர் இளமையிலேயே விரக்தர்! புண்யஶாலீ. ஸகல தர்மங்களும் உமது கரத்திலே இருகின்றனவே என்று கூறி முக்தி பெறுவதற்கு உபாயமாக ஸ்ரீராம மந்திரத்தை உபதேசித்தார். ராம பக்தரான அகஸ்த்யருக்கு ஸ்ரீ ராம யந்த்ரம் அதன் ஸ்வரூபம் ஷடக்ஷர ராம மந்த்ர ஜபவிதி பலா அதி பலா முதலியவைகளை ராமனே கூறுவதுபோல் எடுத்துரைத்தார்.

பரம ஸந்தோஷத்துடன் மந்தஹாஸமாக நமஸ்கரிக்கும் லோபா முத்ரையைப் பார்த்துக் கூறினர். காவேரீ உனது ஜலத்தில் எங்கே ஸ்நானம் செய்தாலும் உன் தீரத்தில் வஸித்தாலும் எனது கடாக்ஷத்தால் அவர்களுக்கு லக்ஷ்மீ விருத்தியாகட்டும் என்ருர். உலக வடிவனை பகவான் தனது மாயை தென் திசையில் நதீ வடிவமாகச் செல்ல கிளம்புவதைக்கண்டு கூறினர். மூன்றுநாள் கங்கா தீரத்தில் வஸித்தால் யமுனு தீரத்தில் ஐந்து நாள் வஸித்தால் ஸகல பாபங்களும் அகலும். காவேரீ ஸ்நானம் செய்த அந்த க்ஷணத்திலேயே சாகும் வரை உண்டாகும் பாபங்களையும் அகற்றுவாள் என்ருர் பரமசிவன். தன் திருவடியை வணங்கும்போது காவேரீ, நீ எங்கு தோன்றுகிருயோ அது முதல் ஸமுத்ர ஸங்கமம் ஆகும் வரை உனது தீரத்தில் ஸமஸ்த ரிஷீந்த்ரர்களுடன் நான் வஸிக்கிறேன். அந்த இடமெல்லாம் புண்ய க்ஷேத்ரமாகும். அங்கு வஸிப்பவர்களுடைய ஸகல இஷ்டத்தையும் நீ பூர்த்தி செய்வாய். இங்ஙனம் உலக க்ஷேமத்திற்காக காவேரீ தேவிக்கு மும்மூர்த்திகளும் வரம் தந்தனர். முனிவரிடம் விடைபெற்று பத்நிகளுடன் அவரவர் தமது ஸ்தானத்திற்குச் சென்றனர்.

**இருபத்தி நான்காம் அத்யாயம் முற்றிற்று.**

## இருபத்தைந்தாம் அத்யாயம்-92 சுலோகங்கள்.

**தௌம்யர்:** பிறகு அகஸ்த்யர் இமயமலைச் சாரலிலிருந்து பத்நியுடன் புறப்பட அங்கு மோக்ஷத்தை நாடி நிற்கும் ரிஷிகள் காவேரீ கிளம்புவதால் மிக்க வருத்தங்

கொண்டு அவளைத் தழுவிக் கூறினர்கள். தாயே! கல்யாணி! உனது கல்யாண காலத்தில் ஸம்ஸாரத்தில் பயந்த நாங்கள் பகவானை மோக்ஷமளிக்கும்படி வேண்டினோம். கருணையுடன் அவர் எங்களை நோக்கி "காவேரீ எங்கெங்குச் செல்கிருளோ அவ்விடமெல்லாம் முக்தி தரும் க்ஷேத்ரமாம். எனது பதத்தையே பிரார்த்தித்துக் கொண்டு அங்கே வாஸம் செய்யுங்கள் என்ருர். ஆதலால் உன்னை விட்டு விட்டு இங்கு தவம் செய்வதால் யாது பயன்? நாங்களோ ஏற்கெனவே விரக்தி உள்ளவர் என்று கூறி கண்ணீர் விட்டனர். அவர்களைப் பார்த்து பதியின் எதிரில் காவேரீ கூறினள். ரிஷிகளே! நீங்கள் கூறியப்படியே ஆகட்டும். அகஸ்த்ய பகவான் என்னை ஸஹ்ய கிரியில் கொண்டு சேர்ப்பார். நான் அங்கிருந்து தென் திக்கிற்கு பிரவாக ரூபமாய் புறப்படுவேன். ஸர்வக்ஞர்களான தாங்கள் என்னிடம் ஸ்நேஹங்கொண்டு அங்கு வந்து வஸியுங்கள். ஸ்நாந பாநங்களால் ஸம்ஸாரத்திலிருந்து உங்களை கரையேற்றி வைகுண்டம் அடைவிக்கிறேன். அதில் ஸந்தேஹமில்லை. எனது தீரத்தில் உள்ள ஜடமான வஸ்துக்கள் கூட துர்லபமான முக்தியைப் பெறும். வேத மறிந்தவர் பற்றிக் கூறவேண்டுமா? உலக வடிவனை பகவான் ஸ்ரீ விஷ்ணுவின் மாயை நான். பிரும்மாவுக்குப் பெண்ணுகப் பிறந்தேன். அவரது உத்தரவுப் படி கவேரன் புத்திரியாகவும் ஆனேன். இப்படி லோக க்ஷேமத்திற்காக முயற்சித்து என்னைத் தென் திக்கில் நதியாகப் பிரவஹிக்கும்படி பிரும்மா கூறினர். லோபா முத்ரை என்ற வடிவுடன் அகஸ்த்யர் பத்நீயானேன். காவேரீ நதி வடிவத்துடன் மலைமீதுச் செல்ல முடியாது. ஆதலால் முனிவர் பிரும்ம மலையில் என்னைக் கொண்டு விடுவர். அம்மலைச்சாரலிலிருந்து நதியாகி தென் திசை செல்கிறேன். ஆங்குள்ளவர்களை ஸ்நாந தர்ம்ம பாநாதிகளால் பாவனமாகச் செய்யப்போகிறேன்.

ஸ்ரீ ரங்கராஜனுடைய பாதார விந்தத்தின் வழியாக ஸமுத்ரத்தை அடைவேன். ஆதலால் அங்குவந்து நீங்கள் வஸியுங்கள். தாண்ட முடியாத பிறவிக் கடலிலிருந்து உங்களைக் கரை ஏற்றுகிறேன். ஏகாதசியில் வ்யதீபாதத்தில் எனது ஜலத்தில் ஸ்நாநம் செய்வதினுலேயே மனிதர்களின் மூன்று கடன்களெனும் சங்கிலியை அகற்றுகிறேன். அஞ்ச வேண்டாம். பிராம்மணோத்தமர்களே! என்னிடம் வாருங்கள். ஸ்நாநம் செய்தாலேயே



போதும். வைகுண்டத்திற்கு அனுப்புகிறேன். மஹா பாபிகள் கூட ஸ்நாநம் செய்தால் போதும். ஸ்வர்க்கம் செல்வார்கள். ஶ்ரத்தையுடன் எனது பெருமையையும் கீர்த்தியையும் கேட்டு என் தீரத்தில் வஸிப்பவரைப் பற்றிக் கூற வேண்டுமா? சிரத்தை உள்ளவர்களுக்கு வேறு தீர்த்தமோ வேதமோ தவமோ யக்ஞமோ எதற்கு?

**தௌம்யர்:** இப்படிக் கூறி முனிவர்களை ஸமாதனப் படுத்தினள். பதிக்குத் தக்கப் பணிவிடைச் செய்து வந்தாள். அகஸ்த்யரும் பிரும்ம புத்ரியை மணந்து விந்த்ய மலைக்குச் செல்ல தென் திசையை நாடிப் புறப்பட்டார். ஸூர்ய ஸஞ்சாரத்தைத் தடுத்து மேலே வளர்ந்துச் செல்லும் விந்த்யமலையருகே வந்து, ஓ பர்வதோத்தம! எனக்கு உன்மீது ஏறிச்செல்ல சக்தியில்லை. ஆதலால் நீ பூமிக்குள் அமுங்கி எனக்கு வழி அளி. என்று ஸமாதானமாகப் பேசினர். அது அப்படியே வழி விட்டது. நான் திரும்பி வரும் வரை நீ இப்படியே இரு. உனக்கு க்ஷேமம் வேண்டுமானல் ஸத்யந்தவருதே என்று விந்த்யமலையைக் கொண்டாடி கையாலதைப் பிடித்துக் கொண்டு பிரும்மா கூறியதை நினைத்து பிரும்மகிரிக்குச் சென்ருர். பிரும்மா படைத்தளித்த ஸ்தாலியை வைத்து காவேரீ தேவியைப் பார்த்து இதுதான் பிரும்மகிரி எனும் பருவத ஶ்ரேஷ்டன்! அழகான இதே உனது உத்பத்திக்கு காரணமாகுமென பிரும்மா கூறினர் அல்லவா? பத்ரே சிறிது காலம் காத்திரு என்ருர். ஸர்வ புண்ய தீர்த்தமயமான ஸ்தாலியை பிரும்மகிரியில் பிரதிஷ்டை செய்து சிஷ்யர்களைப் பார்த்துக் கூறினர். குழந்தைகளே! இந்த புண்யகாவேரியை ஜாக்ரதையாக ரக்ஷியுங்கள். ஸ்நாநம் செய்து விட்டு விரைவில் வருகிறேன் என்று கூறி ஸ்வர்ணமுகி தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்யச் சென்ருர்.

அச்சமயம் ஸ்தாலியிலுள்ள காவேரி தான் வெளிக் கிளம்ப எண்ணினள். முனிவர் எப்போது நம்மை அனுமதிப்பார்? எப்போது யான் கிளம்புவது? எத்தினை நாளானலும் முனிவர் நான் புறப்பட ஸம்மதிக்க மாட்டார். பிரும்மகிரியிலிருந்து நீ நதியாகச் செல்லலாம் என முன்னே கூறினர். அந்த மலைக்கு வந்த பிறகு இப்போதுகூட யான் கிளம்பிச் செல்ல அவர் விரும்ப வில்லை. அவர் பிரதிக்ஞை செய்த ஸமயம் வந்து விட்டது.

என் மீது தோஷமில்லை. இங்ஙனம் ஒரு முகூர்த்தகாலம்
யோசித்துக் கிளம்பிவிடுவது என்று தீர்மானித்தாள். இத
னிடையில் பிரும்மா ஹம்ஸத்திலேறி தேவ கணங்களு
டன் கூட உலக க்ஷேமத்திற்காக ஆங்காங்கு ஸஞ்ச
ரித்து தென் திக்கிற்கு வந்தார். கோடி தீர்த்தங்களுடன்
பிரும்ம கிரிக்கு வந்தார். அது பலவிருக்ஷங்களால் அலங்
கரிக்கப்பட்டு பல மலை அருவிகள் பெருக எண்ணிறந்த
மிருகங்கள் நடமாட மிக ஆஶ்சர்யகரமாயிருந்தது. பார்த்
தவுடன் பாபத்தை அகற்றி பாவனமாக்குவதும் மனஸ்
ஶுத்தியை அளிப்பதும் விஷ்ணுலோகமோ என எண்ணத்
தக்கதுமான அந்த மலையில் இறங்கி கநகஜாபி என்ற
புண்ய ஜலத்தில் நீராடினர். ஷடக்ஷர மந்திரத்தை ஜபித்
தார். திவ்ய கந்தம் கமழ காற்று வீசிற்று. அதை
முகர்ந்து நாலுபுறமும் பார்த்தார் பிரும்மா. அருகில் அத்
புதமான நெல்லிமரம் ஒன்று தோன்றக் கண்டார். கனி
களும் இலைகளும் மனோஹரமாய் இருந்தன. கண்ட
மாத்ரத்தில் களைப்பை நீக்கவல்லது அது. தேங்காய்
கொலை கொலையாக தொங்கும் தேஜோமயமான அந்த
மலையிலே திவ்யமான ஆமலகமரத்தைக்கண்டு களித்தார்.

பறபறப்பும் ஆஶ்சர்யமும் உள்ளவராய் எழுந்து அத
னருகே சென்றார். சிறிது நேரம் த்யானம் செய்ய
ஆரம்பித்தார். உடனே ஆமலக விருக்ஷம் மறைந்தது.
பேராஶ்சர்ய மடைந்து இது என்ன ? என்று ஹ்ருதய கம
லத்தில் விஷ்ணுவை த்யானம் செய்தார். மேலே சங்கசக்ர
கதாபாணியாய் கிரீட குண்டலகேயூர மணிந்து மார்
பில் வனமாலை விளங்க கீழே சங்க சக்ர அடயாள
முள்ள பாதங்களுடன் அந்த நெல்லி மரத்தைக் கண்டார்.
மஹா தேஜஸ்வியான சதுர் முகன், விநயமாக வணங்கி
தண்டம்போல் வீழ்ந்து நமஸ்கரித்தார். எழுந்து பத்தாஞ்
ஜலிபுடனுகி விஷ்ணுமயமான மரத்தைத் துதித்தார்.
ஆகாயத்திலிருந்து ஒரு ஶப்தம் தோன்றிற்று.

பிரும்மன் ! அந்த விருக்ஷம் ஸாக்ஷாத் அதோக்ஷ
ஜனே ! உம்மைப்போல் பலகோடி பக்தர்கள் அதை
ஆராதித்து ஹரியை அடைந்தார்கள். நீயும் பிரும்ம
பதம் ஸித்திப்பதற்காக அந்த விருக்ஷரூபியான
பகவானைப் பூஜைசெய். என்றுகூறி விஷ்ணுவின்வாக்கு
ஓய்ந்தது. பிரும்மாவும் உடனே அதை நமஸ்கரித்தார்.
ஆகாஶவாணி கூறியபடி விருக்ஷமாக உள்ள பகவானது



வைபவத்தைக் கண்டு கமலாஸநன் களித்தார். புள
காங்கிதராக ஆனர். உடனே திவ்ய புஷ்பங்களையும்
துளஸியையும் வாஸனை நிறைந்த மாலைகளையும் சந்தநத்
தையும் கொண்டு வந்தார்.

தனது ஸ்தாலியிலுள்ள விரஜாநதி தீர்த்தத்தால்
காயத்ரீ வடிவமான ஶங்கத்தை நிரப்பினர். கந்த புஷ்பங்
களாலர்ச்சித்தார். பகவானை நினைத்து அந்த ஶங்க தீர்த்
தத்தால் விருக்ஷத்தைச்சுற்றி அதனல் பூஜாத்ரவ்யங்களை
யும் தன்னையும் ப்ரோக்ஷித்துக் கொண்டார். ஆமலக
ரூபனுன அச்யுதனது பாதாரவிந்தத்தைத் திவ்ய அலங்
காரத்தாலும் மாலையாலும் திவ்யமான சிறந்த ஆபரணங்
களாலும் கோமளமான துளஸீ தளங்களாலும் மல்லி
சம்பகம் முதலிய புஷ்பங்களாலும் அர்ச்சித்தார்.

பல வகையான இனிய கனிகளை நிவேதநம் செய்
தார். பரமனை நான்கு முறை ப்ரதக்ஷிணம் செய்து
பலமுறை நமஸ்கரித்து வேத ஸ்துதிகளாலும் புராண
ஸ்தோத்ரங்களாலும் துதித்தார். ஆநந்தக் கண்ணீர்
பெருக பகவானது பாதார விந்தத்தை த்யானம் செய்
தார். மறுபடியும் ஓர் ஆகாஶவாணி கூறிற்று. நதீ
ரூபமாகக் கிளம்ப எண்ணும் காவேரியைப் பார்த்துக்
கூறியது அது. "ஓ காவேரீ ! இதைக்கேள்" உனது
இஷ்டம் பூர்த்தியாயிற்று. நீ கடலை அடைய நல்ல நாள்
இது. நீ தக்ஷிண கங்கை என்பது ஸித்தித்தது. ஶரத்
ருதுவும் பரம பாவநமான துலா விஷுவும் அருகே வந்து
ளது. எல்லா ருதுக்களிலும் சரத்ருதுவே முக்தி
அளிக்கவல்லது. இச்சமயம் செய்யும் ஸ்வல்பமான
தர்மம் கூட ஆலம் விதைபோல் விருத்தியாகும். உனது
தவத்தின் பரிபாகத்தால் துலா ஸங்க்ராந்தி தோன்றி
யிருக்கிறது. புண்ய ராஶியான இந்த மலையிலே பக
வான் ஆமலகமாகத் தோன்ற பிரும்மா விரஜா தீர்த்தத்
தால் அதன் பாதத்தை அபிஷேகம் செய்தார். காயத்ரீ
ரூபமான ஶங்கம் ஸர்வ தீர்த்தமயமானது. அதனுல்
அபிஷேகம் செய்த தீர்த்தம் ஸகல பாபங்களைப் போக்
கும் ஸர்வலோக பாவனமானது. ஸகல யக்ஞ பலனைத்
தரும். ஸர்வ தீர்த்த பலனையும் அளிக்கும். ஸாக்ஷாத்
மோக்ஷத்தையும், ஸர்வ தர்மங்களாலும் உண்டாகும் பய
னைத்தரும். ஸர்வ இஷ்டங்களையும் தரும். ஆயுஸ் ஆரோக்
யம் முக்தி இவைகளையும் அளிக்கும். பகவானுடைய

பாதத்திலிருந்து கங்கா ஜலமானது உலகைக் காக்கவும், உன் பொருட்டு பிரவாஹ ரூபமாகக் கிளம்புகிறது. அதனுல் முதலில் உன்னைப் பாவன மாக்கிக்கொண்டு பிறகு உலகைச் சுத்தமாகச்செய். அகஸ்த்தியருடைய ஸ்தாலியிலுள்ள புண்ய தீர்த்தங்கள் பிரும்மஹத்தி முதலிய பாபங்களை நீக்க வல்லவை. அவைகளுடன் சேர்ந்து சீக்கிரமாக தக்ஷிண திக்கைப் பாவனமாக்க நதீ ரூபமாகக் கிளம்பு, உனது ஆரம்ப ஸ்தானத்தில் பகவான் நெல்லிமரமாக இருந்து தன் திவ்ய பாதங்களால் ஸதா உன்னைப் பாவனமாகச் செய்வார். உனது யஶஸ்ஸைப் பரவச்செய்து உன்னிடம் ஸ்நாநம் செய்பவருக்கு முக்தி தருவார். பகவானே பிரும்ம ரூபமான ஆமலகமாக பிரும்ம கிரியிலே தங்கியிருக்கிருர்.

உனது நீரில் ஸ்நானம் செய்தால் விரஜா தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தது போலாகும். ஸந்தேகமில்லை. ஸஹ்ய மலையில் ஆமலக விருக்ஷத்தின் கீழ் ஸ்நாநம் செய்தால் எவ்வளவு புண்யம் வருமோ அவ்வளவு புண்யம் உன் நீரில் எங்கே ஸ்நாநம் செய்தாலும் உண்டாகட்டும்.

### காவேரி கிளம்புதல்.

என்ற இந்த ஆகாஶவாணியைக் கேட்டு காவேரி பரம ஸந்தோஷத்துடன் தன்னுடனுள்ள தீர்த்தங்களைப் பார்த்துக் கூறினுள். தோழிகளே! எனது மஹிமையை ஆகாஶவாணி கூற நேரில் கேட்டீர்களா? சங்கையின்றி என்னுடன் விரைவாகக் கிளம்புங்கள். அப்படியே ஆகட்டுமென்று அவைகளின் கருத்தை அறிந்து காவேரீ ஸந்தோஷமடைந்தாள். அப்பொழுது மேற்குக் கடலிலிருந்து ஶீதளமாயும் கந்தமுள்ளதுமான காற்று கிளம்பிற்று. அது பத்து யோஜனை தூரத்திலுள்ள எல்லா மரங்களையும் ஆட்டி அசங்கச் செய்தது. பிரும்மாவின் ஆக்ஞையால் அங்ஙனம் வீசிற்று. இந்திரனுல் தூண்டப்பட்ட மேகங்கள் பத்து திக்குகளையும் மலைகளையும் சூழ்ந்துகொண்டு ஜலத்தை வர்ஷித்தன. அந்த ஸமயத்தில் கோடிக்கணக்கான தீர்த்தங்களுடன் காவேரீ பரம மங்களமான காலமிது நாம் புறப்பட என்று நினைத்தாள். அப்போது ஒரு பெருங் காற்றடித்தது. அகஸ்த்யரது கலஶம் கவிழ்ந்தது. அகஸ்த்யர் கூறியதைக் கொண்டு கலஶமுகத்திலிருந்து கிளம்பி பகவானது பாத தீர்த்தத்துடன் கலந்து ஸந்தோஷமாக தான் பாவனமாகி உலகை



யும் பாவனமாக்க எல்லோருக்கும் புலப்படும்படி பெருகினுள். காவேரிநீர் நுரையும் குமிழிகளும் நிறைந்திருந்தன. அகஸ்த்யர் ஸ்நாநம் செய்துவிட்டு மேகம் சூழ்ந்து காற்றும் வீசுகிறதே என வேகமாக வந்தார். கலஶம் கவிழ்ந்திருப்பதைக் கண்டு இது என்ன? என ஆஶ்சர்யப்பட்டார். இங்கும் அங்கும் ஓடி ஆஶ்ரமத்திற்கு வெளியே சென்ருர். இடையில் வாடிய முகத்துடன் நடுங்கிக்கொண்டு அஞ்ஜலி செய்து நிற்கும் ஶிஷ்யர்களைக் கண்டார். தீநஸ்வரத்துடன் கொஞ்சம் கோபங்கொண்டு எங்கே சென்ருள் ஸ்தாலியிலிருந்து தேவி காவேரீ? உங்களிடம் ஒப்படைத்திருந்த காவேரியை விட்டுவிட்டு நீங்கள் எங்கே சென்றீர்கள்? என்ருர்.

பயத்துடன் சிஷ்யர்கள் அஞ்ஜலி பந்தம் செய்து, பகவன்? நாங்கள் மழையால் வருந்தி மரத்தடிக்குச் சென்ருேம். அதற்குள் கலஶத்திலிருந்து காவேரீ சென்றுவிட்டாள். நடுவழியில் நாங்கள், நீ நில்லு, போகக்கூடாது என நமஸ்கரித்து பிரார்த்தித்தோம். பிறகு எங்களைப் பார்த்து, அகஸ்த்யமுநிவரின் அபிப்பிராயப்படிதான் கிளம்பினேன், வேறல்ல! இந்த பிரும்மகிரியிலிருந்து நான் புறப்படலாமென குரு சொன்னுர். புண்ய காலத்தில் ஈஶ்வரானுக்ரஹத்தாலும் கிளம்பினேன். ஸர்வக்ஞன உங்கள் குரு எல்லாவற்றையும் அறிந்து மன்னிப்பார். அவர் எதிரில் யான் கிளம்புவது குற்றமாகும். அவர் எல்லாவற்றையும் ஆலோசித்துத் தனக்கு இஷ்டந்தானது எனக் கூறப்போகிருர். உங்களைக் கோபித்துக்கொள்ளமாட்டார் என்று கூறி வேகமாகச் சென்ருள் என விக்ஞாபநம் செய்துகொண்டனர்.

**இருபத்தைந்தாம் அத்யாயம் முற்றிற்று.**

## இருபத்தாரும் அத்யாயம்—66 சுலோகங்கள்.

**தாத்பர்ய:** இப்படி சிஷ்யர் கூறியதைக் கேட்டு முன்னே நடந்ததை எல்லாம் யோசித்துத் தலையை ஆட்டிச் சிரித்தார் முநீஸ்வரர். காவேரியைக் காணவேணும் என, பொருளை இழந்த ஏழைபோல் ஓடினுர். திவ்ய க்ஞாநம் பெற்றவராயினும் விஷ்ணு மாயையால் மோஹித்து மரம் மரமாக வனம் வனமாகத் தேடி, மஹா பாக்யமுள்ளவளே! காவேரீ! எங்கு சென்ருய்? சோபநே! எங்கு இருக்கிருய்? கிருதார்த்தையான நீ துஷ்ட ஸ்த்ரீபோல் என்னை ஏன் பரிஹாஸம் செய்கிருய்? இப்படி புலம்பிக்கொண்டு

அங்கங்கே அடிக்கடி ஓடினர். களைத்து ஆங்காங்கே நிற்பர். வருத்தத்தால் சிறிது சிரிப்பார். மூக்கின் நுனியில் விரலை வைத்துக்கொண்டு கஷ்டம்! கஷ்டம்! எனக் கூறுவர். அடிக்கடி சிஷ்யர்களை மிரட்டுவார். இஷ்ட தேவதையை நாடி காவேரீ கிடைப்பளா? என வேண்டுவர். இங்ஙனம் சுற்றிக்கொண்டு பைத்யம் பிடித்தவனைப் போல் காட்டில் திரிந்தார். உலகிற்கு இஷ்ட தேவதையான காவேரியை மறுபடி துதித்தார். ஓ கல்யாணீ ! பிரும்ம புத்ரீ ! மங்களமான தீர்த்தமுள்ளவளே! விஷ்ணு மாயே ! ஜகன் மாதா ! காவேரீ ! காவேரி எங்கு சென்றிருக்கிறாய் ? வேத ரூபிணீ ! மூன்று குணங்களாலும் அழகானவளே ! மந்தஹாஸ முள்ளவளே ! அழகாகப் பேசுபவளே ! ஶாந்தமானவளே ! லக்ஷ்மிக்குத் தோழி ! ஸ்ரீ பதியின் ஶக்தி வடிவமானவளே ! காவேரீ எங்கு சென்றாய் ? இங்ஙனம் துதித்து முன் கூறியபடியே அவள் புறப்பட்டாள் போலும் ! யாதொரு தோஷமும் இல்லாதவள் ! பரப்பிரும்ம ஸ்வரூபிணீ என்று எண்ணி மறுபடியும் அஞ்ஜலி செய்து துதித்தார்.

பிறகு இரு க்ரோச தூரம் தாண்டி பிரும்மாவால் நிர்மாணம் செய்யப்பட்ட காவேரி மந்தஹாஸத்துடன் அகஸ்த்யருக்குத் தனது ஸ்வரூபத்தை அஞ்ஜலியுடன் நின்று காண்பித்தாள். தேவர்களையும் மோஹிக்கும்படி செய்யும் ரூபமுள்ளவளான மஹா தேவியைப் பார்த்து ஸந்தோஷமும் ஆச்சர்யமு மடைந்த யோகீந்தரர் கூறினர்.

**அகஸ்த்யர் :** கல்யாணீ ! என்னை ஆதரிக்காமல் ஏன் கிளம்பினாய் ? எனது முன்னிலையில் சென்றால் உனக்கு என்ன ஹாநி ?

**காவேரி :** யோகீந்த்ர ! உமது ஆக்ஞையை முன்னிட்டே இந்த மலையில் கிளம்புவது உமக்கு இஷ்டமென்றே யான் கிளம்பினேன். வேறல்ல ! ஸஹ்யமலையிலிருந்து செல்லலாம் என பிரும்மாவும் தாங்களும் கூறினீர்களே ! விஷ்ணுவும் அப்படியே கூற லோகாநுக்ரஹத்தை நாடி தாங்கள் ஸங்கேதத்தையும் நினைத்து பிரும்மகிரியிலிருந்து கிளம்பினேன். ஸர்வக்ஞான தங்களுக்கு முன் நடந்ததெல்லாம் தெரியும். ஈஶ்வரனால் தூண்டப்பட்டு புண்யமான தேசத்தில் புண்யமான காலத்தில் புறப்பட்டேன். பரப்ரும்ம ஸ்வரூபியான பகவான் ஸ்ரீ நாராயணன். அவருடைய ஸர்வ தீர்த்தமயமான பாதாரவிந்தத்தில்



இருந்து வந்த கங்கைமுதலிய ஸகல புண்ய தீர்த்தங்களுடனும் கிளம்பினேன். எனது தவப் பலனே பிரவாஹமாக வந்ததுபோல் துலா மாஸத்தில் பிரவஹித்தேன். ஆயிரம் அர்த்தோதயத்திற்கு ஸமம் துலாவிஷு. எல்லாவற்றையும் யோசித்துத்தான் பிரும்ம கிரியிலிருந்து புறப்பட்டேன். என்னை நினைத்தவர் என் ஜலமருந்தியவர் என்னைத் தர்சிப்பவர் எனது மாஹாத்ம்யத்தைச் சொல்பவர் கேட்பவர் எனது நீரில் ஸ்நாநம் செய்பவர் மஹிமையை வர்ணிப்பவர் ஆகியவர் மஹா பாபிகளாக இருந்தாலும் உபபாதகர்களாயினும் அதிலிருந்து விடுபட்டு விஷ்ணு பாதத்தை அடையட்டும் என யோசித்து புண்ய ஸ்தலத்திலிருந்து கிளம்பினேன். யோகின்! விஷ்ணுவின் ஆக்ஞையை முன்னிட்டு அவர் பாத ஜலத்துடன் கலந்து லோகோபகாரமாகக் கிளம்பினேன். யாதொரு கஷ்டமுமின்றி ஸகல பாபங்கள் அகலவும் ஸர்வ துக்கங்கள் நீங்கவும் ஸம்ஸாரக் கடலைக் கடக்கவும் என்னைத் தக்ஷிண கங்கை என உபநிஷத்துகள் ப்ரஸித்தமாக வர்ணிக்கவும் நதி வடிவுடன் கிளம்பினேன். தாங்கள் அதை மன்னிக்க வேண்டும்.

இங்ஙனம் பாபத்தை அகற்றும் காவேரியின் சொற்களைக் கேட்டு ஸந்தோஷமடைந்தார். மந்தஹாஸத்துடன் முனிவர் ஸஹ்யமலையிலிருந்து கிளம்பிய காவேரியைப் பார்த்துக் கூறினர்: பத்ரே ! ஸாது ! எல்லாம் நல்லது தான் ! நடந்ததை எல்லாம் நன்கு அறிவேன். உன்னிடமுள்ள சிநேஹத்தாலும் சாபல்யத்தாலும் உன்னைக் காண கௌதூஹலத்தாலுமே எனக்கு கோபம் சிறிது உண்டானது. வேறல்ல. ஜகதம்பிகே ! லோகத்தைக் காக்கச் செல். நானுமதை ஆமோதிக்கிறேன். ஹரிபாத தீர்த்தம் ! சங்க தீர்த்தம் ! என ப்ரஸித்தமாவாய். பிரும்மாவினால் கங்கா ஜலமானது பகவான்மீது சங்கத்தால் சுற்றப்பட்டதல்லவா ? இதில் ஒருமுறை ஸ்நாநம் செய்தால் மதுபான தோஷமுமகலும். எனது ஸ்தாலியிலுள்ள தீர்த்தம் எல்லா பந்தங்களையும் நாஶம் செய்யும். பிரும்மா தனது ஸ்தாலீ தீர்த்தத்தால் பகவானுக்கு அபிஷேகம் செய்தார். அப்படி எல்லாம் கலந்த இதை ஒரு முறை தொட்டால் போதும், ஸகல பாபங்களும் அகலும். நெல்லி மரமாகிய பகவானுக்கு பிரும்மா விரஜாதீர்த்தத்தால் அபிஷேகம் செய்தார். அது ஆகாஶ கங்கை, முக்தி தருவது என பிரஸித்தமானது. இது

இப்போது ஸஹ்யாமலக தீர்த்தம் என்றும் மூன்று கடன்களையுமகற்றுவதால் ரிணமோசன தீர்த்தமெனவும் பிரஸித்தமானது. இதன் கரையில் பித்ருக்களை நாடி பிண்டமளித்தால் அது பத்தாயிரம் கயா ஶ்ராத்தம் போலாகி பித்ருக்களுக்கு உடனே அக்ஷய்யமான திருப்தி தரும். ஶ்ராத்த கர்த்தாவும் மூன்று கடன்களிலிருந்து விடுபட்டு நிர்மலனுகி ஸகல யாக பலனையும் பெற்று முடிவில் விஷ்ணு ஸாரூப்யத்தை அடைவான். ஸர்வ புண்ய தீர்த்தங்களின் பலனையும் தரத்தக்கது இது. ஓ காவேரீ! நீ எல்லா தீர்த்தங்களாலும் பூர்ணமானவள். நினைத்தவுடன் இஷ்டத்தைத் தருவாய். அகிலேஶ்வரீ! இந்த பிரும்ம மயமான மலையிலிருந்து நீ பிரவாஹத்துடன் செல்.

அது ஸர்வலோகத்திற்கும் ஹிதமாகும். ஸ்நாநம்செய்பவர் இஷ்டத்தை யளிக்கும். ஓ ஶுபமானவளே! விஶேஷமாக தென் தேசத்தவரை ரக்ஷிக்க நீ புறபட்டுச் செல். முன் கூறிய ஸகல தீர்த்தங்களும் நீ தான், மருத்விருதா என்றும் பெயருண்டாகும். விஷ்ணு பாதத்திலிருந்து வந்த கங்கை பாகீரதி கங்கா ஸிந்து ஜான்ஹவீ என பிரஸித்தி அடைந்தது போல் நீ தக்ஷிண கங்கை ஸஹ்யாமலக ஸம்பவா, காவேரீ, திவ்ய தேவீ ஸர்வ தீர்த்த மயீ, என பிரஸித்தமாவாய். உனது தீர்த்தத்தை நினைத்தாலும் தொட்டாலும் பார்த்தாலும் குடித்தாலும் போதும், நாராயணனை அடைவர். வேறு புண்யம் வேண்டாம். வைகாநஸர் வாலகில்யர் ஸநகாதிகள் முதலிய மற்ற முனிவர்களுடனும் ஸ்ரீ பார்வதீநாதன் முதலிய தேவர்களுடன் கூட உனது புண்யமான கரையில் வஸிக்கிறேன். அந்தப் புண்ய தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்தால் ஒரு கல்பம் வரை பித்ருக்கள் ஸந்தோஷமடைந்து ஸ்வர்க்கம் செல்வார்கள், ஸஹ்ய மலையில் நெல்லிமரத்தடியே உன் கரையில் அர்த்தோதயத்தில் ஶ்ராத்தம் செய்தால் கயா ஶ்ராத்த பலனைத் தரும். கர்த்தாவும் மூன்று கடனிலிருந்து விடுபட்டு இங்கு ஸகல போகங்களையும் அனுபவித்து முடிவில் விஷ்ணுபதத்தை அடைவான்.

உன்னிடம் ஸ்நாநம் செய்தால் அது விரஜா ஸ்நாநம் போலாம். உன் ஜலத்தில் ஸ்நாநம் செய்தோர் ஜீவன் முக்தர் ஆவர். ஶுபே! அத்புதமானதும் மஹா



ரஹஸ்யமானதும் ஸர்வ ஶாஸ்த்ரங்களும் தீர்மானித்ததுமான விஷயத்தைக் கேள். ஒரு க்ஷணத்தில் மஹாபாதகங்களை யெல்லாம் போக்கடிக்கும் கங்கை முதலிய மஹா நதிகள் அந்த பாபங்களால் மலினர்களாகி அதையகற்ற சக்தியில்லாமல் வருந்தி பிரும்மாவை சரணமடைந்தன. பிரும்மா ஸபையில் முனிவர்களுடன் ஸகல வேத ஶாஸ்த்ரங்களையும் நன்ருக பலமுறை விசாரித்தார். மஹாவிஷ்ணுவும் அதற்கேற்ற பிராயஶ்சித்தமாக அந்த நதிகள் எல்லாவற்றையும் துலா மாஸத்தில் காவேரீ ஸ்நாநம் செய்யுங்கள் என்ருர். ஸ்ரீ ரங்கனுதனது ஸன்னதியிலோ ஸ்ரீ ஜம்புநாதனது ஸன்னதியிலோ பிராம்மணர்கள் ஸகல பாபங்களுமகல நித்யம் ஸ்நாநம் செய்யட்டும். பகவான் தத்தாத்ரேயரும் உனது தலையைத் தனது பாததூளியால் பாவனமாக்குவார். அவர் ஸாக்ஷாத் பரப்ரும்மமான விஷ்ணு அல்லவா? காவேரீ! நீ ஸர்வ தீர்த்தங்களிலும் சிறந்தவள் ஆதலால் கிருதகிருத்யை ஆவாய். தென்னுட்டவருக்குச் செல்வத்தையும் க்ஷேமத்தையும் விஜயத்தையுமளிக்கப் புறப்படு. நானும் அநுக்ஞை அளிக்கிறேன். ஶுபமாகச் செல், என்ருர் அகஸ்த்யர்.

**தால்ப்யர்:** இங்ஙனம் முனிவர் கூறியதைக் கேட்டு ஸந்தோஷத்துடனும் அன்புடனும் அவரருகே சென்று அவரை வணங்கி தேவி ஜலத்தினருகே சென்ருள். பிறகு லோக க்ஷேமத்திற்காக பிரகாஶத்தை அடைந்து நதிகளில் சிறந்த காவேரி நதி வடிவமாக கிளம்பினுள். அலைக்கூட்டம் ஒலிக்க ஜங்காரம் வேதகோஷம் முழங்க ஆமை மீன்கள் முதலியன சூழ ஶிம்ஶுமாரங்களால் பயங்கரமாகவும் ஓரிடத்தில் நுரை நிறைந்திருக்க ஓரிடத்தில் பாசிகள் சூழ ஓரிடத்தில் ஸாகஸ பக்ஷிகள் ஓரிடத்தில் சக்ரவாக பறவைகள் ஓரிடத்தில் தாமரை வநம் ஓரிடத்தில் கருநைதல் ஓரிடத்தில் ப்ரவாஹ வேகத்தால் ஆழமாக்கிக் கொண்டு ஓரிடத்தில் மேடிட்டுக் கொண்டு ஓரிடத்தில் குறுகலாகவும் ஓரிடத்தில் மிக்க வேகத்துடனும் ஓரிடத்தில் அசையாமலும் ஓரிடத்தில் மேலிருந்து பள்ளத்தில் வீழ்ந்தும் ஓரிடத்தில் கோரமான சப்தத்துடன் கரையை இடித்துக் கொண்டும் ஓரிடத்தில் செடிகொடி மரங்களைப் பிடுங்கி இழுத்துக்கொண்டும் லோகங்களுக்கே ஆபரணமான காவேரி பூமியை அலங்கரித்தாள். தென் திக்கின் ஹாரம்! முக்தியின் படிக்கட்டு! மனிதர்க்கு ஸாம்ராஜ்யமளிக்கத்

திக்ஷைக் கொண்டவள். ஸ்நாநம் செய்தவுடன் பாபத்தை அகற்றுபவள். இங்ஙனம் பலர் போற்றினர். பிரும்ம புத்ரியானவள். பிரும்ம மலையிலிருந்து கிளம்பியவள். ஸாக்ஷாத் பிரும்மஸ்வரூபிணீ. பிரும்மலோகத்தை அளிப்பவள். அழகாக திவ்ய ஜலத்துடன் லோக க்ஷேமத்திற்காக பிரவிருத்தித்தவள் என துதித்தனர். யாகத்தை அறிந்து அநுஷ்டிக்கும் அகஸ்த்யர், ஏழு சிஷ்யர்களுடன் அத்யத்புதரூபத்துடனுள்ள காவேரியைப் பார்த்து ஆச்சர்யமடைந்தார். ஆனந்தக் கண்ணீர் பெருக மெல்ல மெல்ல கிளம்பினர்.

**இருபத்து ஆறும் அத்யாயம் முற்றிற்று.**

## இருபத்தேழாம் அத்யாயம்-67 சுலோகங்கள்

### தேவாதிகளின் ஸந்தோஷம்.

***தால்ப்யர்:*** தேவரிஷிகள் கந்தர்வர் ஸித்தர் சாரணர் கின்னரர், பித்ருக்கள், மஹாத்மாக்கள் வித்யாதரர் நாகர் ஆகியவர், ஸூர்யன் போல் பிரகாசிக்கும் தங்களது விமானங்களால் பத்து திக்குகளேயும் பிரகாசப் படுத்திக் கொண்டு காவேரி ப்ரவாஹத்தைக் காண குவிந்தார்கள். தேவ துந்துபி முழங்கிற்று. அப்ஸரஸ்ஸுகள் ஆடினர்கள். இந்திரன் முதலிய தேவர் புஷ்பவர்ஷம் வர்ஷித்தார்கள். கந்தர்வரும் ஸித்தர்களும் பாடினர்கள். மற்றும் பலதேவர்கள் ஸந்தோஷத்தால் ஜய! ஜய! காவேரீ! என உரக்கத் துதித்தார்கள். தேவகணங்களால் நுதிக்கப்பட்ட பிரும்மா விஷ்ணு ருத்ரர் ஆகிய மும்மூர்த்திகளும் அங்கு வந்து கூடினர். ஆகமங்களும் பதினெண் புராணங்களும் திவ்ய உருவந்தாங்கி காவேரியைக் காண வந்தன. ஸகல உலகத்தவரும் கூடி காவேரியின் கீர்த்தியைப் பாடினர்கள்.

**தேவர்கள் :** ஆச்சர்யம்! இப்போது காவேரி அதி விசித்ர ரூபத்துடன் காணப்படுகிருள். ஆஹா! இவளது பெரும் பிரவாஹம் வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாதது. வேதாந்தங்களில் விஸ்தரிக்கப்பட்ட காவேரியின் பெருமையை யாரே அறிவர்? ஸர்வக்ஞனை பகவான் மஹாதேவன் ஒருவனே அறிவான். நாம் எல்லோரும் இப்போது மிகவும் தன்யர்கள். ஸந்தேஹமில்லை. இந்த காவேரி ஜலத்தில் ஸ்நாநம் செய்து பிராம்மணர் நமக்கு தர்ப்பணம் செய்வர். அரசர்கள் காப்பாற்ற பிராம்மணர்



யாகம்செய்வர். இங்ஙனம் தேவர் ஆநந்தபாஷ்பம்பெருக ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர். அங்ஙனமே பித்ருக்களும் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக்கொண்டு ஸந்தோஷமாகப் பேசினர். நாமே கிருதார்த்தர். அக்ஷய்யமான திருப்தி உண்டாகப் போகிறது. நம் வம்சத்தில் பிறந்த புத்ரர்கள் காவேரியில் நமக்கு திலோதக மளிப்பர் என ஆனந்தமடைந்தனர். கோடிக்கணக்கான புண்ய தீர்த்தங்களுடன் கூட காவேரி ஆச்சர்யமான உருவெடுத்து பிரும்ம மலையிலிருந்து கிளம்புகிருள். உலக நன்மைக்காக பிரும்மாவால் படைக்கப் பட்டவள் இவள். மற்ற புண்ய தீர்த்தங்களும் நதிகளும் காவேரியின் பதினறில் ஒருபங்கு கூட ஸமமாக மாட்டா. இந்த ஜலத்தில் பக்வமான அன்னம் சாகங்கூட நமக்கு பல்லாயிரம் கயா சிராத்த பலனைத் தரும். நமது ஸந்ததி மேல் மேலும் விருத்தியாகட்டும் என பித்ருக்கள் காவேரியைக் கொண்டாடி வாழ்த்தினர்கள்.

***ரிஷிகள்:*** காவேரி கலியை அகற்றுவாள். வேத ரூபிணி! பிரும்ம ஸ்வரூபமானவள். மற்ற ஸமஸ்த புண்ய தீர்த்தங்களுடன் கலந்து நிர்மலமாகக் காணப்படுகிருள். ஸகல லோகமும் இந்த தீர்த்தத்தால் பாவனமாகப் போகிறது. நம்மை சார்ந்தவர்களுடன் அனைவரும் ஸந்தோஷமடைந்து யமயாதனையின்றி இன்ப முறுவர். நாமும் தேவர்களும் பித்ருக்களும் பிரும்ம கல்பம் வரை ஸுகமாகவும் திருப்தி யுள்ளவர்களாகவும் இருப்போம். இதில் ஸ்நாநம் செய்து தமது திருப்திக்காக த்விஜர்கள் கர்மாவைச் செய்வார்கள் அல்லவா? இங்ஙனம் ஸகலராலும் துதிக்கப்பட்ட காவேரிக்கு ஸமஸ்த வேதங்களும் தலையாகும். பாலே ஜலம். ஸமஸ்த புண்யங்களும் நுரை. தத்வ சாஸ்த்ரமே சுழல், யாகங்களே மணல், புண்யமே குமிழி. வைகுண்டம் ஏற படிகளே அலைகள். பாபத்தைப் போக்குவேன் என்ற கோஷமே ப்ரவாஹ சப்தம். நேராகவும் கோணலாகவும் வேகமாகவும் செல்லும் காவேரியில் கல்ஹாரம் தாமரை உத்பலம் கைரவம் முதலிய புஷ்பங்கள் நிறைந்திருந்தன.

பூமிக்குச் சிறந்த ஆபரணம். உலகிற்கு மாதா. பூமியில் சிறந்த புண்யமளிக்கும் ஒரே ஸாதகம். உலகைக் காக்கும் சிறந்த மணி. திவ்ய தீர்த்தமானவள். த்ரிமூர்த்தி ரூபமுள்ளவள். மூன்று குணங்களைக் கடந்தவள். ஸகல

உலகங்களைக் காக்கவும் தென் திக்கிற்கு க்ஷேமமளிக்கவும் மும்மூர்த்திகளால் பூஜிக்கப்பட்டவள். விஷ்ணுவின் திவ்ய ஶக்தியான காவேரியை ஜய! ஜய!! என்ற வாக்குகளால் அஞ்ஜலி பந்தம்செய்து இந்த்ராதி தேவர்கள் துதித்தனர். தேவி மெல்ல ஸமுத்ரத்தை அடைந்தாள். லோகரக்ஷணத்திற்காக நதீ ரூபமாக வேகமாய்க் கிளம்பி வரும் கவேர புத்ரிக்கு, மஹா பாபிகளுக்குக் கூட ஹிதம் செய்யக் கருதி பரமசிவன் வரம்தந்தார். அர்த்தோதய புண்ய காலத்தில் எழு கடல்களிலும் ஸ்நாநம் செய்ததால் வரும் புண்யம் காவேரி ஸமுத்ர ஸங்கம ஸ்நாநத்தால் கிடைக்கட்டும். நானும் காவேரி தீரமான ஶ்வேதாரண்யம் என்னும் புண்ய க்ஷேத்திரத்தில் வஸிக்கிறேன் என்ருர்.

பிரும்மாவும் பரம ஸந்தோஷமடைந்து காவேரீ! உனது தீரத்தில் வஸிப்பவர் துர்புத்தி உள்ளவர்களாகவும் நாஸ்திகர்களாகவும் இருந்தாலும்கூட உனது தீர்த்தத்தில் ஸ்நாம் செய்தவுடன் ஸகல பாபங்களுமகன்று பிரும்ம லோகம் செல்லட்டும். ஓ வத்ஸே! உனக்கு வரமளிப்பதற்காகவே இங்கு வந்தேன். உனது மனதிலுள்ள இஷ்டமான வரத்தைக் கேள் தருகிறேன் என்ருர் மஹா விஷ்ணு. மஹா பாபியாயும் துஷ்டர்களுமாயுள்ள த்விஜாதிகள் வேதத்தைக் கற்காமல் விட்டு துராசாரத்தைக் கைக்கொண்டு குரு பிராம்மண த்வேஷிகளாக இருந்தாலும் ஏகாதசியில் காலையில் ஸ்நாநம் செய்தால் ஸகல பாபங்களு மகன்று யோகிகள் அடையக் கூடிய திரும்பி வராத புண்ய லோகத்தை அடைய வேண்டும் என்று காவேரி கேட்டாள். பகவான், ஓ மஹாபாகே! புண்ய கீர்த்தே! அப்படியே ஆகட்டும். மற்ருேர் வரமும் தருகிறேன். என்னை ஸேவித்தால் ஸகல இஷ்டமும் ஸித்திக்குமல்லவா? அதிபாவனமான உனது தீர்த்தத்தில் துலாமாஸத்தில் எங்காவது ப்ராத ஸ்நாநம்செய்து உனது மஹிமையைக் கேட்டு ஸர்துக்களுக்கு இஷ்டரான புராண வந்தாவைக் கந்த புஷ்பாதிகளால் அர்ச்சித்தால் துராசாரமுள்ளவராயினும் பாஷண்டியானுலும் பதிதரானுலும் துஷ்டராயினும் நாஸ்திகராயினும் எனது கடாக்ஷத்தால் பாவனராவர். அவர்களது பித்ருக்களும் சுத்தராவர். இவ்வுலகில் புத்ர பௌத்ராதிகளுடன் ஸகல போகங்களையும் அனுபவிப்பர். எனது ஸாயுஜ்யத்தைப் பெற்று மோக்ஷ லக்ஷ்மியை அடைவர். ஸந்தேஹமில்லை.



தால்ப்யர்: இங்ஙனம் வரம் பெற்றவளும் மும்மூர்த்தி வடிவமானவளும் ஜ்யோதி ஸ்வரூபமானவளும் கநக வர்ண முள்ளவளுமான காவேரியை ஸுஜ்யோதிகா, கநகா என்ற இரு நதிகளும் தாமரைப் புஷ்பங்களால் அர்ச்சித்தனர். ஸந்தோஷத்துடன் நமஸ்காரம் செய்தனர். நினைத்தமாத்திரத்தால் ஸகல பாபங்களையும் அகற்றக் கூடிய இரு நதிகளையும் காவேரி நல்வரவு கூறி அழைத்தாள். தக்கப்படி பூஜித்தாள். சித்திரைமாத ஸூர்ய பிரகாஶம் போல் ஸந்தோஷமாக பிரகாசித்தாள் காவேரி. இந்த நதிகளின் ஸங்கமத்தில் ஒரு ஸ்நாநம் செய்தாலும் பாபிகள் கூட பாபமகன்று பிரும்மலோகம் செல்வர்.

அர்த்தோதய காலத்தில் நூறு துலா புருஷதானம் நைமிசாரண்யத்தில் செய்வதால் உண்டாகும் புண்யம் இந்த த்ரிவேணியில் ஒருமுறை ஸ்நாநம் செய்தால் கிடைக்கும். வாஸுதேவனை ஸஹஸ்ரநாமங்கூறி துளஸி தளத்தால் நூருண்டு பூஜித்தால் வரக்கூடிய புண்யம் இந்த மூன்று நதிகளின் ஸங்கத்தில் ஸ்நாநம் செய்து பெறலாம். ஸ்ரீ வாஸுதேவனது கிருபையால் யாருக்கு ஸம்ஸார கஷ்டமகலுமோ அவனே ஜன்மாந்தர தவப்பயனுல் இந்த ஸங்கம ஸ்நாநம் செய்வான். இதில் ஒரு முறை ஸ்நாநம் செய்து தர்ப்பணம் செய்தால் பரம ஸந்தோஷமடைந்து பித்ருக்கள் பிரும்ம லோகம் செல்வர். தனது ஜாதியிலிருந்து ப்ரஷ்டன், பாஷண்டீ, பரான்னமே புஜிப்பவன், அக்னியைவிட்டவன், ஸதாசாரமில்லாதவன், தாய் தந்தையை தூஷிப்பவன், ஆகிய பாபிகள் கூட த்ரிவேணியை நினைத்து கிணறு குளம் வேறு எந்த ஜலத்தில் ஸ்நாநம் செய்தாலும் சுத்தனுவான். த்ரிவேணியிலேயே ஸ்நாநம் செய்வதைப் பற்றிக் கூறவும் வேண்டுமா?

ஸர்வ ப்ராணிகளிடம் தயைகொண்டு ஸதா அன்ன தானம் செய்தால் ஜன்மாந்தர புண்யத்தால் த்ரிவேணீ ஸ்நாநம் கிடைக்கும். ஸுஜ்யோதிகா கநகா காவேரீ ஹேமாவதீ கபிலா என ஶ்ருதியில் கூறிய பெயர்களை ஒரு முறை கூறினுல் மகரமாஸத்தில் ராமஸேதுவில் ஸ்நாநம் செய்த பலனைப் பெறுவர். ஸுஜ்யோதிகா ஸுவர்ணமுகீ இவைகளுடன் கூடிய காவேரியும் ஹேமவதீ கபிலா இவைகளுடன் கூடிய காவேரிஸங்கமமும் சிறந்ததென முனிவர் ஆங்காங்கு பூஜை செய்து ஸ்நாநம் செய்தார்கள். அதை யேற்று காவேரி நதிகளின் பதியான

உதறித்தள்ளி கைலாஸத்தில் கொண்டாடப் படுவான். காவேரீ ஸமுத்ர ஸங்கஸ்நாநம் கிடைக்காவிடில் ஓராண்டு ஸம்வர்த்தேஸ்வரநாம கீர்த்தநம் செய்தால் ஸங்கமஸ்நாந பலனைப் பெறலாம். ஸ்நாந காலத்தில் ஸம்வர்த்த நாம ஸங்கீர்த்தநம் செய்தாலும் நூறு பிறவிகளில் யக்ஞம் செய்பவனுகவும் ஸம்வர்த்த குரு ஸமமாகவும் ஆவான். ஸம்வர்த்த முநிவரின் பெயரால் பிரதிஷ்டை செய்த லிங்கத்தை ஒரு முறை ஸ்மரித்தால் மதுபாநம் செய்தவன் கூட சுத்தனுவான்.

காவேரீ மஹிமையைச் சுருக்கமாகக் கூறுகிறேன் கேள். நூறுண்டுகளானுலும் காவேரியின் மஹிமையைக் கூறி முடியாது. காவேரியின் இரு கரைகளிலும் மஹர்ஷிகள் முக்திப் பெறுவதற்காக கோடிக்கணக்காக ஶிவ லிங்கங்களைப் பிரதிஷ்டைச் செய்தார்கள். ஸ்ரீ ரங்கத்தில் காவேரி ஸ்நாநம் செய்தால் அவ்வளவு சிவலிங்கங்களையும் ஸேவித்த பலன் உண்டாகும். புண்ய தீர்த்தங்களோ க்ஷேத்ரங்களோ கிடைக்காவிடில் ஸ்ரீ ரங்கன் ஸன்னதியில் காவேரீ ஸ்நாநம் செய்தால் ஸகல பாபங்களுமகன்று ஸகல தீர்த்த ஸ்நாந புண்யத்தையும் பெறலாம். அங்கு துலா காவேரீ ஸ்நாநம் செய்தால் வ்ரஜா நதீ ஸ்நாநம் செய்ததாகும். அங்கு துலா காவேரீ ஸ்நாநம் செய்து ஒரு பிடி அன்னம் தாநம் செய்தாலும் நூறு பிறவிகளில் செல்வானுவான். ஸ்ரீ ரங்கம் காவேரியில் மாகஸ்நாநம் கார்த்திகை ஸ்நாநம் செய்தால் அந்த புண்யபலனைக் கூற பகவானுக்குத்தான் சக்தி உண்டு. புத்ரன் பௌத்ரன் ஆயுஸ் முதலிய பலனைக் கோரி காவேரி ஸ்நாநம் செய்தால் உடனே ஸகல காமங்களையும் அடைவான்.

ஸ்ரீ ரங்கஸன்னதியில் துலா காவேரீ ஸ்நாநம் செய்து கறுப்பு எள்ளால் பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்தால் அந்த மஹிமையையும் புண்யத்தையும் கூறுகிறேன் கேள். தாய் வகையிலும் தந்தை வகையிலும் கோடி குலத்தை உத்தரணம் செய்து ஸகல போகங்களையும் அனுபவித்து ஒரு மன்வந்த்ர காலம் வரை சுவர்க்கத்திலிருந்து புத்ர பௌத்ராதிகளுடன் கூடி சக்ரவர்த்தியாகப் பிறப்பான். துலா ஸங்க்ரமணத்தில் ஸ்ரீரங்க காவேரீ ஸ்நாநம் செய்தால் அவனது பித்ருக்கள் அக்ஷய்யமான திருப்தியடைந்து ஸ்வர்க்கத்தில் ஆனந்தமாக வஸிப்பார்கள். பித்ருக்கள் அதிக திருப்தியால் ஆசீர்வதிப்பார்கள்.



நூறு குலம் புத்ர பௌத்ராதிகளுடன் ஸந்தோஷமாகவும் ஸ்திரமாகவும் இருப்பார்கள். குரு க்ஷேத்ரத்திலும் கயையிலும் நூறு ஶ்ராத்தம் செய்தால் எவ்வளவு புண்ய முண்டோ அவ்வளவு புண்யம் ஸ்ரீரங்க துலா காவேரியில் தில தர்ப்பணம் செய்தாலே கிடைக்கும். இத்தகைய காவேரீ ஶிவ விஷ்ணு ஸ்தலங்களால் பிரகாசமாகி அகில ஜநங்களையும் பாவனமாக்கிக் கொண்டு பதியான ஸமுத்ர ராஜனிடம் சென்றுள்.

**இருபத்தேழாம் அத்யாயம் முற்றிற்று.**

## இருபத்தெட்டாம் அத்யாயம்–82 சுலோகங்கள்.

### காவேரீ கல்யாணம்.

மஹாத்மாவான வருணுல் தூண்டப்பட்ட வாயு அப்ஸரஸ்ஸுகளுடன் கூட காவேரியை எதிர்கொண்டு அழைத்தார். தேவ துந்துபி கோஷமும் பிராம்மணர்களின் ஸ்வஸ்தி வாசநமும் தேவர்களது ஸாது! ஸாது! என்ற வாதமும் பத்து திக்குகளிலும் கேட்கப் பட்டது. நமஸ்தே! க்ருதார்த்தனுனேன் என்று பெரும் சப்தம் உண்டாயிற்று. ஸநகாதி யோகீந்த்ரர்களும் இந்த்ரன் முதலிய தேவர்களும் ஸந்தோஷமான மனதுடன் காவேரியை எதிர்கொண்டுச் சென்றனர். பிறகு ஶ்வேதாரண்யத்தில் ஸமுத்ரத்திற்கும் காவேரிக்கும் பாவனமான அழகான விவாஹோத்ஸவமும் நடந்தது. பிரும்மா சிவன் ஜகத்பதியான விஷ்ணு ஆகியவர்களும் தேவர்களுடன் கூட அங்கு வந்து அதைக் கொண்டாடினுர்கள். பிரும்மா மஹேஶ்வரனை முன்னிட்டுக் கொண்டு ஶுபமான விவாஹகார்ய மெல்லாவற்றையும் விதிப்படி செய்வித்தார். பல மாளிகைகளால் பிரகாசிக்கும் ஶ்வேதாரண்ய நகரத்தில் பிரும்மா ஸமுத்ரனுக்குத் தனது கன்யகையான காவேரியை கன்யாதாநம் செய்து கொடுத்தார்.

ஜகத்திற்கு மங்கள முண்டாக அந்த உத்ஸவம் மிகச் சிறப்பாக நடந்தது. ஆகாஶத்தில் மங்களமான வாத்ய கோஷமும் அப்ஸரஸ்ஸுகளின் நர்த்தநமும் தேவர்களது ஸந்தோஷ புஷ்ப வர்ஷமும் ஏக காலத்தில் கிளம்பின. சாரணர் உரக்கப் பாடினுர்கள். இங்ஙனம் பூமண்டலத்தில் காவேரீ கல்யாண உத்ஸவம் நடக்கும் பொழுது ஒவ்வொரு வீட்டிலும் அந்த உத்ஸவம் கொண்டாடப்பட்டது.

பூமி விஸ்வம்பரா என்றபெயருக்கேற்றபடி உலகெல்லாம் சூழ பிரகாசித்தாள். விரிந்த மகமுள்ள வருணன் பாணி க்ரஹண காலத்தில் பிராம்மணர்களை நன்கு அலங்காரம் செய்து பலவகையான ரத்நங்களையும் பத்து கோடி ஸுவர்ணத்தையும் தானம் செய்தார். இப்படி எல்லோரும் வணங்கும் காவேரிக்கு விவாஹமானவுடன் பரமசிவன் காவேரிக்கு வரமளித்தார். இந்த இடத்தில் காவேரீ ஸ்நானம் செய்தால் ஏழு ஸமுத்ரங்களிலும் ஸ்நானம்செய்த பலன் கிடைக்கும். வேறெந்த இடத்தில் எந்த பிராணி ஸ்நானம் செய்தாலுங் கூட இந்த பலன் உண்டாகும். ஸந்தோஷத்துடன் பிரும்மா, துலாமாஸத்தில் காவேரீ ஸ்நானம் செய்து உன் மஹிமையைக் கேட்போர் எனது அநுக்ரஹத்தால்போகத்தையும் மோக்ஷத்தையும் பெறுவர் என்று வரம் தந்தார்.

மஹாவிஷ்ணு பத்தாண்டு எனது கதையைக் கேட்பதால் உண்டாகும் பலன் உன் சரிதத்தைக் கேட்பதால் உண்டாகட்டும் என உத்தமமான வரத்தை அளித்தார். லோகக்ஷேமத்திற்காக இத்தகைய வரனைத் தந்து ஸந்தோஷமுள்ள ஸமுத்ரத்துடன் கூடி தானும் மிகவும் ஸந்தோஷமடைந்தார். துலா மாஸத்தில் காவேரீ ஸமுத்ர ஸங்கமத்தில் ஸ்நானம் செய்தவரது புண்யத்தைக் கூற ஜநார்த்தநனே சக்தி உள்ளவர். காவேரீ ஸமுத்ர ஸங்கமத்தில் ஸ்நானம் செய்து பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்தால் பித்ருக்களுக்கு ஸஹ்யாமலத்தில் ஶ்ராத்தம் செய்ததால் உண்டாகும் ப்ரீதி உண்டாகும். நூறுண்டு பிரதி தினம் பஞ்சமஹாபாதகங்களைச் செய்திருந்தாலும் ஸங்கமுகத்தில் ஸ்நானம் செய்தால் ஸகல பாபங்களும் அகலும். சுத்தனுவான்.

ஸூர்ய க்ரஹண காலத்தில் காவேரீ ஸமுத்ரஸங்கம ஸ்நானம் செய்தால் பதினறு முறை நைமிஶாரண்யத்தில் ஷோடஶ தானம் செய்த பலனுண்டாகும். ஒரு முறை ஸங்கமுக ஸ்நானம் செய்தால் புத்ரன் தனம் கன்யகை ஆயுஸ் முதலியவைகளைப் பெறுவர். ஸங்கமுக ஸ்நானம் செய்து ஶ்வேதவநேஶ்வரரை நமஸ்கரித்தால் ஸகல இஷ்டங்களையும் பூர்த்தி செய்கிருர் அவர். அத்தகையவர்க்குக் கிடைக்காத பொருளே கிடையாது. ஸங்கமுக ஸ்நானம் ஒருமுறை செய்தால் பிரும்மஜ்ஞானமும் அதனல் முக்தியும் கிடைக்கும். கோடிக்கணக்கான மற்ற தீர்த்



தங்களால் அவருக்கு ஆகவேண்டியது யாது உளது? அங்கு ஸூர்ய க்ரஹண காலத்தில் ஸ்நானம் செய்து பிராம்மணர்களுக்கு ஒரு காசு கொடுத்தால்கூட நூறு பிறவிகளில் தனிகனுகப் பிறப்பான். வேத வித்யையில் கரை காண்பான். காவேரியின் உற்பத்தி கல்யாணம் இவைகளைக் கேட்டால் நூறுகுலம் தனதான்யம் நிறைந்திருக்கும்.

காவேரீ ஸங்க வைபவத்தைக்கேட்டால் ஸர்வ பாபங்களும் அகலும். ஸ்வர்க்கம் செல்வர். குருக்ஷேத்ரத்தில் பத்து அஶ்வமேத யாகங்களைச்செய்வதால் வரும் புண்யம் மாயூரத்தில் துலாமாஸம் ஒரு காவேரீ ஸ்நானம் செய்வதால் கிடைக்கும். மத்யார்ஜுநத்தில் காவேரீ ஸ்நானம் செய்தாலும் அங்கு ஜபம் செய்தாலும் பிரும்மஹத்தி குருத்ரோஹம் முதலிய ஸகல பாபங்களும் அகலும். ஒன்றும் செய்ய ஶக்தி இல்லாதவனை மூடனுக இருந்தாலும் ஏகாதசியன்று காவேரீ மஹிமையைக் கேட்டால் அந்த ஸ்நான பலனைப் பெறுவான். இவ் விஷயத்தில் அதிகம் கூறுவதேன்? காவேரியை நினைத்தாலே போதும். ஸகல பாபங்களும் ஸூர்ய உதயத்தில் இருள் அகலுவது போல் பறந்தோடும். காலையில் எழுந்து மூன்றுமுறை காவேரீ என உரக்கக் கூறினல், துலா காவேரீ ஸ்நானம் செய்த பலனுண்டாகும். கோடி புண்ய தீர்த்தங்களிருக்கட்டும், புண்ய ஸ்தலங்களுமிருக்கட்டும், ரங்கநாதன் ஸன்னதியில் செய்யும் ஒரு காவேரீ ஸ்நானத்தின் பதினறில் ஒரு பங்குகூட அவை இணையாகாது.

மிகக் குடிலையான சந்த்ரகாந்தை கூட ஸ்ரீ ரங்கத்தில் ஸ்நானம் செய்தமாத்ரத்தால் பாபத்திலிருந்து விடுபட்டு பிரும்மலோகம் சென்ருள். எல்லா பாபிகளுக்கும் இதே நிதர்சநமாகும்.

**அரிஸ்சந்த்ரன் :** முநிஸ்ரேஷ்டரே! வியபிசாரியான சந்த்ரகாந்தை ஒரு கல்பம்வரை மகா கோரமான துக்க நரகத்தை அனுபவித்து விட்டு வேறு உடலெடுத்து அது முடியும் போதல்லவா காவேரீ ஸ்நானம் செய்து ஸ்வர்க்கம் சென்ருள்? ஓ ப்ராக்ஞரே! காவேரீ ஸ்நாந வைபவத்திற்கு இது எப்படி நிதர்சனமாகும்? தயைசெய்து விஸ்தாரமாக இதை விளக்கிக் கூறும் என்ருன்.

**அகஸ்த்யர் :** மேதாவியான ஹரிஸ்சந்த்ர! ராஜஶ்ரேஷ்ட! காவேரீ வைபவத்திற்கு இதே தக்க திருஷ்டாந்தமாகும். கேள்! விதவையான ஸ்த்ரீ கேசத்துடன்

ஸுமங்கலி போல் வர்ண வஸ்த்ரத்தை உடுத்தி க்ஞான வைராக்ய மில்லாமல் வயிற்றை நிரப்புவதில் ஸாமர்த்ய ஶாலியாகக் குடிலமானவளாய் யாதொரு விருதமு மின்றி பதிக்கு அப்ரியமாய் குருவுக்கு பிரதிகூலையாய்த் தனது பந்துக்களிடம் அன்புள்ளவளாயினும் ஸ்த்ரீ பதி செய்யும் கர்மாவை நிந்தித்துக்கொண்டு இருந்தாலும் ஸகல தீர்த்தங்களிலும் ஸ்நாநம் செய்தாலும் அந்த பாப மகலாது. ஏழு கல்பம்வரை மஹா கோரமான இருபத் தோரு நரகதாபங்களை அனுபவித்து மறுபடியும் தாஸி யாகி பூமியில் யஜமானனுக்கு மிக்க துக்கத்தைத் தரு வாள். முன்னூறு கல்பம்வரை கண்டத்தில் புழுக்கள் கிளம்பி ரோகியாகி, பலவகையான புழுப் பிறவிகளையும் பெறுவாள். இருபத்தோரு வகையான நரகங்களிலிருந்து ஒருபோதும் வெளிவராள்.

சந்த்ரகாந்தை தர்ம மறிந்து முன்னம் பதிஶுஶ்ரூஷை செய்தவள். பதிக்கு ஹிதமானவள். அதனால் துலா காவேரீ ஸ்நாநம் கிடைத்தது. ஸ்ரீரங்கனது ஸன்னதியில் காவேரீ ஜலத்தைத் தொட்டமாத்ரத்தால் காவேரீ மஹி மையில் ஒரு சுலோகத்தைக் கேட்டாள். அதனால் நிர்மல மானாள். இத்தகைய பாபங்களைப் பலமுறை செய்தோ ருக்குக் காவேரீ ஸ்நாநம் தவிர வேறு பிராயஶ்சித்த மில்லை. காவேரீ தீரத்தில் பதியை த்வேஷிப்பவள் குடிலை யாவாள். நூருண்டு காவேரீ ஸ்நாநம் செய்தாலும் அந்தப் பாபம் அகலாது. ஒவ்வொரு கல்பத்திலும் பயங்கரமான நரகங்களை அனுபவிப்பாள். யாதனையால் கொளுத்தப் படுவாள். ஈ எறும்புகள் அவள் உடலைப் பிடுங்கும். காவேரீ தீரத்திலுள்ளோர் நன்மையைக் கோரினல் மநதா லும் வாக்காலும் உடலாலும் தெரிந்து யாதொரு பாபத் தையும் செய்யக் கூடாது. காவேரீ தீரத்தில் செய்யும் புண்யமும் பாபமும் அழிவில்லாத பயனைத் தரும்.

மற்ற இடங்களில் செய்யும் பாபம் காவேரியில் அக லும். காவேரீ தீரத்தில் செய்யும் பாபத்திற்கு எங்கும் பிராயஶ்சித்தமே இல்லை. ஆதலால் காவேரீ தீரத்தில் புத்தியுள்ளவன் பாபம் செய்யக்கூடாது. புண்யத்தையே செய்ய வேண்டும். ஸத்யமிது! என இருமுறை கூறு கிறேன். ராஜன்! காவேரீ தர்சந மாத்ரத்தால் பாபம் என்ற ஸந்தேஹமே இல்லாமல் ஸூர்யனைக் கண்ட இருள் போலகலும். ஸ்நாந பாநாதிகளால் பாபம் அகலுவது



பற்றிக் கூறவும் வேண்டுமா? ஸ்மரித்தாலும் தர்ஶித் தாலும் பாநம் செய்தாலும் காவேரீ எனக் கூறினலும் தொட்டாலும் மரணம் உண்டாகும் வரை செய்யப் போகும் பாபமும் ஏற்கனவே செய்த பாபமும் உடனே அகலும். காவேரீ ஸ்நாநம், அங்கு செய்யும் தாநம் ஸ்ரீரங்கத்தில் செய்யும் தர்ப்பணமும் குரு க்ஷேத்ரத்தில் நூறுகல்பம் செய்யும் தவப்பயனைத் தரும்.

காவேரீ ஸங்கமத்திலும் ஸ்ரீரங்கன் ஸன்னதியிலும் செய்யும் துலா ஸ்நாநத்தின் பெருமையைக் கூற பகவா னுக்குத்தான் சக்தி உண்டு. காவேரியில் எந்த இடத்தி லாவது ஏகாதசி யன்று ஸ்நாநம் செய்தால் அந்த புண் யத்தை என்ன என்று கூறுவது? ஸ்நாநம் செய்பவன் ஸாக்ஷாத் பகவானே ஆவான். ஏகாதசியில் புண்ய காவேரீ மஹிமையைப் படித்தாலும் கேட்டாலும் ஏழு ஜன்மாக்களில் செய்த பாபம் உடனே நாஶமாகும். ஏகா தசியில் காவேரீ கல்யாணத்தைப் படித்தாலும் கேட்டா லும் அவர் வம்சத்தில் எவருக்குமே அமங்களமும் ஏழ்மை யும் தோன்றாது. காவேரீ வைபவத்தைக் கேட்டு தர்மம் செய்து கூடியவரை அர்ச்சித்தால் அந்த புண்யத்தை அச் யுதனேகூறவல்லவன். துலாஸங்க்ரமணம் முதல் ஸ்நாநம் செய்பவரது புண்ய பலனைக் கூற நானும் அச்யுதனுங்கூட சக்தி உள்ளவர்களல்ல. தனக்கு ஶ்ரேயஸ் வேண்டுமென விரும்புபவர் காவேரீ மஹிமையையும் கேட்க வேண்டும். கந்தம் அக்ஷதை முதலியவைகளால் பக்தியுடன் பௌரா ணிகரைப் பூஜித்து அஸூயை யின்றி கதை கேட்கவேண் டும். லோபத்தினல் மூடனுக உள்ளவன் பௌராணிகரை அவமதித்தால் ஜலமில்லாத கோரமான அரண்யத்தில் பிரும்மராக்ஷஸ்ஸாக ஆவான்.

காவேரியின் திவ்ய மஹிமையை ஆதிசேஷன் தனது ஆயிரம் முகங்களால் நூறு கல்பம் வரை கூறினல் கூட அது பூர்ணமாகாது. அவரே களைத்து விடுவார். ஆதலால் பௌராணிகரை அநந்தன் என்றே எண்ணி அவரைப் பூஜிக்க வேண்டும். அப்பொழுதுதான் பயனைப் பெற லாம். இல்லையேல் பயனில்லை. ராஜஸூயம் அஶ்வ மேதம் தபஸ் தர்மம் விரதம் ஆகிய இவைகள் காவேரீ தீர்த்தஸ்நாநத்திற்குப் பதினறில் ஓரம்சம்கூடஸமமாகாது. புண்யமான காவேரீ ஸ்நாநத்தால் முக்தியே பெறலாம்.

ஸம்ஶயமில்லே. மற்ற தீர்த்த யாத்ரைக்கு வெகுதூரம் மூக்தி. யாத்ரை செய்தோம் என்ற பிரஸித்திமாத்ரந்தான் பயன். காவேரீ மஹிமையின் ஒரு லேஶ மாத்ரமே கூறினேன். அதைப் பத்தாயிரமாண்டுகள் கூறுவதோ கேட்பதோகூட முடியாது. பல பிறவிகளில் துக்கப்பட்டு பகவானே வேண்டுபவனே காவேரியின் கீர்த்தியைக் கேட்பான். பக்தியுடன் பகவானே அர்ச்சிப்பான்.

இங்ஙனம் தௌம்யரால் கூறப்பட்ட காவேரியின் புண்ய மஹிமையைக் கேட்டு தர்மராஜன் ஆநந்தக் கண்ணீர் பெருக்கினுன். ஹாரம் கேயூரம் கடகம் கடிஸூத்ரம் மோதிரம் முதலியவைகளால் அவரை அலங்கரித்து திவ்யமான வஸ்த்ரமளித்து கந்த புஷ்பங்களால் அர்ச்சித்தார். பல்லக்கில் அவரை அமர்த்தி ஸ்வஸ்திவாசநம் கூறி தானே திவ்ய சாமரங்களால் வீசினர். ஸிம்மாஸனத்தில் தௌம்யரை அமரச்செய்து நமஸ்கரித்தார். தர்மர் தம்பிகளுடன் ஸந்தோஷமாக முனிவரை அர்ச்சித்து பக்தியால் ஆநந்த பாஷ்யம்பெருக பார்க்கவோ கேட்கவோ பேசவோ முடியாமல் பரவஶராக தௌம்யரை அர்ச்சித்தார். முனிவர் அமோகமான மங்கள ஆசீர்வாத மளித்து வணங்கி நிற்கும் வேந்தனிடம் மிக்க சிரமத்துடன் விடைபெற்றுத் தவம்செய்ய வனம் சென்ருர்.

**அகஸ்த்யர்:** வேந்தே! நீ கேட்டதை உனக்குக் கூறினேன். காவேரியின் திவ்ய மஹிமை ஸர்வ ஸௌபாக்யத்தையும் அளிக்க வல்லது. இவ்வளவுதான் அதைப் பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. காவேரீ மஹிமை சுபமானது. ஸர்வ தர்மங்களுடைய ஸாரமிது. ஸர்வ ஸம்பத்துகளு முண்டாகக் காரணமானது. இதுதான் ஸமஸ்த தர்மம். ஶ்ரேயஸ்ஸை அளிக்கும் ஸித்தியின் ஸாரம். ஸர்வ முநீந்த்ரர்களாலும் எப்போதும் ஸேவிக்கப் படுவது. புண்டரீகாக்ஷன் எதிரில் பிராம்மண கோஷ்டியில் இதைப் படித்தால் பூமியில் ஸகல போகங்களேயும் பெற்று ஸ்வர்க்க லோகத்திலும் பூஜிக்கப் படுவான். ஆயுளே விருத்தி செய்வதும் சிறந்ததும் புண்யமுமான இதைப் படித்தாலும் கேட்டாலும் மனிதன் ஸர்வ பாபங்களிலிருந்தும் விடுபடுவான்.

இருபத்தெட்டாம் அத்யாயம் முற்றிற்று.



## இருபத்தொன்பதாவது அத்யாயம்–61 சுலோகங்கள்.

**அகஸ்த்யர்:** துலாமாஸத்தில் ஸ்ரீ ரங்கநாதனது ஸன்னதியில் காவேரி ஸ்நானம் செய்து பிராம்மணனே அவமதித்த பாபத்திலிருந்து விடுபடுவாய். பிறகு அஶ்வமேத யாகம் செய்து ஸ்ரீ மாதவனேப் பூஜித்து ஸர்வ ஸம்ருத்தி உள்ளவனுவாய். ப்ரும்மலோகமும் செல்வாய். முன்னெரு ஸமயம் தேவேந்த்ரன் ப்ராம்மண அவமானம் செய்து ஸர்வமங்களத்தையும் இழந்தான். துலா காவேரீ ஸ்நானத்தால் மூன்றுலோக லக்ஷ்மியையும் அடைந்தான். ஸர்வ பாபங்களேயும் அகற்றுவதற்காகச் செய்யும் ப்ராயஶ்சித்த கர்மாவில் காவேரீ ஸ்நாநம் ஒன்றே குற்றமற்றது. ஸ்தூலமானதும், ஸூக்ஷ்மமானதும், பழையதும், புதியதும், தெரிந்து செய்ததும், வாக் மநஸ் உடலால் செய்ததுமான பாபங்களெல்லாம் அருணேதய காலத்தில் காவேரியில் எந்த இடத்தில் ஸ்நானம் செய்தாலும் அக்நியால் பஞ்சுப்பொதி எரிவதுபோல் உடனே அகலும். ராமஸேதுவின் முன்னே மற்ற புண்ய தீர்த்தங்களின் மஹிமை நிற்காது. ஆனல் காவேரீ மஹிமை ஸேது மஹிமைக்கு ஸமம் என்பதில் ஸந்தேஹமில்லே.

மஹாராஜ! யாகம் செய்யவேண்டும் என்ற காரணத்தால் இங்கு ஸத்ஸபைக்கு வந்தாய். பூர்வ புண்ய விஶேஷத்தால் ரங்க ஸன்னதியில் காவேரீ துலாஸ்நானம் கிடைக்கப்போகிறது. ஆதலால் நீ க்ருதார்த்தன். மஹாராஜ! நீ சீக்ரமாக இப்பொழுதே காவேரிக்குச் செல். அங்கு ஸ்நானம் செய்து பிராம்மணர்களுக்கு நிறைய தானம் செய். மறுபடியும் சந்த்ர பத்மினியில் ஸ்நானம் செய்து ரங்கநாதனது வைபவத்தைக் கேள். விதிப்படி ஸகல தானங்களேயும்செய். ப்ராம்மணர்களே நமஸ்காரம் செய். ஸகல இஷ்டத்தையுந்தரும் ரங்கநாதனே நமஸ்காரம் செய்து பலவகைத் துதிகளால் ஸ்தோத்ரம் செய். உனது மனதிலுள்ள ஸகல இஷ்டங்களேயும் வேண்டிக்கொள். அங்கு மூன்றுநாள் காவேரீவைபவத்தைப் படி. மறுபடி இங்கு வந்து பக்தவத்ஸலனை கேஶவனே அஶ்வமேத யாகத்தால் பூஜி. சக்ரவர்த்தி என்ற ப்ரஸித்தி உண்டாகும்படி ஸகல ஶத்ருக்களேயும்ஜயி. ஸாதுக்களான த்விஜன்மாக்களிடையே புண்ய ஶ்லோகன் என்று க்யாதி பெறுவாய்!

புத்ரன் பௌத்ரன் முதலியவர்களுடன் பூமியில் ஸகல போகங்களையும் அனுபவி. தர்மமாக ராஜ்ய பரிபாலநம் செய்து க்ருத க்ருத்யனுக ஆவாய்.

**தால்ப்யர் :** இங்ஙனம் ஸர்வ பாபங்களையுமகற்றத் தக்கதான, அகஸ்த்யர் கூறிய தர்மங்களைக் கேட்டார் ஹரிச்சந்த்ரன். பக்தியால் தலை பூமியில் படும்படி முனிவரை நமஸ்காரம் செய்தார். தர்மாத்மாவான அரசன் கந்த புஷ்பாக்ஷதங்களாலும், திவ்ய ஆடையாபரணங்களாலும் முனிவரைப் பூஜித்தார். பலமுறை விழுந்து எழுந்து வணங்கினுர். ஸந்தோஷ மனதுடன் அஞ்சலி செய்துகொண்டு முனிவரிடம் கூறினுர் ஹரிச்சந்த்ரன். மஹாமுநே! நான் க்ருதார்த்தன். பாவனன் ஆனேன். இங்கு எனக்கு ஸகல தர்மங்களையும் கூறினீர்களல்லவா? எனது பிறவியும், விரதமும் ஸபலமாயிற்று. இன்றே எனது பித்ருக்கள் ஸந்தோஷமடைந்தார்கள். இன்று என் குலம் ஸபலமாயிற்று. முற்பிறவியிலும் மஹாபுருஷர்களைப் பூஜித்திருக்கிறேன். புண்ய தீர்த்தங்களில் புனலாடினேன். பல தானங்களையும் புண்யங்களையும் செய்திருக்கிறேன். இல்லையேல் ஸத்ஸங்கமும் ஸத் கதாச்ரவணமும் எப்படிக் கிடைக்கும்? பக்தியோகத்தினுல்தான் பகவான் ஸுலபமாகக் கிடைப்பார். இஷ்டா பூர்தாதி தர்மங்களால் அல்லவா உங்களது தர்சனம் கிட்டியது. அந்த ப்ரபாவத்தால் இவைகள் கிடைக்குமெனக் கேட்டிருக்கிறேன். ஆச்சர்யம்! இப்போது காவேரியின் மஹிமையை உங்களிடம் கேட்டேன். பாபத்திற்கு பயந்தவராலும், வித்வான்களாலும் ஸதா ஸத்ஸங்கமே கோரத் தக்கது! அதனுல் ஸம்ஸாரக்கடலை ஸுலபமாகக் கடக்கலாம். தவத்தாலோ, தானத்தாலோ யோகத்தினுலோ அதைக் கடக்கமுடியாது. ஸ்வதர்மாசரணத்தாலும் ஸத்கதையைக் கேட்பதாலும், காவேரீ ஸ்நானத்தாலும் தானத்தாலும் ஸந்தோஷப்படுவதுபோல் பகவான் மற்ற தர்மங்களாலே ஸந்தோஷப்படுவதில்லை. பரம ஆபத்திலிருந்தாலும் அறிவுள்ளவன் ஸத்ஸங்கத்தை விடக்கூடாது. பாபக்கடலுக்கு ஸத்ஸங்கம் தவிர வேறுமருந்தில்லை. தேவர் ஜலம் வடிவமல்ல! தீர்த்தங்கள் மண் கல்களாலாகியதல்ல! அவைகள் வெகு காலங்கழித்தே பாவனமாக்குகின்றன.. ஸாதுக்கள் தர்சித்தமாத்ரத்திலேயே பாவனமாக்குகின்றனர். ஸாமான்ய ஸம்ஸாரியான நானெங்கே? ப்ரும்ம



மூர்த்தியான தாங்களெங்கே? முற்பிறவிகளில் செய்து சேர்த்திருந்த புண்யத்தால் எனக்கு ஸத்ஸங்கம் கிடைத்தது. எல்லா வகையிலும் யான் க்ருதார்த்தன். பவக் கடலைக் கடந்தேன். மஹத்தான அழகிய காவேரி சரிதத்தையும் ஹரிகதையையும் கேட்டேன்.

### அரிச்சந்திரன் காவேரி செல்லுதல்.

ஹரி கதை கேட்பதில் ஸர்வ தர்மங்களும் யாகங்களும் தீர்த்தங்களும் அடங்கியிருக்கின்றன. இங்ஙனம் ஆனந்தக்கண்ணீர் பெருக ஹரிச்சந்திரன் பத்தாயிரம் ஸ்வர்ண புஷ்பங்களாலும் திவ்ய தூப தீபங்களாலும் அகஸ்த்யரைப் பூஜித்தார். அவரும் அரசனைக் கொண்டாடி ஆசீர்வாதம் செய்தார். எல்லா மஹர்ஷிகளையும் வணங்கி விடைபெற்று ரதத்திலேறினுர். ஸைன்யமும் பத்து திக்குகளில் பரவும் வாத்யகோஷமும் சூழ அரசன் கிளம்பினுர். ரங்கநாதனை தர்சிக்க அவாகொண்டு தார்மிகர்கள் நிறைந்த செழிப்பான பல தேசங்களைப் பார்த்துக்கொண்டே சென்ருர். ஆங்காங்கு நான்கு வர்ண தர்மங்கள் நன்கு அனுஷ்டிக்கப்பட்டதைக் கண்டார். ஆங்காங்குள்ள ப்ராம்மணேத்தமர், தங்கள் ஆச்ரமத்திற் கேற்றபடி பூர்ணகும்ப பலங்களால் அரசனைக் கொண்டாடினுர்கள். ஸர்வ தீர்த்தங்களால் அழகானதும் வெண்மையான மணல்களால் ப்ரகாசிப்பதும் ஹம்ஸம், ஸாரஸம் முதலியவை சூழ்ந்ததும், குமுதம், தாமரை கல்ஹாரம் முதலியவைகளால் விளங்குவதும், புருஷார்த்தங்களைத் தருவதும், புண்ய க்ஷேத்ரங்களால் பவித்ரமானதும் புண்யமான நெருங்கிய ரிஷி ஆச்ரமங்களால் ப்ரகாசிப்பதும் அப்ஸரஸ்ஸுகள் சூழ்ந்ததும் தேவர்ஷி கணம் நிறைந்ததும் பலவகை மரங்களாலும் தீர்த்தங்களாலும் பிரகாசிப்பதும் ரங்கநாதனது பாதாரவிந்தத்தால் பவித்ரமான தீர்த்தமுள்ளதும் மாமரம் தென்னை முதலியவைகளால் அழகானதும் மஹோத்ஸவம் கொண்டாடும் மஹாஜனங்கள் சூழ்ந்ததும், பாக்கு மரங்கள் நிறைந்ததும் ஸர்வ லோகங்களாலும் வணங்கப்படுவதுமான காவேரியைக் கண்டார் மன்னன்.

மஹா பாதகங்களைப் போக்கடிக்கும் புண்ய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தார். தேவர்ஷி பித்ரு தர்ப்பணம் செய்தார். அகஸ்த்யர் சொன்னபடி எல்லாவற்றையும்

விதிப்படிச் செய்தார். புருஷோத்தமனை ரங்கநாதனை நமஸ்கரித்து அன்னம், வஸ்த்ரம், ஸ்வர்ணம் முதலியவைகளை ஸாதுக்களுக்குத் தானம் செய்தார். விசித்ரமான கோபுரங்களையும் பலவகை ப்ராகார மண்டபங்களையும் அமைத்தார். ஸந்தோஷமான மனத்துடன் ப்ராம்மணோத்தமர்களைப் பூஜைசெய்து நமஸ்கரித்தார். மஹா தேஜஸ்வியான மன்னனை எல்லோரும் ஆசீர்வதித்தனர். ஸ்ரீரங்கனது திவ்யமான ஐஸ்வர்யத்தைக் கண்டு மிக்க ஆஸ்சர்யமடைந்தார்.

## அரசன் அஸ்வமேதம்

மறுபடி மஹா புண்யமான குருக்ஷேத்ரத்திற்கு வந்து மஹர்ஷிகளை நமஸ்கரித்தார். அவர்களும் அரசனது பக்தியைக்கண்டு களித்து ஆசீர்வாதம் செய்தனர். க்ருதார்த்தனை மன்னனுக்கு சௌநகாதி முநிவர் அஸ்வமேதயாகம் செய்வித்தனர். பத்நியுடன் கூட அந்த அரசனுக்கு தீக்ஷை செய்து வைத்தனர். விஷ்ணுவை ஸந்தோஷப்படுத்தும் அந்த யாகம் மிகச் சிறப்பாக நடந்தது. முக்தியைத்தரும் திவ்யமான காஞ்சி க்ஷேத்ரத்திலும் ப்ரயாக க்ஷேத்ரத்திலும் பிரும்மா செய்த யாகம்போலிருந்தது அந்த யாகம். அதுபோல் வேறெங்கும் எவரும் யாகம் செய்ததில்லை. விருத்ரனை வதம்செய்தபின் இந்த்ரனுக்கு பிருஹஸ்பதி செய்வித்ததுபோல் அகஸ்த்யர் முதலிய முநிவர்கள் அரிச்சந்த்ரனுக்கு அஸ்வமேதம் செய்வித்தனர்.

அரசன் சந்தோஷமடைந்து சாஸ்த்ரம் கூறியபடி ரித்விக்குகளுக்குப் பூர்ண தக்ஷிணை தந்தார். விதிப்படி அவப்ருத ஸ்நானம் ஆனது. பத்நியுடன் கூடி மற்றவர்களுக்கும் அபரிமிதமாக தக்ஷிணை தந்து பூர்ணிமா சந்த்ரன் போல் பிரகாசித்தார். க்ருதார்த்தனை அரசன் அகஸ்த்யர் முதலியவர்களைப் பலமுறை நமஸ்கரித்தார். திவ்யமான ஆசீர்வாதங்களால் அவர்கள் அரசனை வாழ்த்த மன்னன் மட்டில்லா மகிழ்ச்சியடைந்தான். விநயத்துடன் பலமுறை முநிவர்களை ப்ரதக்ஷிண நமஸ்காரம் செய்து பூஷணங்களாலும் திவ்ய வஸ்த்ரங்களாலும் பூஜித்து பஹுமாநத்துடன் அவர்களது அநுக்ஞையைப் பெற்றார். ஆனந்தபாஷ்பம் கண்களில் பெருக முநிவர்களை விட்டுப் பிரிய மனமின்றி ஸங்கம் படஹம் முதலிய வாத்ய கோஷங்கள் பத்து திக்குகளிலும் பரவ மெதுவாகக்



கிளம்பினர். ஸகல அரசர்களாலும் பூஜிக்கப்பட்ட மஹாத்மாவான ஸார்வ பௌமன் ரதகஜ துரகமெனும் ஸேனைகள் பூமியை யெல்லாம் ஆக்ரமிக்க கடகம் மகுடம் முதலிய ஆபரணங்களை அணிந்துச்சென்றார், வழியில் அந்தந்த தேசத்தவரும் மங்களவஸ்துக்களைக் கரத்தில் ஏந்தி பூஜித்தனர். த்வஜம் தேர் கொடிதோரணம் ஆகியவைகளால் அலங்கரிக்கப் பட்டதும் மிக்க பிரகாஸமுள்ளதும் பூஜிக்கத் தக்கதுமான ஸாகேத புரிக்கு வந்து சேர்ந்தார் அரிச்சந்த்ரன்.

**இருபத்தொன்பதாம் அத்யாயம் முற்றிற்று.**

## முப்பதாம் அத்யாயம்-- 61 சுலோகங்கள்.

## தால்ப்யரை தர்ம வர்மா பூஜித்தல்.

*தால்ப்யர் :* அரசே! பரம பக்தியுடன் காவேரீ கல்யாண கதையைக் கேட்டவன் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபடுவான். வெள்ளிக்கிழமைகளில் அதைக் கேட்டால் புத்ரன் பௌத்ரன் முதலிய ஸகல ஸம்ருத்தியையும் பெறுவான். பக்தியுடன் பதியின் ஆரோக்யத்தை நாடி காவேரீ கல்யாணம் கேட்கும் ஸ்த்ரீ ஸகல இஷ்டங்களையும் பெறுவாள். குருடன் நொண்டி நோயாளி தரித்ரன் மகாபாபி ஆகியவர் காவேரியின் உத்பத்தி கல்யாணம் இக்கதைகளைக் கேட்டால் ஸர்வ பாபங்களுமகலும். வேண்டிய வரனைப் பெறுவர். புத்ரர் முதலிய ஸம்பத்தும் ஸர்வ மங்களமும் அவர்களுக்குண்டாகும். துலாமாஸத்தில் காவேரீ ஜலத்தில் ஸ்நாநம் செய்து சிறந்த பக்தியுடன் காவேரீ கல்யாணத்தைக் கேட்டால் ஸகல பாபங்களும் அகலும். எது எதை விரும்புகிறானோ அதைப் பெறுவான். ஸந்தேஹமில்லை. துலா மாஸத்தில் புண்யமான காவேரியைத் தர்சித்தாலும் நீரைத் தொட்டாலும் பருகினாலும் அதில் மூழ்கினாலும் காவேரீ என நினைத்தாலும் கூறினாலும் கூறக்கேட்டாலும் ஸகல பாபங்களையும் அகற்றும். கர்பிணியான ஸ்த்ரீ காவேரீ கல்யாணத்தைக் கேட்டால் கீர்த்தியுள்ளவனும் ஸிஷ்டனுமான புதல்வனைப் பெறுவாள்.

ஓ தர்ம வர்ம அரசே! நீ கேட்டபடி எல்லாவற்றையும் கூறினேன். ஜன்மாந்தரத்தில் செய்த தவப் புண்யத்தால் காவேரீ உத்ஸவத்தைக்கேட்டாய். நீயே ஸுக்ருதீ! தீர்த்தாதிகளை ஸேவிக்காமலே புக்திமுக்திகளைப்பெற்றாய்.

காவேரியின் கீர்த்தியைக் கூறச்சொல்லி கேட்டாயல்லவா? விஷ்ணுலீலையைக்கேட்பது காவேரீ வைபவத்தைகேட்பது இவ்விரண்டுமே மனிதர்க்கு புக்திமுக்திகளைக் கொடுக்கத் தக்க ஸாதனங்கள். இவைகளைத் தவிர ஸர்வ துக்கங்களையும் போக்கடிக்கக் கூடியது மூன்று லோகங்களிலுமில்லை. வைகுண்டம் மற்றவர்க்குக்கிட்டாத செல்வம். இவைகளை நீ விரும்பினல் மங்களமான காவேரியையும் விஷ்ணுவையும் எப்போதும் நினை. ராஜன் கலியில் வேறு தவம் இல்லை ! இல்லை ! இல்லவே இல்லை !! அச்யுதாநந்த கோவிந்த காவேரீ என்று நினைப்பதே உத்தமதவம். மகா பாக்யமுள்ள காவேரியும் விஷ்ணுவும் தங்களது சரிதத்தைக் கேட்பவருக்கு ஸகல இஷ்டங்களையும் தருகிறார்கள்.

**ஸூதபுராணிகர்:** இங்ஙனம் தயா மூர்த்தியான தால்ப்யர் தர்மவர்மாவுக்கு ஸகல தர்மங்களையும் உபதேசித்துக் கிளம்பினர். தர்ம வர்மா எனும் ராஜேந்திரன் பூர்ணமான மனதுடன் விஷ்ணு காவேரீ சரிதங்களைக் கேட்டு ஆனந்தபாஷ்பம் பெருக்கினர். ஸந்தோஷத்துடன் ரத்நங்கள் நிறைந்த திவ்ய ஆபரணங்களாலும் திவ்ய கந்த புஷ்பங்களாலும் தால்ப்யரைப் பூஜித்து அவர் திருவடிகளைப் பலமுறை ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். பாகவதரில் சிறந்த தர்ம வர்மா மஹா தேஜஸ்வியாக பிரகாசித்தார். அஞ்சலி செய்து அவரை விட்டுப் பிரிய மனமில்லாதவராக வேண்டினர்.

**தர்ம வர்மா:** மஹர்ஷே! இன்றே எனது ஜன்மா ஸபலமாயிற்று. என் குலமும் ஸபலமாயிற்று. எனது பித்ருக்களும் நான் பூஜிக்கும் தேவர்களும் திருப்தியடைந்தார்கள். மஹா முனே! தாங்களே எனது வீட்டிற்கு வந்து ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்றும் வைஷ்ணவ தர்மங்களை உபதேசித்தீர்களே!

தங்களைப் போன்ற ஸாதுக்களுக்கு இஷ்டமான நான் மிக தன்யன். மிக ச்ரேஷ்டமானவன். லோக பாவனமான வைஷ்ணவ கதைகளைத் தங்கள் முகாரவிந்தத்திலிருந்து கேட்டேனே! அது புக்திமுக்திகளைத் தருமல்லவா? கதாம்ருதத்தைப் பானம் செய்தும் போதுமென்றதிருப்தி எனக்குண்டாகவில்லை.

பாபத்தைப் போக்கும் காவேரியின் மஹிமையை மறுபடியும் வர்ணியும். அதைக் கேட்டு விஷ்ணுவின்



பரமபதத்தை அடைவேன். தார்மிகரில் சிறந்த ராஜேந்திரன் யோகீந்தருடைய பாதாரவிந்தத்தை நமஸ்கரித்தார். சாந்த மனமுடைய முனிவர் அரசனைக் கரத்தால் தூக்கி தூக்கி எழுப்பி மந்த ஹாஸத்துடனுள்ள மன்னனைப் பார்த்துக் கூறினர்.

**தால்ப்யர்:** ராஜன்! முவ்வுலகிலும் நீயே தார்மிகரில் சிறந்தவன். சிறந்த ஐஸ்வர்ய முள்ளவனுக இருந்தாலும் ஸத்கதா ஸ்ரவணத்தில் பற்றுள்ளவனுக இருக்கிறாய். உன்னிடத்திலே பகவான் விஷ்ணுதானே க்ருபைசெய்து இருக்கிறார், மாதவனது கதையில் ஸ்திரமான புத்தி உனக்கு இருக்கிறது. அவரது அநுக்ரஹமில்லாதவர்க்கு ஸம்ஸாரத்தில் மோஹம் ஏற்படும். வெளி விஷயங்களில் செல்லும் புத்தி ஏழ்மை என்ற வ்யாஜத்தாலும் சிலர் ஐஸ்வர்யத்தாலும் பகவானை விட்டு வெகு தூரத்தில் நிற்கும். ஸம்ஸார கடலில் முழுகுவரவர். பகவானுக்கு யாரிடம் முக்தியைத்தரும் தயை உண்டாகிறதோ அவன் தரித்ரனுயினும் தனிகனுயினும் ஸத்ஸங்கத்தில் ஈடுபடுவான். நீ பாகவத ஸ்ரேஷ்டன். அரசரில் சிறந்தவன். ராஜேந்திர! நீ க்ருத கிருத்யன். நீ அறிய வேண்டியது வேறொன்றுமில்லை. என் சொல்லைக் கேள். சோகத்திலீடுபடாதே.

மறுபடியும் வந்து நான் புண்யமான ஹரிகதையைக் கூறுகிறேன். பஞ்சமஹாபாதகங்களைப் போக்கக்கூடிய அர்த்தோதயம் எனும் மஹா புண்ய காலம் வருகிறது. அது புஷ்யத்தில் ஸ்நாந தாநம் செய்வோருக்கு இஷ்டமானதைத் தரும். அர்த்தோதயத்தின் லக்ஷணத்தையும் மஹிமையையும் கூறுங்கள் என்று அரசன் வேண்ட முனிவர் கூறுகிறார். அதன் மஹிமையை யார் கூறமுடியும்? ஒரு கல்பம் வரை கூறி பிரும்மா தன்னால் முடியாதென ஓய்ந்தார். புஷ்ய மாக மாதங்களில் வ்யதீபாதம் பாநுவாரம் ஸ்ரவண நக்ஷத்ரம் சேர்ந்தால் கோடி ஸூர்ய க்ரஹணத்திற்கு ஸமமான அர்த்தோதய மாகும். வ்யதீபாதத்தின் அந்த்யபாகம் அமாவாஸ்யையின் பூர்வபாகம் ஸ்ரவணத்தில் மத்ய பாகம் இவை ஸூர்யோதய காலத்திலிருந்தால், புஷ்யத்தில் பாநுவாரத்தில் அர்தோதயமும் ஸோமவாரத்தில் சேர்ந்தால் மஹோதயமுமாகும். இந்த அர்த்தோதயம் கோடி யாக பலனைத் தரும். எங்கு ஸ்நாநம் செய்தாலும் ஸகல புண்ய தீர்த்த ஸ்நாந பலனை

யும் தரும். மஹோதயமும் அவ்வாறே. மஹாநதி முதலிய புண்ய தீர்த்தங்களில் மஹா பாபியாயினும் ஸங்கல்பாதிகளின்றி தூஷ்ணீமாக ஸ்நானம் செய்தாலும் கூட ஸர்வ பாபங்களு மகலும்.

துலாமாஸத்தில் காவேரியிலும் மாகத்தில் பிரயாகத்திலும் அர்த்தோதயத்தில் ஸேதுவிலும் ஸ்நானம் செய்வது கோடி ஜன்மாவில் செய்த தவப்பயனாகும். மற்ற காலத்தில் மகா அதமனான நரன்கூட ராமஸேதுவில் ஸ்நானம் செய்தால் உடனே சுத்தனாகி ஸ்வர்க்கம் செல்வான். புண்யகால ஸ்நானத்தைப் பற்றி கூறவும் வேண்டுமா? உப்புக்கடலில் ராகா சந்த்ரனது ரேகைபோல் தநுஸ்ஸால் ஸ்ரீ ராமனால் செய்யப்பட்டது. அதைத் தர்சித்தாலே முக்தி எனில் ஸ்நானத்தால் உண்டாகும் பயன்பற்றிக் கூற யான் அறியேன். ஸேது யாத்ரைக்காகக் கிளம்பி வழியில் எங்கேனும் இறந்தால் கூட பாபமகன்று ஸ்வர்க்கம் செல்வான். ப்ரதி திநம் காலையில் ராமனியற்றிய ஸேதுவை நினைத்தால் ஸேது ஸ்நானம் செய்த பலனுண்டாகும். மஹர்ஷிகள் ஸேது யாத்ரைக்குச் செல்ல என் வரவை எதிர்பார்க்கின்றனர். ஸேது சென்று திரும்பி வந்தபின் உனது விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறேன். ராம லீலையைக் கேட்பதும் காவேரீ ஸேது இவைகளைத் தர்சிப்பதும் வாஜபேயம் அஸ்வமேத யாகம் செய்த பலனைத் தரும். ஒரு முறை ராமாயணம் கேட்டு ஒருமுறை ஸேது தர்சநம்செய்தால் பிரும்மஹத்திசெய்தவன் கூட ஸ்வர்க்கம் செல்வான். சுத்தமான மன முள்ளவர் பற்றிக் கூறுவதேன்?

தநுஷ்கோடியில் அமாவாஸ்யை யன்றும் காவேரியில் ஏகாதசியிலும் ஸ்நானம் செய்தால் கோடி குலத்தை உத்தரணம் செய்து இவம் விஷ்ணு ஸாயுஜ்யத்தைப் பெறுவான். இப்படி மஹா முனிவர் உத்தமமான பல தர்மங்களை உபதேசித்து அஞ்ஜலியுடன் நிற்கும் அரசனைப் பலமுறை கொண்டாடி அமோகமாக ஆசீர்வாதமும் ஜயாசிஸ்ஸும் கூறி ஆங்குள்ள பிராம்மணர்களிடமும் அரசனிடமும் விடைபெற்றார். சிஷ்யர்கள் சூழ மஹாயோகியான தால்ப்யர் தனது தபோ வனத்தை அடைந்தார்.

**ஸூதர்:** ஓ பிராம்மணர்களே! இங்ஙனம் காவேரியின் மஹிமையில் ஆயிரத்தில் ஒரு லேசத்தையே கூறினேன். சுருக்கமான அதே ஸர்வபாபங்களையும் அகற்றும். காவேரீ வைபவத்தில் கூறிய தர்மங்களைக் கேட்டீர்களா? காவேரியின் திவ்ய மஹிமையை மனிதர் நன்கு கேட்கவேண்டும். விரதம் முடிந்தவுடன் தர்மங் கூறியவர்க்குத் தக்க தக்ஷிணை தரவேண்டும். தர்மம் கூறுபவர் சாந்தராக இருக்கவேண்டும். செல்வமுள்ளோர் தானத்தில் லோபப்படக் கூடாது. க்ரமமாகக் கேட்போர் இவ்வுலகில் ஸகல போகங்களையும் அனுபவித்து முடிவில் விஷ்ணுலோகம் செல்வர்.



**மஹர்ஷிகள்:** ஓ ஸூதரே! மஹா ப்ராக்ஞரே! நீர் பல நூற்றுண்டுகள் ஜீவித்திரும். வேதத்தில் மறைந்துள்ள காவேரீ மஹிமையைக் கூறினீர்! அது மிக அத்புதமானது. மஹா பாக! பிறவிக் கடலிலிருந்து எங்களைக் கரை ஏற்றினீர்! கிருதார்த்தர்களாக ஆனோம். இதை விட வேறு தவமென்ன இருக்கிறது? என மோக்ஷேச்சை உள்ள ஶௌனகாதி மஹர்ஷிகள் ஸந்தோஷமான முகமுள்ளவர்களாய் ஹரிகதையைக் கேட்பதில் உத்ஸாஹமுள்ளவர்களாகி கந்த அக்ஷதைகளால் மறுபடியும் ஸூதரைப் பூஜித்தார்கள்.

**ஆக்நேய புராணத்தில் துலா காவேரி மாஹாத்ம்யத்தில்**

**ஹரிச்சந்த்ர ஸம்வாதத்தில்**

**காவேரீ ஸமுத்ர ஸங்கம மஹிமையை வர்ணிக்கும்**

**முப்பதாவது அத்யாயம் முற்றிற்று.**

**துலாபுராணமும் முற்றிற்று.**

**ஓம் ஸ்ரீ வேதவ்யாஸாய பரம புருஷாய நம:**

**ஓம் தத்ஸத்.**

# ஸ்ரீ ஸுப்ரம்ஹண்ய
# பஞ்சரத்ன ஸ்தோத்திரம்.

:o:

விமல நிஜ பதாப்ஜம் வேத வேதாந்த வேத்யம் மம குலகுரு தேஹம் வாத்ய காரு ப்ரமோஹம் | ரமண ஸுகுண ஜாலம் ரங்கராட் பாகினேயம் கமல ஜனுத பாதம் கார்த்திகேயம் பஜாமி ॥ (1)

ஶிவஶரவண ஜாதம் ஶைவ யோக ப்ரபாவம் பவ ஹிதகுரு நாதம் பக்தபிருந்த ப்ரமோதம் | நவரஸ ம்ருது பாதம் நாத ஹ்ரீம்கார ரூபம் கவந மயூர ஸாரம் கார்த்தி கேயம் பஜாமி ॥ (2)

பாகாராதி ஸுதா முகாப்ஜ மதுபம் பாலேந்து மௌளீஶ்வரம் லோகா நுக்ரஹ காரணம் ஶிவஸுதம் லோகேஶ தத்வ ப்ரதம் | ராகா சந்த்ர ஸமான சாரு வதனம் ரம்போரு வல்லீஶ்வரம் ஹ்ரீங்கார ப்ரணவ ஸ்வரூப லஹரீம் ஸ்ரீ கார்த்திகேயம் பஜே ॥ (3)

மஹாதேவாஜ் ஜாதம் ஶரவணபவம் மந்த்ர ஶரபம் மஹத் தத்வானந்தம் பரம லஹரீம் மந்த்ர மதுரம் | மஹா தேவா தீதம் ஸுக குண யுதம் மந்த்ர வரதம் குஹம் வல்லீ நாதம் மம ஹ்ருதி பஜே க்ருத்ர கிரீஶம் ॥ (4)

நித்யாகாரங் நிகில வரதங் நிர்மலம் ப்ரும்ம தத்வங் நித்யங் தேவைர் விநுத சரணங் நிர்விகல்பாதி யோகம் | நித்யாட் யந்தம் நிகம விதிதங் நிர்குணங் தேவ தேவங் நித்யம் வந்தே மம குருவரங் நிர்மலம் கார்த்திகேயம் ॥ (5)

தியாகராயநகரில்

தங்க நகைகளுக்கும், வெள்ளிப் பாத்திரங்களுக்கும்,

நாணயத்திற்கும், நம்பிக்கைக்கும் சிறந்த இடம்




N. S. ராமநாதன் & கோ.,

பவுன் நகைகள், வெள்ளிப் பாத்திரம் & வைர வியாபாரிகள்,

10-A, உஸ்மான்ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

Printed & Published by A. Venkataraman at The Sri Meenakshi Press, Sirkali.

Editor: Srivathsa V. Somadeva Sarma.